
கம்ப ராமாயணம்

சுந்தர காண்டம்



பதிப்பாசிரியர்

கு. அழகிரிசாமி

கம்ப ராமாயணம்:
சுந்தர காண்டம்

[மூலம் முழுவதும், அரும்பத உரை, அடிக் குறிப்புகள், விளக்கம், வசனத்தில் கதைச் சுருக்கம்]

பதிப்பாசிரியர்:
கு. அழகிரிசாமி

தமிழ்ப் புத்தகாலயம்

576. பைகிராப்ட்ஸ் ரோடு. சென்னை-5.

முதற் பதிப்பு: ஜூலை 1965

மலிவுப் பதிப்பு: விலை ரூ. 2-00

TAMIL PUTHAKALAYAM
576, Pycrofts Road,
Triplicane : : Madras-5

அச்சிட்டோர்:
ராமன்'ஸ் பிரிண்டிங் பிரஸ்,
சென்னை-17

பொருளடக்கம்

கு. அழகிரிசாமியின் பிற நூல்கள்

சிறுகதைத் தொகுதிகள்

		ரூ.	பை
சிரிக்கவில்லை	... ...	2	00
தவப்பயன்	... ...	2	00
காலகண்டி	... ...	2	00
தெய்வம் பிறந்தது	... ...	2	00
இரு சகோதரர்கள்	... ...	2	00
கற்பக விருட்சம்	... ...	2	00
அழகிரிசாமி கதைகள்	... ...	3	75
பலநாட்டுச் சிறு கதைகள்	... ...	3	00

கட்டுரைத் தொகுதிகள்

இலக்கியச் சுவை	... ...	2	25
இலக்கியத் தேன்	... ...	2	25
இலக்கிய அமுதம்	... ...	2	25
இலக்கிய விருந்து	... ...	2	25
தமிழ் தந்த கவியமுதம்	... ...	5	50
நான் கண்ட எழுத்தாளர்கள்	... ...	2	00

நாடகம்

கவிச் சக்கரவர்த்தி	... ...	4	00

சிறுவர் கதைத் தொகுதிகள்

மூன்று பிள்ளைகள்	... ...	1	00
காளி வரம்	... ...	1	00

பதிப்பித்தவை

கம்ப ராமாயணம்: பால காண்டம்— அயோத்தியா காண்டம்	...	2	00
,, ஆரணிய காண்டம்— கிஷ்கிந்தா காண்டம்	...	2	00
அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து		1	75

முன்னுரை

சுந்தர காண்டம் கம்ப ராமாயணத்திலும் வால்மீகி ராமாயணத்திலும் ஐந்தாவது காண்டமாக இருக்கிறது. இருநூல்களிலும் இந்தப் பகுதியில் கூறப்படும் செய்திகள் ஒன்றாகவே இருக்கின்றன. இதற்கு ஏன் சுந்தர காண்டம் என்று பெயர் வந்தது என்பதைப் பல அறிஞர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். ஒரு காரணத்தை சகஜமாக எல்லோருமே கூறுவார்கள்: அதாவது, ராமாயணத்தில் இதுவே அழகிய (சுந்தரமான) பகுதி, அதனால் இதற்குச் சுந்தர காண்டம் என்று பெயர் ஏற்பட்டது என்பார்கள். இது பொருத்தமான ஒரு காரணமே ஆகும்.

அனுமானின் வீர சௌந்தரியத்தையும் பக்தி சௌந்தரியத்தையும், சீதையின் குணசௌந்தரியத்தையும் விரித்துரைப்பதால் இது சுந்தர காண்டம் என்று ஆயிற்று என்றும் சொல்வார்கள். இதுவும் பொருத்தமான காரணமே.

அடுத்தபடியாக, அனுமானுக்குச் சுந்தரன் என்றும் ஒரு பெயர் உண்டு; இந்தக் காண்டம் அவனையே பிரதான பாத்திரமாகக் கொண்டிருப்பதால் இது சுந்தர காண்டம் எனப்படுகிறது என்றும் கூறுவார்கள். இதுவும் பொருத்தமான காரணமே.

அனுமானே கதாநாயகன்

சுந்தர காண்டத்திற்கு அனுமானே கதாநாயகன். அவனுக்கு என்று ஒரு தனிக் காண்டமே அமைத்து அவனுடைய பெருமைக்கு ஏற்ற கௌரவம் அளித்திருக்கிறார் வால்மீகி முனிவர். ராமாயணத்தில் வேறு எந்தப் பாத்திரத்திற்காகவும் இப்படி ஒரு தனிக் காண்டம் இயற்றப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. அனுமானுக்கு அடுத்தபடியாக இந்தக் காண்டத்தில் சீதை பிரதான பாத்திரமாக இருக்கிறாள். இந்த இரு பாத்திரங்களின் பெருமையே இந்தக் காண்டத்தின் பெருமையாகும். வால்மீகி முனிவர் தமது கற்பனைச் சுரங்கத்திலிருந்து எடுத்து வழங்கிய பொன் என்று அனுமானையும், ரத்தினம் என்று சீதையையும் சொல்லலாம். பாரத நாட்டுப் பெண்களின் திலகமாகவும், தெய்வீகப் பெண்மையின் அவதாரமாகவும் சீதையைப் படைத்திருக்கிறார் வால்மீகி முனிவர். சீதையைவிட உயர்ந்த ஒரு பெண் பாத்திரம் உலகின் எந்தக் காவியத்திலும் கிடையாது.

கம்பர் செய்த காரியம்

வால்மீகி முனிவர் கொடுத்த மூலப்பொருள்களை வைத்துக்கொண்டுதான் கம்பரும் தமது காவியத்தில் இந்தப் பாத்

திரங்களேப் படைத்திருக்கிருர். வால்மீகி வழங்கிய பொன்னேத் தூய்மையாக்கி ஆயிரக்கணக்கான மாற்றுக்கள் கொண்ட தங்கமாக்கியிருக்கிருர் கம்பர். அதே போல் முனிவர் கொடுத்த ரத்தினத்தைப் பட்டை தீட்டி மதிப்பிட முடியாத தெய்வமணியாக்கியுள்ளார். வால்மீகியின் பாத்திரங்களே வளர்த்து மகோன்னத நிலேக்கு உயர்த்திய கம்பரின் அரிய திறனே இந்தச் சிறு முன்னுரையில் விரித்துக் கூறுவது என்பது இயலாத காரியம். எனினும் அவருடைய ஒப்பற்ற திறமைக்கு ஒரு சில உதாரணங்களே மட்டும் காட்டுவோம்:

1. வால்மீகத்தில் வரும் அனுமான் மகா புத்திமாளுக வும், பலசாலியாகவும், பக்திமாளுகவும் திகழ்கிருன். அவனுடைய சொற்கள் கேட்பவர்களுக்கு மதுரமானவையாக வும், இதமானவையாகவும் இருக்கின்றன. அதே சமயத்தில் அவனிடத்தில் சில குறைகளும் காணப்படுகின்றன. ஒரு குறையை வால்மீகியே சுட்டிக் காட்டுகிருர்.

இலங்கையில் சீதையைத் தேடி இராவணனின் அந்தப் புரத்தை அடைகிருன் அனுமான். அங்கே அரக்கனே உயிர் போல நேசிக்கும் அவனுடைய ஆசை நாயகிகள் படுத்துறங்கு வதைப் பார்த்து, ''அனுமான் பெரிய புத்திசாலியாக இருந்தாலும், தன் ஜாதிசுபாவத்திற்கு (குரங்கு சுபாவத்திற்கு)த் தகுந்த விபரீத புத்தியடைந்து, 'இந்தப் பெண்களேக் கன்னிகளாக இருக்கும்போதே இராவணன் கொண்டுவந்து கல்யாணம் செய்து கொண்டதுபோல், சீதையையும் இராமன் கல்யாணம் செய்துகொள்வதற்குமுன் கொண்டு வந்து விவாகம் செய்து கொண்டிருந்தால் அவனுக்கு க்ஷேமம் உண்டாகியிருக்குமே' என்று எண்ணிஞன். பிறகு அவ்வாறு கருதியது தவறு என்று உணர்ந்தான்''—இவ்வாறு வால்மீகி முனிவர் கூறுகிருர். கணநேரமேனும், கொடியவஞன இராவணனின் க்ஷேமத்திற்காக சீதையின் புனிதத்தன்மையை அறவே மறந்து இவ்வாறு தரக்குறைவாகக் கவலேப் படுவதால் இங்கே அனுமானின் பெருங்குறையையும், அதன் காரணமாக அந்தப் பாத்திரப் படைப்பில் ஏற்பட்டுள்ள பெரிய விகாரத்தையுமே காண்கிருேம்.

2. இராவணனின் அந்தப்புரத்தில் அவனுடைய முதல் மனேவியான மண்டோதரி ஒரு பட்ட மகிஷிக்குரிய அலங்காரங்களுடனும் ஆடம்பரங்களுடனும் படுத்து உறங்குவதை அனுமான் பார்க்கிருன். அவளேயே சீதை என்று முதலில் நினேத்துவிடுகிருன். அதஞல், 'சீதையைப் பார்த்து விட்டோம்' என்று பெருமகிழ்ச்சி கொள்கிருன். அவள் கற்பை இழந்திருந்தால்தான் அரக்கனின் அந்தப்புரத்தில் அரசியின்

கோலத்தில் நிம்மதியாகப் படுத்துறங்க முடியும். அந்த நிலையில் அனுமானுக்கு அப்போது மகிழ்ச்சி உண்டாகவே முடியாது. இதை உணர்ந்த கம்பர், மண்டோதரியைச் சீதை என்று அனுமான் தவருகக் கருதிய மாத்திரத்தில் தாங்க முடியாத மனவேதனையை அடைவதாகக் கூறியிருக்கிருர். 'இவள் தான் கற்பு நீங்கிய சீதை என்ருல், இராமனின் புகழும், நானும், இலங்கையும், அரக்கர்களும் இன்றே அழிகிருேம்' என்று கம்பரின் அனுமான் குமுறுகிருன். அனுமான் என்ற மகோன்னதமான பாத்திரத்தைக் கம்பர் எவ்வாறு கண்ணுங் கருத்துமாக உருவாக்கியிருக்கிருர் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம்.

3. கும்பகருணன், விபீஷணன், இந்திரசித்து ஆகியவர்கள் தூங்கிக் கொண்டிருப்பதை அனுமான் பார்த்துக் கொண்டே சென்ருன் என்று மட்டுமே வால்மீகம் கூறுகிறது. ஆனல் கம்பரின் அனுமானே அந்த அரக்கர்களில் ஒவ்வொருவனையும் கூர்ந்து நோக்கி, அவர்களுடைய குணுகுணங்களையும் ஊகித்து உணர்கிருன். அனுமான் ஒரு பேரறிஞன் என்பதைப் புலப்படுத்துவதற்காகவே கம்பர் இப்படி ஓர் அற்புதமான கட்டத்தைச் சிருஷ்டித்திருக்கிருர்.

4. இராவணனை அனுமான் முதல் முதலில் பார்க்கும் போது, அந்த அரக்கனும் தூங்கிக் கொண்டிருக்கிருன். அப்பொழுது, 'சீதையைத் தேடிவந்த நான் முதலில் இந்த மகா பாவியைப் பார்த்தேனே' என்று அனுமான் துக்கப்படுவதாக வால்மீகம் கூறுகிறது. ஆனல் கம்பராமாயணத்திலோ, அரக்கனைக் கண்டதுமே அனுமானுடைய கண்கள் கோபத்தினல் நெருப்பைக் கக்குகின்றன. அரக்கனின் பத்துத் தலைகளையும் அப்பொழுதே தகர்த்துவிட வேண்டும் என்று அனுமான் துடிக்கிருன். சீதையை அபகரித்து வந்த ஒரு மகாபாதகனைப் பார்த்த மாத்திரத்தில் மகா வீரனை அனுமானுக்குத் துக்கம் வருவதென்பது அசம்பாவிதமும், இயற்கைக்கு மாருனதும், அனுமானின் பெருமையையே குறைப்பதுமாகும். கோபாவேசம் பிறந்து அரக்கனைக் கொல்லத் துடிப்பதுதான் அனுமானுடைய வீர சௌந்தரியத்தைப் புலப்படுத்தக் கூடியது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

5. வால்மீகியின் அனுமான், சீதையைப் பார்த்தபின் இலங்கையிலிருந்து மகேந்திரமலைக்குத் திரும்பிவந்து அங்கு தன் வரவை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருந்த வானர வீரர்களிடம் தேவியைக் கண்ட செய்தியைக் கூறுகிருன். அப்போது, இலங்கையில் மகாவீரர்களான அரக்கர்களுடன் தான் போர் செய்து அடைந்த வெற்றிகளையெல்லாம் விரித்

துரைக்கிருன். கம்பரின் அனுமானே ஒரு மகா வீரனுக்குரிய அடக்கத்துடன், சீதையைப் பார்த்த செய்தியை மட்டுமே கூறி நிறுத்துகிருன். தன் வெற்றிகளைத் தானே எடுத்துச் சொல்ல அவன் வெட்கப்பட்டு எதையுமே கூறவில்லை என் கிருர் கம்பர்.

6. கம்பரின் அனுமான் ''சொல்லின் செல்வன்'' என் பதை, அவன் இராவணனேடு பேசும் இடத்திலும், திரும்பி வந்து இராமனேடு பேசும் இடத்திலும் காண்கிறேம். வால் மீகியின் அனுமானே இப்படிப்பட்ட சொல்லின் செல்வனுகக் காணப்படவில்லை. இராவணனேடு அவன் சம்வாதம் செய்ததாகவே வால்மீகத்தில் கூறப்படவில்லை. இராவண னுடைய மந்திரி பிரகத்தன் என்பவனே அனுமானேடு பேசு கிருன். அப்போது அனுமான் இராவணனுக்கு நீதி போதனை செய்கிருன். அவ்வளவுதான். அனுமானுடைய காம்பீரி யத்தையும், வீர உரைகளையும், இராவணனைத் துரும்பாகக் கருதி அவன் பரிகசிப்பதையும் வால்மீகத்தில் காண முடிய வில்லை. சீதையைக் கண்ட செய்தியை அவன் இராமனுக்குத் தெரிவிக்கும் முறையும் அங்கே சர்வ சாதாரணமாகத்தான் இருக்கிறது. அதிலும், விரசமான காகாசுர விருத்தாந்தத்தை அவன் சொல்லிக் கொண்டு நிற்பது காவியத்தின் சுவைக்கே கேடு செய்கிறது. இந்த இடத்தில் கம்பருடைய அனுமான் பேசுவது அவனுடைய பெருமையை விண்ணுக்கு உயர்த்து கிறது.

கம்பரின் அனுமானைப் பற்றியும் அவனுடைய ஒப்பற்ற பெருமைகளைப் பற்றியும் எவ்வளவோ சொல்லலாம். சுருக்க மாகச் சொல்வதென்ருல், வால்மீகியின் அனுமானிடம் குறைகள் காணப்பட்ட போதிலும் அவன் ஒரு பெரிய வீரன் என்பதிலும், பெரிய பலவான் என்பதிலும், பெரிய புத்தி மான் என்பதிலும் சந்தேகமில்லை. கம்பரின் அனுமானே மகா வீரனுகவும், மகா பலவானுகவும், மகா புத்திமானுகவும் இருப்பதோடு, நமக்கும், காவியத் தலைவியான சீதா பிராட் டிக்குமே ஒரு தெய்வமாகவும் இருக்கிருன். 'அம்மையும் அப்பனுமாக இருக்கும் ஆண்டவனே!' என்று அனுமானை நோக்கிச் சீதையே கூறுவதாகக் கம்பர் பாடியிருக்கிருர்.

சீதையின் சோக சித்திரம்

சுந்தர காண்டத்தின் மற்ருெரு பிரதான பாத்திரமான சீதையை, உலகின் மற்றக் காவியங்களில் காண முடியாத ஓர் அரிய சோக சித்திரமாகப் படைத்துள்ள வால்மீகி முனி வரின் அரிய திறனை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். கம்ப

ராமாயணத்தில் வரும் சிதையின் சோக சித்திரத்தையோ வார்த்தைகளால் புகழ முடியாது; படிக்கும் போதெல்லாம் துளிக்கின்ற நம் கண்ணீரைக் கொண்டுதான் அந்தச் சோக சித்திரத்துக்குப் புகழ்மாலை சூட்ட முடியும். சீதை இங்கே பெண்களின் தெய்வமாகக் காட்சியளிக்கிறாள்; கம்பரும் மகா கவிகளின் தெய்வமாகக் காட்சி தருகிறார். இந்த இரு தெய்வங்களும் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில் இந்தச் சுந்தர காண்டம்.

இந்தப் பதிப்பு

நான் ஏற்கெனவே பதிப்பித்த பால-அயோத்தியா காண்டங்களும், ஆரணிய-கிஷ்கிந்தா காண்டங்களும் இரு நூல்களாகச் சக்தி காரியாலயத்தாரால் வெளியிடப்பட்டன. அந்த நூல்களைப் பதிப்பித்த முறையிலேயே, இந்தச் சுந்தர காண்டத்தையும், கதைச் சுருக்கம், அரும்பத உரை, அடிக் குறிப்புக்கள், விளக்கங்கள் முதலியவற்றை எழுதிச் சேர்த்துப் பதிப்பித்திருக்கிறேன். பொருள் காண்பதற்கு உதவியாக, அவசியமான இடங்களில் சந்தி பிரித்தும் செய்யுட்களைப் பதிப்பித்துள்ளேன். ஓரளவு தமிழறிவு படைத்தவர்களும்கூட கம்பரின் பாடல்களைப் படித்துப் பொருள் தெரிந்து கொள்ளவும், 'செஞ்சொற் கவியின்ப'த்தை அனுபவிக்கவும் இந்தப் புத்தகம் உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். மேலும், எனக்குக் கிடைத்த சுந்தர காண்டப் பதிப்புக்களையெல்லாம் பல காலம் ஒப்புநோக்கி, ஆராய்ந்து, சிறந்த பாடங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றையே மூலபாடங்களாக இந்நூலில் கொடுத்திருக்கிறேன்.

இந்த நூலைப் பதிப்பிப்பதிலும், பாடல்களுக்குப் பொருள் காண்பதிலும் எனக்கு உதவியாக இருந்த நூல்களின் பெயர் விவரங்கள் பின்வருமாறு:

1. தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ டி. சி. பார்த்தசாரதி அய்யங்கார் பரிசோதித்து 1928-ல் வெளியிட்ட கம்பராமாயணம் முதல் ஐந்து காண்டங்களின் தொகுப்பு.

2. திரிசிபுரம் மகா வித்துவான் ஸ்ரீ வி. கோவிந்த பிள்ளையின் பதவுரையோடு கூடிய சுந்தர காண்டம்—பிரஜோற்பத்தி வருஷத்தில் (1871) வெளிவந்தது.

3. ஸ்ரீமான்கள் வை. மு. சடகோப ராமானுஜாசார்யரும், சே. கிருஷ்ணமாசார்யரும், வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யரும் இயற்றிய உரையுடன் கூடிய சுந்தரகாண்டம் (1939).

4. ஸ்ரீ பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாசையங்கார் பதிப்பித்த (ஆழ்வார் திருநகரிப் பிரதிகளின்படி) கிட்கிந்தா, சுந்தர காண்டங்கள் *(1951)*

5. மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடான உரையுடன் கூடிய சுந்தர காண்டம் *(1957)*

திருத்தங்கள்

இந்த நூலில் காணப்படும் 559-ம் பாட்டின் 3-வது வரிக்கு, ''அம்மையாய் அப்பன் ஆய அத்தனே'' என்றும், 666-ம் பாட்டின் 3-வது வரிக்கு ''வால்உற அனையவன் தலையை வவ்விவில்'' என்றும் பாடங்கள் உண்டு. அவற்றையே சிறந்த பாடங்களாகக் கொள்ளலாம். 681-ம் பாட்டின் 2-வது வரியின் தொடக்கத்தில் ''வேறு'' என்பது ''வேறி'' என்று இருக்க வேண்டும். அந்தந்த இடங்களில் இந்த மூன்று திருத்தங்களையும் முதலில் செய்து கொள்ள வேண்டுகிறேன்.

இந்த நூலைச் சிறந்த முறையில் மலிவுப் பதிப்பாக வெளியிடும் தமிழ்ப் புத்தகாலய அதிபர் ஸ்ரீ கண. முத்தையா அவர்களுக்கும், மிகுந்த சிரத்தை எடுத்துச் சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்துள்ள ராமன் பிரஸ் அதிபர் ஸ்ரீ சீதாராமன் அவர்களுக்கும், அச்சகத்தின் தொழிலாளர்களுக்கும், அச்சுத் தாள்களை ஒப்பு நோக்குவதிலும் பாட்டு முதற்குறிப்பு அரும்பத உரை அகராதிகளைத் தயாரிப்பதிலும் எனக்கு உதவியாக இருந்த என் மனைவி ஸ்ரீமதி சீதாலக்ஷ்மிக்கும், என் குழந்தைகள் ராமச்சந்திரன், ராதா, சாரங்கராஜன், பாரதி ஆகியவர்களுக்கும் ஸ்ரீராமபிரானின் திருவருளும், கம்பரின் ஆசீர்வாதமும் பூரணமாகக் கிட்டவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். என் சிற்றறிவாலும், மறதியாலும், நான் அறியாமல் நேர்ந்த தவறுகளாலும் இந்தப் புத்தகத்தில் பிழைகள் காணப்பட்டால் அறிஞர்கள் என்னை மன்னித்து, அந்தப் பிழைகளைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்றும் வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன். இந்த அரிய நூலைப் பதிப்பிக்கும் பணியில் சிற்றறிவுடைய நானும் ஈடுபடுவதற்கும், அந்தப் பணியை நிறைவேற்றுவதற்கும் எனக்குத் திருவருள் புரிந்து துணை செய்த ஸ்ரீ ராமபிரானின் திருவடிகளையும், கம்பர் பெருமானின் மலர்ப் பாதங்களையும் அனவரதமும் போற்றித் தொழுகிறேன்.

கு. அழகிரிசாமி

3—7—1965

கம்ப ராமாயணம்

சுந்தர காண்டத்தின் கதைச் சுருக்கம்

[சுந்தர காண்டம், கம்ப ராமாயணத்தில் ஐந்தாவது காண்டமாகும். முதல் நான்கு காண்டங்களாகிய பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம் ஆகியவற்றில் அடங்கியுள்ள கதையின் சுருக்கத்தை முதலில் தெரிந்து கொண்டு, அப்புறம் சுந்தர காண்டத்தின் கதைச் சுருக்கத்தைப் படிக்கலாம்:

1. பால காண்டம்

கோசல நாட்டில் அயோத்தியைத் தலைநகராகக் கொண்டு அறுபதினாயிரம் ஆண்டுகள் ராஜ்ய பரிபாலனம் செய்த தசரத மன்னனுக்குக் கோசலை, கைகேயி, சுமித்திரை என்ற மூன்று பட்டத்து மனைவியர் இருந்தனர். மன்னன் தனக்கு நெடுங்காலமாகப் பிள்ளையில்லாமல் இருந்தபடியால், தன் குல குருவான வசிட்டனுடைய ஆலோசனையின்படி கலைக்கோட்டு முனிவனை அழைத்து வந்து அசுவமேத யாகம் செய்தான். அதன் பயனாகக் கோசலையின் வயிற்றில் இராமனும், கைகேயியின் வயிற்றில் பரதனும், சுமித்திரையின் வயிற்றில் இலக்குவனும் சத்துருக்கனும் பிறந்தார்கள். திருமாலே இராமனாகப் பிறந்தான். திருமாலின் சக்கரம் பரதனாகவும், ஆதிசேஷன் இலக்குவனாகவும், சங்கு சத்துருக்கனாகவும் அவதரித்தன. புதல்வர்கள் நால்வரும் வசிட்டனிடம் கலைப்பயிற்சி பெற்று வளர்ந்துவரும் நாளில் விசுவாமித்திரன் என்னும் கோசிக முனிவன் வந்து, தாடகையை வதம் செய்வதற்காக இராமனைத் தன்னோடு அனுப்பும்படி கேட்டான். தசரதன் முதலில் தயங்கினாலும், பிறகு வசிட்டனுடைய ஆலோசனைப்படி இராமனையும் இலக்குவனையும் அனுப்பி வைத்தான். கோசிகனுடன் சென்ற இராம இலக்குவர்கள் தாடகையையும் அவளுடைய புதல்வன் சுவாகு என்ப

வனையும் கொன்றுர்கள். மாரீசன் என்ற அவளுடைய மற்ெறுரு மகனை இராம பாணம் கடலில் கொண்டு போய்த் தள்ளியது. அங்கிருந்து அவன் உயிர் பிழைத்துச் சென்ருன். இராமனுக்குச் சகதி வாய்ந்த பல ஆயுதங்களைக் கோசிகன் கொடுத்துத் தனது யாகத்தையும் செய்து முடித்தான். அதன் பின் கோசிகன், இராமன், இலக்குவன் ஆகிய மூவரும் மிதிலை மன்னன் சனகனுடைய வேள்வியைக் காண்பதற்காகச் செல்லும் வழியில், கல்லாகக் கிடந்த அகலிகை இராமனுடைய பாதம் பட்டுச் சாப விமோசனம் பெற்ருள்.

மூவரும் மிதிலையை அடைந்து அந்நகரத்துத் தெருவழியாக நடந்துபோகும்போது, கன்னிமாடத்திலிருந்த சீதையை இராமனும் இராமனைச் சீதையும் பார்க்க, இருவரும் காதல் கொண்டு உள்ளத்தைப் பறிகொடுத்தனர். மூவரும் கன்னிமாடத்தைக் கடந்துசென்று, அரண்மனையில் சனகமன்னனைக் கண்டார்கள். இராம இலக்குவர்களை சனகனுக்குக் கோசிகன் அறிமுகம் செய்து வைத்தான். அதன்பின் சிவதனுசை இராமன் வளைத்தான். சீதையை இராமனுக்கு மணம் முடிக்கத் தீர்மானமாகித் தசரதனுக்கும் மற்றும் உள்ள மன்னர்களுக்கும் செய்தி அனுப்பப்பட்டது. வில்லை வளைத்தவன், தனது உள்ளத்தைக் கொள்ளை கொண்ட இராமனே என்பதை அறிந்து சிதை ஆனந்தக் கடலில் ஆழ்ந்தாள். தசரதன் தன் பட்டத்துத் தேவியருடனும் பரிவாரங்களுடனும் புறப்பட்டு மிதிலைக்குப் போய்ச் சேர்ந்தான். சீதைக்கும் இராமனுக்கும் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

திருமணத்திற்குப் பிறகு தம்பதிகளும் தசரதன் முதலியவர்களும் அயோத்தி நகருக்குத் திரும்பி வரும்போது, பரசுராமன் எதிர்ப்பட்டு, தன்னிடம் உள்ள விஷ்ணுதனுசை வளைக்க முடியுமா என்று இராமனைக் கேட்க, இராமன் அதை வாங்கி வளைத்துவிட்டான். அப்போது இராமன் எய்த அம்பு, பரசுராமனின் தவத்தையெல்லாம் வாரிக்கொண்டுமீண்டது. அந்த வில்லை வருணனிடம் கொடுத்துப் பத்திர'மாக வைத்திருக்குமாறு சொல்லிவிட்டு, இராமன் தன் தந்தையுடனும் பிறருடனும் அயோத்திக்கு வந்து சேர்ந்தான். சில தினங்களுக்குப் பிறகு, பரதன் தன் தாய்வழிப் பாட்டனின் நாடாகிய கேகய நாட்டுக்குப் போனுன்.

2 அயோத்தியா காண்டம்

அறுபதினுயிரம் ஆண்டுகள் ராஜ்ய பரிபாலனம் செய்த தசரதன் வனத்திற்குச் சென்று தவம்புரிய விரும்பி, இராமனுக்கு முடிசூட்டக் கருதினுன். இதை மந்திரிகளும், மற்றும்

உள்ள பெரியவர்களும் ஆமோதித்தார்கள். மறுநாளே முடி சூட்ட ஏற்பாடாயிற்று ஆனல் மந்தரை என்ற கூனி இந்தச் செய்தியை அறிந்து மனம் துடித்துக் கோபமும் வேதனையும் அடைந்தாள். இராமன் சிறுவனுக இருந்தபோது வில்லில் மண்உருண்டையை வைத்துத் தன்மீது தெறித்ததை நினைவுக்குக் கொண்டு வந்து அவன் முடிசூடுவதற்கு எவ்விதத்திலாவது இடையூறு செய்ய வேண்டும் என்று கைகேயியின் மாளிகைக்குக் கூனி சென்ருள். அவள் கைகேயிக்குச் செவிலித்தாயும் ஆவாள். கைகேயியின் நல்ல உள்ளத்தைத் தன் துர்ப்போதனைகளால் கூனி மாற்றிவிட்டாள். அதன் விளைவாகக் கைகேயி தன் மகன் பரதனுக்கு முடிசூட்ட வேண்டுமென்றும் இராமனைக் காட்டுக்கு அனுப்ப வேண்டுமென்றும் தசரதனிடம் பிடிவாதமாகச் சொன்னுள். முன்பு தசரதன் கொடுத்த இரண்டு வரங்களைக் கைகேயி அவனுக்கு நினைவூட்டி அவற்றின்படி இந்த இரண்டு காரியங்களையும் செய்ய வேண்டுமென்றுசொல்ல, தசரதன் அவளுக்கு நற்புத்தி புகட்ட எவ்வளவோ முயன்ருன். கைகேயியின் பிடிவாதம் தளராததைக் கண்டு தசரதன் மூர்ச்சை அடைந்தான். பிறகு அவள் இராமனை வரவழைத்து, பரதன் முடிசூட வேண்டுமென்பதும் இராமன் காட்டுக்குச் சென்று பதினுன்கு வருஷங்கள் வசிக்க வேண்டுமென்பதும் தசரதனின் கட்டளைகள் என்றுதெரிவிக்க, இராமன் மனமகிழ்ச்சியோடு அதை ஏற்றுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டான். நேரே தன் தாய் கோசலையிடம் சென்று விடைபெற்றுக் கொண்டு சிற்றன்னையாகிய சுமித்திரையிடம் சென்ருன். இலக்குவனும் இராமனேடு காட்டுக்குச் செல்ல விரும்பினன். இருவரும் மரவுரி தரித்துக்கொண்டு வெளியேவந்தனர். சீதையின் மாளிகைக்குச்சென்று இராமன் செய்தியைத் தெரிவிக்கவும், அவளும் இராமனேடு காட்டுக்குப் புறப்பட்டாள்.

நகர மக்கள் அனைவரும் அழுது புலம்பினுர்கள். இராமன், இலக்குவன், சீதை ஆகிய மூவருடன் அவர்களும் காட்டுக்குப் புறப்பட்டார்கள். இரண்டு யோசனை தூரம் சென்றபின், ஒரு சோலையில் இராமன் தங்கினுன். சிறிது நேரத்தில் நகரமக்கள் அன்ன ஆகாரமின்றி அயர்ந்து தூங்கிவிடவே, இராம இலக்குவர்களும் சீதையும் அதுவே தக்க சமயம் என்று காட்டை நோக்கிச் சென்ருர்கள். இராமன் வனத்துக்குச் சென்றுவிட்ட செய்தியைச் சுமந்திரன் என்ற தேர்ப்பாகன் வந்து தெரிவித்ததும் தசரதன் உயிர்நீத்தான். கேகய நாட்டிலிருந்து பரதன் வந்து சேரும்வரை தசரதனுடைய சடலத்தைத் தைலத்தில் வைத்துப் பாதுகாத்தனர்.

காட்டை நோக்கிச் சென்ற மூவரும் கங்கைக் கரையை அடைந்தார்கள். அங்கே சிருங்கிபேரம் என்ற ஊரில் வசித்து வந்த குகன் என்ற வேடர் தலைவன், இராமனைக் காண வந்தான். இராமனின் விருப்பப்படி மறுநாள் இராம இலக்கு வர்களையும் சீதையையும் தனது ஓடத்தில் வைத்துக் கங்கை யாற்றின் மறுகரையில் கொண்டு போய் விட்டான் குகன். குகனைத் தன்னுடைய சகோதரனாக ஏற்றுக் கொண்ட இராமன் அவனுக்கு விடைகொடுத்து விட்டுத் தன் தம்பி யோடும் மனைவியோடும் வழி நடந்து சென்றான். மூவரும் பரத்துவாசனின் ஆஸ்ரமத்தில் விருந்துண்டு அப்புறம் சித்திர கூடமலைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். இலக்குவன் அங்கே ஒரு பர்ணசாலையை அமைத்தான். அதில் மூவரும் தங்கியிருந் தனர்.

பரதனும் சத்துருக்கனும் கேகய நாட்டிலிருந்து அயோத் திக்குத் திரும்பி வந்தார்கள். தன் தாயான கைகேயியின் வாய்மொழி மூலம் தசரதன் இறந்ததையும், இராமன் காட்டுக்குச் சென்றதையும், இத்தனைக்கும் அவளே காரணம் என்பதையும் அறிந்த பரதன் அவளைப் பலவாறு திட்டிவிட்டு, அங்கேயிருந்து கோசலையின் மாளிகைக்குச் சென்றான். தந்தைக்கு இறுதிக் கடன்களைச் செய்து முடித்தபின் பத்து நாட்களுக்குப் பிறகு பரதன் சகோதரன் சத்துருக்கனோடும், தாய்மார் மூவரோடும், வசிட்டனோடும் இராமனைக் காண்ப தற்காகக் காட்டுக்குப் புறப்பட்டான். அவனுடன் பெரும் படையும் நகரமக்களின் கூட்டமும் சென்றன. கங்கைக்கரைக் குப் போய் அவர்கள் குகனைப் பார்த்தார்கள். பரதனையும் அவனுடன் சென்ற சேனையையும் பார்த்த குகன், இராம னோடு போர் செய்வதற்கே அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று முதலில் தவறாகக் கருதினான். ஆனால் பரதனின் தவ வேடத் தையும் ஆறாத் துயரத்தையும் கண்டபின் அவன் தன் தவறான கருத்தை மாற்றிக் கொண்டான்; பரதனிடம் பேரன்பும் கொண்டான். அடுத்த நாள் பரதன் முதலியோரை ஓடங் களில் ஏற்றி மறுகரையில் கொண்டு போய்விட்டான். பரதன் போகும் வழியில் பரத்துவாசனின் ஆஸ்ரமத்தில் ஒருநாள் தங்கியிருந்து, மறுநாள் விடைபெற்றுச் சென்றான்.

சித்திரகூட மலையின் அருகே சென்றதும் தனது சேனை யைப்பின்னால் நிறுத்திவிட்டு சத்துருக்கனை மட்டும்அழைத்துக் கொண்டு இராமனிடம் சென்றான் பரதன். அவன் அழுததைக் கண்டு இராமனும் கண்ணீர் சொரிந்தான்; தந்தை இறந்த செய்தி கேட்டு அழுது புலம்பினான். அவன் அயோத்திக்

குத் திரும்பி ராஜ்ய பாரத்தை ஏற்க வேண்டுமென்று பரதன் எவ்வளவோ கெஞ்சியும், தந்தையின் கட்டளையை மீற முடியாது என்று இராமன் மறுத்து விட்டான். பதினன்கு வருஷ காலம் நாட்டை ஆண்டு வரும்படியாக அவன் பரதனுக்குக் கூறினன். பதினன்கு வருஷ காலம் கழிந்ததும் இராமன் திரும்பி வராவிட்டால், தான் தீயில் குதித்து உயிரைவிடப் போவதாகப் பரதன் கூறினன். பிறகு இராமனுடைய பாதுகைகளை வாங்கித் தலையில் வைத்துக்கொண்டு பரதன் விடை பெற்றுத் திரும்பினன். அயோத்திக்கு அருகில் உள்ள நந்திக் கிராமத்தில் பரதன் தங்கிவிட்டான். இராமனுடைய பாதுகைகளே செங்கோல் செலுத்தின. சித்திரகூட மலையில் இருந்தால், அன்பு கொண்ட மக்கள் அங்கு வந்து சிரமம் கொடுப்பார்கள் என்று கருதி இராமன் தன் மனைவியோடும் தம்பியோடும் தென்திசை நோக்கிச் சென்றான்.

3. ஆரணிய காண்டம்

இராமன், இலக்குவன், சீதை ஆகிய மூவரும் தென் திசையை நோக்கி செல்லும்போது, அத்திரி முனிவனின் ஆஸ்ரமத்தில் ஒருநாள் தங்கியிருந்து மறுநாள் தண்டக வனத்துக்குப் போய்ச்சேர்ந்தார்கள். அங்கே விராதன் என்ற ஓர் அரக்கன் வந்து சீதையைத் தூக்கிக்கொண்டு செல்லவே, இராமன் தனது வில்லில் இடிமுழக்கம்போல் நாணொலியை எழுப்பினன். உடனே சீதையைக் கீழே விட்டுவிட்டு அரக்கன் போர் புரிய வந்தான். இராம இலக்குவர்கள் அவனுடைய தோள்களை வெட்டி எறிந்துவிட்டு, அவனைக் குழிவெட்டிப் புதைக்கப் போனார்கள். இராமன் அவனைக் காலால் குழியில் தள்ளவே, அவனுடைய அரக்க வடிவம் நீங்கியது. சாப விமோசனம் பெற்ற விராதன், தான் பூர்வத்தில் தும்புரு என்ற கந்தர்வன் என்பதைத் தெரிவித்துத் தான் சாபத்துக்குள்ளான வரலாற்றையும் கூறி, இராமனைப் பலவாருகத் துதித்தபின் தன் பழைய உலகத்துக்குப் போய்விட்டான்.

இராமன் முதலியோர் அங்கிருந்து புறப்பட்டு சரபங்க முனிவனின் ஆஸ்ரமத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அன்றிரவு அங்கே தங்கினர்கள். மறுநாள் சரபங்கன் இராமனை நோக்கி, ''எனக்கு அழிவற்ற பரமபதம் கிட்டுவதற்கு உதவுவாயாக'' என்று வேண்டினன். பின்பு அந்த முனிவன் தன் பத்தினியோடு தீயில் மூழ்கிப் பரமபதம் அடைந்தான்.

இராமன் முதலியோர் அங்கிருந்து மலைகளும் நதிகளும் கடந்து வரும்போது தண்டகவனத்து முனிவர்கள் இராமனைக் கண்டு மனம் களித்து, ''நாங்கள் தவம் செய்வதற்கு இடையூருக இருக்கும் அரக்கர்களிடமிருந்து எங்களைக் காப்பாற்ற வேண்டும்'' என்று கேட்டுக் கொள்ள, இராமனும் அவர்களுக்கு அபயம் அளித்து அரக்கர் குலத்தை வேரறுப்பதாக உறுதி கூறினுன். தண்டகவனத்தில் இராமன் முதலியோர் பத்து ஆண்டுகள் தங்கியிருந்தார்கள். அதன்பின் அங்கிருந்து நடந்து சென்று சுதீக்கண முனிவன் ஆஸ்ரமத்தை அடைந்து, அவனுடைய தவத்தையெல்லாம் தட்சிணையாகப் பெற்று, அகத்திய முனிவனின் ஆஸ்ரமத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

இராமனுக்கு அகத்தியன் விஷ்ணுதனுசையும், முன்னொரு காலத்தில் திரிபுரங்களை எரித்த விஷ்ணு பாணத்தையும் கொடுத்தான். விஷ்ணுதனுசு முன்பு பரசுராமனுல் ராமனுக்கும், ராமனுல் வருணனுக்கும், வருணனுல் அகத்தியனுக்கும் கொடுக்கப்பட்டதாகும். அகத்தியன் கூறியபடி கோதாவரி நதிக்கரையில் உள்ள பஞ்சவடியில் போய் வசிப்பதற்காக இராமன் முதலியோர் விடைபெற்றுச் சென்றனர்.

செல்லும் வழியில் கழுகுகளின் அரசனும், தசரதனுடைய பழைய நண்பனுமான சடாயுவைப் பார்த்தார்கள். அவர்கள் தசரத குமாரர்கள் என்பதை அறிந்து பெரிதும் மகிழ்ந்த சடாயு அவர்களை அழைத்துப் போய்ப் பஞ்சவடியைக் காட்டினுன்.

பஞ்சவடியில் இராம இலக்குவர்களும் சீதையும் ஒரு பர்ணசாலை கட்டிக் கொண்டு வசித்தபோது, இராவணனின் தங்கையாகிய சூர்ப்பனகை என்ற அரக்கி, அழகியபெண்ணுகை வடிவெடுத்து இராமனுக்கு எதிரே வந்து தன்னை நாயகியாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கெஞ்சினுள். சீதையை ஓர் வஞ்சனை அரக்கி என்று இழிவாகப் பேசினுள். விரைவில் அப்பால் போய் விடும்படி சூர்ப்பனகையை நோக்கிச் சொன்ன இராமன் தன் மனைவியோடு பர்ணசாலைக்குள் போய்விட்டான். சூர்ப்பனகையோ அன்றிரவெல்லாம் காம நோயினுல் அவதிப்பட்டு, மறுநாள் காலையில் சீதை தனித்திருக்கும் நேரம் பார்த்து அவளைத் தூக்குவதற்காக வந்தாள். ஆனுல் மறைவில் காவல் காத்து நின்ற இலக்குவன் ஓடிவந்து அரக்கியைத் தடுத்தான். அவளோ அவனையே தூக்கிச்செல்ல முற்பட்டாள். உடனே அவன் அந்த அரக்கியின் மூக்கையும், காதுகளையும், முலைக்காம்புகளையும் அறுத்துவிட்டான். அவள்

அழுது புலம்பி, பெருங்கூச்சலிட்டு, ''உங்களுக்கு எமனைகக் கரனை அழைத்து வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு, கரன் என்றஅரக்கனிடம் போய்க் கதறிப் புரண்டு,தசரத குமாரர்களால் தான் மூக்கிழந்த வரலாற்றைச்சொன்னாள். கரன்,தூடணன், திரிசிரா என்ற அரக்கர்கள் இராமனை எதிர்த்துப்போர் செய்ய வந்தார்கள். சூர்ப்பனகை அவர்களுக்கு வழிகாட்டிக் கொண்டு வந்தாள். இராமன் அந்த அரக்கர்கள் மூவரையும் போரில் கொன்றான்.

சூர்ப்பனகை அங்கிருந்து இலங்கைக்குப் போய், சிம்மாசனத்தில் கொலு வீற்றிருந்த அண்ணன் இராவணனிடம் தனக்கு நேர்ந்த கதியையும், கர தூடணர்கள் போரில் மாண்ட செய்தியையும், சீதையின் ஒப்பற்ற அழகைப் பற்றியும் எடுத்துரைத்தாள். சீதையின் அழகைப்பற்றிக் கேட்ட மாத்திரத்திலேயே இராவணன் அவள்மீது மோகம்கொண்டு அவளை அடைந்துவிட வேண்டுமென்ற தீர்மானத்துடன், தாடகையின் மகனான மாரீசனைத் தேடிப் போனான். சீதையைத் தூக்கிக் கொண்டுவரத் தான் தீர்மானித்திருப்பதை மாரீசனிடம் இராவணன் சொல்லி, ''நீ ஒரு பொன்மானாக வடிவெடுத்துச் சீதைக்கு முன்னால் போய் நின்று, உன்னைச் சீதை விரும்பும்படி செய்'' என்று கட்டளையிட்டான். மாரீசனும் வேறுவழியின்றி அவ்விதமே இராம இலக்குவர்களும் சீதையும் வசிக்கும் இடத்திற்கு வந்து அவர்கள் எதிரே பொன்மானாகக் காட்சியளித்தான்.சீதை விரும்பிய பிரகாரம் அந்த மானைப் பிடித்துவர இராமன் சென்றான். மான் அகப்படாமல் வெகுதூரம் ஓடி அலைக்கழித்ததால் அதன்மீது இராமன் அம்பு எய்தான். அம்பு தைத்த மாத்திரத்தில் மாரீசன் பெருங்கூச்சலிட்டுக் கீழே விழுந்து மாண்டான். கூச்சலைக்கேட்ட சீதை பயந்து, இராமனைப் பார்த்துவரும்படி இலக்குவனை அனுப்பினாள். அவனும் போனான்.

இராம இலக்குவர்கள் இல்லாத அந்தச் சமயத்தில் முனிவன் போலப் பொய்வேடம் பூண்டுவந்த இராவணன், பின்பு தன் உண்மைத் தோற்றத்தையும் காட்டிச் சீதையைப் பர்ணசாலையோடும் பூமியோடும் பெயர்த்துத் தன்தேரில் வைத்துக் கொண்டு ஆகாய மார்க்கமாகச் சென்றான். செல்லும்வழியில் இராவணனைச் சடாயு எதிர்க்க, இருவரும் போர் செய்தார்கள். இறுதியில் சடாயு இராவணனின் வாளால் வெட்டப்பட்டுச் சிறகு இழந்து கீழே விழுந்தான். இராவணன் சீதையைக்கொண்டு போய் இலங்கையில் சிஞ்சுபவனத்தில்(அசோக வனத்தில்) சிறை வைத்தான்.

இராம இலக்குவர்கள் பர்ணசாலைக்குத் திரும்பிவந்த போது சீதை அங்கு இல்லாததைக் கண்டு அதிர்ச்சி அடைந்து சீதையைத் தேடித் தென்திசை நோக்கிச் சென்றார்கள். கீழே விழுந்து கிடந்த சடாயுவைப் பார்த்தார்கள். இராவணன் சிதையைத் தூக்கிச் சென்றதையும் அவனோடு தான் போர் செய்ததையும் சடாயு கூறினான். இராவணன் எங்கேபோனான் என்பதைச் சொல்வதற்கு முன்பே சடாயு இறந்து விட்டான். அவனுக்கு இராம இலக்குவர்கள் இறுதிக் கடன்களைச் செய்து முடித்துவிட்டு, அங்கிருந்து ஒரு மலைக்குப்போய் அங்கே தங்கினார்கள்.

மறுநாள் இருவரும் ஒரு சோலைக்குப்போனார்கள். அங்கே இராமனுக்குத் தண்ணீர் கொண்டுவரச் சென்ற இலக்குவனை அயோமுகி என்ற ஓர் அரக்கி பார்த்து, அவன்மீது மோகம் கொண்டு நெருங்கிவந்தாள். இலக்குவன் எச்சரித்தும் அதைப் பொருட்படுத்தாமல் அவனை அயோமுகி எடுத்து ஆகாய மார்க்கத்தில் கொண்டுபோய்த் தழுவினாள். இலக்குவன் அவளுடைய மூக்கை அறுத்துவிட்டான். அரக்கியின் கூச்சல் கேட்டு அங்கு வந்தான் இராமன். பிறகு இருவரும் ஒரு மலையில் போய்த் தங்கினார்கள்.

மறுநாள் அவர்கள் கவந்த வனத்துக்குப் போனார்கள். அங்கே கவந்தன் என்ற ஓர் அரக்கன் எத்தனையோ உயிர்ப் பிராணிகளையும் இராம இலக்குவர்களையும் கைகளால் வளைத்துப் பிடித்துச் சாப்பிட முயன்றான். இருவரும் அவனுடைய தோள்களை வெட்டிவிட்டார்கள். இராமனின் கைபட்ட மாத்திரத்தில் கவந்தனின் சாபமும் கோர உருவமும் நீங்கி விட்டன. அவன் இராமனைத் துதித்தான். தான் முற்பிறப்பில் தனு என்ற கந்தர்வனாக இருந்து ஒரு சாபத்தினால் அரக்கனாகப் பிறந்த செய்தியை அவன் தெரிவித்தான். பிறகு, சவரி என்பவளைப் போய்ப் பார்க்குமாறு இராமனுக்குக் கூறினான். சவரி சொல்லும் வழியில் போய் இருசியமூக மலையில் இருக்கும் சுக்கிரீவனிடம் நட்புக் கொண்டு, அதன்பின் சீதையைத் தேடும்படி இராமனிடம் சொல்லிவிட்டு அவன் ஆகாய மார்க்கத்தில் போய்விட்டான்.

இராம இலக்குவர்களும் அவன் கூறிய பிரகாரமே வழி நடந்து மதங்கமுனிவனின் ஆஸ்ரமத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே சவரி என்ற தவப்பெண், இராமனுக்குக் கனிகளைப்படைத்து உபசரித்து, இருசியமூக மலைக்குச்செல்லும் வழியையும் விவரமாக எடுத்துரைத்தாள். அப்புறம் அவள்

முக்தி அடைந்தாள். இராம இலக்குவர்கள் அவள் கூறிய வழியில் நடந்து சென்று, பம்பை என்ற பொய்கையை அடைந்தார்கள்.

4. கிஷ்கிந்தா காண்டம்

கிஷ்கிந்தை நகரின் பக்கத்திலுள்ள பம்பைப் பொய்கையில் இராம இலக்குவர்கள் நீராடிவிட்டு ஒரு சோலையில் போய்த் தங்கினர்கள். மறுநாள் விடிந்ததும் இருசியமூக மலைக்குச் சென்ருர்கள். அவர்களைத் தூரத்தில் இருந்து பார்த்த சுக்கிரீவன், அவர்கள் தன் அண்ணனும் பகைவனுமான வாலியின் ஆட்களோ என்று பயந்து, ''அவர்களைப் பார்'' என்று அனுமானிடம் சொன்னன். அனுமான்போய் பிரம்மச்சாரி வேடம் கொண்டு மறைவிடத்திலிருந்து இராம இலக்குவர்களைப் பார்த்து அவர்கள் தருமதேவதைகள் என்பதை அறிந்து அவர்களுக்கு முன்னல் வந்துநின்று நல்வரவு கூறினன். தான்வாயுவுக்கும்அஞ்சனைக்கும் புதல்வனகப்பிறந்தவன் என்பதையும் சுக்கிரீவனுக்கு ஏவல் செய்பவன் என்பதையும் அனுமான் தெரிவித்தான். அவர்கள் தசரத புத்திரர்கள் என்பதையும், சீதையைத் தேடி வந்திருக்கிருர்கள் என்பதையும் அவர்கள் வாய்மொழி மூலமாக அனுமான் அறிந்து கொண்டான். அப்புறம் அனுமான் சுக்கிரீவனிடம் போய் இராம இலக்குவர்களைப் பற்றிச் சொன்னன். சுக்கிரீவன் கட்டளைப்படி திரும்பி வந்து இராம இலக்குவர்களைத் தன் தலைவனிடம் அழைத்துச் சென்ருன். சந்தித்த மாத்திரத்தில் சுக்கிரீவனிடம் இராமன் நட்புக் கொண்டான். பிறகு வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் உள்ள பகைமைபற்றி அனுமான் எடுத்துரைத்தான். வாலி துரத்தியதால்தான் சுக்கிரீவன் இருசியமூக மலையில் வந்து தன் பரிவாரங்களுடன் வாழ்கிருன் என்பதை எடுத்துரைத்த அனுமான், சுக்கிரீவனுடைய மனைவி உருமை என்பவளை வாலி அபகரித்துக்கொண்ட செய்தியையும் சொன்னன். இதைக் கேட்ட இராமன் கோபம் கொண்டு, வாலியைக் கொன்று சுக்கிர்வனுக்கு அரசாட்சியைத் தருவதாகவும், சுக்கிரீவனின் மனைவியையும் அவனுக்கு மீட்டுத் தருவதாக்வும் உறுதி கூறினன். இதைக் கேட்டு சுக்கிரீவன் மனம் மகிழ்ந்தான். வாலியைக் கொல்லும் ஆற்றல் இராமனுக்கு இருக்கிறதா என்பதைச் சோதித்து அறிய விரும்பிய சுக்கிரீவன், பிரம்மாண்டமான ஏழு மராமரங்களையும் அம்பினல் துளைக்கும்படி இராமனைக் கேட்டுக்கொண்டான். இராமனும் அவ்வாறே செய்ய, அவன் காலில் விழுந்து வணங்கினன் சுக்கிரீ

வன். பிறகு இலக்குவனுடைய பலத்தை வானரர்களுக்குக் காட்ட வேண்டும் என்று கருதிய இராமன், துந்துபி என்ற அரக்கனின் மலைபோன்ற எலும்புக் குவியலைக் காலால் எற்றும்படி சொல்ல, தம்பியும் அவ்வாறே செய்தான். இதைக் கண்ட வானரர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். அப்போது சுக்கிரீவன் இராமனை நோக்கி, ''உன் தேவியை (சீதையை) இராவணன் தூக்கிச் சென்றபோது அவள் கீழே போட்ட ஆபரண முடிப்பு எங்களிடம் இருக்கிறது'' என்று சொல்லி அதை எடுத்துக் கொண்டு வந்து காட்டினான். சீதையின் ஆபரணங்களைப் பார்த்த இராமன் கண்ணீர் சொரிந்தான். அப்பொழுது அனுமான், ''முதலில் வாலியைக் கொன்று, சுக்கிரீவனை அரசனாக்கி, வானரப் படையைத் திரட்டிக் கொள்ள வேண்டும். அந்தப் படையின் உதவியால் அரக்கர்களின் இருப்பிடத்தைக் கண்டறியவேண்டும்'' என்று சொல்ல, அதுவே சிறந்த யோசனை என்று இராமனும் கருதினான்.

அப்புறம் எல்லோரும் வாலி வசிக்கின்ற கிஷ்கிந்தமலைக்குச் சென்றார்கள். இராமனின் கட்டளைப்படி சுக்கிரீவன் போய் வாலியைப் போருக்கு அழைத்தான். வாலி கோபாவேசத்துடன் எழுந்து, தன் மனைவி தாரை தடுத்தும் கேளாமல் சுக்கிரீவனை எதிர்த்துப் போர் புரிய வந்தான். இருவரும் போரிடும்போது இராமன் வாலிமீது ஓர் அம்பை எய்தான். உடனே கீழே விழுந்த வாலி, மார்பில் பாய்ந்த அம்பைப் பிடுங்கி, அதில் ''இராமன்'' என்றபெயர் பொறிக்கப்பட்டிருப்பதைப்பார்த்தான். இராமன் தரும விரோதமான காரியம் செய்துவிட்டதாகக் கூறிப் பழித்துப் பேசினான் வாலி. ''சீதையைப் பிரிந்ததால் உன் செய்கை தடுமாறிவிட்டது போலும்! அரக்கர்கள் ஓர் அக்கிரமத்தைச் செய்துவிட்டுப் போனால், அதற்காக ஒரு வானரத் தலைவனைக் கொல்ல வேண்டுமென்று மனு தர்மம் கூறியிருக்கிறதா? நீ செய்த காரியம் ராஜ தருமத்தின் வேலியையே அழித்துவிட்டது'' என்று வாலி கூற, இராமன், ''நீ சுக்கிரீவனை அநியாயமாகத் துரத்திவிட்டு, அவன் மனைவியையும் அபகரித்துக் கொண்டாய். இதனாலும், சுக்கிரீவன் என் ஆருயிர் நண்பன் என்பதனாலும் உன்னைக் கொல்லத் துணிந்தேன்'' என்று மறுமொழி பகர்ந்து மேலும் பல நீதிகளை எடுத்துரைத்தான். இலக்குவனும் தக்க சமாதானங்களைக் கூறினான். உடனே வாலி கோபம் தணிந்து, இராமனிடம் அன்பும் பக்தியும் கொண்டு, தன் குற்றங்களைப் பொறுத்தருளும்படி கேட்டுக் கொண்டான். தன் தம்பி சுக்கிரீவனையும், தன் மகன் அங்கதனையும் இராமனிடம்

அடைக்கலமாக ஒப்புவித்துவிட்டு வாலி உயிர் துறந்து முக்தியை அடைந்தான்.

மறுநாள் இராமனின் கட்டளைப்படி சுக்கிரீவனுக்கு இலக்குவன் முடிசூட்டினன். நான்கு மாதங்கள் கழிந்ததும் தன்னிடம் படையோடு வரும்படி சுக்கிரீவனுக்குக் கட்டளையிட்ட இராமன் தன் தம்பியோடு இருசியமுக மலைக்குப் போய் ஒரு பர்ணசாலையில் வசித்து வந்தான்.

பிறகு கார் காலம் வந்தது. அதன்பின் சரத் காலம் தொடங்கியது. நான்கு மாதங்களும் கழிந்துவிட்டன. சுக்கிரீவன் படையோடு வராததைக் கண்ட இராமன், இலக்குவனை அவனிடம் அனுப்பி வைத்தான். சுக்கிரீவன் நன்றி மறந்து, குறித்த காலத்தில் படையோடு வராதது இலக்குவனுக்குக் கோபத்தை உண்டுபண்ணியது. அவன் சீற்றத்தோடு கிஷ்கிந்தை நகருக்கு விரைந்து சென்ருன். அவனைக் கண்ட வானரர்கள் பயந்து போய் அங்கதனிடம் சென்று அவன் வரும் செய்தியைச் சொல்ல, அங்கதன் தன் சிற்றப்பனை சுக்கிரீவனின் மாளிகைக்கு விரைந்தான். அங்கே சுக்கிரீவன் குடித்துவிட்டு இளம் பெண்களின் நடுவே இன்ப போதையில் ஆழ்ந்து கிடந்தான். இலக்குவன் கோபத்தோடு வந்திருக்கும் செய்தியை அங்கதன் கூறியும் சுக்கிரீவன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் பஞ்சணையில் கிடந்தான். அங்கதன் அங்கிருந்து சென்று அனுமானை அழைத்துக் கொண்டு தாரையிடம் போனன். தாரையை அரண்மனை வாசலுக்கு எதிரே உள்ள வழியை மறிக்கும்படி அனுமான் யோசனை கூறவே, அவளும் வானரப் பெண்களுடன் போய் வழிமறித்தாள். விதவைக் கோலத்துடன் நிற்கும் தாரையைப் பார்த்த இலக்குவனுக்குத் தன் தாய்மாரின் நினைவு வந்துவிடவே கண்ணீர் சொரிந்தான். படைகள் திரட்டப்படுகின்றன என்றும், அவற்றின் வருகையை எதிர்பார்த்துச் சுக்கிரீவன் காத்திருக்கிருன் என்றும், படைகள் வரும் நாளும் நெருங்கிவிட்டது என்றும் தாரை சொன்னுள். அனுமானும் அவ்வாறே கூறி இலக்குவனைச் சுக்கிரீவனிடம் அழைத்துச் சென்ருன், அதற்குள் அங்கதன் போய்ச் சுக்கிரீவனை எழுப்பிக் கொண்டு வந்தான். இலக்குவனைச் சுக்கிரீவன் எதிர்கொண்டழைத்து உபசரித்தான்.

பிறகு சுக்கிரீவன் அனுமானைப் பார்த்து, ''வந்து சேரும் படைகளை நீ இருந்து அழைத்துக் கொண்டு வா'' என்று கட்டளையிட்டுவிட்டு, இலக்குவன் அங்கதன் முதலியவர்களுடன் காட்டில் இராமன் இருக்கும் இடத்துக்கு வந்தான். இராமனை வணங்கிப் பிழை பொறுக்கும்படி கேட்டுக்

கொண்டான். பின்பு அவனும் அங்கதனும் விடைபெற்றுக் கிஷ்கிந்தைக்குத் திரும்பிச் சென்றார்கள்.

மறுநாள் காலையில் கோடிக்கணக்கான வானர வீரர்களை அழைத்துக் கொண்டு இராமனிடம் வந்தான் சுக்கிரீவன். படைப்பெருக்கைக் கண்டு இராமன் பிரமித்துவிட்டான்.

தென்திசையில் இராவணன் இருக்கும் இலங்கை நகருக்குப் போய்ச் சீதையைத் தேடும்படி அனுமானுக்கு சுக்கிரீவன் கட்டளையிட்டு, அவனோடு அங்கதனையும், சாம்பவானையும், வேறு சில வீரர்களையும், இரண்டு வெள்ளம் சேனைகளையும் அனுப்பினான். சீதையைத் தேடிக் கண்டு பிடித்து ஒரு மாதத்திற்குள் திரும்பிவிட வேண்டுமென்று அனைவருக்கும் கட்டளையிட்டான். இராமன் அனுமானைத் தனியே அழைத்துச் சீதையின் அங்க அடையாளங்களைக் கூறி, மேலும் அடையாளம் காண்பதற்கு உதவியாக இருக்கும் பொருட்டு, முன்பு மிதிலையிலும் அயோத்தியிலும் நடந்த சில நிகழ்ச்சிகளையும் சொல்லியனுப்பினான். அனுமான் முதலியவர்கள் தென்திசை நோக்கி சென்றார்கள். மற்ற மூன்று திசைகளிலும் மற்றவர்களைச் சுக்கிரீவன் அனுப்பி வைத்தான்.

தென்திசை நோக்கிச் சென்றவர்கள் விந்தியமலையைத் தாண்டி ஏமகூடமலைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே இரண்டு வெள்ளம் வீரர்களைத் தனியே பிரித்து, சீதையைத் தேடும்படியும் மகேந்திரமலையில் வந்து தங்களைச் சந்திக்கும் படியும் கட்டளையிட்டு அனுப்பிவிட்டு, அங்கதன், அனுமான், சாம்பவான் முதலியவர்கள் ஏமகூடத்திலிருந்து தெற்கே புறப்பட்டுச் சென்று, ஒரு பாலைவனத்தை அடைந்தார்கள். அங்கே ஓர் இருண்ட குகைக்குள் ஒரு நகரம் இருந்தது. அதில் தவம் செய்து கொண்டிருந்த சுயம்பிரபை என்பவளைப் பார்த்தார்கள். இராமதூதர்களுக்கு அவள் விருந்திட்டு, இருட்குகையிலிருந்து மீளத் தனக்கு உதவி புரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். அனுமானும் உதவி புரிவதாக வாக்களித்து, அந்த நகரத்தைத் தூக்கி மேற்குக் கடலில் வீசி எறிந்தான். கடலில் விழுந்த அந்த நகரே பிலத்தீவு என்று பெயர்பெற்றது. சுயம்பிரபையும் தேவலோகத்துக்குப்போய்ச் சேர்ந்தாள். வானர வீரர்கள் அங்கிருந்து வெளியேறி ஒரு பொய்கைக் கரைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கு துமிரன் என்ற ஓர் அசுரன் வந்து, தூங்கிக் கொண்டிருந்த அங்கதன் மார்பில் அறைந்தான். உடனே அங்கதன் எழுந்து அசுரனை அடித்துக் கொன்றான்.

பிறகு எல்லோரும் புறப்பட்டுப் பெண்ணை நதிக்குச்சென்று பலஇடங்களிலும் சீதையைத் தேடிக்கொண்டே திருவேங்கட

மலைக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கிருந்து தொண்டை நாடு, சோழநாடு ஆகியவற்றையும் பார்த்துப் பாண்டிய நாட்டை அடைந்து சீதையைக் காணாத வருத்தத்துடன் மகேந்திர மலைக்கு வந்து சேர்ந்தார்கள். மலையிலிருந்து தென்கடலை நோக்கினார்கள். முன்பு ஏமகூடமலையில் தனியே பிரித்து அனுப்பப்பட்ட இரண்டு வெள்ளம் வானரப் படையும் இங்கே வந்து அங்கதன் முதலிய வானரவீரர்களோடு சேர்ந்து கொண்டது.

'சீதையை இன்னும் பார்க்கவில்லையே, சுக்கிரீவன் குறித்த ஒரு மாதத் தவணையும் கடந்து விட்டதே' என்று வானர வீரர்கள் வருந்தினார்கள். எல்லோரும் துயரத்தினால் சோர் வதைக் கண்ட அனுமான், ''மூன்று உலகங்களிலும் ஓர் ஓரத் தைக்கூட நாம் இன்னும் தேடி முடிக்கவில்லை. அதற்குள் சலித்துவிட்டீர்களா? தவணை கடந்தாலும், நாம் சகல இடங் களிலும் சீதையைத் தேடுவதே உத்தமம். அவளுடைய துயரத்தைத் தீர்ப்பதற்காகப் போரில் இறங்கிச் சடாயுவைப் போல் உயிர் துறப்பதே பெருமை'' என்றான்.

சடாயு இறந்தான் என்ற செய்தியைத் தூரத்தில் ஓரிடத் தில் இருந்து கேட்ட சம்பாதி என்ற கழுகரசன் அங்கு ஓடி வந்து, சடாயு தன் தம்பி என்று கூறி அழுது புலம்பினான். இராவணனுடைய வாளால் வெட்டப்பட்டுச் சடாயு மரணம் அடைந்தான் என்ற செய்தியைச் சம்பாதிக்கு அனுமான் தெரிவித்தான். இராவணன் சீதையைத் தூக்கிச் சென்றதைத் தான் பார்த்ததாகவும், சீதையை அந்த அரக்கன் இலங் கையில் சிறை வைத்திருப்பதாகவும், யாராவது ஒருவன் இலங்கைக்குப் போய்ச் சீதையிடம் இராமனுடைய செய்தி யைக் கூறும்படியும் சொல்லிவிட்டுச் சம்பாதி பறந்து போய் விட்டான்.

கடலைக் கடந்து இலங்கைக்கு யார் போவது என்று வானர வீரர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். அனுமான் ஒருவனே கடலைக் கடக்கவல்ல பலசாலி என்று சாம்பவான் சொன்னான். அனுமானும் சம்மதித்தான். பின்பு அனுமான் வானரவீரர்களை நோக்கி, ''நான் போய்த் திரும்பும்வரையில் இங்கேயே இருங்கள்'' என்று கூறி விடைபெற்றுக் கொண்டு மகேந்திரமலையின் உச்சிக்குப் போய், ஆகாயத்தைத் தொடும் படியாகப் பிரம்மாண்டமான வடிவம் எடுத்துக் கடலைக் கடப்பதற்குச் சித்தமாக நின்றான். மகேந்திரமலை அவனது பாரத்தால் பூமியில் அழுந்தியது. இந்தப் பிரபஞ்சத்தைத் தாங்கும் தங்கத் தூண்போல் அனுமான் நின்றான். தூணின் கீழ் பதிக்கப்பட்ட கல்லைப்போல் இருந்தது மகேந்திரமலை.]

5. சுந்தர காண்டம்

1. கடல் தாவு படலம்

மகேந்திர மலையின் உச்சியில் வானத்தைத் தொடும்படியாக ஓங்கி வளர்ந்து நின்ற அனுமான், தனக்கு அருகில் இருந்த சுவர்க்கத்தைப் பார்த்து, 'இதுதான் கடல் சூழ்ந்த இலங்கையோ?' என்று ஐயம் கொண்டான். பின்பு அது வானநாடு என்று அறிந்து தெளிந்தான். மேலும் சீதை தேவருலகில் இல்லை என்பதையும் கருத்தில் கொண்டான். பின்பு அவன் கீழ்நோக்கி இலங்கை நகரின் வட்டமான பொன் மதிலையும், வெற்றி வாசலையும், மணிகளும் முத்துக்களும் பதித்த மாடங்களையும், அவை இருக்கும் வீதிகளையும் பார்த்தான். உடனே தன் தோள்களைக் கொட்டி ஆரவாரம் செய்தான். அனுமான் கால்களை ஊன்றியதால் மகேந்திர மலை நெரிந்து கீழே அழுந்தியது. அதன் காரணமாக மலையின் வயிறு கீறிக் குடல்கள் பிதுங்கியதுபோல், குகைகளில் இருந்த பாம்புகள் வெளிப்பட்டன. சிங்கங்கள் குகைகளிலேயே நசுங்கி நொறுங்கி ரத்தம் கக்கி மாண்டன. பறவைகள் பயபீதியினால் கடலின் ஆரவாரத்தையும் விடப் பெரிதாகக் கூக்குரலிட்டுக்கொண்டுஆகாயத்தை மறைத்துக்கொண்டு பறந்தன.

இப்படி மலையில் பல காரியங்கள் நடந்து கொண்டிருக்க, தேவர்களும், முனிவர்களும்,மூவுலகங்களைச் சேர்ந்தவர்களும் வந்து கூடி பூங்கொத்துக்களையும், சந்தனத்தையும், வாசனைப் பொடியையும், ரத்தினங்களையும் அனுமான் மீது சொரிந்து, ''அறிஞனே! போய் வருவாயாக'' என்று கூறி வழியனுப்பினார்கள். அனுமானும் மனத்துள் வேகம் கொண்டான்.

மகேந்திர மலையில் அனுமானோடு இருந்த வீரர்கள் அவனை நோக்கி, ''வீரனே! கடலைத் தாண்டுவது பயனற்ற காரியம் என்று எண்ணாமலும், அற்பமான காரியம் என்று

அலட்சியம் செய்யாமலும் நீ போய் வருவாயாக'' என்று கூறினர்கள். அனுமானும் அதற்கு உடன்பட்டான்.

அனுமான் கடலைத் தாண்டுவதற்காக முன்புறம் குனிந்து பாதங்களை அழுத்தினன். அப்பொழுது மலையும் பாதங்களும் பூமிக்குள்ஆழ்ந்துவிட்டன. வாலைத் தூக்கி, கால்களை மடக்கி, மார்பை ஒடுக்கி, தோள்களைத் தூக்கி, கழுத்தைச் சுருக்கி, கைகளை நீட்டி மேல் நோக்கிப் பாய்ந்தான். அவன் செல்லும் வேகத்தைப் பார்க்கும் போது, இலங்கையோடு அவனது பிர யாணம் முடிந்துவிடும் போல் தோன்றவில்லை. அதற்கு அப் பாலும் எங்கோ போகிறவன்போல் தோன்றியது. அப்படியா ஞல் சீதையைத் தேடிக்காணும் காரியம் என்ன ஆவது என்று இந்த உலகம் கலங்கியது. அனுமான் பாயும்போது முன் ஞேக்கி இரு கைகளையும் நீட்டியது, இராம இலக்குவர்கள் அவனை முந்திக்கொண்டு செல்வது போல் இருந்தது.

அனுமான் இவ்வாறு வாயு வேகத்தில் செல்லும்போது பாற்கடலிலிருந்து முன்பு ஐராவதம் வெளிப்பட்டதுபோல், இந்தத் தென் கடலிலிருந்து மைந்நாகம் என்ற மலை எழும்பி, வானை அளாவும்படியாக உயர்ந்தது. இப்படி கணநேரத்துக் குள் வெளியே வந்து விண்ணைத் தொட்டு நிற்கும் மலையைப் பார்த்து, 'இது என்ன?' என்று திகைத்து, கடலில் இந்த மலை எழும்பி நிற்பது தனக்கு நன்மை தருவதல்ல என்று உணர்ந்து, மலையைத் தலைகீழாகத் தள்ளிவிட்டு, தேவருலகம் வரையிலும் அவன் உயர்ந்து சென்ருன். தள்ளப்பட்ட மலை வருந்தித் துயருற்றது. ஆனுலும் அனுமான்மீதுள்ள அன்பின் காரணமாக அந்த மலையானது மனித வடிவம் கொண்டு அவனை நோக்கி, ''என் அப்பனே! இதைக் கேள்'' என்று கூறிப் பின்வருமாறு பேசியது:

''என்னை அந்நியன் என்று எண்ணிவிடாதே. முன்பு இந்திரன் 'மலைகளின் சிறகுகளை யெல்லாம் அறுத்தெறி' என்று சொல்லித் தனது வச்சிராயுதத்தை வீசியபோது, உன் தந்தையான வாயுதேவன் என்னை இந்தக் கடலில் கொண்டு வந்து தள்ளிக் காப்பாற்றினுன். அப்படிப்பட்ட வாயுதேவ னின் அருமைப் புதல்வனை உனக்கு நான் செய்யக்கூடிய உபசாரம் இதுதான்: அதாவது என் சிகரத்தில் தங்கிக் களைப்பை ஆற்றிக்கொண்டு செல்வாயாக. 'இராமனுடைய கட்டளைப்படி அனுமான் சீதையைத் தேடிக்கொண்டு வரு கின்ருன். அவனிடம் நீ போ. இதைவிடப் பெரிய பாக்கியம் வேறில்லை' என்று கடலும் எனக்குச் சொல்லியது. என்னைத் தாயைவிட நல்லவன் என்று நீ எண்ணி, இங்கே சிறிது தங்கி, நான் அளிக்கும் விருந்தை ஏற்பாயாக.''

இவ்வாறு மைந்நாகமலை கேட்டுக்கொள்ள, அனுமான், ''நான் இப்பொழுதே திரிகூடமலை மீதிருக்கும் இலங்கைக்குச் சென்று, இராமன் இட்ட பணியை நிறைவேற்றி முடித்தால் அங்கிருந்து திரும்பி வருவேன். அப்போது உன் விருந்தை நுகர்வேன்'' என்று கூறிவிட்டு வேகமாகச் சென்றான். அப்போது தேவர்கள் சுரசை என்ற தூய சிந்தையினளான ஒருத்தியை, ''மூவுலகங்களின் துன்பத்தையும் போக்க இராமனின் கட்டளையை ஏற்று வந்திருக்கும் அனுமானது உண்மையான பலத்தை நீ சோதித்து எங்களுக்கு உணர்த்துவாயாக'' என்று வேண்டிக்கொண்டார்கள். அவளும் ஓர் அரக்கி வடிவம் கொண்டு வந்து அனுமானை நோக்கி, ''குரங்குகளின் குலத்தில் பிறந்தவனே! நான் சாப்பிடுவதற்கான மாமிசமாக நீ வருகிறாயோ!'' என்று சொல்லிக்கொண்டு வானத்தைத் தொடும்படியாக வளர்ந்து நின்றாள்.

''என் பசிப் பிணியைத் தீர்க்க விரைந்து வந்திருக்கிறாய்! நீயே என் வாயில் புகுந்துவிடு. நீ தப்பிச் செல்ல வேறு வழியே கிடையாது'' என்று சுரசை சொல்லவும், ''பசிப் பிணியால் துன்புறும் பெண்ணே! நீ என் உடம்பை உண்ணலாம். நானும் என் உடம்பை உணவாகப் படைக்கிறேன். ஆனால் அதெல்லாம் இராமனுடைய பணியை நான் செய்து முடித்த பிறகுதான்'' என்று சொல்லி அனுமான் சிரித்தான்.

சுரசையோ, ''ஏழு உலகங்களும் காண உன் உடம்பைத் தின்று பசியாறுகிறேன்'' என்றாள். அவனும், ''உன் வாயில் புகுந்து உள்ளே போகிறேன். முடிந்தால் என்னைச் சாப்பிடு'' என்றான். சுரசை உடனே தன்னுடைய பெரு வாயைத் திறந்து அவனை விழுங்கப் போனாள். அவள் வாய் சிறியது என்றும் சொல்லத்தக்கவாறு அவன் பிரம்மாண்டமான வடிவம் கொண்டான். உடனே தன் வடிவத்தை மிகச் சிறிதாகச் சுருக்கி அவள் வாயினுள் புகுந்து, வயிற்றை அடைந்து, ஒரு தடவை அவள் மூச்சு விடுவதற்கு முன்பே வெளியே வந்துவிட்டான். இதைக் கண்ட தேவர்கள், ''நம்மை அனுமான் காப்பாற்றி விட்டான். மகாவல்லவன்'' என்று புகழ்ந்து மலர்களைத் தூவி வாழ்த்தினார்கள். சுரசையும் தன் உண்மை வடிவத்துக்கு மாறி அவனிடம் தாயைக் காட்டிலும் அன்பு செலுத்தி, ''இனி உன்னால் முடியாத காரியம் என்ன இருக்கிறது!'' என்று பாராட்டினாள். அவளுடைய ஆசியைப் பெற்று அனுமான் செல்லும்போது கின்னரர்கள் பாடினார்கள்; தேவமாதர்கள் ஆடினார்கள்; அந்தணர்கள் வேத கோஷம் செய்தார்கள்.

அனுமான் அவ்விதமாகப் போகும்போது கொடிய நஞ்சு போன்ற அங்காரதாரை என்ற அரக்கி ''யார் என்னைக்கடந்து செல்வது?'' என்று கேட்டுக்கொண்டே கடலிலிருந்து எழுந்து விண்ணை அளாவிக்கொண்டு நின்றாள். அவள் வாயைத் தவிர அனுமான் கடந்து செல்ல வேறு வழி இல்லாமல் போய்விட்டது. எனவே அவள் வாய் வழியாகப் புகுந்து உள்ளே போய் வயிற்றைக் கிழிக்க நினைத்த அனுமான், ''நிழலையே பிடித்து இழுக்கும் வரத்தைப் பெற்றவளே! விண்ணை அளாவிக்கொண்டு என் மார்க்கத்தை அடைத்துக்கொண்டிருக்கும் நீ யார்? இங்கே வந்து நீ நிற்கும் காரணம் என்ன?'' என்று கேட்டான். அதற்கு அவள், ''என்னைப் பெண் என்று அலட்சியம் செய்யும் நினைப்பை விட்டொழிப்பாயாக. எமனைக்கூட நான் சாப்பிட்டுவிடுவேன்'' என்று சொல்லிவிட்டு அனுமானை விழுங்குவதற்காகத் தன் வாயைத் திறந்தாள். உடனே அவன் அவள் வாயினுள் புகுந்து, கணநேரத்திற்குள் அவள் குடலைப் பிடுங்கிக்கொண்டு வெளியே வந்து ஆகாயத்தின் மீது சென்றான். இதைக் கண்டு தேவர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். அரக்கியின் வயிற்றை அவள் வாய் வரையில் கிழித்துவிட்டு வெளியே வந்தவனான அனுமான் அதிவேகத்துடன் இலங்கையை நோக்கி வான மார்க்கத்தில் சென்றான். அப்போது கடல் பரப்பைப் பார்த்து, 'கேள்விப்பட்டதைவிடப் பெரிதாகஅல்லவா இந்தக் கடல் இருக்கிறது! இது எவ்வளவு பெரிதாகவும் அபாயகரமானதாகவும் இருந்தாலும் சரி, நான் இலங்கைக்குப் போய்ச் சேர்ந்து விட்டால் எல்லா இடையூறுகளும் நீங்கிவிடும்' என்று எண்ணி, இராம நாமத்தைச் சொன்னால் எல்லாத் துன்பங்களும் அகலும் என்று மனத்தில் உறுதி கொண்டான். இலங்கையை நெருங்கியதும் அவன் பொன்மதிலில் போய் இறங்காமல், அங்குள்ள பவள மலையில் பாய்ந்தான். அங்கே போய் நின்று கொண்டு இலங்கையைப் பார்த்தான். அந்த நகரின் அழகை வியந்த அனுமான், 'இந்நகரின் அளவு எழுநூறு யோசனை தூரம் என்பார்கள். மூவுலகங்களிலும் உள்ள பொருள்கள் இங்கே இருக்கின்றன என்றால் இந்நகரின் எல்லையற்ற காட்சிகளை எந்த அறிஞனால்தான் பூரணமாகப் பார்க்க முடியும்? கண்பார்வைக்கு ஓர் எல்லையில்லாமல் இருக்குமா? இந்தக் காட்சிக்கும் ஓர் எல்லை இருக்குமா?' என்று நினைத்துக் கொண்டான்.

2. ஊர் தேடு படலம்

அனுமான் பவளமலையில் இருந்தவாறே இலங்கை நகரின் அழகையும் சிறப்பையும் கண்டு வியந்து கொண்டிருந்தான். அந்நகரில் மரங்களெல்லாம் கற்பகங்களாகவும், மாளிகைக

ளெல்லாம் பொன்னுகைவும், தேவலோகப் பெண்களெல்லாம் அரக்கியருக்கு வேலைக்காரிகளாகவும், தேவர்கள் பணியாட்களாகவும் இருப்பதைக்கண்டு 'இவையெல்லாம் ஒருவனுக்குக் கிடைக்கக்கூடிய செல்வங்களா? தவம் செய்து பெற்றவை இவை' என்று அனுமான் நினைத்துக்கொண்டான். அந்நகரின் பிரம்மாண்டமான மதிலைப் பார்த்து, 'இதைக் கடந்து காற்றும் செல்ல முடியாது; சூரிய ஒளியும் பிரவேசிக்காது; எமனுடைய ஆற்றலும் செல்லாது; அப்படியிருக்கும்போது தேவர்கள் செல்ல முடியாது என்று சொல்வது வீண் வேலை. ஊழிக்காலத்தில் எல்லாம் அழியும்போது அழியாத தருமம் கூட இந்த மதிலைத் தாண்டி நகருக்குள் செல்ல முடியாது' என்று அவன் சொல்லிக்கொண்டான். இலங்கையின் படை பலங்களைக் கண்டு வியந்தான். அரக்கர்கள் வந்து தன்னைப் பார்த்துவிடக்கூடும் என்று தன் உடம்பைச் சுருக்கிக்கொண்டு மலைச்சாரலில் இருந்தான். அப்போது இரவுக் காலம் வந்து எங்கும் இருள் படர்ந்தது. பிறகு, தீவினையால் சுட்டெரிக்கப்பட்ட தருமம் என்ற பயிரானது அனுமான் என்ற மழை பெய்ததால் முளைத்ததுபோல் சந்திரன் உதித்தது. எங்கும் பரவிய நிலவொளியில் இலங்கை நகரை நோக்கிச் சென்றான். கடலைப்போன்ற அகழ் கொண்ட மதிலையும், பின்பு மதில் வாசலையும் அடைந்தான். பிரம்மாண்டமான மதிலையும், மதில் வாசலைக் காவல் செய்யும் அரக்கர்களையும் பார்த்து, 'இந்த வாசலை யாரால் கடக்க முடியும்?' என்று எண்ணி, மதிலைத் தாவியே கடக்க நினைத்து வேறொரு பக்கம் போனான்.

அனுமான் போகும்போது இலங்கை நகரைக் காவல் செய்யும் இலங்கை மாதேவி என்பவள் எட்டுத் தோள்களுடனும், நான்கு முகங்களுடனும், சுழல்கின்ற கண்களுடனும் எதிரே வந்தாள். பலவித ஆயுதங்களோடும் வந்த அவள், 'நில் நில்' என்று அனுமானைப் பார்த்துச் சொன்னாள். அவன் அவளைப் பார்த்து 'வருக' என்றான்.

''அறிவில்லாதவனே! கூடாத காரியத்தை நீ செய்து விட்டாய். மதிலைத் தாவி என்னோடு பகைத்துக் கொள்ளாதே. அப்பால் போய்விடு'' என்றாள் இலங்கை மாதேவி.

அனுமானோ, ''நான் இந்த ஊரைப் பார்க்கும் ஆசையோடு வருகிறேன். நான் போய்ப் பார்ப்பதால் உனக்கு என்ன நஷ்டம்?'' என்று கேட்டான்.

''போ என்றால் போகாமல் எதிர்வார்த்தை பேசுகிற நீ யாரடா? சிவனைப் போன்றவர்களும் புகுவதற்கு அஞ்சும் ஊருக்குள் நீயா போவது?'' என்று சொல்லி அவள் சிரிக்கவே, அனுமனும் உள்ளுக்குள் சிரித்துக்கொண்டு, இலங்கை

யைப் பார்க்காமல் தான் போகப் போவதில்லை என்று தெரிவித்தான். இலங்கை மாதேவி, 'இவன் வானரம் அல்லன்; சிவனைப்போல் சிரிக்கிறான். இவனைக் கொல்லாவிட்டால் இவ்வூருக்குக் கேடுவரும்' என்று கருதி அவன்மீது ஒரு வேலினைவீசி எறிந்தாள். அதை அனுமான் கடித்து ஒடித்தெறிந்தான். மேலும் பல ஆயுதங்களை அவள் வீச, அவற்றை அவன் கையால் பற்றி மேலே எறிந்தான். மேற்கொண்டு தன்னிடம் ஆயுதங்கள் இல்லாமல் போகவே அவள் கோபாவேசத்துடன் அவனைத் தன் கையால் ஓங்கி அடித்தாள். உடனே அனுமான் அவள் கைகள் அனைத்தையும் தன் ஒரு கையால் பிடித்துக் கொண்டு, பெண்ணைக் கொல்வது பாவம் என்று கருதி அவள் மார்பில் அறைந்தான். அவள் இடி விழுந்த பாம்பு போல் கீழே விழுந்தாள். பின்பு எழுந்து அனுமானைப் பார்த்து, ''ஐயனே, நான் சொல்வதைக் கேள். நான் இந்த நகரைக் காவல் செய்யும் இலங்கை மாதேவி என்பவள். இந்த நகரைக் காக்கும்படி பிரமன் எனக்குக் கட்டளையிட்ட போது, 'எத்தனை காலம் காக்க வேண்டும்?' என்று நான் கேட்டேன். அதற்குப் பிரமன், 'வலிமை மிக்க ஒரு குரங்கு வந்து உன்னைக் கையால் அறையும். அன்றைய தினமே நீ இலங்கையைவிட்டு என்னை வந்து அடைவாய். அதன் பிறகு அந்த நகரம் அழிவது திண்ணம்' என்று சொன்னான். அப்படியே இப்பொழுது நடந்துவிட்டது. தருமம் வெல்லும்; பாவம் தோற்கும். நீ நினைத்ததெல்லாம் நடக்கும். இலங்கைக்குள் போ'' என்று சொல்லிவிட்டு இலங்கை மாதேவி போய்விட்டாள்.

அனுமான் இலங்கையின் மதிலைத் தாண்டி உள்ளே சென்று பசுக்கள் கட்டும் சாலை, ஆனைகட்டும் கூடம், குதிரைப் பந்தி முதலியவற்றையெல்லாம் பார்த்தான். அங்கே அரக்கியர் ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும், கணவருடன் ஊடிக்கொண்டும் இன்பமாகப் பொழுது போக்குவதைக் கண்டான். அப்படியே சென்று கும்பகருணன் மாளிகையை அடைந்தான். தெய்வப் பெண்கள் கால்வருட, கும்பகருணன் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். அவனையே இராவணன் என்று நினைத்த அனுமானின் கண்கள் கோபத்தால் தீப்பொறி சிந்தின. நெருங்கிப் பார்த்து, அவனுக்குப் பத்துத் தலைகளும் இருபது கைகளும் இல்லாததைக் கண்டு தன் கோபத்தைத் தணித்து, 'இவன் யாராக இருந்தாலும் சரி, இவன் அழிவதற்கு இன்னும் சில நாட்களே இருக்கின்றன' என்று எண்ணிக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் போனான்.

பிறகு விபீஷணனின் மாளிகையை அடைந்தான் அனுமான். கற்பகப் பந்தலின்கீழ் தூங்கும் அவனை கண்டு, 'இவன் குற்றமில்லாத குணத்தினன்' என்று எண்ணினான். அதன் பின் இந்திரன் சிறையிருந்த இந்திரசித்தின் மாளிகைக்குப் போய்ச்சேர்ந்தான். அவனைப் பார்த்து 'இவன் இராவணனோ? அல்லது சிவபிரானின் குமாரனான முருகனோ? யாரென்று தெரியவில்லை. இவனோடு இலக்குவனும் இராமனும் நெடு நாள் கடும்போர் செய்ய வேண்டியிருக்கும்' என்பதை உணர்ந்தான். அங்கிருந்து இராவணனுடைய மற்றப் புதல்வர்களான அக்க குமாரன், அதிகாயன் ஆகியவர்களுடைய மாளிகைகளையும், மந்திரிகள், படைத் தலைவர்கள் மாளிகைகளையும் பார்த்து, உள் அகழியைப் பார்த்தான். அதைத் தாண்டி நகரினுள் சென்று எல்லாத் தெருக்களிலும் சுற்றினான். இராவணனுடைய ஆசை நாயகிகள் வசிக்கும் மாளிகைகளைக் கண்டான். இராவணன் வராததால் பிரிவு வேதனை தாங்காமல் கஷ்டப்படும் இயக்கியரையும், வித்தியாதரப் பெண்களையும் பார்த்து, இராவணனுடைய முதல் மனைவியான மண்டோதரியின் மாளிகையை அடைந்தான். தெய்வப் பெண்கள் பணி செய்ய, நடுவே சுகமாகத் தூங்கிக் கொண்டிருக்கும் அவளைப் பார்த்து, அவள் தான் சீதையோ என்று அனுமான் முதலில் சந்தேகித்தான். உடனே அவன் தாங்க முடியாத துயரமும் வேதனையும் அடைந்தான். 'இவள் தான் கற்பு நீங்கிய சீதை என்றால், இராமனின் புகழ் இன்றே அழியும்; நானும், அழிவேன்; இந்த இலங்கையும் அழியும்; அரக்கரும் இன்றே அழிவார்கள்' என்று சொல்லி வேதனைக்குள்ளான அனுமான், மண்டோதரியைக் கூர்ந்து நோக்கினான். 'சீதை மானுட வடிவினள்; இவள் அப்படி இல்லை. இவளைச் சீதை என்று எண்ணியது தவறு. இவள் தூக்கத்தில் பயத்தின் காரணமாகச் சில வார்த்தைகள் சொல்லிப் புலம்புகிறாள். இது ஒரு தீய அடையாளம். எனவே இவளுடைய கணவன் இறப்பான்; இந்த நகரும் அழியும்' என்று எண்ணியவனாக, மேருமலை போன்ற இராவணன் மாளிகைக்குச் சென்றான். அங்கே சில தீய நிமித்தங்கள் உண்டாயின. பிரம்மாண்டமான சரீரத்துடன் பத்துத் தலைகளையும் இருபது கைகளையும் பரப்பிக்கொண்டு படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான் இராவணன். சீதையை நினைக்கும் போதெல்லாம் உயிர் தேய்ந்து கொண்டிருப்பவனான. அவனை அனுமான் பார்த்ததும் கோபாவேசம் கொண்டு, அவனுடைய பத்துத் தலைகளையும் தகர்த்துக் கொன்றுவிட்டு, இலங்கையையும் அழிக்க எண்ணினான். ஆனாலும் சீதையைத் தேடுவதே நோக்கமாகக் கொண்டு இங்கே வந்து, இப்படி வேறு காரி

யத்தில்இறங்குவது தவறு என்று எண்ணித் தன் கோபத்தைத் தணித்து, 'இவன் காமவேதனையால் துயருறுவதால், சீதை இவன் விருப்பத்திற்கு இணங்காமல் தன் கற்பைப் பேணிக் கொண்டிருக்கிருள் என்பது புலனுகிறது' என்று உணர்ந்து மகிழ்ந்தான். பிறகு சீதையைத் தேடி அப்பால் சென்ருன். எந்த இடத்திலும் அவளைக் காண முடியாமல் போகவே அனுமான் மிகவும் வருந்தி, 'இந்த அரக்கன் சீதையைக் கொன்று விட்டானே? இல்லை, தின்று விட்டானே? ஒன்றுமே தெரியவில்லையே? நான் இந்தத் துன்பக் கடலிலேயே மூழ்கி இறந்து விடுவேனே? இலங்கையில் சீதை இருக்கிருள் என்று சொன்ன சம்பாதியின் வார்த்தையும் பொய்த்து விட்டதே. இன்னும் நான் உயிரோடு இருந்து வருந்துவேனு? இந்த இலங்கையைப் பெயர்த்தெடுத்துக் கடலிலே வீசிவிட்டு, இராவணனைக் கொன்று, அதன் பிறகு நானும் இறப்பதே முறையாகும்' என்று கருதி எல்லா இடமும் தேடிவிட்டு, உத்தியான வனத்தை நோக்கி அனுமான் செல்லும்போது அசோக வனத்தைக் கண்டான்.

3. காட்சிப் படலம்

பக்கத்தில் இருந்த மலர்பூத்த சோலையாகிய அசோக வனத்துக்குச் சென்ற அனுமான், 'இங்கே சீதையைக் கண்டால் என் துன்பம் நீங்கும். காணுவிட்டால் இந்த இலங்கையை அழித்துவிட்டு நானும் இறப்பேன்' என்று சொல்லிக் கொண்டு சோலையினுள் நுழைந்தான். அப்போது தேவர்கள் மகிழ்ச்சியோடு அனுமான் மீது பூமாரி பொழிந்தார்கள்.

அசோகவனத்தில் அரக்கியர் நடுவே, வாடிமெலிந்து, ஊனுறக்கம் இல்லாமல், இராமனை எண்ணித் தொழுவதும் சோருவதும் அழுவதுமாகத் துன்பக் கடலில் ஆழ்ந்திருந்தாள் சீதை. 'இராமன் வருவான்' என்ற நம்பிக்கையால் திசையனைத்தையும் பார்த்து ஏங்கிக்கொண்டிருந்தாள். 'சடாயுவும் இறந்து விட்டான். வேறு யார் நான் இங்கே இருப்பதை என் கணவருக்குத் தெரிவிப்பார்கள்? என்னை அரக்கர்கள் தின்றிருப்பார்கள், அதனுல் இனிமேல் செய்வதற்கு எதுவுமில்லை என்று இராமர் என்னைத் தேடாமல் இருந்துவிட்டாரோ?' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு துயருற்ருள். முன்பு இராமன் வில் இறுத்தது, குகனிடம் தோழமை பூண்டது, விராதனின் சாபத்தை மாற்றியது போன்ற பழைய செய்திகளை எல்லாம் எண்ணி எண்ணி ஏங்கினுள். அப்போது அரக்கியர் தூங்கிக் கொண்டிருந்தனர். தனக்கு உயிர்த் துணையாக இருந்த தாயினும் நல்லவளான திரிசடை என்ப

வளைப் பார்த்து, ''எனக்கு இடது கண்ணும் இடது தோளும் துடிக்கின்றன. இந்த நிமித்தங்களின் பலன் என்ன என்று தெரியவில்லை'' என்று கூறினாள். ''அது நல்ல நிமித்தமே. உன் கணவர் அனுப்பிய தூதன் ஒருவன் வருவது நிச்சயம். நீ உன் கணவனை அடையப் போவதும் உண்மை'' என்றாள் திரிசடை. மேலும் திரிசடை தான் கண்ட கனவு ஒன்றையும் விரித்துச் சொன்னாள். ''இராவணனின் அழிவைக் குறிக்கும் அந்தக் கனவில், அந்த அரக்கன் எண்ணெய்த் தலையோடு கழுதைகளும் பேய்களும் கட்டிய தேரில் ஏறி ரத்தம் தோய்ந்த ஆடையுடன் தென் திசைக்குச் செல்ல, அவனுடைய மக்களும் சுற்றத்தாரும் தொடர்ந்து சென்றனர். இலங்கையில் பூரண கும்பங்களில் கள் பொங்கியது. அரக்கியரின் தாலிகள் தாமாக அறுந்து விழுந்தன. மண்டோதரியின் கூந்தல் விளக்கில் பட்டு எரிந்தது. ராஜ்ய லட்சுமியானவள் இராவணனுடைய மாளிகையை விட்டு விபீஷணனின் மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தாள். அந்தச் சமயத்தில் என்னைத் தூக்கத்திலிருந்தும் நீ எழுப்பி விட்டாய். அதனால் என் கனவு முடியவில்லை'' என்றாள் திரிசடை. மீதிக் கனவையும் காண்பதற்குத் திரிசடையைத் தூங்கும்படி சீதை கேட்டுக் கொண்டாள்.

இந்தச் சமயத்தில் அனுமான் அங்கு வந்து சீதையின் இருப்பிடத்தைப் பார்த்தான். அப்போது கோர உருவம் படைத்த அரக்கியர் தூங்கி எழுந்தனர். சீதை கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த நிலையைக் கண்ட அனுமான், ''தருமம் அழியவில்லை; நானும் இறக்கமாட்டேன். தேவியாரைக் கண்டுவிட்டேன்'' என்று சொல்லி மகிழ்ச்சியால் ஆடிப் பாடினான். சீதையின் துயர நிலையைக் கண்டு அவள் கற்பினின்றும் வழுவவில்லை என்பதை உணர்ந்த அவன், அவளுடைய இந்தத் தவக்கோலத்தைக் காண இராமனுக்குக் கொடுத்து வைக்கவில்லையே என்று ஏங்கினான். 'சீதையைத் தருமந்தான் காத்ததோ? சனகனுடைய நல்வினைதான் காத்ததோ? கற்புதான் காப்பாற்றியதோ? துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு இப்படித் தவம் கிடக்க யாரால் முடியும்? இராவணனுடைய செல்வப் பெருக்கும் அரக்கியரின் கொடுமையும் இவளுடைய கற்பு நிலையைக் கெடுக்க முடியவில்லை. இப்படிக் கற்பைக் காக்க மற்றவர்களால் முடியுமா? இதைவிட இனி என்ன துன்பம் வந்துவிடப்போகிறது? தருமத்தைத் தீவினை வெல்ல முடியுமா?' என்று எண்ணி ஒரு மரக்கிளையில் போய் இருந்தான் அனுமான். அப்போது அசோகவனத்துக்கு இராவணன் வந்தான்.

4. நிந்தனைப் படலம்

இரவையும் பகலாக்கும் பேரொளி வீசும் ரத்தினங்கள் பதித்த மகுடங்களைச் சூடிக்கொண்டு இராவணன் வரும் போது அவனுடைய உடைவாளை ஊர்வசி சுமந்துகொண்டு வந்தாள். மேனகை வெற்றிலை மடித்துக் கொடுத்தாள். அவனுடைய செருப்புக்களைச் சுமந்து திலோத்தமை வந்துகொண்டிருந்தாள். அவன் பூசியிருந்த வாசனைத் திரவியங்களின் நறுமணம் திசையானைகளின் மூக்கைத் துளைத்தது. கோடிக் கணக்கான பெண்கள் நெய் விளக்குகளை ஏந்திக்கொண்டு வந்தார்கள், இயக்க மங்கையர், அரம்பையர், வித்தியாதரப் பெண்கள், நாககன்னியர், சித்தநங்கையர் முதலியோர் அவனைத் தொடர்ந்து ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் வந்தார்கள். இத்தனை ஆடம்பரங்களுடனும் வந்த இராவணன், தன்னுடன் வந்த அரம்பையர் முதலானோரை விட்டுத் தனியே சென்று சீதையின் இருப்பிடத்தை அடைந்தான். அவனைக் கண்ட சீதை, புலியைக் கண்ட மான்போல் நடுங்கினாள். பயத்தினால் ஆவி குலையும் சீதையையும், ஆசையினால் உயிர் குலையும் இராவணனையும், ஊசலாடி வருந்தும் உள்ளத்தோடு அனுமான் பார்த்தான். உடனே, ''சானகி வாழி! இராகவன் வாழி!'' என்று வாழ்த்தினான்.

சீதையின் அருகே வந்த இராவணன், ''எப்பொழுது எனக்கு நீ அருள் செய்யப் போகிறாய்?'' என்று கெஞ்சினான். ''தினம் தினமும் நான் செத்துக் கொண்டிருக்கிறேன். இதுவா எனக்குச் செய்யும் நன்மை? நான் இறந்த பின் என்னைச் சேரலாம் என்று இருக்கிறாயா? தேவர்களெல்லாம் கை தொழ நான் ஆட்சி புரிகிறேன். இந்த ஆட்சி உன்னைச் சேர விருக்கிறது. நீயோ இதைப் புறக்கணிக்கிறாய்! உன்னைவிடப் பேதையர் யார் இருக்க முடியும்? மூவுலகையும் ஆளும் என்னை நீ அடிமையாக ஏற்றுக் கொள்'' என்று சொல்லி இராவணன் கீழே விழுந்து வணங்கினான்.

அவன் வார்த்தைகள் பழுக்கக் காய்ச்சிய இரும்புச் சலாகைபோல் சீதையின் செவிகளில் பாய்ந்தன. கண்கள் சிவக்க அவள் கடுஞ்சொற்களைக் கொட்டினாள்:

''துரும்பே! இல்லறத்தில் இருக்கும் பெண்களைப் பார்த்துச் சொல்லக் கூடாத வார்த்தைகளைக் கூறினாய். நான் சொல்வதைக் கேள்: என் கணவருடைய வில்லிலிருந்துபாயும் அம்பு மேருமலையையும் உருவும்; விண்ணையும் பிளக்கும்; பதினான்கு உலகங்களை அழிக்க வேண்டுமென்றாலும் அழிக்கும். இதையெல்லாம் அறிந்திருந்தும், நீ தகாத வார்த்தைகளைச்

சொன்னாய். அறிவில்லாதவனே! உன் பத்துத் தலைகளையும் இழக்கப்போகிறாயா? நீ உயிர் பிழைக்க விரும்பினால் என்னை விட்டுவிடு. என் நாயகர் வந்து எதிர்த்தால் நீ நாசம் அடைவது திண்ணம். நீ முக்கோடி வாழ்நாளை வரமாகப் பெற்றிருக்கிறாய் என்றாலும் அது எமனிடமிருந்து உன்னைக்காத்துக் கொள்ளத்தான் பயன்படும். இராம பாணத்திற்கு உன்வரம் ஒரு பொருட்டல்ல. நீ இருக்குமிடத்தை என் கணவர் அறிந்து இங்கு வந்தால், நீயும், இலங்கையும் அரக்கர்களும் அழிவதோடு அவர் கோபம் நிற்காது; இந்த உலகமே அழிந்துவிடும் என்று அஞ்சுகிறேன். உலகமெல்லாம் ஏவல் செய்ய நீ செல்வத்தோடு வாழ்வதற்குக் காரணம் பாவமா, அல்லது நீ முன்பு செய்த தருமமா என்பதை யோசித்துப் பார். இப்போது செல்வத்தையெல்லாம் இழந்து உறவினர்களோடு அழிவதற்கே நீ தரும நெறியினின்றும் தவறுகிறாய்.''

சீதை இவ்வாறு கடுஞ்சொற்களோடு நீதியுரைகளையும் கூறினாள். நீதிபோதனையைக் கேட்டதும் இராவணனுக்குக் கோபாவேசம் பிறந்துவிட்டது. அப்போது மரத்தின் மீதிருந்த அனுமான், 'இராமருடைய தேவியை இந்த நீசன் தொடுவதற்குமுன் இவனைக் கீழே தள்ளி மிதித்துத் துவைத்து விட்டு மேற்கொண்டு செய்யவேண்டியவற்றையும்செய்வேன். தலைகள் பத்தையும் அடித்து வீழ்த்தி, இலங்கையையும் கடலில் தூக்கி வீசி, சீதையைச் சுமந்து கொண்டு செல்வேன்' என்று உறுதிகொண்டு கைகளைப் பிசைந்து கொண்டிருந்தான்.

அப்பொழுது இராவணனின் கோபாவேசத்தை, சீதை மீது கொண்டிருந்த அவனது ஆசை தணித்துவிட்டது. எனவே, மீண்டும் தன் பெருமைகளையும் பராக்கிரமங்களையும் எடுத்துச் சொல்லி, ''இராம இலக்குவர்களைக் கொன்றால் என் வீரத்திற்கு இழுக்காகும். அதனால் அவர்களை ஒரு கையால் பற்றிக் கொண்டு வந்து என் பணியாட்களாக வைத்துக் கொள்ளப் போவதை நீ பார்'' என்றும் கூறினான். மேலும், ''அயோத்திக்குப் போய் பரதன் முதலானவர்களைக் கொன்று, மிதிலையில் வாழ்பவர்களையும் வேரறுத்துவிட்டு வந்து உன்னையும் கொல்வேன். நான் யார் என்பதை நீ அறியவில்லை'' என்று பயமுறுத்தினான். பிறகு தன் வாளை ஒரு முறை பார்த்து விட்டுச் சீதையை நோக்கினான். ''உன்னைக் கொல்வதற்கு முன் நடுவே இருப்பது இன்னும் இரண்டு மாத காலமேயாகும். அதனால் நீ உனக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அப்படி நடந்து கொள்'' என்று சொல்லி அதட்டிவிட்டு அப்பால் போனான். போகும்போது

அரக்கியரைப் பார்த்து, ''சீதையை வசப்படுத்தி என்னிடம் நீங்கள் கொண்டுவராவிட்டால் உங்களுக்கு நான் விஷம் ஆவேன்'' என்று எச்சரித்தான்.

இராவணன் போன பிறகு அரக்கியர் ஆயுதங்களைக் காட்டிச் சீதையைப் பயமுறுத்தி, ''கொல்லுங்கள், கொல்லுங்கள். இவளைக் கொன்று தின்னுங்கள்'' என்று கத்தினார்கள். இராவணனின் விருப்பத்திற்கு இணங்கி விடுமாறு அவளை வற்புறுத்தினார்கள். அப்போது கண்ணீர் சொரிந்து அழுத சீதையைப் பார்த்துத் திரிசடை, ''நான் முன்பு சொன்ன கனவின், பலனைக் கேட்ட பிறகும் நீ மனம் கலங்குவது தவறு'' என்றாள். இராவணன் தன் குலத்தோடு அழியப் போவதை முன்கூட்டி உணர்த்தும் அந்தக் கனவை அரக்கியரும் அறிந்து அறிவு பெற்று, சீதையைப் பயமுறுத்துவதை நிறுத்தினார்கள். அவளும் அமைதியுற்றாள்.

5. உருக் காட்டு படலம்

'சீதையைச் சந்திப்பதற்கு ஏற்ற காலம் இதுதான். ஆனால் காவல் செய்யும்அரக்கியர் தூங்காமல் இருக்கிறார்கள். நாம் விரும்பிய மாத்திரத்தில் இவர்கள் தூங்கிவிட மாட்டாகள்' என்று எண்ணிய அனுமான் ஒரு மந்திரத்தைச் செபித்தான். உடனே அரக்கியர் யாவரும் இறந்து போனவர்கள் போல் மயக்கம் அடைந்தார்கள். சீதை துயரம் பொறுக்காமல் மனம் கலங்கித் தன் விதியை நொந்து புலம்பினாள்:

''என் மன்னரைக் காணும் ஆசையால் இவ்வளவு காலமும் பொறுமையோடு இருந்து என் உயிரைக்காத்துவந்தேன். அரக்கர்களின் நகரில் வெகு காலம் சிறை இருந்த என்னை இனி அந்தப் புனிதர் தொடுவாரா? மற்றவர்களின் மனையை அடைந்த ஒரு பெண்ணைக் கொண்டுவந்து வாழ்தல் சரியல்ல என்று கருதி அவர் போய்விட்டார். ஊரார் அவரைப் பழிக்கின்றனர். தருமத்துக்கு மாறான இந்த நிலையில் (கணவரைப் பிரிந்து) நான் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பது எந்த நன்மையை அடைவதற்கு? மாயமானின் பின்னால் என் மன்னரை அனுப்பி, அவரைத் தொடர்ந்து செல்லும்படி என் மகன் போன்ற இலக்குவனையும் வைது அனுப்பிவிட்டு, நஞ்சு போன்ற இராவணனின் மனையில் புகுந்த நான் இனியும் உயிரோடு இருப்பதை உலகம் சரி என்று ஏற்றுக் கொள்ளுமா? கவரிமான் போன்ற மானமுடைய பெண்களும், தவமடந்தையரும் என்னைப் பார்த்து,'இவள் இராமனைப் பிரிந்து கள்வரின் ஊரில் இருந்தவள்' என்று பழி தூற்ற நான் உயிர்

வாழ்ந்து கொண்டிருப்பேனு? அவர் வந்து அரக்கர்களை அழித்து என்னை மீட்டாலும், 'நீ என் வீட்டினுள் நுழையத் தக்கவள் அல்ல' என்று என்னைப் பார்த்துக் கூறினுல், நான் என் கற்பை எந்த விதத்தில் அவருக்கு நிரூபிப்பேன்? அதனுல் நான் உயிர் விடுவதே தருமத்தோடு இசைந்த செயலாகும். என் தவப்பயனுக அரக்கியரும் இப்போது தூங்குகின்றனர். இதைவிடச் சரியான சமயம் வேறு கிடையாது'' என்றெல்லாம் சொல்லிப் புலம்பிக் குருக்கத்தி மரக்கூட்டத்தைப் போய் அடைந்தாள். அதைக்கண்ட அனுமான், சீதையின் மனக் கருத்தை எண்ணிப் பார்த்தான். அவளைத் தடுத்து நிறுத்துவதற்குங்கூடத் தொடக் கூசினுன். ''இராமருடைய தூதன் நான்'' என்று சொல்லிக் கொண்டே கிளையிலிருந்து கீழே குதித்துச் சீதையின் முன் தொழுது தோன்றினுன்.

''தங்கள் இருப்பிடத்தை வந்து அடைந்து விட்டேன், இராமனின் கட்டளையால் தங்களைத் தேடிச் சென்றவர்கள் பலர். நான் என் தவப்பயனுகத் தங்கள் திருப்பாதங்களை வந்து தரிசித்துவிட்டேன். தாங்கள் இங்கே துயரில் மூழ்கியிருப்பது இராமருக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் இந்த அரக்கர்களை இதற்குள் பூண்டோடு ஒழித்திருக்க மாட்டாரா? என்னை யாரோ என்று சந்தேகிக்க வேண்டாம். என்னிடம் அடையாளம் இருக்கிறது; இராமர் சில செய்திகளும் கூறியனுப்பியிருக்கிருர்'' என்று அனுமான் சொன்னுன்.

அவன் பேசுவதைப் பார்த்து, 'இவன் அரக்கன் அல்லன்; நல்லவன்' என்று சீதை உணர்ந்தாள். 'இவன் அரக்கனுக இருந்தாலும் சரி, வேருேர் அமரனுக இருந்தாலும் சரி, இல்லை, குரங்குகள் இனத்தில் ஒருவனுவே இருந்தாலும் சரி— என் கணவரின் பெயரைச் சொல்லி எனக்கு உயிர் கொடுத்தான். இதைவிட உயிருக்கு வேறு என்ன உதவி செய்ய முடியும்?' என்று நினைத்து, ''வீரனே நீ யார்?'' என்று சீதை கேட்டாள்.

அனுமான் தான் வந்த வரலாற்றைச் சீதைக்கு எடுத்துரைத்தான்: இராமன் சீதையைப் பிரிந்தபின் வானரத் தலைவனுகிய சுக்கிரீவனுடன் நட்புக் கொண்டதையும், இராவணனை ஒரு காலத்தில் தன் வாலில் கட்டி எட்டுத் திசையிலும் பாய்ந்து அலைக்கழித்த மகா பலசாலியும், சுக்கிரீவனின் தமையனுமான வாலியை ஒரே அம்பால் இராமன் கொன்று, சுக்கிரீவனுக்கு முடிசூட்டியதையும், சுக்கிரீவனின் மந்திரியாகத் தான் இருப்பதையும் அனுமான் தெரிவித்தான்.

''நான் வாயுவின் குமாரன். என் பெயர் அனுமான் என்பது. தங்கள் கணவரின் குறிப்பறிந்து பணியாற்ற எழுபது வெள்ளம் கொண்ட வானர சேனை இருக்கிறது. அரக்கன் தங்களை எடுத்துக்கொண்டு போனபோது, நாங்கள் வாழும் இருசியமூக மலையில் தாங்கள் ஒரு துணியில் கட்டிப் போட்ட ஆபரணங்களைக் கொண்டு வந்து இராமரிடம் காட்டினேம். அவர் என்னைத் தனியே அழைத்துப் போய்ச் சில செய்திகளைக் கூறி தென்திசைக்கு என்னை அனுப்பிவைத்தார். என்னேடு அங்கதனையும் இரண்டு வெள்ளம் சேனையையும் சுக்கிரீவன் அனுப்பினன். அங்கதன் என்னை இலங்கைக்கு அனுப்பினன்'' என்று அனுமான் கூறவே, இராமனின் வடிவழகு எப்படிப்பட்டது என்பதைச் சொல்லும்படி சீதை கேட்டாள். அனுமானும் இராமனின் அடி முதல் முடி வரை ஒவ்வோர் அவயவத்தையும் வருணித்தான். அதைக் கேட்ட சீதை தன்னுணர்விழந்து அயர்ந்தாள். அவளை வணங்கி, ''அடையாளமாக இராமர் கூறியனுப்பிய செய்திகளும் இருக்கின்றன'' என்று சொல்லி அவற்றையும் எடுத்துரைத்தான் அனுமான்:

''அயோத்தியிலிருந்து வனத்துக்குப் புறப்பட்ட நாளில், 'காட்டு வழியில் நடப்பது கஷ்டம். அதனுல் நீ இங்கே தாய் மாருக்குப் பணி செய்து கொண்டிரு' என்று இராமர் சொல்ல, தாங்கள் உடுத்த புடவையோடு அவருடன் காட்டுக்குப் போவதற்கு ஆயத்தமாய் வந்து அருகில் நின்றீர்களாம். இந்தச் செய்தியைத் தங்களிடம் கூறும்படி அவர் எனக்குக் கட்டளையிட்டார். அது மட்டுமல்ல, அயோத்தியைவிட்டு வரும்போது, நகரின் மதில் வாசலைத் தாண்டியதுமே 'வனம் எங்கே இருக்கிறது?' என்று தாங்கள் கேட்டீர்களாம். இராமர், இலக்குவர், தாங்கள் ஆகிய மூவரையும் காட்டில் கொண்டு விடுவதற்காகத் தேர் ஓட்டி வந்த சுமந்திரன் திரும்பிச் செல்லும்போது, 'நான் வளர்த்த கிளிகளையும் மைனக்களையும் வளர்க்கும்படி அயோத்தியில் உள்ளவர்களுக்குச் சொல்' என்று தாங்கள் அவனிடம் கூறினீர்களாம். இந்தச் செய்திகளை அடையாளங்களாக இராமர் என்னிடம் கூறியனுப்பினர்.''

'''மேற்கொண்டும் அடையாளமாகச் செய்திகளைக் கூறிக் கொண்டிருக்க வேண்டியதில்லை' என்று கருதிய இராமர், 'என் பெயர் பொறித்ததும் சிறந்த வேலைப்பாடுகளுடன் கூடியதுமான இதைக் கொண்டு போய்ச் சீதையிடம் கொடு' என்று சொல்லிக் கொடுத்தார்'' என்று அனுமான் கூறி, ஒரு மோதிரத்தைச் சீதையிடம் காட்டினன்.

இராமனின் மோதிரத்தைப் பார்த்த சீதை, போன உயிரை மீண்டும் பெற்றவர்கள் போலவும், இழந்த செல்வத்தை அடைந்தவர்கள் போலவும், குழந்தை பெற்ற மலடியைப் போலவும் ஆனந்தக் கடலில் மூழ்கி, மோதிரத்தைக் கையில் வாங்கித் தன் மார்பில் வைத்தாள்; தலைமீது வைத்தாள்; கண்களில் ஒத்தினள்; ஏங்கினள்; பெருமூச்சு விட்டாள்; கண்ணில் நீர் பெருக்கினள். வாய் திறந்து பேச நினைத்தாள்; ஆனால் பேச முடியாமல் போய்விட்டது. இராமனின் மோதிரத்தால் சீதையின் மேனியில் புதியதோர் பிரகாசம் ஏற்பட்டது. கண்ணீர் சிந்திய வண்ணம், ''உத்தமனே! நீ எனக்கு உயிர் தந்தாய். என்னால் உனக்கு என்ன கைம்மாறு செய்ய முடியும்? அம்மையாகவும் அப்பனாகவும் இருக்கும் ஆண்டவனே! கருணையின் உறைவிடமே! எனக்கு இவ்வுலகிலும் மறு உலகிலும் வாழ்வையும் கீர்த்தியையும் கொடுத்தாய். வீரனே! துணையில்லாமல் தத்தளித்த என் துன்பத்தைத் தீர்த்த வள்ளலே! நீ ஊழுழி காலமும், பதினான்கு உலகங்களும் அழியும் காலத்திலும்கூட இன்றுபோல் இருப்பாயாக'' என்று சொல்லி அனுமானுக்குச் சாகா வரத்தைக் கொடுத்தாள் சீதை. பிறகு, ''அவர் எங்கே இருக்கிறார்? உன்னை எங்கே சந்தித்தார்? நான் இங்கு இருப்பதை அவருக்குச் சொன்னவர் யார்?'' என்றெல்லாம் கேட்டாள்.

அனுமானும் எல்லாச் செய்திகளையும் சொல்லத் தொடங்கினான். மாயமானாக வந்த மாரீசனை இராமன் வதம் செய்யும்போது அந்த அரக்கனின் பொய்க் குரல் கேட்டு இலக்குவன் தமையனைத் தேடிச் சென்றது, பிறகு இருவரும் திரும்பி வந்தபோது சீதையைக் காணாமல் அங்கிருந்து அவளைத் தேடிச் சென்றது, சடாயுவைப் பார்த்தது, சடாயுவின் வாய்மொழியால் இராவணன் அவளைத் தூக்கிச் சென்ற செய்தி அறிந்தது, சீதையின் பிரிவால் இராமன் கோதாவரியையும், மலையையும், மான்களையும் பார்த்துப் புலம்பியது, கடைசியில் இருசியமூக மலைக்கு வந்து சுக்கிரீவனுடன் நட்புக்கொண்டு வாலியைக் கொன்றது, சீதையைத் தேடும் பொருட்டுத் தன்னை இராமன் தென் திசைக்கு அனுப்பியது ஆகிய செய்திகளையெல்லாம் அனுமான் கூறி முடித்தான்.

''அப்பனே! நீ பெருங்கடலை எப்படிக் கடந்து வந்தாய்?'' என்று சீதை கேட்டாள்.

''தங்கள் துணைவரின் அருளால் கடலைத் தாவி வந்தேன்'' என்றான் அனுமன்.

''இந்தச் சிறிய உடம்புடன் நீ கடல் கடந்தது எப்படி?'' என்று சீதை கேட்க, அனுமான் தொழுத கையோடு விண்ணுக்கும் மண்ணுக்குமாக உயர்ந்து தன் பெரிய உருவத்தைக் காட்டினான். அதைப் பார்த்த சீதை, 'இனி அரக்கர்கள் செத்தொழிந்தார்கள்' என்று மகிழ்ந்தாள். ''எனக்குப் பயமாக இருக்கிறது. உன் உருவத்தைச் சுருக்குவாயாக'' என்றாள். அப்போது இராமனின் தோள்களைக் கட்டிக்கொண்டது போன்ற மகிழ்ச்சியை அடைந்தாள் சீதை.

அனுமானும் சீதையின் கட்டளைப்படியே தன் பேருருவத்தைச் சுருக்கி பழைய எளிய உருவில் நின்றான்.

''என் நாயகரின் அருளையும் புகழையும் ஊழூழி காலத்திலும் அழிவின்றி நிலைநிறுத்த நீ தோன்றியிருக்கிறாய். நீயே என் மன்னருக்குத் துணை என்று ஆகிவிட்டது. இனி இந்த அரக்கர்களின் கதி என்னவது? இனிமேல் நான் இறந்தாலும் நஷ்டமில்லை. இன்றே நான் சிறையிலிருந்து மீண்டுவிட்டேன்; அரக்கர்களை வேரறுத்து விட்டேன்; என் கணவரின் பாதங்களையும் தொழுதுவிட்டேன். எனக்கு இனிப் புகழைத் தவிர பழி வராது'' என்று சொல்லி சீதை மனம் மகிழ்ந்தாள்.

அப்புறம் அனுமான் வானரப் படையின் பெருக்கைப் பற்றிக் கூறி, அவர்கள் இலங்கையை இன்னும் பார்க்காமல் இருப்பதால்தான் இந்த நகரம் இன்னும் அழியாமல் இருக்கிறது என்று சொன்னான். அந்த வானரப் படையின் தலைவர்களுக்கு இந்த அரக்கர் கூட்டம் உறைபோடவும் போதாது என்று தெரிவித்தான்.

6. சூடாமணிப் படலம்

'சீதையைப்போல் துன்பத்தை அனுபவித்த ஒருவர் உலகத்தில் இருந்ததாகச் சொல்ல முடியுமா? திருமகளைப் போன்ற இவள் தத்தளித்துக் கொண்டிருக்கிறாள். இராமரின் உயிர் போன்றவளை எடுத்துக்கொண்டு போய் அவரிடம் சேர்ப்பதுதான் முறையாகும்' என்று அனுமான் எண்ணினான். உடனே அவளை நோக்கி, ''அடியேன் சொல்வதைக் கேட்டருளுங்கள். இப்படிச் சொல்வதற்காக என்னைக் கோபிக்கவேண்டாம். தங்களை இராவணன் கொன்றுவிட்டால் அப்புறம் அவனைக் கொல்லுதல் ஒரு காரியத்தில் சேர்ந்ததல்ல. நீண்ட நேரம் பேசி என்ன பயன்? தங்களை இப்பொழுதேஇராமரிடம் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறேன். என் புயங்களில் தாங்கள் அமர்ந்து சுகமாகத் தூங்குங்கள். தங்கள் துயர் இன்றோடு தீர்ந்தது. தங்களை எடுத்துக்

கொண்டு இமைப் பொழுதில் இராமர் வசிக்கும் மலையில் போய்க் குதிக்கிறேன். அரக்கர்கள் என்னை எதிர்த்தால் அவர்களைக் கொன்று ஒழிப்பேன். தங்கள் நிலையைப் பார்த்தபிறகு வெறுங்கையோடு இராமரிடம் திரும்பமாட்டேன். அவரிடம் சென்று, 'தங்கள் தேவி விடுதலை பெற முடியாமல் துயரத்தோடு இருக்கிறாள்' என்று சொன்னால் நான் அவருக்குச் சேவை செய்வதில் பொருள் உண்டா? 'உடம்பில் புண் படாமல் நான் திரும்பி வந்துவிட்டேன். எதிரிகள் மகாபலசாலிகள். சீதையைக் கொண்டு வராமலும், கண்டு வராமலும் என் உயிரைக் காப்பாற்றிக்கொண்டு வந்து சேர்ந்தேன்' என்று நான் இராமரிடம் போய்ச் சொல்வதா? தாங்கள் இப்போது அவரிடம் போய்ச் சேரவேண்டும். அதன் பிறகு அவர் மனத் தெளிவோடு வந்து அரக்கர் குலத்தை அழித்து உலகின் துன்பத்தைக் களைய வேண்டும். ஆகவே இனி வேறு எதுவும் சொல்வதற்கில்லை. என் தோள்மீது விரைவில் ஏறிக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி அனுமான் அவள் பாதங்களைத் தொழுதான்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட சீதை, ''நீ சொன்ன காரியத்தைச் செய்வது உனக்கு அரிதல்ல. எளிதில் அதைச் சாதித்து விடுவாய். ஆனால் அது சரியான காரியமல்ல என்று என் பெண்—இயல்புக்குத் தோன்றுகிறது. நீ என்னைக் கொண்டு சென்றால் அவருடைய வில்லுக்கு வேலையில்லாமல் போய் அதற்குக் கள்ங்கம் ஏற்படும். மேலும் கபடமாக என்னை அரக்கர்கள் எடுத்து வந்ததுபோல் நீயும் அவர்களுக்குத் தெரியாமல் என்னை எடுத்துப் போக ஏன் நினைக்கிறாய்? என் நாயகரின் வில்லால் இராவணன் மடியவேண்டும்; அவன் கண்களைக் காகங்கள் கொத்தித் தின்னவேண்டும். அரக்கியரின் தாலிகள் அறுபடவேண்டும். இந்த இலங்கை எலும்புக் குவியலாக மாறவேண்டும். இப்படியெல்லாம் நடக்காவிட்டால், என் கற்பை மற்றவர்களுக்கு நான் எப்படி எடுத்துக் காட்டுவது? இலங்கையை மட்டுமல்ல, எல்லா உலகங்களையுமே நான் என் சொல்லினால் சுட முடியும். ஆனால் அது இராகவரின் வில் வீரத்துக்கு மாசு உண்டு பண்ணும் என்று கருதி விட்டுவிட்டேன். வேறொரு விஷயமும் சொல்லவேண்டும்: நீ ஐம்பொறிகளையும் அடக்கியவன்தான் என்றாலும் ஆண் மகனாக இருக்கிறாய். உன்னை நான் தொடுவது சரியாகுமா? என்னைத் தீண்டினால் நான் இறந்து விடுவேன் என்று கருதி இராவணன் என்னைப் பர்ணசாலையோடு தூக்கிக்கொண்டு வந்தான். அத்துடன், தன் விருப்பத்துக்கு இணங்காத பெண்களை அவன் தொட்டால் அவனுடைய தலைகள் உதிர்ந்து

விடும் என்று பிரமனும் சாபமிட்டிருக்கிறுன். அதுவே எனக்கு உயிர் கொடுத்தது. இந்தச் சாபம் பற்றிய செய்தியை விபீஷணனின் மகள் திரிசடை எனக்குத் தெரிவித்தாள். என்னை எடுத்துக்கொண்டு போவது சரியான செயல் அல்ல. நீ இராமரிடம் திரும்பிப் போவதே சரி'' என்று கூறினுள்.

சீதையின் வார்த்தைகளைக் கேட்ட அனுமான் களிப் படைந்து அவளைத் துதித்தான். ''இனி சில நாட்கள் இங்கே தாங்கள் தங்கியிருந்தால், இராவணனுல் இருள் அடைந்த உலகம் ஒளி பெறும். இராமர் வந்து அவனைக் கொல்வார். இப்போது அவரிடம் போய் நான் சொல்ல வேண்டிய வற்றைக் கூறியருளுங்கள்'' என்று கேட்டுக் கொண்டான் அனுமான்.

அப்பொழுது இராமன் முதலியவர்களிடம் தெரிவிக்கும் பொருட்டுச் சீதை பின் வரும் செய்திகளைக் கூறினுள்:

''நீதி நெறியில் நிற்பவனே! உன்னைப் பார்த்துக் கூறு கிறேன்: இன்னும் இங்கே நான் ஒரு மாதகாலமே இருப்பேன். அதன் பின் உயிர் வைத்திருக்கமாட்டேன். என் மன்னர்மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். இதனை நீ மனத்தில் கொள்வா யாக. நான் இராமருக்கு ஏற்ற மனைவியாக இல்லை என்றுலும், அவர் உள்ளத்தில் கருணை என்பது இல்லை என்றுலும், தமது வீரத்தைக் காக்கும்படி நீ போய் அவரிடம் சொல். இளையவருக்கும் ஒரு வார்த்தை கூறுவாயாக. இராமரின் கட்டளைப்படி எனக்குக் காவலாக இருந்தவர் இலக்குவர். இப் போது சிறையிலிருந்து என்னை விடுவிப்பது அவருடைய கடமை என்று கூறு. என் விரதம் ஒரு மாதத்தில் முடிவடை கிறது. அதற்குள் இராமர் இங்கு வராவிட்டால், கங்கைக் கரையில் அடியேனுக்குத் தம் கைகளால் இறுதிக் கடன்களைச் செய்யும்படி செப்புவாயாக. 'சீதை அங்கே இறக்கும்போது உங்களைத் தொழுதாள்' என்று என் மாமிமார் மூவரிடமும் போய்ச் சொல்ல, இராமரிடம் கருணையுணர்ச்சி இல்லாமை யால் மறந்துவிட்டாலும் நீ மறந்துவிடாதே. என்னைத் திரு மண நாளில் கை பிடித்தபோது, 'இந்தப் பிறப்பில் நான் இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்' என்று அவர் சொன்ன சொல்லை அவரிடம் கூறுவாயாக. இங்கே நான் இருந்து உயிர் துறந்தாலும், திரும்பவும் பிறந்து அவர் மேனியைத் தீண்டும் நல்வரத்தைத் தொழுது வேண்டினேன் என்று விளம்பு. துர்ப்பாக்கியசாலியாகிய நான் இதையெல்லாம் எதற்காகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்? அவர் அரசராக வீற்றிருந்து ஆளவும், யானைமீது வீதியில் ஊர்வலம் வரவும் பார்க்கக் கொடுத்து வைக்காத நான் எதை எதையோ கூறு

கிறேன். என்ன பயன்? என் ஊழ்வினையைத்தான் நினைத்து வருந்துகிறேன். அவரை இந்த உலகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அவரைப் பிரிந்ததால் பெற்ற தாய் தவிக்கிருள். பரதனே துன்ப நோயால் பீடிக்கப்பட்டு வாடுகிருன். அவர்களையெல்லாம் பார்க்கப்போகாமல் என்னைத் தேடியா இங்கே வரப் போகிருர்? என் தாய் தந்தையர் முதலிய சுற்றத்தாருக்கெல்லாம் என் வணக்கத்தைக் கூறு. சுக்கிரீவனிடம் சொல்லி இராமருக்கு முடி சூட்டச் சொல்.''

சீதை இவ்வாறு கூறவே அனுமான், ''இன்னும் துன்பத்தால் தத்தளிப்பதை நிறுத்தாமல் இருக்கிறீர்களே'' என்று கூறி, அவளைத் தேற்றுவதற்கு முனைந்தான்.

''தாங்கள் இங்கே இறப்பீர்களாம்! அது உண்மையாம்! அப்புறம் இராமரும் உயிரோடு இருப்பாராம். அந்த அயோத்திக்கும் திரும்பிப் போவாராம்! போய் அல்லவா முடி சூடப் போகிருர்! இது உண்மையன்ருே!'' என்று வேடிக்கையாகப் பேசுவதுபோல் பேசினுன்.

''தங்களைச் சிறை வைத்த அரக்கன் உயிர் வாழ்ந்திருப்பானும்! வில் வீரர்களான இராம இலக்குவர்கள் பேசாமல் அயோத்திக்குப் போய் விடுவார்களாம்! இதற்கு ஒப்பாக வேறு எதையாவது சொல்ல முடியுமோ! உத்தமியே! தங்களைத் துன்பத்துக்குள்ளாக்கியவர்களைக் கொல்லாமல் உயிரை வைத்துக்கொண்டு நாங்கள் எல்லோரும் பின்னே செல்ல, எம் மன்னர் இராமர் வில்லோடும் செல்ல வேண்டாமோ! இராமருக்குத் தங்களை மீட்டுக்கொடாமல் நாங்கள் சும்மா இருந்தால் எங்களைவிட உயர்ந்தவர்கள் வேறு யார்! கற்புடைய சீதை வஞ்சகர் தீண்டுவதற்கு முன் மாண்டாள் என்பதைக் கேட்டு மனம் தேறி நாங்கள் பேசாமல் திரும்பிச் சென்ருல் இராமரின் வீரம் பிரகாசிக்காதோ!......''

இப்படியெல்லாம் வேடிக்கையாகப் பேசிய அனுமான், பின்பு, ''திருமகளே! தங்களை இராவணன் எடுத்து வருவதற்கு முன்பே மூவுலகங்களிலும் உள்ள அரக்கர்களைக் கொல்வதாக தண்டகவனத்து முனிவர்களுக்கு வாக்குறுதியளித்தவர் இராமர். அப்படிப்பட்டவர் இப்போது தாங்கள் இந்த நிலையில் இருக்க சாதுவாக ஒன்றும் செய்யாமல் இருந்து விடுவாரா? இந்த அரக்கர்களை அழிப்பதோடு அவருடைய சினம் தணியுமா? இந்த மண்ணும்விண்ணுமே அழிந்துவிடாதா? தாங்கள் சிறிது காலம் துன்பத்தை அனுபவிப்பதன் காரணமாக, அரக்கர்கள் அழியும் நன்னுளை எல்லோரும் காணப் போகிருர்கள். தங்களால் தருமம் மீண்டும் தழைப்பது நன்றல்லவா? அரக்கர்கள் மாண்டு, அவர்களுடைய ரத்தத்தில் பேய்கள்

குளிக்க, அதைக் கண்டு தேவர்கள் களிப்பதைத் தாங்கள் பார்க்க வேண்டாமா?'' என்றெல்லாம் சொன்னான்.

அரக்கர்களை அடியோடு அழிக்கப் போவது உறுதி என்பதை அவள் நன்கு உணரும் பொருட்டு, இலங்கை எப்படியெல்லாம் நாசமடையப் போகிறது என்பதையும் விவரித்தான்:

''இராமரின் அம்புகள் கிழித்ததால் அரக்கர்களின் உடம்பிலிருந்து ரத்தம் வடிய, அந்த ரத்தத்தினால் ஏழு கடல்களும் ஒன்றாகக் கலந்து பேரொலி செய்யப் போவதைப் பாருங்கள். அரக்கியரின் மனைவிமார் தமது சூல்வயிற்றைப் பிசைந்து, மழையாகக் கண்ணீர் சிந்திக்கொண்டு அறுத்துப் போட்ட தாலிகளின் குவியல், வாலியினால் கூடக் கடக்க முடியாத பெரியமலையாக வளரப்போவதைப் பாருங்கள். இலங்கையில் அரம்பையர் ஆடிய நடனமேடைகளில் குரங்குகள் வந்து மனம்போன போக்கில் தனித்தனியாகக் குதிக்கப்போவதைப் பாருங்கள். அரக்கர்களின் பிணங்களால் கடல் தூர்ந்துவிடுவதையும், பொன்மயமான இலங்கை வெந்து உருகுவதையும், தங்களைத் தீயநோக்குடன் பார்த்த இராவணனின் கண்களைக் காக்கைகள் பிடுங்கித் தின்பதையும், இராமரின் அம்பால் அறுபட்ட அரக்கனின் தலைகள் திசையானைகளின் வால்பக்கம் போய் விழுவதையும், இலங்கையில் புழுதி பறக்கும்படி பேய்கள் கூச்சலிட்டுக் கூத்தாடுவதையும், உலகம் அழியும் காலத்தில் எல்லா உயிர்களையும் கொண்டு போயும்கூட ஆசைதீராமல் இருக்கும் காலனும் இப்போது கணக்கற்ற அரக்கர்களின் உயிர்களைக் கொண்டு செல்ல முடியாமல் சோர்வடைந்து நின்று பெருமூச்சு விடுதையும் பாருங்கள். இங்கே தாங்கள் ஒரு மாதம் இருக்க வேண்டியதில்லை. நான் விரைவில் சென்று இராமரைப் பார்த்த மாத்திரத்திலேயே, அவர் ஒரு கணமும் தாமதியாமல் இங்கு வருவார். தங்களைப் பிரிந்து அவர் உணர் விழந்த நிலையில் இருக்கிறார். தங்கள் பிரிவால் அவர் அடையும் வேதனைகளைப்பிறரால் நினைத்துப் பார்க்கக்கூட முடியாது. இப்படிப்பட்ட நிலையில் உள்ளவர் தங்களை மீட்காமல் உயிரோடு இருப்பார் என்று எண்ணுவது தவறு. நான் இப்போது சொல்லியவற்றையெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனியைப் போல் நிரூபித்துக் காட்டுவேன். ஆகவே எனக்கு விடை கொடுத்து அனுப்புங்கள். இங்கே மாபெரும் வானரசேனை வந்து சேரும்போது அதன் நடுவில் இராமரை என் புயத்தின் மீதும், இலக்குவரை அங்கதன் புயத்தின்மீதும் பாருங்கள். துன்பத்தின் காரணமாகக் கொள்ளும் சந்தேகத்தை விட்டொழியுங்கள். தாங்கள் குறித்த நாளுக்குள் வந்து தங்களை

இராமர் மீட்கவில்லை என்ருல், அந்தப் பழியும் பாவமும் பற்றுவதற்கு அவர் இராவணன் அல்லவே! இராமர் அல்லவா?''

அனுமான் கூறிய இந்த வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்த சீதை, ''விரைவிலேயே நீ போய் வருவாயாக. தீமைகளையெல்லாம் வெல்வாயாக. இனி நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை. இராமருக்கு அடையாளமாகச் சொல்ல வேண்டிய சில செய்திகள் உள்ளன. அவற்றைச் சொல்கிறேன்: காட்டில் ஒரு காகம் வந்து என்னைத் துன் புறுத்த, இராமர் ஒரு புல்லை ஏவி அதன் ஒரு கண்ணை ஒழித்த செய்தியையும், நான் உயிர்போல் வளர்த்த ஒரு கிளிக்கு அவர் தம் சிற்றன்னையாகிய கைகேயியின் பெயர் வைக்கச் சொன்னதையும் நீ போய்ச் சொல்வாயாக. இதற்குமேல் அடையாளமாகச் சொல்ல எதுவும் இல்லை'' என்றுகூறி, தன் புடவையில் முடிந்து வைத்திருந்த சூடாமணியை எடுத்தாள். அதன் பிரகாசத்தைக் கண்டு, 'இது என்ன பொருளோ!' என்று அனுமான் வியந்தான். அப்பொழுது சீதை, ''தேடி வந்து எனக்கு உயிர் தந்த நல்லவனே! இந்தச் சூடாமணி என் கண்மணி போன்றது. வெகுநாட்களாக என் ஆடையில் முடிந்து வைத்திருந்தது. இதுவே எல்லாவற்றையும்விடப் பெரிய அடையாளமாகும் இதைக் கொண்டுபோய் அவரிடம் காட்டு'' என்று சொல்லிக் கொடுத்தாள். சீதையைத் தொழுது சூடாமணியைக் கையில் வாங்கினுன் அனுமான். தன் ஆடையில் அதைப் பத்திரமாக முடிந்து கொண்டான். அழுது கொண்டே அவளை மும்முறை வலம் சுற்றி வந்து வணங்கினுன். சீதையும் அன்போடு அவனை ஆசிர்வதித்து அனுப்பிவிட்டு அப்பால் சென்ருள்.

7. பொழில் இறுத்த படலம்

இராமன் இருக்கும் இடம் நோக்கி வடதிசையில் செல்லும் நோக்கத்துடன் அனுமான் தன் பெரிய வடிவத்தை எடுத்து, அசோகவனத்தினிடையே நடந்து போனுன். அப்போது அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. 'சீதையை வந்து பார்த்த ஒரு சாதாரணமான காரியத்தை மட்டும் செய்து விட்டுப் போவதில் என்ன பெருமை? ஏதேனும் பெரிய காரியத்தைச் செய்ய வேண்டும்' என்று ஆலோசித்தான்.

'ஈனர்களான விரோதிகளைக் கொன்று, இலங்கையைக் கடலில் எடுத்து வீசி, சீதையைக் கொண்டு போய் இராமரிடம் நான் சேர்க்கவில்லை என்ற நிலையில், நான் எந்தவகை

யில் அவருக்கு ஊழியன் ஆவேன்? நான் இராவணனின் பத்துத்தலைகளையும் இருபது தோள்களையும் என் வாலால் இறுகக் கட்டிச் சிறையில் கொண்டுபோய் வைக்கவும் இல்லை. எனவே ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருப்பார்கள் என்று சொல்லுவது சரியா? அரக்கர் கூட்டத்தைக் கலக்கி, இராவணன் கண் முன்பாக அவனுடைய பட்டத்து மனைவி மண்டோதரியின் கூந்தலைப் பிடித்து இழுத்துக் கொண்டுபோய்ச் சிறை வைக்க வேண்டாமா? அதற்குக் குறைவான காரியத்தைச் செய்வேனு? இன்னும் ஆலோசனை செய்ய வேண்டிய காரியம் வேறில்லை. இந்த அரக்கர்களின் உயிரைக் குடித்து இராமருக்கு நான் அடிமை என்பதைக் காட்டுவதுதான் சரி. அவர்களைப் போருக்கு அழைப்பது எப்படி? இந்தச் சோலையை விரைவில் அழிக்கிறேன். அழித்தால் அந்தப் பேரோசை கேட்டு அரக்கர்கள் கோபத்தோடு என்னைத் தாக்க வருவார்கள். அப்போது அவர்கள் உயிரைக் குடிக்கிறேன். இதுதான் சரியான உபாயம். வந்தவர்களெல்லாம் உயிரோடு மீள மாட்டார்கள். கடைசியில் இராவணன் என்னை எதிர்க்க வருவான். அவன் தலைகளை முறித்து என் கோபத்தைத் தணித்துக் கொண்டு சந்தோஷமாகத் திரும்பிச் செல்கிறேன்.' இவ்வாறு அனுமான் யோசித்து மேருமலை போன்ற தோள்களைக் கொண்ட பிரம்மாண்டமான உருவத்தை எடுத்துக்கொண்டு, அசோகவனத்தின் மரங்களைத் தன் கால்களால் துகைத்தான்.

அப்பொழுது மரங்கள் ஒடிந்து பிளந்து நெரிந்தன; தகர்ந்து எரிந்து கரிந்தன. வேரோடு விழுந்த மரங்கள் சில; எரிந்த மரங்கள் சில: வீசி எறிந்ததால் விண்ணில் போய் விழுந்த மரங்கள் சில. வானுலகில் போய் விழுந்த மரங்கள் அங்குள்ள தேவர்களின் நந்தவனத்தையும் அழித்தது. அரக்கர்களின் மாளிகைகளில்போய்ப் பல மரங்கள் விழவே அந்தக் கட்டடங்கள் யாவும் இடிந்து தகர்ந்தன; திசையானைகளின் பக்கம் போய்ப் பல மரங்கள் விழுந்தன. தேவர் உலகில் விழுந்த மரங்களிலிருந்து அங்குள்ள பெண்கள் மலர் பறித்தார்கள். அனுமான் அசோகவனத்திலிருந்த மணி மேடைகளையும் மரங்களையும் பெயர்த்து எறியவே அவை போய் விழுந்து கடலைத் தூர்த்து விட்டன. அதனுல் கடலை இனி நடந்தே கடந்து விடலாம் என்று தோன்றியது. அனுமான் வீசி எறிந்த மரங்கள் போய் விழுந்ததால் யானை கட்டிய சாலைகளும், நாட்டிய மேடைகளும், மதுபானம் செய்யும் இடங்களும், குதிரை கட்டும் இடங்களும், தேர்களும் அழிந்தன. இலங்கையின் மாடமாளிகைகளில் நெருப்புப்பற்றி ஊரில் சாம்பல் பறந்தது. இலங்கை நிலை தடுமாறி அழிந்தது......அப்போது சந்திரன் மறைந்தது.

சீதைக்கு நிழல் தரும் மரம் ஒன்றுதான், பிரளய காலத்தில் திருமால் பள்ளி கொள்ளும் இலையைக் கொண்ட ஆல மரம் போல் அழியாமல் நின்றது. மற்ற மரங்களெல்லாம் அழிந்துவிட்டன. சோலையை அழித்துவிட்டு அனுமான் பிரளய கால ருத்திரனைப் போல் நின்றுகொண்டிருந்தான். அப்போது, அனுமானின் மந்திரத்தினல் தூங்கிய அரக்கியர் உறக்கத்திலிருந்து கோபவேசத்துடன் எழுந்து, அனுமானைக் கூர்ந்து பார்த்து, ''அம்மா! இது என்ன உருவம்? இது யார்? நீ அறிவாயோ?'' என்று சீதையிடம் கேட்டார்கள். அதற்குச் சீதை, ''தீயவர்கள் தீய செயல்களைச் செய்தால் அவற்றைத் தீயவர்களால்தான் இன்னது என்று அறியமுடியும். உங்கள் சூழ்ச்சிகள் நல்லவர்களுக்கு எப்படித் தெரியும்? மாரீசனுகிய மானை, மாயமான் என்று இலக்குவர் சொல்லியும் அதை உண்மையான மான் என்று விரும்பியவள் நான்'' என்று சொன்னுள். அரக்கியர் ஒன்றும் தோன்ருமல் வயிற்றில் அடித்துக்கொண்டு ஓடினுர்கள். அப்பொழுது அங்கே இராவணனுக்காகப்பிரமன் பொன்னுலும் மணிகளாலும் அழகுறச் செய்து கொடுத்திருந்த பிரம்மாண்டமான செயற்கைக் குன்றை அனுமான் பெயர்த்து எடுத்து இலங்கையின் மேல் எறிந்தான். அதனுல் ஊரே நாசமாயிற்று. அசோகவனத்தைக் காவல் செய்து வந்த பருவத்தேவர்கள் பயந்து போய் இராவணனிடம் ஓடினுர்கள். அவன் அருகே சென்று காலில் விழுந்து வணங்கி, ''ஒரு குரங்கு மரங்களைப் பெயர்த்து வீச, அசோகவனம் நெருப்பில் பட்ட பஞ்சு போல் அழிந்துவிட்டது. செய் குன்றை அந்தக் குரங்கு பெயர்த்தெடுத்து வீசியதால், இலங்கையில் சில இடங்கள் தவிர மற்றப்படி நகரமே நாசமாகி விட்டது'' என்று சொன்னுர்கள்.

அதைக்கேட்ட இராவணன், ''ஒரே ஒரு குரங்கு அசோகவனத்தை யெல்லாம் அழித்து, செய்குன்றைப் பெயர்த்து வீசி இலங்கையையும் அழித்து விட்டதா! அரக்கர்களுடைய வீரம் நன்ருக இருக்கிறது! இப்படி மூடர்கள்கூடச் சொல்ல மாட்டார்களே!'' என்று கூறி ஏளனமாகச் சிரித்தான்.

பருவத்தேவர்கள் அனுமானின் பிரம்மாண்டமான வடிவத்தைப்பற்றிச் சொன்னுர்கள். ''அந்தக் குரங்கை மும்மூர்த்திகளில் ஒருவன் என்றும் சொல்வதற்கில்லை. ஏனென்ருல் குரங்கின் வலிமைக்கு அளவே இல்லாமல் இருக்கிறது. அதைத் தாங்களே வந்து பார்ப்பீர்களாக'' என்று பருவத்தேவர்கள் சொல்லிக்கொண்டிருக்கும் போது, அனுமான் பேரோசையோடு ஆரவாரம் செய்தான். அந்த ஓசையால் பூமி கிழிந்தது. கிழிபட்ட இடத்தில் கடல் நீர் குமிழியிட்டுப்,

பாய்ந்தது. எட்டுத் திசைகளையும் சுமக்கும் யானைகள் மட்டு மன்றி தேவர்களும் பயந்து ஓடினார்கள். அரக்கியரின் கர்ப்பம் கலங்கியது. அண்டமும் வெடித்து விட்டது.

8. கிங்கரர் வதைப் படலம்

இடிமுழக்கம் போல் கேட்ட அனுமானின் கர்ஜனை இராவணனின் இருபது செவிகளையும் துளைத்தது. உடனே அவன் இலேசாகச் சிரித்துக்கொண்டு, பொறாமையும் சிறிது தோன்ற, எல்லையில்லாத ஆற்றல் படைத்த அரக்கர்களை அழைத்து, ''குரங்கு தப்பி ஓடிவிடாதபடி ஆகாயமார்க்கத்தையும் தடுத்து, அதைக் கொல்லாமல் பிடித்துக்கொண்டு விரைவில் வாருங்கள்'' என்று கட்டளையிட்டு அனுப்பினான்.

அனுமானைப் பிடித்துக்கொண்டு வருவதற்காக எத்தனையோ விதமான ஆயுதங்களை ஏந்திக்கொண்டு கிங்கரர்கள் என்ற அரக்கர்கள் அசோகவனத்தை நோக்கி வந்தார்கள். அந்தப் பெருங்கூட்டம் வந்து அசோகவனத்தை வளைத்துக் கொண்டது. அவர்களை அனுமான் பார்த்து, 'மரங்களைப் பிடுங்கி எறிந்த நமது உபாயம் பலித்துவிட்டது. அரக்கர்களைப் போருக்கு வரும்படி செய்து விட்டோம்'' என்று மகிழ்ந்தான். அவன்மீது அரக்கர்கள் ஆயுதங்களை வீசி எறிந்தார்கள். உடனே அனுமான் ஒரு பெரிய மரத்தைப் பிடுங்கி ஒரு கையில் வைத்துக் கொண்டு கிங்கரர்களின் நடுவே வந்து நின்றான். அவன் மரத்தினால் அறையவே அரக்கர்களின் தலைகள் உடைந்தன. கண்ணும், பற்களும், குடல்களும் கீழே விழுந்தன. ஆனாலும் அவர்கள் மேன்மேலும் ஆயுதங்களை எறிந்து போர் செய்தார்கள். அனுமானோ அபாரமான திறமையுடனும் வலிமையுடனும் போரிட்டு அவர்களைக் கொன்றான். சில அரக்கியர்கள் வந்து தங்கள் கணவன்மாரைக் காப்பாற்ற வேண்டும் என்று உயிர்ப்பிச்சை கேட்கவே அவன் சில அரக்கர்களை ஒன்றும் செய்யாமல் வீடுகளுக்கு அனுப்பிவைத்தான். அனுமானின் வெற்றியைக் கண்ட தேவர்களும், தேவமாதர்களும், முனிவர்களும் அவன்மீது மலர்களைச் சொரிந்தார்கள். வந்த கிங்கரர்கள் கணநேரத்தில் மடிந்து விடவே பருவத் தேவர்கள் இராவணனிடம் ஓடினார்கள். அவர்களால் வாய்திறந்து பேசமுடியவில்லை. அதனால் கைச் சாடையினால் செய்தியைத் தெரிவித்தார்கள். அவர்கள் படும் பாட்டைப் பார்த்து என்ன நடந்திருக்கிறது என்பதை இராவணன் அறிந்து கொண்டான்.

''கிங்கரர்கள் இறந்தொழிந்தார்களா? அல்லது என் ஆணையைப் பொருட்படுத்தாமல் எங்காவது ஓடிப் போய்

விட்டார்களா? ஒரு வேளை போரில் தோற்று அதன் காரண மாக மனைவி மக்களையும் மறந்து வேறிடங்களுக்குப் போய் விட்டார்களா? என்ன நடந்தது?'' என்று இராவணன் நெருப்பைக் கக்கிக்கொண்டு கேட்டான்.

''கிங்கரர்கள் போர்க்களத்தில் அஞ்சி ஓடிவிடவில்லை. குரங்கினால் கொல்லப்பட்டு, பொய்ச்சாட்சி சொன்னவர் களின் வம்சங்கள் அழிந்ததுபோல் அழிந்து விட்டார்கள்'' என்று பருவத்தேவர்கள் சொன்னார்கள்.

இராவணன் எட்டுத் திசைகளையும் திரும்பிப்பார்த்தான். தன் படைகள் தோற்றதற்காக நாணினான். அதை மறைப்ப வன்போல், ''என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரி யாது போலிருக்கிறது'' என்று சொல்லிவிட்டு மூன்று உல கங்களையும் விழுங்கப் போகிறவன்போல் கோபாவேசம் கொண்டான்.

வந்தவர்கள் மேற்கொண்டு எதுவும் சொல்லவில்லை. பயத்தினால் விம்மினார்கள்.

''அரக்கரைக் குரங்கு கொன்றதாகச் சொல்கிறீர் களா? இது நீங்கள் கேள்விப்பட்டதா? இல்லை, நேரில் பார்த் ததா?'' என்று இராவணன் கேட்டான்.

''நாங்களே ஒரு பக்கம் ஒதுங்கியிருந்து கண்களால் கண் டோம். கடல் போன்ற சேனையைக் குரங்கு ஒரு மரத்தினால் அடித்துக் கொன்றுவிட்டது. அது இன்னும் அங்கேதான் இருக்கிறது'' என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

9. சம்புமாலி வதைப் படலம்

இராவணன் தன் எதிரே கும்பிட்ட கைகளுடன் நின்ற சம்புமாலி என்பவனைப் பார்த்து, ''நீ குதிரைப் படையோடு போய் அந்தக் குரங்கை வளைத்து, அதன் பலத்தை ஒடுக்கி, கயிற்றால் கட்டிக் கொண்டு வந்து என்னிடம் விட்டு, என் கோபத்தைத் தணிப்பாயாக'' என்று கட்டளையிட்டான்.

எத்தனையோ அரக்கர்கள் இருக்க, தன்னைப் பெரிதாகக் கருதி இராவணன் கட்டளையிட்டதற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்த சம்புமாலி, இராவணனை வணங்கி விடை பெற்றுச் சென்றான். தன்னுடைய சேனையோடும், இராவணன் அனுப் பிய படையோடும், தன் தந்தை அனுப்பிய படையோடும் போருக்குச் சென்றான் சம்புமாலி. யானை, தேர், குதிரை, காலாள் என்ற நால்வகைப் படையும் அவனோடு சென்றது. அரக்கர்களின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு அசோக வனத்தின் தோரண வாசல் மீது ஏறி நின்று கொண்டிருந்

தான் அனுமான். அப்போது அவன் செய்த ஆரவாரத்தைக் கேட்டு மேகங்கள் இடியோடு சிதறின; கடலின் பேரொலி அடங்கியது; குகைகளில் கிடந்த பாம்புகள் உயிரோடு நஞ்சைக் கக்கின; அரக்கர்களும் தேவர்களுமே பயத்தால் நடுங்கினார்கள். தோள் கொட்டிக்கொண்டு நின்ற அனுமான் இருக்கும் இடத்தின் அருகே அரக்கர்கள் செல்ல முடியாமல் பிணங்கள் வழியைமறித்துக்கொண்டு கிடந்தன.

சம்புமாலி படைகளை அணிவகுத்துக் கொண்டு முன்னே சென்றான். அனுமான் அதைக் கண்டு, 'விரும்பியது கிடைத்துவிட்டது' என்று மகிழ்ந்தான். அனுமானுக்கு அவனுடைய நெற்றியே முன்னணிப் படையாகவும், மயிர்களே படைவீரர்களாகவும், நகங்களோடு கூடிய கைகளே வாளாயுதங்கள் தரித்த பக்கச் சேனைகளாகவும், அவனுடைய வாலே பின்னணிப் படையாகவும் அமைந்திருந்தன. வந்த அரக்கர்கள் அனுமான்மீது ஆயுதங்களைச் செலுத்தினார்கள். அவற்றை அவன் தன் கையினால் அடித்தும்,முறித்தும் பிசைந்து தூளாக்கியும் எறிந்தான். கடுங்கோபம் கொண்டு கீழே கிடந்த ஒரு இரும்புத் தூணை எடுத்துக்கொண்டு அதைக் கொண்டே அரக்கர்களையும், யானைகள், தேர்கள், குதிரைகள் முதலியவற்றையும் அடித்து நாசமாக்கினான். படைகள் யாவும் அழிந்த பிறகு தன்னந்தனியனாக ஒரே ஆயுதத்துடனும் ஒற்றைத் தேருடனும் நின்றான் சம்புமாலி. அவனை அனுமான் பார்த்து, ''பலம் இழந்து நிற்கும் உன்னைக் கொல்வது நீதியல்ல, உன்னோடு வந்தவர்களின் உயிரைக் காக்கும் சக்தியற்ற நீ தனியே நின்று இனி என்ன செய்யப் போகிறாய்? ஒன்று இறந்து விடு; இல்லையென்றால் இங்கிருந்து போய்விடு'' என்றான்.

''உன் கருணை நன்றாக இருக்கிறது!'' என்று சம்புமாலி ஏளனமாகக் கூறி ஆயிரக் கணக்கான அம்புகளை அவன்மீது செலுத்தினான். அவற்றை இரும்புத் தூணினால் அனுமான் தடுத்து விலக்கிக்கொண்டிருக்கவே, அந்த இரும்புத் தூணையே ஓர் அம்பினால் சம்புமாலி முறித்து வீழ்த்தினான். உடனே அனுமான் அந்த அரக்கனின் தேருக்குள் புகுந்து அவனது வில்லைப் பிடுங்கி அவன் கழுத்தில் போட்டு இழுத்து நாணை முறுக்கி அவன் தலையை அறுத்தான். சம்புமாலியின் தலை கீழே விழுந்தது.

அனைவரையும் அனுமான் கொன்று தீர்த்து விட்டதைப் பார்த்துக் கொண்டிருந்த பருவத் தேவர்கள் இராவணனிடம் ஓடிப் போய்ப் பயத்தால் பேசமுடியாது நிற்க, அவன் சிரித்து ''பயப்படாதீர்கள்'' என்றான்.

''ஐயனே! நம் வீரர்கள் அனைவரும் மடிந்துவிட்டார்கள். சம்புமாலியும் மாண்டான் ஒரே குரங்குதான் இவர்களை மாய்த்து விட்டது'' என்று பருவத் தேவர்கள் கூறினார்கள்.

இராவணனுக்குக் கோபத்தால் கண்கள் சிவந்தன. ''அந்தக் குரங்கை நானே போய்ப் பிடிக்கிறேன்'' என்று அரக்கன் சொல்லவே, அங்கு நின்ற சேனைத்தலைவர்கள் ஐவர் இராவணனைப் பார்த்துப் பேசலானார்கள்.

10. பஞ்ச சேனாபதிகள் வதைப் படலம்

''கேவலம், சிலந்திப் பூச்சிகளைப் பிடித்துத் தின்னும் குரங்கை எதிர்த்துத் தாங்கள் போரிடப் போனால் தங்கள் பெருமைக்கு இழுக்கு அல்லவா? அதைக் கண்டு மும்மூர்த்திகள் சிரிக்க மாட்டார்களா? எங்களை அனுப்பி வைப்பீர்களாக'' என்று பஞ்ச சேனாபதிகள் தொழுது கேட்டுக் கொண்டார்கள். இராவணனும் அதற்கு இசைந்தான்.

பஞ்ச சேனாபதிகள் அரக்கனை வணங்கிவிட்டு அசோக வனத்தை நோக்கிப் பெரும்படை கூட்டிக்கொண்டு புறப்பட்டார்கள். ''முன்பு அனுமானை எதிர்க்கச் சென்ற அரக்கர்களில் யாரும் உயிரோடு திரும்பவில்லை. இப்போது எல்லோருமே போய் ஒன்றாக மடிவோம்'' என்று சொல்லி அழுது கொண்டே அரக்கியரும், அரக்கர்களின் தாய்மாரும், பிள்ளைகளும் இப்பொழுது போருக்குச் செல்லும் அரக்கர்களுடன் சேர்ந்து சென்றார்கள். அரக்கர் படை சென்று தோரண வாசலை முற்றுகையிட்டது; எல்லாப் பக்கங்களிலும் அணி வகுத்து நின்றது. இந்தப் பெரும் படைக்கு எதிரே அனுமான் தனியனாக நிற்பதைப் பார்த்துத் தேவர்கள் பயந்தார்கள். ஆனால் அனுமானோ, 'இந்த அரக்கர்கள் இன்றே அழிவது திண்ணம்' என்று எண்ணிக் களிப்படைந்து, சேனையை முழுக்கப் பார்த்துத் தன் தோளையும் பார்த்தான்.

'இந்தச் சிறு குரங்குதானா அரக்கர்களையெல்லாம் கொன்றது?' என்று பஞ்ச சேனாபதிகளுடன் சென்ற கணக்கில் அடங்காத இராக்கதர்கள் சந்தேகம் கொண்டார்கள். அப்போது அனுமான் தோரண வாசலின் மீது இருந்தபடியே விண்ணைத் தொடும்படியாகப் பேருருவம் கொண்டான். அரக்கர்கள் சினத்தோடு வில்லைவளைத்துஅனுமான் மீது அம்புகளைத்தெறித்தார்கள். அம்புகள் தைத்தது அனுமானுக்குச் சொறிந்து விட்டதுபோல் சுகமாக இருந்தது. அந்த அரக்கர்களைக் கொன்றால்தான் மற்ற அரக்கர்கள் போர் செய்ய வருவார்கள் என்று எண்ணிய அனுமான், ஓர் இரும்புத்தூணை எடுத்து யானை, குதிரை, தேர் முதலியவற்றையெல்லாம் அடித்து

நாசமாக்கிக் கடலில் வீசி எறிந்தான். அரக்கர்கள் செத்து விழுந்தார்கள். ரத்த வெள்ளம் ஓடியது பிணங்கள் மகர தோரண வாசலை மறைக்கும் அளவுக்குக் குவிந்து விட்டன. அரக்கர்கள் யாவரும் இறந்து விடவே, ஐந்து சேனைத் தலைவர்களும் வந்து ஆயிரக் கணக்கான அம்புகளை அனுமான் மீது சொரிந்தார்கள். அவற்றைக் கையால் பிடித்து நொறுக்கி எறிந்தான் அனுமான். ஒரு சேனைத் தலைவனின் தேர் யந்திரத்தை அவன் சிதைத்துவிடவே, அந்த அரக்கன் வானில் கிளம்பினான். அங்கேயே அவனுடைய வில்லை அனுமான் இரும்புத் தூணால் தாக்கி முறித்தான். அரக்கன் ஒரு மலையை எடுத்து எறிந்தான். உடனே அவனை இரும்புத் தூணால் அடித்துக் கொன்றான் அனுமான்.

ஒரு சேனாபதி இறந்துவிடவே, மற்ற நால்வரும் மிகுந்த கோபம் கொண்டு போர் செய்தார்கள். அவர்களில், ஒருவனைத் தேரோடு எடுத்து ஆகாயத்தில் வீசி எறிந்தான். அவன் பூமியில் வந்து விழுந்ததும் அவனைக் காலால் மிதித்துக் கொன்றான்.

மீதியுள்ள சேனாபதிகள் மூவரும் தொடர்ந்து போர் செய்தார்கள். அவர்களில் இருவருடைய தேர்களை இரண்டு கைகளில் எடுத்துக் கொண்டு அனுமான் கிளம்பினான். தேர்களுள் இருந்த இரு சேனாபதிகளும் ஆகாயத்தில் வேகமாகச் செல்லவே, அனுமானும் பின் தொடர்ந்து சென்று அவர்களுடைய விற்களை முறித்து அம்புகளையும் ஒடித்தெறிந்தான். அரக்கர்கள் வேறு ஆயுதங்கள் இல்லாமையால் அனுமானுடன் ஆகாயத்திலேயே மல் யுத்தம் செய்தார்கள். அவர்களை அவன் வாலினால் கட்டிக் கால்களையும் தோள்களையும் ஒடிக்கவே, அந்த இருவரும் இராகு, கேது என்ற பாம்புகள் விலகுவதுபோல் அனுமானைவிட்டு விலகி, பிணங்களாகிக் கீழே விழுந்தார்கள்.

கடைசியில் எஞ்சியிருந்த ஒரு சேனாபதியை அனுமான் பார்த்து அவன் தலைமீது பாய்ந்தான். உடனே அரக்கன் இறந்து தேரோடு பூமியில் விழுந்தான்.

'இந்தக் குரங்கு நம்மையும் கொன்றுவிடும்' என்று பயந்தவர்களாய் அங்கே நின்று கலங்கிய பெண்களை வைதுவிட்டு, அதட்டும் சொற்களால் காவல் செய்பவர்களான பருவத் தேவர்கள் இராவணனிடம் ஓடினார்கள் அவனுடையகாதுகள் தீயும் படியாக, ''படை வீரர்களும் ஐந்து சேனைத் தலைவர்களும் இறந்து விட்டார்கள். எல்லோரையும் குரங்கு அதிவேகமாகக் கொன்று, தன்னுடன் போர் செய்ய யாரும் இல்லாததால் சோம்பி இருக்கிறது'' என்று சொன்னார்கள்.

11. அக்க குமாரன் வதைப் படலம்

பஞ்ச சேனாபதிகளையும் படைவீரர்களையும் அனுமான் கொன்று தீர்த்து விட்டான் என்ற செய்தியைப் பருவத் தேவர்கள் சொல்லக் கேட்ட இராவணன் கோப மிகுதியால் நெருப்பாக மூச்சு விட்டான்; கண்கள் சிவந்துவிட்டன. அப்போது அவனுடைய மகன் அக்க குமாரன் அவனை வணங்கி, ''அனுமானோடு போர் செய்ய என்னை அனுப்புங்கள். நீங்கள் எதற்காக அற்பக் குரங்கை எதிர்த்துப் போர் செய்ய எண்ணுகிறீர்கள்? அது என்ன சிவனுடைய வாகனமாகிய நந்தியா? அல்லது திருமாலின் வாகனமாகிய கருடனா? இல்லை, அவன் துயிலும் ஆதிசேஷனா? திசை யானைகளில் ஒன்றா? அற்பக் குரங்குதானே! அதனோடு போர் செய்ய நானே செல்கிறேன். முன்பு இந்திரனைப் பிடித்துக் கொண்டு வருமாறு, நான் அருகே நிற்கவும், நீங்கள் என் தமையனார் இந்திரசித்தை அனுப்பினீர்கள். அப்போது எனக்கு ஏற்பட்ட மனக்குறை தீர, இந்தக் குரங்கோடு போர் செய்வதற்காக வாவது என்னை அனுப்புங்கள்'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். இராவணனும் மனம் மகிழ்ந்து மைந்தனை அனுப்பி வைத்தான்.

அக்க குமாரன் லட்சம் வீரர்களுடனும், எண்ணில் அடங்காத தேர்கள், யானைகள், குதிரைகளுடனும் போர் செய்யப் போனபோது சில துர்க்குறிகள் தோன்றின: அதாவது தேரில் பூட்டிய குதிரைகள் சோர்ந்து விழுந்தன. அரக்கர்களின் இடது கண் துடித்தது. மேகத்திலிருந்து ரத்தத் துளிகள் விழுந்தன. காகங்கள் கரைந்தன.

அக்க குமாரனைக் கண்ட அனுமான், 'இவன் இந்திரசித்தோ? அல்லது இராவணனோ? இருவருள் எவனாக இருந்தாலும் சரி, நான் பாக்கியசாலிதான். இவனைக் கொல்ல நானும், இவனுடைய உயிரைக் கொண்டு செல்ல எமனும் சித்தமாக நிற்கிறோம். பத்துத் தலைகள் இல்லாததால் இவன் இராவணன் அல்லன்; இந்திரனை வென்ற இந்திரசித்தும் அல்லன்; சிவ குமாரனான முருகனும் அல்லன்;...அழகனாக இருக்கும் இந்த இளைஞன் யாரோ?' என்று எண்ணித் தோரண வாசலின் மேல் நின்று கொண்டிருந்தான்.

அனுமானைப் பார்த்த அக்க குமாரனோ, ''அரக்கர் கூட்டத்தை இந்தக் குரங்கா கொன்றது!'' என்று இகழ்ச்சியாகச் சொன்னான். அதைக் கேட்ட அவனுடைய தேர்ச் சாரதி, ''இப்படி இகழ்ந்து பேசாதீர்கள். முன்பு நம் மன்னர் இரா

வணரை அலேக்கழித்ததும் வாலி என்ற ஒரு குரங்குதான். இதை மறந்து விடதீர்கள்'' என்ருன்.

அதைக் கேட்ட அக்க குமாரன், ''நான் இந்தக் குரங்கை மட்டுமல்ல, மூவுலகமும் சென்று குரங்கு என்ற இனத்தையே கருவறுப்பேன்'' என்ருன்.

அரக்கர் சேனே அனுமானேச் சுற்றி வளேத்துக்கொண்டு ஆயுதங்களே மழையாகப் பொழிந்தது. அனுமான் அவர்களிடயே குதித்து அனேவரையும் அழித்தான். கடைசியில் அக்க குமாரன் அனுமானேடு போர் செய்யத் தேரில் சென்ருன். அவன் எய்த அம்புகளே அனுமான் இரும்புத் தூணுல் அடித்துப் பொடியாய் உதிர்த்தான். அவனுடைய இரும்புத் தூணும் பொடியாகும்படி அக்க குமாரன் அம்புகளே விட்டான். உடனே அனுமான் அவனுடைய தேரில் ஏறி, சாரதியைக் கொன்று தேரையும் நொறுக்கினுன். அக்க குமாரனின் வில்லேப் பிடித்து ஒரு கையால் இழுத்தான். அவனே இரு கையாலும் தன் வில்லேப் பிடித்து இழுத்தான். இப்படி இருவரும் இழுக்கவே வில் ஒடிந்துவிட்டது. பிறகு வாளாலே போரிட்டான் அக்கன். அதையும் அனுமான் ஒடித்தெறிந்துவிடவே அரக்கன் மல்போர் செய்யத் துணிந்தான். அவனே அனுமான் தன் வாலினுல் கட்டி, அவன் பற்களே உடைத்து, அறைந்து கீழே தள்ளிக் குழவிக் கல்லே அம்மியில் போட்டு அரைப்பதுபோல் அவன் உடம்பைப் பூமியின்மீது தேய்த்துக் கொன்ருன். மிஞ்சியிருந்த அரக்கர்கள் பயந்துபோய் ஆயுதங்களேக் கீழே போட்டுவிட்டு ஓடினுர்கள். சிலர் மீன் வடிவும், சிலர் பசு வடிவும், சிலர் பறவையின் வடிவும், சிலர் பிராமண வடிவும், சிலர் பெண் வடிவும் கொண்டு தப்பி ஓடி உயிர் பிழைத்தார்கள். வேறு சிலர் அனுமானிடம் சரணடைந்தார்கள்.

அரக்கர்கள் மாண்டதால் அரக்கியர் வந்து அழுது புலம்பினுர்கள்.

அக்க குமாரன் இறந்தான் என்ற செய்தி அறிந்து அவன் தாய் மண்டோதரி வந்து இராவணனின் காலடியில் விழுந்து வயிற்றில் அடித்துக் கொண்டு அழுதாள். மற்ற அரக்கியரும் வந்து அழுதனர், பருவத் தேவர்களும், அரக்கர்கள் மாண்டதற்காக மனம் களித்தாலும், ஒப்புக்கு மற்றவர்களுடன் சேர்ந்து அழுதார்கள்.

12. பாசப் படலம்

அக்க குமாரன் இறந்தான் என்பதைக் கேள்விப்பட்ட அவன் தமையன் இந்திரசித்து பெருங்கோபம் கொண்டு இரு நூறு பேய்கள் பூட்டிய தேரில் ஏறி, திசைகளும் அண்டமும் பிளக்கும்படியாக வீர வசனங்களைக் கர்ஜித்தான். இதைக் கேட்டு இந்திரன் நடுங்கினான். 'இன்று போர் முற்றிவிட்டது' என்று மும்மூர்த்திகளான பிரமன், திருமால், சிவன் ஆகியவர்களும் கவலைகொண்டு முறையே படைத்தல், காத்தல், அழித்தல் என்ற தங்கள் தொழில்களை நிறுத்தினார்கள்.

தம்பியை நினைக்கும் போதெல்லாம் இந்திரசித்து தாரை தாரையாகக் கண்ணீர் விட்டான். தன் வில்லைப் பார்த்து கோபச் சிரிப்புச் சிரித்தான். 'குரங்கினால் என் தம்பியா அழிந்தான்? என் தந்தையின் புகழ் அல்லவா அழிந்தது?' என்று குமுறினான். அப்போது எண்ணில் அடங்காத அரக்கர்கள் ஆயுதங்களோடு திரண்டு வந்தார்கள். ஒவ்வொன்றும் பன்னீராயிரம் கொண்ட யானைப் படையும், தேர்ப் படையும், குதிரைப் படையும் வந்து சேர்ந்தன இந்திரசித்து வேகமாக இராவணனின் அரண்மனைக்கு வந்து கண்ணீர் சிந்திய வண்ணம் தந்தையின் காலில் விழுந்தான். இராவணனும் அவனை எடுத்துத் தழுவினான்; அழுதான். அப்போது இந்திரசித்து தந்தையை நோக்கிக் கூறினான்:

''அந்தக் குரங்கின் வலிமை தெரிந்திருந்தும் ஆற்றல் குறைந்த அரக்கர்களைப் போருக்கு அனுப்பி அவர்களை நீங்களே கொன்று விட்டீர்கள். கிங்கரர்களும், சம்புமாலியும், பஞ்ச சேனாபதிகளும், அவர்களுடன் சென்ற வீரர்களும் அடியோடு அழிந்தார்கள் என்றால் அந்தக் குரங்கைச் சிவன், பிரமன், திருமால் என்ற மும்மூர்த்திகளின் அவதாரம் என்றே சொல்ல வேண்டும். அதைப் போய் இனி வெல்லலாம் என்பது வெறும் பிதற்றலே ஒழிய, புத்திசாலித்தனமான பேச்சல்ல. ஆனாலும் நானே போய் அந்தக் குரங்கைப் பிடித்து வருகிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம்.''

இந்திரசித்து இவ்வாறு கூறிவிட்டுப் பெரும் படையோடு போருக்குச் சென்றான். அனுமானின் ஆற்றலை மெச்சினான். 'ஒரு குரங்கே ஒப்பற்ற அரக்கர்களைக் கொன்றுவிட்டது என்றால் அந்த இராமன் வந்து எதிர்க்கும்போது நாம் எந்தப் படை கொண்டு வெல்வது?' என்று எண்ணிக் கலங்கினான். தன்னுடைய கண் போன்ற எண்ணற்ற உயிர்த் தோழர்கள் கீழே இறந்து கிடப்பதைப் பார்த்துக் கோபமும் ரோஷத்தினால் மனவேதனையும் அடைந்தான்.

'காட்டில் என் அத்தை சூர்ப்பனகை மூக்கிழந்தாள்; கரன் மாண்டான். என் தம்பியும் இறந்து போனுன். இத்தனையும் இரண்டு மனிதர்களாலும் ஒரு குரங்கினுலும் நடத்திருக்கின்றன என்ருல் என் வீரம் அழகாகத்தான் இருக்கிறது!' என்று ஆத்திரத்தோடு சொல்லிக் கொண்டு, பிணக் குவியல்களைத் தாண்டிச் சென்று, வெறும் ரத்த வெள்ளத்தில் தசைக் குவியலாகக் கிடந்த தன் தம்பி அக்க குமாரனின் பிணத்தைப் பார்த்து, ''உன் தந்தையின் கோபத்துக்கு அஞ்சி எமனும்கூட உன் உயிரைக் கொண்டு போக மாட்டானே! நீ எந்த உலகத்தை அடைந்தாய்?'' என்று சொல்லி அழுதான். சிறிது நேரத்தில் அவனுடைய கடுங்கோபம் துக்கத்தைத் தணித்துமாட்டது. அங்கிருந்து இந்திரசித்து தேரில் வருவதை அனுமான் பார்த்தான்.

'இதற்குமுன் சில வீரர்களை நான் வென்ற காரியம் இவனை இங்கே அழைத்துக்கொண்டு வந்துவிட்டது. இவன் தான் இந்திரசித்து. இவனேடு போர் செய்துதான் வெற்றியோ தோல்வியோ அடைய வேண்டும். அதுவும் இன்றே நடந்துவிடும். இவன் என்னிடம் தோற்ருல், அது தான் இராவணனுக்கும் தோல்வியாகும். 'நாம் தொலைந்தோம்' இன்று இராவணனும் சீதையை விட்டுவிடுவான்; அரக்கர்களின் கொடுமையும் ஒழியும் அது மட்டுமா? இந்திரசித்தை நான் கொன்ருல் இந்திரனின் துயரும் தீரும். அந்த இராவணனையும் வென்றவன் ஆவேன்.'

அனுமான் இப்படியெல்லாம் நினைத்துக்கொண்டிருந்த போது இந்திரசித்தின் படைகள் அவனேடு போரிட்டன. அனுமானும் மராமரம் ஒன்றைப் பிடுங்கி எடுத்துக்கொண்டு வந்து தாக்கினுன். அவ்வளவில் யானைகளும், தேர்களும், குதிரைகளும் அழிந்தன; அரக்கர்களும் மாண்டார்கள். கடைசியில் இந்திரசித்து தனியே நின்று கோபத்துடன் புன்னகை புரிந்தான். 'வாரும் வாரும்' என்று அழைத்தான் அனுமான். இந்திரசித்து அம்புகளை விடவே, அவனுடைய வில்லைத் தன் தோள்களால் தாக்கி நாணை அறுத்தான் அனுமான்.

''நீதான் பலசாலி. யாரோடும் போர் செய்யும் ஆற்றல் படைத்தவன். ஆனுலும் உன் ஆயுளுக்கு இன்றுதான் எல்லை'' என்று வீர வார்த்தைகள் பேசினுன் இராவண குமாரன்.

அனுமானே, ''உங்கள் ஆயுளுக்கு எல்லையும், நீங்கள் உலகத்துக்குச் செய்யும் கொடுமைக்கு எல்லையும், உங்க

ளுடைய வாளுக்கு எல்லேயும் வந்துவிட்டன. அதற்கு வேண்டிய வலிமையோடுதான் நான் வந்திருக்கிறேன். ஆனுல் என் தோள் வலிமைக்கு மட்டும் ஓர் எல்லே கிடையாது'' என்று முழங்கிஞன்.

'இவனுடைய நம்பிக்கையை அழிக்கிறேன்' என்று சொல்லி இந்திரசித்து ஆற்றல் மிக்க அம்புகளே வில்லில் தொடுத்து எய்தான். அனுமான் பெரிய உருவம் எடுத்தான். அதைக் கண்டு அரக்கன் மயக்கம் உற்ருன்; வியந்தான். அனுமான் பகைவனின் அம்புகளேப் பிடித்துப் பகைவன் மீதே வீசி அவனுடைய தேரையும், தேரில் கட்டிய பேய்களேயும், தேர்ப்பாகனேயும் ஒரேமொத்தமாக அடித்துநாசமாக்கிஞன். இந்திரசித்து வேருெரு தேரில்ஏறிக்கொண்டுபோர்செய்தான். அவனுடைய வில்லே அனுமான் ஒடித்தெறியவே, இந்திரனுடைய வில்லால் போரிட்டான். அனுமானே ஒருமரத்தைப் பிடுங்கிஅவன்தலேமீதுஅடித்தான். தலேயிலிருந்துரத்தம்கொட்டவே, அரக்கன் உணர்விழந்து தடுமாறிஞன். அனுமானே அவனேத் தேரோடு எடுத்து மேலே எறிந்தான். அங்கிருந்து கீழே விழுந்த இந்திரசித்து, வேறு தேர் இல்லாததாலும் எதிர்த்து நிற்கும் பலம் இல்லாததாலும், வேறு வழியின்றி பிரம்மாஸ்திரத்தை எடுத்து மனசுக்குள்ளேயே அதற்குப் பூவும் நைவேத்தியமும் படைத்து அருச்சனே செய்து, தன் வில்லில் தொடுத்து அனுமானின் தோளே நோக்கி எய்தான். ஆதிசேஷனேப்போல் பாம்பு வடிவம்கொண்ட அந்தஅஸ்திரம் அனுமானின் தோள்களேயும் உடம்பையும் கட்டியது. அனுமானே துணே என்று நம்பி அவன் பின் சென்ற தருமதேவதை விட்ட கண்ணீரோடும், அவன் நின்று கொண்டிருந்த பொன் தோரண வாசலோடும், ஊழி இறுதியில் இராகு வென்ற கரு நாகத்துடன் விழும் பூரண சந்திரனேப் போல் அனுமான் சாய்ந்தான். 'இது பிரம்மாஸ்திரம். இதன் ஆணேயை அவமதிப்பது சரியல்ல' என்று எண்ணிக் கண்களே மூடி எதுவும் செய்யாமல் இருந்தான். அவன் வலிமை ஓய்ந்தது என்று நினேத்த இந்திரசித்து அருகில் வந்தான். பயத்தால் ஒதுங்கி நின்ற அரக்கர்கள் ஓடிவந்து அந்த நாகபாசத்தோடு அனுமானே இழுத்துச் சென்ருர்கள். அரக்கர்களின் மனேவி மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். முன்பு இந்திரன் கட்டுண்ட நாளில் இலங்கையில் காணப்பட்ட அளவிறந்த கோலாகலம் இன்றும் காணப்பட்டது.

13. பிணி வீட்டு படலம்

கட்டுண்டு வரும் அனுமானைப் பார்த்த அரக்கர்கள் ''இந்தக் குரங்கை வெட்டுங்கள்; குடலைப் பிடுங்குங்கள்; உடம்பைக் கூறு கூறுகத் துண்டம் போடுங்கள்; தரையில் போட்டுத் தேயுங்கள். இவன் தப்பிப் பிழைத்தால் அப்புறம் நாம் உயிரோடு வாழ முடியாது'' என்று சொல்லிக் கொண்டே ஓடி வந்தார்கள். அவனைக் கொலை செய்யவும் சிலர் முயன்றார்கள். ''ஆயுதங்களால் இவனைக் கொல்ல முடியுமா? இவனைக் கடலில் மூழ்கடியுங்கள்; இல்லையேல் தீயில் தூக்கிப் போடுங்கள்'' என்று சில அரக்கர்கள் சொன்னார்கள். அவனைப் பார்த்துப் பயந்த பலர் ஓட்டம் எடுத்தார்கள். ''இவன் பிரம்மாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டுச் சோர்ந்து விட்டவன்போல் வருகிறானே ஒழிய, உண்மையில் இவன் நோக்கம் வேறு'' என்று சொல்லிச் சில அரக்கர்கள் அனுமானைப் பார்த்து, ''எங்களைக் கோபிக்க வேண்டாம்'' என்று தொழுது வேண்டினார்கள்.

ஐம்பதினாயிரம் அரக்கர்கள் நாகபாசத்தைப் பிடித்து அனுமானை இழுத்துக்கொண்டு வந்ததை மாடமாளிகைகளிலிருந்து இலங்கை வாசிகள் பார்த்து, ''இவன் சிவபெருமானின் அவதாரமே'' என்று சொல்லிக்கொண்டார்கள்.

'இலங்கை வேந்தனான இராவணனை இப்படியே போய்ப் பார்ப்பதுதான் நல்லது' என்று எண்ணி அனுமான் போய்க் கொண்டிருந்தான். 'இராமரின் அருளால் இந்தப் பிரம்மாஸ்திரத்தை என்னால் அறுத்தெறிய முடியும். ஆனால் இப்போது கட்டுண்ட நிலையிலேயே இராவணனைப் போய்ப் பார்த்து அவனுக்கு நீதிகளை எடுத்துச் சொன்னால் அவன் சீதையை விட்டாலும் விட்டு விடலாம். மேலும் அவனுடைய துணைவர்கள் பலத்தையும் கூட்டத்தையும் நாம் தெரிந்துகொள்ளலாம்; அவர்கள் நோக்கத்தையும் அறியலாம். ஆகவே அவனுக்கு நீதி புகட்டுவோம். அவன் கேட்காவிட்டால் மீதியுள்ள அரக்கர்களைப் பாதிக்குமேல் அழித்துவிட்டுத் திரும்புவோம்' என்று நினைத்தான் அனுமான்.

அனுமானை இராவணனின் மாளிகைக்குக் கொண்டு சென்றதும், தூதர்கள் முன்னே சென்று ''பிரம்மாஸ்திரத்தால் குரங்கு கட்டுண்டது'' என்று தெரிவித்தார்கள். அதைக் கேட்ட இராவணன் மகிழ்ச்சி பொங்க நெஞ்சை நிமிர்த்தி, ''சீக்கிரம் போய் அவனைக் கொல்லாமல் கொண்டு வரச் சொல்லுங்கள்'' என்று கட்டளையிட்டான். தூதர்களும் அவ்வாறே வந்து இந்திரசித்திடம் தெரிவித்தார்கள்.

இதற்கிடையில்அனுமான் கட்டுண்ட செய்தியைச் சீதை அறிந்து வருந்தினள்: ''அரக்கனிடம் பிடிபட்டாயே! நீ கடல் கடந்து வந்து எனக்கு மேற்கொண்டும் துன்பத்தைத் தந்துவிட்டாய். உன்னல் என் துன்பம் நீங்கும் என்று இருந்தேன். அந்த நம்பிக்கையையும் போக்கிவிட்டாய்'' என்றெல்லாம் சொல்லி அழுதாள் சீதை.

அப்பொழுது இராவணனின் கொலுமண்டபத்துக்கு அனுமானைக் கொண்டு சென்றனர்கள். அங்கே அந்த அரக்கன் எல்லையற்ற ஆடம்பரங்களுடன் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருந்தான். அப்பொழுதே அவனைக் கொல்ல நினைத்த அனுமான் அது சரியல்ல என்று தன் கருத்தை மாற்றிக்கொண்டான். 'இவனை இராமனுல்தான் வெல்ல முடியும். என்னையும் இவனுல் வெல்ல முடியாது; இவனையும் என்னுல் வெல்ல முடியாது. இவனோடு போர் செய்தால் காலம் நீளும். சீதையோ ஒரு மாதம்தான் இன்னும் உயிரோடு இருப்பதாகக் கூறியிருக்கிருள். அதனுல் நெடுங்காலம் போர் செய்து பொழுதைக் கழித்தால் அவள் உயிரை விட்டு விடுவாள். எனவே இவனோடு போர் செய்யாமல் தூதனுகவே நடந்து கொள்ள வேண்டும்' என்று எண்ணியவாறு அனுமான் இராவணன் எதிரே சென்றுன்.

''இவன்தான் சிவபெருமானைப் போலவும் திருமாலைப் போலவும் வீரம் கொண்ட வானரன்'' என்று இராவணனிடம் கூறினன் இந்திரசித்து.

அனுமானைக் கோபக் கண்களோடு பார்த்த இராவணன், ''நீ இங்கே எதற்காக வந்தாய்? நீ யார்? திருமாலா? இந்திரனு? சிவனு? பிரமனு? அல்லது ஆதிசேஷனு?......'' என்றெல்லாம் கேட்க, அனுமான், ''நீ சொன்ன யாருமே அல்லன். அந்த அற்ப பலம் கொண்டவர்களுக்கு நான் அடிமை செய்யவில்லை. மும்மூர்த்திகளும் ஒன்றுகிய அவதாரமான இராமன் என்ற வில் வீரனின் தூதன் நான். அவருடைய தேவி சீதையைத் தேடித் தென்திசைக்குப் படையோடு வந்த வாலி மைந்தன் அங்கதனுடைய தூதனும் ஆவேன்'' என்று சொல்லவே. இராவணன் சிரித்து, ''வாலி மகன் விடுத்த தூதனே! வாலி சௌக்கியமாக உடல் வலிமை தளராமல் இருக்கிருனு?'' என்று கேட்டான்.

உடனே அனுமானும் சிரித்து, ''அரக்கனே! பயப்படாதே! வாலி எப்பொழுதோ செத்துப் போய் விட்டான். அவன் (உன்னை முன்பு கட்டி அலைக்கழித்த) வாலும் செத்து விட்டது. இராமரின் ஒரே அம்பினல் வாலி இறந்தான்'' என்றுன்.

இராவணன்: "எதற்காக வாலியைக் கொன்ருன்? அந்த இராமன் என்பவன் இப்போது எங்கே இருக்கிருன்? அவனுடைய மனைவியை அங்கதன் தேடும் காரணம் என்ன?"

அனுமான்: "சீதையைத் தேடிவந்த இராமருடன் எங்கள் வேந்தன் சுக்கிரீவன் உயிர்த் தோழமை கொண்டான். அதனுல் இராமர் வாலியைக்கொன்று கிஷ்கிந்தை ஆட்சியை சுக்கிரீவனுக்கு வழங்கினுர். அங்கே நான்கு மாதங்கள் இராமர் தங்கியிருந்தபின் சீதையைத் தேட எங்களை அனுப்பி வைத்தார்."

இராவணன்: "உங்கள் குலத் தலைவனைக் கொலைசெய்த ஒருவனுக்குப் பணி செய்கிறீர்களே! உங்கள் பெருமை என்ன ஆகும்? உங்கள் பெருமை இன்னும் அழியவில்லை என்ருல் உலகமே பேடியாகி விட்டது என்றுதான் சொல்லவேண்டும். சுக்கிரீவன் என்ன சொல்லி அனுப்பினுன்? தூதுவந்த நீ எதற்காகப் போர் செய்தாய்? பயப்படாமல் சொல். உன்னை நான் கொல்ல மாட்டேன்."

அரக்கனின் வார்த்தைகளைக் கேட்ட அனுமான் அவனுக்கு நீதிகளைப் போதிக்கத் தொடங்கினுன். "காமத்தின் தீமையையும், பிறர் மனைவியைக் காமுறுவதால் நேரும் கேட்டையும், இப்படியெல்லாம் செய்து உன் தவத்தால் அடைந்த பாக்கியங்களை ஏன் இழக்கிருய் என்றும் சுக்கிரீவன் உன்னிடம் கூறச் சொன்னுன்" என்று அனுமான் தெரிவிக்கவும், இராவணன், "ஒரு குரங்கா எனக்குப் புத்தி சொல்லி அனுப்பியது!" என்று சொல்லிச் சிரித்தான்.

"குரங்கின் வார்த்தைகளும், மனிதர்களின் வீரமும் ஒரு பக்கம் இருக்கட்டும். தூதுவந்த நீ அரக்கர்களை ஏன் கொன்ருய்?" என்று அரக்கன் கேட்டாள்.

"உன்னிடம் என்னை அழைத்து வருவார் யாரும் இல்லை அதனுல் ஓர் உபாயம் செய்ய வேண்டுமென்று சோலையை அழித்தேன் அரக்கர்களோ என்னைக் கொல்ல வந்தார்கள். அதனுல் நான் அவர்களைக் கொன்றேன். அதன் பிறகு உன்னைக் காண்பதற்காக அடக்கத்தோடு வந்தேன்."

இராவணனுக்குக் கோபம் தீயாக மூண்டுவிட்டது. அனுமானைக் கொன்றுவிடும்படி கட்டளையிட்டான். ஆனுல் விபீஷணன் தடுத்து, தூதர்களைக் கொல்வது மகாபாதகம் என்று அறிவுறுத்தியதுடன், "இவனைக் கொன்ருல், இவன் நேரில் கண்ட நம் வலிமையையெல்லாம் இராமனிடம் போய்த் தெரிவிக்கவிடாமல் நாமே தடுத்துவிட்டவர்கள் ஆவோம்"

என்று சொல்லவே, ''அது நல்ல யோசனைதான்'' என்று இராவணன் ஏற்றுக் கொண்டான். ''அனுமானின் வாலை முழுக்கச் சுட்டெரித்து அவனை ஊர் எல்லை வரையில் கொண்டு போய் விட்டுவிட்டு வாருங்கள்'' என்று கட்டளை யிட்டான் இலங்கை வேந்தன்.

பிரம்மாஸ்திரத்துடன் இருக்கும்போது அவனை தீயால் சுடுவது கூடாது என்று எண்ணிய இந்திரசித்து, ''இவனைக் கயிறுகளால் கட்டுங்கள்'' என்று சொல்லிவிட்டு, நாக பாசத்தை அவிழ்த்தான். அரக்கியரின் தாலிக் கயிற்றைத் தவிர ஊரில் உள்ள மற்ற எல்லாக் கயிறுகளையும் கொண்டு வந்து அனுமானைக் கட்டினார்கள். 'பிரம்ம பாசத்தை மீறி நடக்கக் கூடாது என்று இருந்தேன். இவர்களே அதை அவிழ்த்துவிட்டது நல்லதாகப் போய்விட்டது. என் வாலை இவர்கள் சுடுவது, 'இந்த ஊரைச்சுடு' என்று எனக்குச் சொன்னதுபோல் ஆயிற்று' என்று எண்ணி அனுமான் உவகை அடைந்தான்.

அனுமானை ஒரு வெட்டவெளிக்குக் கொண்டு வந்து அவன் வாலில் துணிகளைச் சுற்றி எண்ணெய் ஊற்றி நெருப்பு வைத்தார்கள் அரக்கர்கள். அப்படியே அவனை இழுத்துக் கொண்டு போய் ஊர் முழுவதும் சுற்றி எல்லோருக்கும் காட்டினார்கள். அனுமானின் வாலில் தீக்கொளுத்திய செய்தி யைக் கேள்விப்பட்ட சீதை அழுது துடித்தாள். அக்கினி பகவானைத்தொழுது, ''நான் கற்புடையவள் என்றால் அனு மானைச் சுடாதே'' என்று வேண்டினாள். அவ்வளவில் அனுமா னுக்கு நெருப்புக் குளிர்ந்தது. அது மட்டுமல்ல, வடவாமுகாக் கினியும், வேள்வித் தீ, சிவனுடைய நெற்றிக் கண்ணின் தீ, பிரமனின் உள்ளங்கையில் இருக்கும் தீ முதலானவையும் குளிர்ந்தன; நரகமுமே குளிர்ந்துவிட்டது.

சீதையினுடைய கற்பின் மகிமையால்தான் தீ தன்னைச் சுடவில்லை என்று உணர்ந்து மகிழ்ந்த அனுமான் தன்னைக் கட்டிய கயிறுகளைப் பிடித்துக் கொண்டிருந்த லட்சம் அரக்கர் களோடு ஆகாயத்தில் பாய்ந்தான். அரக்கர்கள்வானிலிருந்து கீழே விழுந்து செத்தார்கள். அப்புறம் அனுமான் தன் வாலை இலங்கை நகர்மீது நீட்டி எல்லா இடங்களையும் கொளுத்தினான்.

14. இலங்கை எரியூட்டு படலம்

அனுமான் வாலால் கொளுத்திய தீ இலங்கை நகரின் ஒவ்வொரு வீட்டையும் எரித்தது. அரக்கர்கள் அலறியடித் துக் கொண்டு ஓடினார்கள். புகை மண்டவே திசை தெரியா

மல் புலம்பினர்கள் அரக்கிகள். யானைகளும் பறவைகளும் வெந்தன. தீப்பொறிகள் சிதறி விழவே கடல் மீன்களும் வெந்தன. பொன்னால் கட்டிய மாளிகைகள் உருகித் திரண் டன. நெருப்புக்குப் பயந்து ஓடியவர்கள் தண்ணீர் என்று நினைத்துக் கானல் நீரில் போய் விழுந்தார்கள். சோலைகள் யாவும் எரிந்து கரிந்தன. ஆடையில் தீப்பற்றவே அரக்கரும் அரக்கியரும் கடலில் போய் விழுந்தார்கள். ஆயுத சாலைகள் எரிந்து ஆயுதங்களெல்லாம் உருகி உருண்டையாகத் திரண் டன. பறவைகளும் கடலில் விழுந்து இறந்தன.

இராவணனுடைய மாளிகையில் தீப்பற்றி ஏழு மாடி அடுக்குகளும் எரிந்தன. தீயிலிருந்து தப்புவதற்காக, அவனும் அவனைச் சேர்ந்த பெண்களும் புட்பகவிமானத்தில்ஏறி மேலே சென்றார்கள். அவன் கோபத்தோடு அரக்கர்களைப் பார்த்து, ''ஊழிக்காலம் வந்து விட்டதா? என்ன காரணம்? நகரம் ஏன் தீப்பற்றி எரிகிறது?'' என்று கேட்டான்.

அரக்கர்கள் கைகூப்பி, ''குரங்குதான் தன் வாலில் இட்ட தீயால் ஊரைக் கொளுத்தியது'' என்று சொல்லவே இலங்கை வேந்தன் கொதித்து, ''இன்று இந்த அற்பக்குரங்கு இட்ட தீயினால் இலங்கை நகரம் எரிகிறது! தேவர்கள் நம் மைப் பார்த்துச் சிரிப்பார்கள். போர்வீரனான இராவணனு டைய வலிமை நன்றாக இருக்கிறது!'' என்று சொல்லிக் கோபத்தோடு சிரித்தான்.

ஊரை எரிக்கும் அக்கினி தேவனையும், குரங்கையும் பிடித்து வரும்படி இராவணன் கட்டளையிடவே, அரக்கர்கள் புறப்பட்டார்கள். ஏழுதலைமையான வீரர்களும் படையோடு சென்றார்கள். ''பிடியுங்கள் பிடியுங்கள்! அடியுங்கள் அடியுங் கள்!'' என்று கூச்சலிட்டுக் கொண்டே ஓடிவந்த அரக்கர்களை அனுமான் கண்டான். அவர்களைத் தன் வாலினால் வளைத்துக் கொண்டு ஒரு மரத்தினால் அடித்துக் கொன்றான். ஐம்பதினாயி ரம் அரக்கர்கள் மாண்டார்கள்; மற்றவர்கள் கடலில் போய் விழுந்தார்கள். அதைப் பார்த்த அனுமான் கடலிலே வாலைத் தோய்க்கவே, கடல் நீர் கொதித்து அங்கே விழுந்த அரக்கர் களை அவித்துக் கொன்றுவிட்டது. கடைசியில் தலைமையான ஏழு வீரர்களையும் அவன் கொன்றான். அப்போது ஆகாய மார்க்கத்தில் சென்ற வித்தியாதரர்கள், சீதை இருக்கின்ற சோலையைத் தீ சுடவில்லை என்று சொல்லக்கேட்டு அனுமான் மகிழ்ந்தான்; வியப்பும் அடைந்தான். நேரே சீதை யிடம் சென்று அவள் காலில் விழுந்து வணங்கினான். அவளும் அவனைக் கண்டு மேனி குளிர்ந்தாள். அனு மான், ''இனிப் பேச என்ன இருக்கிறது? வந்தனம்''

என்று சொல்லி விட்டுச் சென்றான். அவன் போனதும், அக்கினி தேவனும் அரக்கர்களுக்குப் பயந்து ஓடி ஒளிந்து விட்டான்.

15. திருவடி தொழுத படலம்

''இலங்கையை விட்டு விரைவில் செல்வேன்'' என்ற நினைப்புடன் அனுமான் அங்கே இருந்த ஒரு குன்றின் சிகரத்தை அடைந்து, உலகங்களையெல்லாம் விழுங்கித் தன் வயிற்றில் வைத்துக் காக்கும் திருமாலைப் போல் பேருருவம் எடுத்து, இராமனுடைய திருவடிகளை மனத்தால் தொழுது, ஆகாய மார்க்கத்தில் விரைந்து சென்றான். செல்லும்போது மைந்நாகம் என்ற மலைக்குப் போய், இலங்கையில் நடந்ததையெல்லாம் கூறிக் கணநேரத்தில், தன் வரவை எதிர்பார்த்துக் கொண்டு அங்கதன் முதலிய வீரர்கள் காத்துக்கொண்டிருக்கும் மகேந்திர மலையில் போய்க் குதித்தான்.

தாய்ப் பறவையைக் கண்ட குஞ்சுகளைப் போல் மகிழ்ச்சி அடைந்த வானர வீரர்கள் அனுமானைத் தொழுதார்கள்; சூழ்ந்து மொய்த்தார்கள்; கட்டித் தழுவினார்கள்; தூக்கிச் சுமந்தார்கள்; அவனுக்குத் தேனும் கிழங்குமாக உணவு படைத்தார்கள். அனுமான் முதலில் அங்கதனையும், பிறகு சாம்பவானையும் தொழுது, ''இங்கே இருக்கும் உங்களுக்கெல்லாம் சீதை ஆசி கூறினாள்'' என்று சொன்னான். அவன் இலங்கை சென்று திரும்பி வந்து சேர்ந்தவரையிலும் நிகழ்ந்தவற்றைச் சொல்லும்படி கேட்டுக்கொண்டார்கள். அவனும் இசைந்து, சீதை இராமனை எண்ணித் தவம் கிடப்பதையும், சூடாமணியை அடையாளமாகத் தன்னிடம் கொடுத்தனுப்பியதையும் மட்டும் சொன்னான். தன்னுடைய வெற்றியைச் சொல்ல நாணி, அரக்கர்களோடு போர் புரிந்ததையும், இலங்கையைக் கொளுத்தியதையும் பற்றி அனுமான் சொல்லவில்லை. ''நீ போர் புரிந்திருக்கிறாய் என்பதை உன் உடம்பில் உள்ள புண்களே சொல்கின்றன; நீ திரும்பி வந்து விட்டது, உன் வெற்றியைத் தெரிவிக்கிறது; நீ இலங்கையைக் கொளுத்தியிருக்கிறாய் என்பதைப் புகையே எடுத்துரைக்கிறது. சீதை இன்னும் மீண்டு வராததால் பகைவர்களின் ஆற்றல் புலனாகிறது. இதையெல்லாம் நாங்கள் தெளிவாக உணர்ந்துகொண்டோம். இனித் தெரிய வேண்டியது என்ன இருக்கிறது?'' என்று வானர வீரர்கள் கூறினார்கள்.

சீதையைக் கண்ட செய்தியை இராமனிடம் விரைவில் சென்று தெரிவித்து அவனுடைய துயரத்தைப் போக்க வேண்டும் என்று எண்ணிய வீரர்கள் அங்கிருந்து எழுந்து புறப்பட்டார்கள். ''வீணாகப் பல நாட்களைக் கழித்து விட்

டோம் என்று வருந்தும் எங்களால் விரைவில் செல்ல இயலாது. அதனால் நீயே முதலில் போய் இராமரின் துயரத்தைத் தீர்ப்பாயாக'' என்று அனுமானை வீரர்கள் கேட்டுக் கொள்ள, அவனும் அவ்வாறே முந்திச் செல்லலானான்.

ஒருமலையில் சுக்கிரீவன் தேற்றிக்கொண்டிருக்க, இராமன் சீதையை எண்ணியும், தேடிச் சென்றவர்களின் கதி என்னவாயிற்று என்று தெரியாமலும், அனுமானை நினைத்துக் கொண்டும் துயர்க்கடலில் ஆழ்ந்து கொண்டிருந்தான். அப்போது அனுமான் தென் திசையில் சூரியன் உதித்ததுபோல் தோற்றம் அளித்தான். இராமனும் அவனைப் பார்த்தான். உடனே அனுமான் எதிரில் வந்து நின்று, இராமனின் பாதங்களைத் தொழாமல் சீதை இருக்கும் தென் திசையை நோக்கித் தலைமேல்கரம்குவித்தான். பிறகுகீழே விழுந்து கும்பிட்டான்.

அவனுடைய செயலைப் பார்த்த இராமன், 'சீதை நலமாக இருக்கிறாள். அவளை இவன் பார்த்தும் இருக்கிறான். அவள் சுற்பும் சிறப்போடு இருக்கிறது' என்பதையெல்லாம் ஊகித்து அறிந்து கொண்டான். அவ்வளவில் இராமனின் தோள்கள் மகிழ்ச்சியால் பூரித்தன; கண்களில் நீர் பொங்கியது; துயரம் நீங்கியது.

''கண்டேன்; கற்பினுக்கு ஆபரணத்தை என் கண்களால் கண்டேன்—இலங்கை நகரில். தேவர்களுக்குத் தலைவரே! சீதையைக் காண முடியுமா என்ற சந்தேகத்தையும் தங்கள் துயரத்தையும் இனி விட்டு விடுங்கள்'' என்றான் அனுமான். சீதையின் பெருமையை அவன் மேலும் எடுத்துரைத்தான்:

''தங்கள் தேவி என்ற உரிமைக்கும், தங்களைப் பெற்ற தசரத மன்னரின் மருமகள் என்ற உண்மைக்கும், மிதிலை மன்னர் சனகருடைய புதல்வி என்ற தகைமைக்கும் ஏற்ற தலையாய பெருமை பெற்றிருக்கிறாள்; அவள் என்பெருந்தெய்வம். இன்னமும் கேட்பீர்களாக: பொன்னுக்குப் பொன்னைத்தவிர வேறு ஒப்பானது கிடையாது. அதைப் போல் தம்மைத் தவிர தமக்கு ஒப்பாக யாரும் இல்லாதவரான பிராட்டியார், தங்களுக்குத் தங்களைத் தவிர ஒப்பானவர்கள் கிடையாது என்ற கீர்த்தியையும், எனக்கு என்னைத் தவிர ஒப்பானவர்கள் இல்லை என்ற பெருமையையும் கொடுத்திருக்கிறார்கள். தங்கள் பெயரால் தங்கள் குலமும், தமது பெயரால் தம் குலமும் பெருமை பெறச் செய்த பிராட்டி, தம்மைக் கொண்டுவந்து சிறை வைத்த இராவணனின் அரக்க குலத்தை அழித்து, வானவர் குலத்தை வாழ்வித்து, என் பெயரால் என் குலம் விளங்கச் செய்தார். வீரரே! இலங்கையின் திரிகூட மலையில் நான் சீதா பிராட்டியாரைப் பார்க்கவில்லை.

நல்ல குடிப்பிறப்பு என்பதும், பொறுமை என்பதும், கற்பு என்பதும் களிநடம் புரிவதையே பார்த்தேன். தங்களைப் பற்றிய நினைவு பிராட்டியோடு இரண்டறக் கலந்திருக்கிறது. இலங்கையின் அருகேயுள்ள சோலையில் தங்கள் தம்பி இலக்குவர் அமைத்த பர்ணசாலையிலேயே பிராட்டியார் இருந்தார்கள். பிரமனுடைய சாபத்துக்குப் பயந்த இராவணன் அவரைத் தொடாமல், அவருடைய சம்மதத்தை வேண்டிக் கெஞ்சினான். பிராட்டியார் சீற்றம் கொண்டு பேசவே அவன் திரும்பிப் போனான். பிராட்டியார் துயரம் பொறுக்காமல் ஒரு கொடியினால் கழுத்தில் சுருக்கிட்டு மாய்ந்துவிட எண்ணிய போது, நான் போய்த் தங்கள் பெயரைச் சொல்லி வணங்கினேன். தாங்கள் சொல்லியனுப்பிய அடையாளங்களைக் கூறித் தங்கள் கணையாழியையும் கொடுத்தேன். அதை வாங்கி ஆயிரம் கலசங்களின் அளவுக்குத் தம் கண்ணீரால் அபிஷேகம் செய்து எதுவும் பேசாமல் பெருமூச்சு விட்டார். 'தாங்கள் இருந்த இடம் தெரியாததால்தான் இராமர் இவ்வளவு காலமும் இங்கு வராமல் தங்களைப் பிரிந்து வருந்திய வண்ணமாக இருக்கிறார்' என்று சொன்னேன். இன்னும் ஒரு மாதத்துக்குள் தாங்கள் சென்று அவரை மீட்கத் தவறினால் உயிரை விட்டுவிடப் போவதாகப் பிராட்டி கூறினார். தமது சூடாமணியையும் எடுத்து அடையாளமாக என்னிடம் கொடுத்தார். இதைப்பாருங்கள்'' என்று சொல்லி இராமனிடம் சூடாமணியைக் கொடுத்தான் அனுமான்.

அதைவாங்கியதும் இராமனுக்குத் துயரம் நீங்கி, களிப்பு மிகுந்தது. மயிர்க் கூச்செறிந்து கண்ணீர் பெருக்கினான். அவனுடைய உடம்பில் வியர்வை துளித்தது; மேனிபூரித்தது.

அப்போது சுக்கிரீவன், ''இப்போது நாம் போய்க் காணத்தக்க நிலையில் பிராட்டியார் இருக்கிறார்கள். இன்னும் இங்கே காலம் தாழ்த்துவது சரியல்ல'' என்று கூறவே, இராமனும் பொருக்கென எழுந்து, ''இலங்கையை நோக்கிப் படைகள் எழட்டும்'' என்றான். உடனே வானரப் பெரும் படை திரண்டது. எல்லோரும் தென்திசை நோக்கிச் சென்றார்கள். இலங்கையின் காவலையும், விரிவையும், அரண்களையும், அரக்கரின் பெருங்கூட்டம் போன்ற விவரங்களையும் அனுமான் சொல்லி வர, அதைக் கேட்டுக்கொண்டே வழிப் பயணத்தின் களைப்புத் தோன்றாமல் வீரர்கள் நடந்துசென்றார்கள். இராமனும், சுக்கிரீவனும், மற்றும் வானர வீரர்களும், போகும் வழியில் சோலைகள் நிறைந்த மலைகளில் தங்கிய வண்ணம், பன்னிரண்டு நாட்களில் தென் கடலைக் கண்டார்கள்.

—○—

கம்ப ராமாயணம்

சுந்தர காண்டம்

1. கடல் தாவு படலம்

[இலங்கைக்குச் செல்ல அனுமான் கடலைத் தாவியதைப் பற்றிக் கூறும் பகுதி]

கடவுள் வணக்கம்

அலங்கலில் தோன்றும் பொய்ம்மை அரவெனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபாடு உற்ற வீக்கம்
கலங்குவது எவரைக் கண்டால் அவர்என்பர் கைவில் ஏந்தி
இலங்கையில் பொருதார் அன்றே மறைகளுக்கு இறுதி யாவார். 1

நூல்

ஆண்தகை ஆண்டுஅவ் வானோர் துறக்கநாடு அருகில் கண்டான்
ஈண்டிது தான்கொல் வேலை இலங்கைஎன்று ஐயம் எய்தா
வேண்டரு விண்ணு டென்று மெய்ம்மைகண்டு உள்ளம் மீட்டான்
காண்தகு தோகை உம்பர் இல்எனக் கருத்துள் கொண்டான். 2

கண்டனன் இலங்கை மூதூர் கடிபொழில் கனக நாஞ்சில்
மண்டல மதிலும் கொற்ற வாயிலும் மணியின் செய்த
வெண்தளத் தரள மாட வீதியும் பிறவும் எல்லாம்
அண்டமும் திசைகள் எட்டும் நடுங்கத்தோள் கொட்டி ஆர்த்தான். 3

வன்தந்த வரிகொள் நாகம் வயங்கழல் உமிழும் வாய
பொன்தந்த முழைகள் தோறும் புறத்துராய்ப் புரண்டு போவ
நின்றந்தம் இல்லான் ஊன்ற நெரிந்துகீழ் அழுந்தி நீலக்
குன்றம்தன் வயிறு கீறிப் பிதுங்கின குடர்கள் மான. 4

1-ம் பாட்டு: (இதன் பொருள்): பூமாலையானது சில சமயங்களில் பாம்பு மாதிரி காணப்படும் பொய்த் தோற்றம்போல, (நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற) ஐந்து பூதங்களும் ஒன்றோடு ஒன்று கலந்து, விகாரப்பாடுகளைக் கொண்டு, இனத்துக்கு இனம் வேறுபாட்டையும் கொண்டு தோன்றியுள்ள பிறப்பு என்பது, யாரைப் பார்த்த மாத்திரத்தில் ஒழிந்து விடுகிறதோ, அவர்தான் இலங்கையில் அரக்கரை எதிர்த்துப் போரிட்டவர், வேதங்களுக்கு எல்லையாக நிற்பவர் என்றெல்லாம் கூறுவார்கள். விகாரப்பாடுகள் அல்லது மாறுபாடுகள் அறுவகைப்படும். அவையாவன: இருத்தல், பிறத்தல், பருத்தல், வளருதல், தேய்தல், அழிதல். வீக்கம்–பருத்த உடம்பு: இங்கு பிறப்பைக் குறிக்கின்றது. வேறுபாடு-தேவர், மனிதர், மிருக பக்ஷிகள், செடி கொடிகள் என்று நான்கு வகை.

2: ஆண்தகை - அனுமான். தோகை - சீதை.

4: நீலக்குன்றம் - மகேந்திரமலை.

புகலரு முழையுள் துஞ்சும் பொங்குளைச் சீயம் பொன்றி
உகலருங் குருதி கக்கி உள்ளுற நெரிந்த ஊழின்
அகல்இரும் பரவை நாண அரற்றுறு குரல ஆகிப்
பகலொளி கரப்ப வானை மறைத்தன பறவை யெல்லாம். 5

மொய்யுறு செவிகள் தாழ்ந்து முதுகுற முறைகால் தள்ள
மையுறு விசும்பி னூடு நிமிர்ந்தவான் மதியம் அஞ்ச
மெய்யுறத் தழீஇய மெல்லென் பிடியொடும் வெருவ லோடும்
கையுற மரங்கள் சுற்றிப் பிளிறின களிநல் யானை. 6

பொன்பிறழ் சிமயக் கோடு பொடியுறப் பொறியும் சிந்த
மின்பிறழ் குடுமிக் குன்றம் வெரிந்உற விரியும் வேலை
புன்புற மயிரும் பூவாக் கட்புலம் புறத்து நாறு
வன்பறழ் வாயின் கவ்வி வல்லியம் இரிந்த மாதோ. 7

தேக்குறு சிகரக் குன்றம் திரிந்துமெய்ந் நெரிந்து சிந்தத்
தூக்குறு தோலர் வாளர் துரிதத்தின் எழுந்த தோற்றம்
தாக்குறு செருவில் நேரார் தாள்அற வீசத் தாவி
மேக்குற விசைத்தார் என்னப் பொலிந்தனர் விஞ்சை வேந்தர். 8

தாரகை சுடர்கள் மேகம் என்றிவை தவிரத் தாழ்ந்து
பாரிடை அழுந்து கின்ற படர்நெடும் பனிமாக் குன்றம்
கூருகிர்க் குவவுத் தோளான் கூம்பெனக் குமிழி பொங்க
ஆர்கலி அழுவத்து ஆழும் கலம்எனல் ஆயிற் றன்றே. 9

தாதுகு நறுமென் சாந்தம் குங்குமம் குலிகம் தண்ணென்
போதுகு பொலன்தாது என்றித் தொடக்கத்த யாவும் பூசி
மீதுறு சுனைநீ ராடி அருவிபோல் எகினம் வீழ்வ
ஓதிய குன்றம் கீறிக் குருதிநீர் சொரிவ தொத்த. 10

கடலுறு மத்திது என்னக் கார்வரை திரியும் காலை
மிடலுறு புலன்கள் வென்ற மெய்த்தவர் விசும்பின் உற்றார்
திடலுறு கிரியில் தாம்தம் செய்வினை முற்றி முற்றாது
உடலுறு பாசம் வீசாது உம்பர்செல் வாரும் ஒத்தார். 11

வெயிலியல் குன்றம் கீறி வெடித்தலும் நடுக்கம் எய்தி
மயிலியல் தேவி மார்கள் தழீஇக்கொளப் பொலிந்த வானோர்
அயில்எயிற் றரக்கன் அள்ளத் திரிந்தநாள் அணங்கு புல்லக்
கயிலையில் இருந்த தேவைத் தனித்தனி கடுத்தல் செய்தார். 12

7: புன்புற மயிரும் பூவாக் கட்புலம் புறத்து நாறு வன் பறழ்–உடம்பில் மெல்லிய மயிர்கூட முளைக்காதவையும், இன்னும் கண் திறக்காதவையுமான குட்டிகளை.

12: அயில் எயிற்றரக்கன்–இராவணன். அள்ள–கயிலைமலையைத் தூக்க. அணங்கு–பார்வதி. தேவை - சிவனை.

ஊறிய நறவை உண்ட குற்றம்தம் உணர்வை உண்ணச்
சீறிய மனத்தர் தெய்வ மடந்தையர் ஊடல் தீர்வுற்று
ஆறினர் அஞ்சு கின்றார் அன்பரைத் தழுவி உம்பர்
ஏறினர் இட்டு நீத்த பைங்கிளிக்கு இரங்கு கின்றார். 13

இத்திறம் நிகழும் வேலை இமையவர் முனிவர் மற்றை
முத்திறத் துலகத் தாரும் முறைமுறை விரைவில் மொய்த்தார்
தொத்துறு மலரும் சாந்தும் சுண்ணமும் மணியும் தூவி
வித்தக சென்றீ என்றார் வீரனும் விரைவ தானான். 14

குறுமுனி குடித்த வேலை குப்புறும் கொள்கைத் தாதல்
வெறுவிது விசயம் வைகும் விலங்கல்தோள் அலங்கல் வீர
சிறுவிதென்று இகழற் பாலை யல்லைநீ சேறி என்னா
உறுவலித் துணைவர் சொன்னார் ஒருப்பட்டான் பொருப்பை ஒப்பான்.

இலங்கையின் அளவிற் றன்றால் இவ்வுரு எடுத்த தோற்றம்
விலங்கவும் உளதென் றென்று விண்ணவர் வியந்து நோக்க
அலங்கல்தாழ் மார்பன் முன்தாழ்ந்து அடித்துணை அழுத்த லோடும்
பொலங்கெழு மலையும் தாளும் பூதலம் புக்க மாதோ. 16

வால்விசைத்து எடுத்து வன்தாள் மடக்கிமார் பொடுக்கி மானத்
தோள்விசைத் துணைகள் பொங்கக் கழுத்தினைச் சுருக்கித் தூண்டும்
கால்விசைத் தடக்கை நீட்டிக் கட்புலம் கதுவா வண்ணம்
மேல்விசைத் தெழுந்தான் உச்சி விரிஞ்சன்நாடு உரிஞ்ச வீரன். 17

ஆயவன் எழுத லோடும் அரும்பணை மரங்கள் தாமும்
வேய்உயர் குன்றும் வென்றி வேழமும் பிறவும் எல்லாம்
நாயகன் பணிஇ தென்னா நளிர்கடல் இலங்கை தாமும்
பாய்வன என்ன வானம் படர்ந்தன எழுவ மான. 18

இசையுடை அண்ணல் சென்ற வேகத்தால் எழுந்த குன்றும்
பசையுடை மரனும் மாவும் பல்லுயிர்க் குலமும் வல்லே
திசையுறச் சென்று சென்று செறிகடல் இலங்கை சேரும்
விசைஇல வாகத் தாழ்ந்து வீழ்ந்தன என்ன வீழ்ந்த. 19

மாவொடு மரனும் கல்லும் வல்லியும் யாவும் மற்றும்
போவது புரிந்த வீரன் விசையினால் புணரி பொங்கத்
தூவின கீழும் மேலும் தூர்த்தன சுருதி யன்ன
சேவகன் சீறா முன்னம் சேதுவும் தெரிந்த மாதோ. 20

கிண்டது வேலை நன்னீர் கீழுறக் கிடந்த நாகர்
வேண்டிய உலக மெங்கும் வெளிப்பட மணிகள் மின்ன
ஆண்தகை அதனை நோக்கி அரவினுக்கு அரசர் வாழ்வும்
காண்தகு தவத்தன் ஆனேன் யான்எனக் கருத்துள் கொண்டான். 21

---

13 : இட்டு நீத்த - மகேந்திரமலையில் விட்டு வந்த.

20 : சேவகன்......தெரிந்த - இராமன் கோபித்து இலங்கைக்குப் புறப்படுவதற்கு முன்னமேயே, சேது கட்டப்பட்டது போலத் தோன்றியது.

வெய்தின்வான் சிறையி னால்நீர் வேலையைக் கிழிய வீசி
நொய்தின்ஆ ரமுதம் கொண்ட நோன்மையே நுவலும் நாகர்
உய்தும்நாம் என்ப தென்னே உறுவலிக் கலுழன் ஊழின்
எய்தினா னும்என் றஞ்சி மறுக்கம்உற்று இரியல் போனார். 22

துள்ளுறு மகர மீன்கள் துடிப்புறச் சுறவு தூங்க
ஒள்ளிய பனைமீன் துஞ்சுந் திவலைய ஊழிக் காலின்
வள்ளுகிர் வீரன் செல்லும் விசைபொரு மறுகி வாரி
தள்ளிய திரைகள் முந்துற்று இலங்கைமேல் தவழ்ந்த மாதோ. 23

கடலைத் தாண்டும்போது அனுமானின் தோற்றம்

இடுக்குறு பொருள்கள் என்னும் எண்திசை சுமந்த யானை
நடுக்குற விசையின் செல்லும் நாயகன் தூதன் ஆகம்
ஒடுக்குறும் கால வன்காற்று இடியொடும் ஒடித்த அந்நாள்
முடுக்குறக் கடலில் செல்லும் முத்தலைக் கிரியும் ஒத்தான். 24

கொட்புறு புரவித் தெய்வக் கூர்நுதிக் குலிசத் தாற்கும்
கட்புலம் கதுவ லாகா வேகத்தால் கடலும் மண்ணும்
உட்படக் கூடி அண்டம் உறஉள செலவின் ஒற்றைப்
புட்பக விமானந் தான்அவ் இலங்கைமேல் போவ தொத்தான். 25

விண்ணவர் ஏத்த வேத முனிவரர் வியந்து வாழ்த்த
மண்ணவர் இறைஞ்சச் செல்லும் மாருதி மறம்உள் கூர
அண்ணல்வாள் அரக்கன் தன்னை அமுக்குவாம் இன்னம் என்னாக்
கண்ணுதல் ஒழியச் செல்லும் கயிலையங் கிரியும் ஒத்தான். 26

மாணியாம் வேடம் தாங்கி மலர்அயற்கு அறிவு மாண்டுளோர்
ஆணியாய் உலகுக் கெல்லாம் அறம்பொருள் நிரப்பும் அண்ணல்
சேணுயர் நெடுநாள் தீர்ந்த திரிதலைச் சிறுவன் தன்னைக்
காணிய விரைவில் செல்லும் கனகமால் வரையும் ஒத்தான். 27

மழைகிழித்து உதிர மீன்கள் மறிகடல் பாய வானம்
குழைவுறத் திசைகள் கீற மேருவும் குலுங்கக் கோட்டின்
முழையுடைக் கிரிகள் முற்ற முடுக்குவான் முடிவுக் காலத்து
அழிவுறக் கடுக்கும் வேகத் தாதையும் அனையன் ஆனான். 28

---

22 : சிறையினால்-(கருடன் தனது) சிறகினால். ஆரமுதம் கொண்ட......கலுழன்-அரிய தேவாமிர்தத்தைக் கொண்டு வந்த கருடன். அதன் வரலாற்றை நான் பதிப்பித்த கிஷ்கிந்தா காண்டம் 777 ம் பாட்டின் அடிக்குறிப்பில் காண்க.

24 : முத்தலைக்கிரி-(மேருமலையின் மூன்று சிகரங்கள்) திரிகூடமலை.

25 : கொட்புறு புரவி - இந்திரனுக்குரிய உச்சைச்சிரவம் என்ற வெள்ளைக் குதிரை. குலிசத்தாற்கும்-(ஆயிரம் கண்கள் படைத்த) இந்திரனுக்கும். கூடி-வழிகூடி.

27 : திரிதலைச் சிறுவன்-(மேருமலையினின்றும் பிரிந்து சென்ற) திரிகூடமலை. கனக மால் வரை மேருமலை.

28 : தாதை வாயு பகவான்.

தடக்கைநா லைந்தும் பத்துத் தலைகளும் உடையான் தானே
அடக்கிஐம் புலன்கள் வென்ற தவப்பயன் அறுத லோடும்
கெடக்குறி யாக மாகம் கிழக்கெழு வழக்கு நீங்கி
வடக்கெழுந் திலங்கை செல்லும் பரிதிவா னவனும் ஒத்தான். 29

புறத்துறல் அஞ்சி வேறோர் அரணம்புக்கு உறைதல் போக்கி
மறத்தொழில் அரக்கர் வாழும் மாநகர் மனுவின் வந்த
திறத்தகை இராமன் என்னும் சேவகற் பற்றிச் செல்லும்
அறத்தகை அரசன் தன்போர் ஆழியும் அனையன் ஆனான். 30

கேழ்உலாம் முழுநி லாவின் கிளர்ஒளி இருளைக் கீறப்
பாழிமா மேரு நாண விசும்புறப் படர்ந்த தோளான்
ஆழிசூழ் உலகம் எல்லாம் அருங்கனல் முருங்க உண்ணும்
ஊழிநாள் வடபால் தோன்றும் உவாமுழு மதியும் ஒத்தான். 31

அடல்எலாம் திகிரி மாயற்கு அமைந்தனன் ஆற்றல் காட்டக்
குடல்எலாம் அவுணர் சிந்தக் குன்றெனக் குறித்து நின்ற
திடல்எலாம் தொடர்ந்து செல்லச் சேண்விசும் பொதுங்கத் தெய்வக்
கடல்எலாம் கலங்கத் தாவும் கலுழனும் அனையன் ஆனான். 32

நாலினோடு உலகம் மூன்றும் நடுக்குற அடுக்கி நாகர்
மேலின்மேல் நின்ற காறும் சென்றகூ லத்தின் விண்டு
காலினால் அளந்த வான முகட்டையும் கடக்கக் கால
வாலினால் அளந்தான் என்று வானவர் மருளச் சென்றான். 33

விளித்துப்பின் வேலை தாவும் வீரன்வால் வேதம் மெய்க்கும்
அளித்துப்பின் அனுமன் என்னும் அறம்துணை பெற்ற தாயும்
களித்துப்புன் தொழில்மேல் நின்ற அரக்கர்கண் ணுறுவ ராம்என்று
ஒளித்துப்பின் செல்லும் கால பாசத்தை ஒத்த தன்றே. 34

மேருவை முழுதும் சூழ்ந்து மீதுற்ற வேக நாகம்
கார்நிறத் தண்ணல் ஏவக் கலுழன்மீது உற்ற காலை
சோர்வுறு மனத்த தாகிச் சுற்றிய சுற்று நீங்கிப்
பேர்வுறு கின்ற வாறும் ஒத்ததுஅப் பிறங்கு பேர்வால். 35

குன்றொடு குணிக்கும் கொற்றக் குவவுத்தோள் குரக்குச் சீயம்
சென்றுறு வேகத் திண்கால் எறிதரத் தேவர் வைகும்
மின்தொடர் வானத் தான விமானங்கள் விசையில் தம்மின்
ஒன்றொடொன்று உடையத் தாக்கி மாக்கடல் உற்ற மாதோ. 36

30: சேவகற் பற்றி - இராமனிடம் அடைக்கலம் தேடி. அறத்தகை அரசன் - தரும தேவன். ஆழியும் - சக்கரமும்.

33: அடுக்கி நாகர் மேலின் மேல் நின்ற காறும் - தேவர்கள் வாழ்பவையும், ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பட்டவையுமான (ஆறு) உலகங்களின் எல்லைவரையும்.

34: வேதம் மெய்க்கும் அளித் துப்பின் - வேதங்கள் உண்மை என்று நிருபிக்கும் இராமனது கருணை என்ற பலத்தைப் பெற்றுள்ள. பெற்றதாயும் - அடைந்திருந்தும்.

35: நாகம் - ஆதிசேஷன்.

36: குரக்குச்சீயம் - குரங்குச் சிங்கமான அநுமான்.

வலங்கையின் வயிர ஏதி வைத்தவன் வைகும் நாடும்
கலங்குவது ஏகு வான்தன் கருத்தென்கொல் என்னும் கற்பால்
விலங்கையில் எயிற்று வீரன் முடுக்கிய வேகம் வெய்யோர்
இலங்கையின் அளவன் றென்னா இம்பர்நாடு இரிந்தது இப்பால். 37

ஓசனை உலப்பி லாத உடம்பமைந் துடைய என்னத்
தேசமும் நூலும் சொல்லும் திமிங்கில கிலங்க ளோடும்
ஆசையை உற்ற வேலை கலங்கஅன்று அண்ணல் யாக்கை
வீசிய காலின் வீந்து மிதந்தன மீன்கள் எல்லாம். 38

பொருவரும் உருவத் தன்னான் போகின்ற பொழுது வேகம்
தருவன தடக்கை தள்ளா நிமிர்ச்சிய தம்முள் ஒப்ப
ஒருவரும் குணத்து வள்ளல் ஒருயிர்த் தம்பி என்னும்
இருவரும் முன்னர்ச் சென்றா லொத்தஅவ் இரண்டு பாலும். 39

மைந்நாகம் என்ற மலை கடலிலிருந்து வெளியே வருதல்

வேறு

இந்நாகம் அன்னான் எறிகால்என ஏகும் வேலை
திந்நாக மாவில் செறிகீழ்த்திசை காவல் செய்யும்
கைந்நாகம் அந்நாள் கடல்வந்ததொர் காட்சி தோன்ற
மைந்நாகம் என்னும் மலைவானுற வந்த தன்றே. 40

மீயோங்கு செம்பொன் முடிஆயிரம் மின்இ மைப்ப
ஓயா அருவித் திரள்உத்தரி யத்தை ஒப்ப
தீயோர் உளரா கியகால்அவர் தீமை தீர்ப்பான்
மாயோன் மகரக் கடல்நின்றெழு மாண்ப தாகி. 41

நூல்ஏந்தி கேள்வி நுகராப்புலன் நோக்க லுற்றார்
போல்ஏந்தி நின்ற தனியாள்மெய் பொருது நீங்கக்
கால்ஆழ்ந் தழுந்திக் கடல்புக்குழீஇக் கச்சம் ஆகி
மால்ஏந்த ஓங்கும் நெடுமந்தரம் தன்னை மன்ன. 42

தள்ளற்கு அருநற் சிறைமாடு தழைப்பொடு ஓங்க
எள்ளற்கு அருநன் னிறம்எல்லை இலாது பொங்க
வள்ளற் கடலைக் கெடநீக்கி மருந்து வவ்வி
உள்ளாற் றெழும்ஓர் உவணத்தர சேயும் ஒப்ப. 43

---

37 : வயிர ஏதி வைத்தவன்—வச்சிராயுதம் வைத்திருக்கும் இந்திரன்.

40 : இந்நாகம் அன்னான் - மலைபோன்றவனான இந்த அனுமான். திந்நாக மாவில்... ......வந்ததன்றே - திசையானைகளில் ஒன்றும், கிழக்குத் திசையைக் காவல் புரிவதுமான ஐராவதம் என்ற யானை, அக்காலத்தில் பாற்கடல் கடைந்தபோது கடலிலிருந்து வெளி வந்ததுபோல், மைந்நாகம் என்ற மலை கடலிலிருந்து எழும்பி வானை அளாவும்படியாக வெளிவந்தது.

42 : தனியாள்—ஒப்பற்ற பூமாதேவி.

ஆன்றுழ் நெடுநீ ரிடைஆதியொடு அந்த மாகித்
தோன்றுது நின்றுன் அருள்தோன்றிட முந்து தோன்றும்
மூன்றும் உலகத் திடைமுற்றுயி ராய முற்றும்
ஈன்றுனை ஈன்ற சுவணத்தனி அண்டம் என்ன. 44

இந்நீரின் என்னைத் தரும்எந்தையை எய்தி யன்றிச்
செந்நீர்மை செய்யேன் எனச்சிந்தனை செய்து நொய்தின்
அந்நீரில் வந்து முதல்அந்தணன் ஆதி நாளில்
முந்நீரின் மூழ்கித் தவமுற்றி முளைத்த வாபோல். 45

பூவால் இடையூறு புகுந்து பொருத நெஞ்சின்
கோவாம் முனிசீறிட வாரி குளித்த எல்லாம்
மூவா முதல்நாயகன் மீள முயன்ற அந்நாள்
தேவாசுரர் வேலையில் வந்தெழு திங்கள் என்ன. 46

நிறம்குங் குமம்ஒப்பன நீல்நிறம் வாய்ந்த நீரின்
இறங்கும் பவளக்கொடி சுற்றின செம்பொன் ஏய்ந்த
பிறங்கும் சிகரப்படர் முன்றில் தொறும் பிணவோடு
உறங்கும் மகரங்கள் உயிர்ப்பொ டுணர்ந்து உலாவ. 47

கூன்சூல் முதிர் இப்பி குரைக்க நிரைத்த பாசி
வான்சூழ் மழைஒப்ப வயங்கு பளிங்கு முன்றில்
தான்சூலின் நாளில்தகை முத்தம் உயிர்த்த சங்கம்
மீன்சூழ் வரும்அம்முழு வெண்மதி வீறு கீற. 48

பல்லாயிரம் ஆயிரம் காசினம் பாடுஇ மைக்கும்
கல்லார் சிமயத் தடங்கைத்தலம் நீண்டு காட்டத்
தொல்ஆர் கலியுள்புக மூழ்கி வயங்கு தோற்றத்து
எல்லாமணி ஈட்டம் முகந்துஎழு கின்ற தென்ன. 49

மனையில்பொலி மாக நெடுங்கொடி மாலை ஏய்ப்ப
வினையின்பொலி வெள்அரு வித்திரள் தூங்கி வீழ
நினைவின்கடல் ஊடெழ லோடும் உணர்ந்து நீங்காச்
சுனையில் பனைமீன் திமிலோடு தொடர்ந்து துள்ள. 50

---

44 : நின்றுன் - திருமால். ஈன்றுனை - பிரமனை. சுவணத்தனி அண்டம் - திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றியதும், பிரமனின் பிறப்பிடமாக விளங்கியதுமான பொன் மயமான அண்டம்.

45 : முதல் அந்தணன்–பிரமன்.

46 : பூவால்–துர்வாசர் கொடுத்த பூமாலையை இந்திரன் அவமதித்ததால். கோவாம் முனி–கோபமுனியான துர்வாசன். வாரி குளித்த எல்லாம்–கடலில் மூழ்கிய இந்திரனுடைய செல்வங்கள் யாவும். முதல் நாயகன்–திருமால். வேலையில்–பாற்கடலில்.

கொடுநாலொடு இரண்டு குலப்பகை குற்றம் மூன்றும்
சுடுஞானம் வெளிப்பட உய்த்த துயக்கி லார்போல்
விடநாகம் முழைத்தலை விம்மல் உழன்று நீங்க
நெடுநாள் பொறையுற்ற உயிர்ப்பு நிமிர்ந்து நிற்ப. 51

எழுந்தோங்கி விண்ணோடு மண்ணொக்க இலங்கும் ஆடி
உழுந்தோடு காலத்திடை உம்பரின் இம்பர் எங்கும்
கொழுந்தோடி நின்ற நெடும்குன்றை வியந்து நோக்கி
அழுங்காமனத் தண்ணல் இதன்கொல் எனா அயிர்த்தான். 52

நீர்மேல் படரா நெடுங்குன்று நிமிர்ந்து நிற்றல்
சீர்மேல் படராதெனச் சிந்தை உணர்ந்து செல்வான்
வேர்மேற்பட வன்தலை கிழ்ப்பட நூக்கி விண்ணோர்
ஊர்மேல்பட ரக்கடிது உம்பரின் மீது யர்ந்தான். 53

மைந்நாகமலை மனித வடிவம் கொண்டு அனுமானுடன் பேசுதல்

உந்தாமுன் உலைந்துயர் வேலை ஒளித்த குன்றும்
சிந்தாகுலம் உற்றது பின்னரும் தீர்வின் அன்பால்
வந்தோங்கி ஆண்டோர் சிறுமானிட வேட மாகி
எந்தாய் இதுகேள்என இன்ன இசைத்த தன்றே. 54

வேற்றுப் புலத்தோன் எனல்ஐய விலங்கல் எல்லாம்
மாற்றுச் சிறையென்று அரிவச்சிரம் மாண ஓச்ச
வீற்றுப்பட நூறிய வேலையின் வேலை உய்த்துக்
காற்றுக்கிறை வன்எனைக் காத்தனன் அன்பு காக்க. 55

அன்னான்அருங் காதலன் ஆதலின் அன்பு தூண்ட
என்னால்உனக்கு ஈண்டு செயற்குரித் தாய தன்மை
பொன்னார்சிக ரத்திடை ஆறினை போதி என்றே
உன்னாஉயர்ந் தேன்உயர் விற்கும் உயர்ந்த தோளாய். 56

கார்மேக வண்ணன்பணி பூண்டவன் காலின் மைந்தன்
தேர்வான் வருகின்றனன் சீதையைத் தேவர் உய்யப்
பேர்வான் அயல்சேறி இதின்பெறும் பேறுஇல் என்ன
நீர்வேலையும் இன்னது உரைத்தது நீதி நின்றோய். 57

51: நாலொடு இரண்டு குலப்பகை – ஆறு பகைகள். அவையாவன: காமம், கோபம், லோபித்தனம், செருக்கு, தகாத மகிழ்ச்சி, அகம்பாவம். குற்றம் மூன்றும்–கல்விச் செருக்கு, பணச் செருக்கு, சாதிச் செருக்கு. இம்மூன்றும் வேறு விதமாகவும் கூறப்படும்.

53: *சீர்மேல் படராது*-நன்மையைத் தராது.

55: எனல்—என்று கருதவேண்டாம். மாற்றுச் சிறை—சிறகுகளை அழி. அரி–இந்திரன்.

நற்ருயினும் நல்லன் நமக்கிவன் என்று நாடி
இற்றேஇறை எய்தி இசைந்தது கோடி என்னுப்
பொற்ருர்அகல் மார்பதம் இல்உழை வந்த போழ்தின்
உற்ருர்செயல் மற்றும்உண் டோஎன உற்று ரைத்தான். 58

உரைத்தான் உரையால் இவன்ஊறிலன் என்ப துன்னி
விரைத்தா மரைவாள் முகம்விட்டு விளங்கு வீரன்
சிரித்தான் அளவே சிரித்துஅத்திசை செல்ல நோக்க
வரைத்தாள் நெடும்பொற் குடுமித்தலை மாடு கண்டான். 59

வருந்தேன்அது என்துணை வானவன் வைத்த காதல்
அருந்தேன்இனி யாதும்என் ஆசை நிரப்பின் அல்லால்
பெருந்தேன்பிழி சாரல்நின் அன்பு பிணித்த போதே
இருந்தேன்நுகர்ந் தேன்இதன் மேல்இனி ஈவ தென்னே. 60

முன்பில்சிறந் தார்இடை உள்ளவர் காதல் முற்றப்
பின்பில்சிறந் தார்குணம் நன்றிது பெற்ற யாக்கைக்கு
என்பின்சிறந் தாயதொர் ஊற்றம்உண் டென்ன லாமே
அன்பின்சிறந் தாயதொர் பூசனை யார்கண் உண்டே. 61

ஈண்டேகடி தேகி இலங்கை விலங்கல் எய்தி
ஆண்டான்அடி மைத்தொழில் ஆற்றலின் ஆற்றல் உண்டேல்
மீண்டுயான்நுகர் வேன்உன் விருந்தென வேண்டி மெய்ம்மை
பூண்டான்அவன் கண்புலம் பிற்பட முந்து போனுன். 62

செவ்வான் கதிரும் குளிர்திங்களும் தேவர் வைகும்
வெவ்வேறு விமானமும் மீனெடு மேகம் மற்றும்
எவ்வாய்உல கத்தவும் ஈண்டி இருந்த தம்மின்
ஒவ்வாதன ஒத்திட ஊழிவெங் காலும் ஒத்தான். 63

நீர்மாக்கடல் மேல்நிமிர் கின்ற நிமிர்ச்சி நோக்காப்
பார்மேல்தவழ் சேவடி பாய்நட வாப்ப தத்தே
தேர்மேல்குதி கொண்டவன் இத்திறன் சிந்தை செய்தான்
ஆர்மேற்கொல்என்று எண்ணிஅருக்கனும் ஐயம் உற்ருன். 64

---

61 : முன்பில் சிறந்தார் - முதல்பெருமைபெற்ற வள்ளல்கள் (கேட்காமலே கொடுப்ப வர்கள்). இடை உள்ளவர் - நடுப்பெருமை பெற்ற வள்ளல்கள் (கேட்டபின் கொடுப்பவர் கள்). பின்பில் சிறந்தார்–கடைசிப் பெருமைக்குரிய வள்ளல்கள் (புகழ்ந்த பின் கொடுப் பவர்கள்).

''அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு,
என்போடு இயைந்த தொடர்பு" என்ற குறட்பாவின் கருத்தையும் நோக்குக.

63 : ஒவ்வாதன ஒத்திட - ஒன்ருேடு ஒன்று சேராதவையும் ஒன்று சேர.

64 : தேர்மேல் குதி கொண்டவன் - அனுமான். இவன் சிறு குழந்தையாக இருந்த போது, சூரியனைப் பழம் என்று கருதி, அதைப் பறித்துத் தின்பதற்குச் சூரியனுடைய தேர் மேல் பாய்ந்தான்.

வாள்ஒத்தொளிர் வால்எயிறு ஊழின் மருங்குஇ மைப்ப
நீள்ஒத்துயர் தோளின் விசும்பு நிறைந்த மெய்யன்
கோள்ஒத்தவன் மேனி விசும்பிரு கூறு செய்யும்
நாள்ஒத்தது மேல்ஒளி கீழ்இருள் உற்ற ஞாலம். 65

அரக்கி வடிவத்தில் சுரசை வருதல்

மூன்றுற்ற தலத்திடை முற்றிய துன்பம் வீப்பான்
ஏன்றுற்று வந்தான்வலி மெய்ம்மை உணர்த்து நீஎன்று
ஆன்றுற்ற வானோர் குறைநேர அரக்கி ஆகித்
தோன்றுற்று நின்றாள் சுரசைப்பெயர்ச் சிந்தை தூயாள். 66

பேழ்வாய்ஓர் அரக்கி உருக்கொடு பெட்பின் ஓங்கிக்
கோழ்வாய்அரி யின்குலத் தாய்கொடுங் கூற்றும் உட்க
வாழ்வாய்எனக்கு ஆமிட மாய்வரு வாய்கொல் என்ன
நீள்வான்விசும் பின்தனது உச்சிநெ ருங்கி நின்றாள். 67

தீயேஎன லாய பசிப்பிணி தீர்த்தல் செய்வான்
ஆயேவிரை வுற்றெனை அண்மினை வண்மை யாள
நீயேஇனி வந்தென் நிணங்கொள் பிணங்கெ யிற்றின்
வாயேபுகு வாய்வழி மற்றிலை வானின் என்றாள். 68

பெண்பால்ஒரு நீபசிப் பீழை ஒறுக்க நொந்தாய்
உண்பாய்என தாக்கையை யான்உத வற்கு நேர்வன்
விண்பாலவர் நாயகன் ஏவல் இழைத்து மீண்டால்
நண்பால்எனச் சொல்லிய நல்லறி வாளன் நக்கான். 69

காய்ந்தேழுல கங்களும் காணநின் யாக்கை தன்னை
ஆய்ந்தேபசி தீர்வென்நின் ஆணைஎன்று அன்னள் சொன்னாள்
ஓர்ந்தானும் இகழ்ந்துஒரு வேன்நினது ஊழில் பேழ்வாய்
சேர்ந்தேகுகின் றேன்எனை ஆம்எனில் தின்றி டென்றான். 70

அக்காலை அரக்கியும் அண்டம் அனந்த மாகப்
புக்கால் நிறையாத புழைப்பெரு வாய் திறந்து
விக்காது விழுங்கநின் றாள்அது நோக்கி வீரன்
திக்கார்அவள் வாய்சிறி தாம்வகை சேணின் நீண்டான். 71

65: (இதன் பொருள்) வாளைப்போலப் பிரகாசிக்கும் வெண்ணிறப் பற்கள் வரிசையாகப் பக்கமெல்லாம் விளங்க, நீண்டு, உயர்ந்த தோள்களோடு ஆகாயத்தை அடைக்கும் பெரிய சரீரம் கொண்டவனான அனுமான், கிரணகாலத்தில் சூரியனை மறைக்கும் கேது என்ற கிரகத்தைப் போன்றிருந்தான். அவன் உடம்பு சூரியனை மறைத்ததால், அது ஆகாயத்தில் பகல் இரவு என்ற இரண்டு கூறுகளையும் உண்டு பண்ணிய தினத்தைப் போன்றிருந்தது. அப்போது பூமியின் மேற்பகுதியில் ஒளியும், கீழ்ப் பகுதியில் இருளும் நிறைந்தன.

66: மூன்றுற்ற தலத்திடை—மூவுலகங்களிலும். வந்தான் வலிமெய்ம்மை—அனுமானின் உண்மையான பலத்தை.

70: ஆம்எனில்—முடியும் என்றால்.

நீண்டான் உடனே சுருங்கா நிமிர் வாள் வயிற்றின்
ஊண்தான் எனஉற் றொர்உயிர்ப்புஉயி ராத முன்னர்
மீண்டான் அதுகண் டனர்விண்ணுறை வோர்கள் எம்மை
ஆண்டான் வலன்என்று அலர்தூய்நெடிது ஆசி சொன்னர். 72

சுரசை உண்மை வடிவம் கொண்டு அனுமானை வாழ்த்துதல்

மின்மேல்படர் மெய்யின தானவள் வீக்கம் நீங்கித்
தன்மேனிய ளாய்அவள் தாயினும் அன்பு தாழ
என்மேல்முடி யாதன என்றினிது ஏந்தி நின்றாள்
பொன்மேனிய னும்இனிது ஆசி புனைந்து போனன். 73

கீதங்கள் இசைத்தனர் கின்னரர் கீதம் நின்ற
பேதங்கள் இசைத்தனர் பேதையர் ஆடல் பின்னர்ப்
பூதங்கள் தொடர்ந்து புகழ்ந்தன பூசு ரேசர்
வேதங்கள் இயம்பினர் தென்றல் விருந்து செய்ய. 74

அங்காரதாரை வருதல்

மந்தாரம் உந்து மகரந்தம் மணந்த வாடை
செந்தாமரை வாள்முகத் தில்செறி வேர்சி தைப்பத்
தந்தாம்உல கத்திடை விஞ்சையர் பாணி தள்ளும்
கந்தாரவீணைத்தொனி செஞ்செவிக் காது நுங்க. 75

வேறு

வெங்கார் நிறப்புணரி வேறேயும் ஒன்றைப்
பொங்கார் கலிப்புனல் தரப்பொலிவ தேபோல்
இங்கார் கடத்திளனை என்ன எழுந்தாள்
அங்கார தாரைபெரிது ஆலாலம் அன்னாள். 76

காதக் கடுங்குறி கணக்கிறுதி கண்ணாள்
பாதச் சிலம்பின்ஒலி வேலைஒலி பம்ப
வேதக் கொழுஞ்சுடரை நாடிநெறி மேல்நாள்
ஓதத்தின் மேவுமது கைடவரை ஒத்தாள். 77

துண்டப் பிறைத்துணை எனச்சுடர் எயிற்றாள்
கண்டத் திடைக்கறை யுடைக்கடவுள் கைம்மா
முண்டத் துரித்தஉரி யாள்முளரி வந்தான்
அண்டத்தி னுக்குஉறை அமைத்தனைய வாயாள். 78

---

77 : வேதக் கொழுஞ்சுடரை நாடி—திருமாலை எதிர்ப்பதற்காகத் தேடி. மது கைடவர்—மது, கைடவன் என்ற இரண்டு அரக்கர்கள் பிரமனிடம் வேதங்களைப் பறித்துக்கொண்டு கடலில் மறைந்துவிட, திருமால் சென்று அவ் வேதங்களை மீட்டு, அவ்வரக்கரர்களையும் கொன்ருன்.

78 : கடவுள் கைம்மா முண்டத்துரித்த உரி—செருக்கடைந்த தாருக வனத்து முனிவர்கள் தன்மீது ஏவிய யானையின் தோலைச் சிவன் உரித்து உடுத்துக்கொண்டான்.

நின்றாள் நெடுங்கடல் நிறைந்தநெடு நீர்தன்
வன்தாள் அலம்பமுடி வான்முகடு வவ்வ
அன்றுஆய் திறத்தவன் அறத்தைஅரு ளோடும்
தின்றுஆர் ஒருத்திஇவள் என்பது தெரிந்தான். 79

பேழ்வா யகத்தலது பேருலகம் ஊடும்
நீள்வா னகத்தினிடை எங்கும்நெறி காணுன்
வாழ்வான் அனுக்கன்அவள் தாழ்பில வயிற்றைப்
போழ்வான் நினைந்தினைய வாய்மொழி புகன்ருன். 80

சாயா வரம்தழுவி னுய்தழிய பின்னும்
ஓயா உயர்ந்தவிசை கண்டும்உணர் கில்லாய்
வாயால் அளந்துநெடு வான்வழி அடைத்தாய்
நீயாரை என்னைஇவண் நின்றநிலை என்ருன். 81

பெண்பால் எனக்கருது பெற்றிஒழி உற்ருல்
விண்பா லவர்க்கும்உயிர் வீடுறுதல் மெய்யே
கண்பால் அடுத்தஉயிர் காலன்வரு மேனும்
உண்பான் அருத்தியது ஒழிப்பரிய தென்ருள். 82

அங்காரதாரையின் வாயினுள் அனுமான் புகுந்து அவளுடைய உடம்பைக் கிழித்துக்கொண்டு வெளியே வருதல்

திறந்தாள் எயிற்றைஅவள் அண்ணல்இடை சென்ருன்
அறந்தான் அரற்றியது அயர்த்தமரர் எய்த்தார்
இறந்தான் எனக்கொடோர் இமைப்பதனின் முன்னம்
பிறந்தான் எனப்பெரிய கோளரி பெயர்ந்தான். 83

கள்வாய் அரக்கிகத றக்குடர் கணத்தில்
கொள்வார் தடக்கையின் விசும்பின்மிசை கொண்டான்
முள்வாய் பொருப்பின்முழை எய்திமிக நொய்தின்
உள்வாழ் அராக்கொடெழு திண்கலுழன் ஒத்தான். 84

சாகா வரத்தலைவ ரில்திலகம் அன்னுன்
ஏகா அரக்கிகுடர் கொண்டுடன் எழுந்தான்
மாகால் அசைப்பவடம் மண்ணிலுற வாலோடு
ஆகாயம் உற்றகத லிக்குவமை ஆனுன். 85

80: வாழ்வான் அனுக்கன்–இராமனுக்கு மிக நெருங்கியவனுன அனுமான்.

81: தழிய பின்னும்–என்னை இழுத்த பின்னும்.

85: சாகா வரத்தலைவரில்–சிரஞ்சீவிகளில்.

ஆர்த்தார்கள் வானவர்கள் தானவர் அழிந்து
வேர்த்தார் விரிஞ்சனும் வியந்துமலர் வெள்ளம்
தூர்த்தான் அகன்கயிலை யின்தொலைவி லோனும்
பார்த்தான் முனித்தலைவர் ஆசிகள் பகர்ந்தார். 86

மாண்டாள் அரக்கிஅவள் வாய்வயிறு காறும்
கீண்டான் இமைப்பினிடை மேருகிரி கீழா.
நீண்டான் வயக்கதி நினைப்பின்நெடி தென்னாப்
பூண்டான் அருக்கன்உயர் வானின்வழி போனான். 87

சொற்றார்கள் சொற்றதுணை பல்தொகைய தன்றோ
முற்றா முடிந்தநெடு வானினிடை முந்நீர்
இற்றாக எற்றெனினும் யான்இனி இலங்கை
உற்றால் விலங்கும்இடை யூறென உணர்ந்தான். 88

ஊறுகடி தூறுவன ஊறில்அறம் உன்னாத்
தேறல்இல் அரக்கர்புரி தீமையவை தீர
ஏறும்வகை யாண்டைய இராமன்என எல்லாம்
மாறும்அதில் மாறுபிறிது இல்என வலித்தான். 89

இலங்கையின் பவளமலையில் அநுமான் பாய்தல்

வேறு

தசும்புடைக் கனக நாஞ்சில் கடிமதில் தணித்து நோக்கான்
அசும்புடைப் பிரசத் தெய்வக் கற்பக நாட்டை அண்மி
விசும்பிடைச் செல்லும் வீரன் விலங்கல்மேல் இலங்கை மூதூர்ப்
பசுஞ்சுடர்ச் சோலைத்து ஆங்கோர் பவளமால் வரையில் பாய்ந்தான்.

மேக்குறச் செல்வோன் பாய விலங்கிநீர் இலங்கை வெற்பு
நூக்குறுத்து அங்கும் இங்கும் தள்ளுறத் துளங்கு நோன்மை
போக்கினுக் கிடையூறாகப் புயலொடு பொதிந்த வாடை
தாக்குறத் தகர்ந்து சாயும் கலம்எனத் தக்க தன்றே. 91

மண்ணடி யுற்று மீது வானுற வரம்பின் தன்மை
எண்ணடி உற்ற குன்றத் தலத்துநின்று எய்த நோக்கி
விண்ணிடை உலகம் என்னும் மெல்லியல் மேனி நோக்கக்
கண்ணடி வைத்த தன்ன இலங்கையைத் தெரியக் கண்டான். 92

88: சொற்றார்கள்......முந்நீர்–சொன்னவர்கள் சொன்ன அளவைவிடப் பல மடங்கு அதிகமாக அல்லவா இருக்கிறது, முடிவற்ற வானத்தைப் போன்ற கடல். இற்றாக எற்றெனினும்–(கடல்) இவ்வாறு இருக்க, இனி எவ்வாறு அபாயகரமாக இருந்தாலும்.

நன்னக ரதனை நோக்கி நளினக்கை மறித்து நாகர்
பொன்னகர் இதனை ஒக்கும் என்பது புல்லி தம்மா
அந்நகர் இதனின் நன்றே அண்டத்தை முழுதும் ஆள்வான்
இந்நகர் இருந்து வாழ்வான் இதுஅதற்கு ஏது என்றான். 93

மாண்டதோர் நலத்திற் றாம்என்று உணர்த்துதல் வாய்மைத் தன்றால்
வேண்டிய வேண்டின் எய்தி வெறுப்பின்றி விழைந்த துய்க்கும்
ஈண்டரும் போக இன்பம் ஈறிலது யாண்டுக் கண்டாம்
ஆண்டுஅது துறக்கம் அஃதே அருமறைத் துணிவும் அம்மா. 94

உட்புலம் எழுநூ றென்ப யோசனை உலகம் மூன்றில்
தெட்புறு பொருள்கள் எல்லாம் இதனுழைச் செறிந்த என்றால்
நுட்புலன் நுணங்கு கேள்வி நுழைவினர் எனினும் நோக்கும்
கட்புலன் வரம்பிற் றாமே காட்சியும் கரையிற் றாமே. 95

2. ஊர் தேடு படலம்

[இலங்கை நகரில் அனுமான் சீதையைத் தேடியது பற்றிக் கூறும் பகுதி]

பொன்கொண் டிழைத்துமணி யைக்கொடு பொதிந்த
மின்கொண் டமைத்துவெயி லைக்கொடு சமைத்த
என்கொண் டியற்றிய எனத்தெரிகி லாத
வன்கொண்டல் விட்டுமதி முட்டுவன மாடம். 96

நாகா லயங்களொடு நாகர்உல கும்தம்
பாகார் மருங்குதுயில் வென்னஉயர் பண்ப
ஆகாயம் அஞ்சஅகல் மேருவை அனுக்கும்
மாகால் வழங்குசிறு தென்றல்வர நின்ற. 97

மாகாரின் மின்கொடி மடக்கினர் அடுக்கி
மீகாரம் எங்கணும் நறுந்துகள் விளக்கி
ஆகாய கங்கையினை அங்கையினில் அள்ளிப்
பாகாய செஞ்சொலவர் வீசுபடு காரம். 98

93: அந்நகர்—தேவர்கள் வாழும் பொன்னகரமான அமராவதி பட்டணம். இதனின் நன்றே—இதைவிடச் சிறந்ததோ. ஆள்வான்—இராவணன். இது அதற்கு ஏது—அமராவதியைவிட இலங்கை சிறந்தது என்பதைக் காட்டுவதற்கு ஏற்ற காரணம்.

95: உட்புலம் எழுநூறென்ப இலங்காபுரியின் உள் பகுதி அளவு எழுநூறு யோசனை என்பார்கள். நுட்புலன்—நுண்ணறிவு. நுழைவினர் ஆராய்ச்சி உள்ளவர்கள். கட்புலன் வரம்பிற்றாமே—கண்பார்வைக்கு அடங்கக் கூடியதோ. கரையிற்றாமே—கரை உடையதாகுமோ.

97: பாகார் மருங்கு துயில்வு என்ன—ஒரு பகுதியாக உள்ள இடத்தில் தங்கத்தக்கது என்று சொல்லத்தருந்த. மாகால்—வாயுபகவான்.

98: மின்கொடி மடக்கினர் அடுக்கி—மினனல்கொடிகளைப் பிடித்து அடுக்கி விளக்கு மாறாக (துடைப்பமாக)ச் செய்து.

வேறு

பஞ்சி ஊட்டிய பாட்டிசைக் கிண்கிணிப் பதுமம்
செஞ்செ விச்செழும் பவளத்தின் கொழுஞ்சுடர் சிதறி
மஞ்சின் அஞ்சன நிறம்மறைத்து அரக்கியர் வடித்த
அம்சில் ஓதியோடு உவமைய அவர்க்குஉறும் உவமை. 99

நான நாள்மலர்க் கற்பக நறுவிரை நாறப்
பானம் வாயுற வெறுத்ததாள் ஆறுடைப் பறவை
தேன்அவா விரைச் செழுங்கழு நீர்த்துயில் செய்ய
வான யாறுதம் அரமியத் தலம்தொறும் மடுத்த. 100

குழலும் வீணையும் யாழும்என் றினையன குழைய
மழலை மென்மொழி கிளிக்கிருந்து அளிக்கின்ற மகளிர்
சுழலும் நன்னெடும் தடமணிச் சுவர்தொறும் துவன்று
நிழலும் தம்மையும் மெய்ம்மைநின் றறிவரும் நிலைய. 101

இனைய மாடங்கள் இந்திரற்கு அமைவர எடுத்து
வனையும் மாட்சிய என்னின்அச் சொல்லும்மா சுண்ணும்
அனைய தாம்எனின் அரக்கர்தம் திருவுக்கும் அளவை
நினைய லாம்அன்றி உவமையும் அன்னதாய் நிற்கும். 102

மணிகள் அத்துணை பெரியன மால்திரு மார்பின்
அணியும் காசினும் அகன்றன உளஎனில் அரிதால்
திணியும் நன்னகர்த் திருமனை தெய்வமாத் தச்சன்
துணிவின் வந்தன தொட்டழகு இழைத்தஅத் தொழில்கள். 103

இலங்கையின் சிறப்புக்களைக் கண்டு அனுமான் வியத்தல்

வாழும் மன்னுயிர் யாவையும் ஒருவழி வாழும்
ஊழி நாயகன் திருவயிறு ஒத்துளது இவ்வூர்
ஆழி அண்டத்தின் அருக்கன்தன் அலங்குதேர்ப் புரவி
ஏழும் அல்லன ஈண்டுள குதிரைகள் எல்லாம். 104

---

99 : ஓதியோடு - அரக்கிகளின் செம்பட்டை மயிரோடு. அவர்க்கு உறும் உவமை- அரக்கிகளின் உடல் நிறத்துக்கு உவமையாக விளங்கும் கருமேகங்கள்.

100 : தாள் ஆறுடைப் பறவை - ஆறு கால்களை உடைய வண்டு.

102 : உவமையும் அன்னதாய் நிற்கும் - இந்திரனுடைய செல்வம்தான் (அரக்கர்களின் அளவுகடந்த செல்வத்துக்கு) உவமை என்று (தவறாகக் கூறியதாக) ஆகிவிடும்.

103 : காசினும் - கௌஸ்துவம் என்ற அரிய பெரிய ரத்தினத்தைவிட.

104 : ஊழிநாயகன் திருவயிறு - உயிர்களையெல்லாம் தன்னுள் வைத்துப் பாதுகாக்கும் திருமாலின் வயிறு.

மரம் அடங்கலும் கற்பகம் மனையெலாம் கனகம்
அர மடந்தையர் சிலதியர் அரக்கியர்க்கு அமரர்
உரம் அடங்கிவந்து உழையராய் உழல்பவர் ஒருவர்
தரம் அடங்குவது அன்றிது தவம்செய்த தவமால். 105

போர்இ யைந்தன தோற்றஎன்று இகழ்தலின் புறம்போய்
நேர்இ யன்றவன் திசைதொறும் நின்றமா நிற்க
ஆரி யன்தனி ஐங்கரக் களிறும்ஓர் ஆழிச்
சூரி யன்தனித் தேருமே இந்நகர் தொகாத. 106

தேவர் என்பவர் யாரும்இத் திருநகர்க்கு இறைவற்கு
ஏவல் செய்கிலார் யாவரே எண்வகை உருவின்
மூவர் தம்மினும் அதிகன்என் றால்இவன் முயன்ற
தாவில் மாதவம் அல்லது பிறிதொன்று தருமோ. 107

தழங்கு பேரியின் ஆர்கலி தகைநெடுங் களிறு
முழங்கும் ஓதையின் மாரிநீர் முழக்கொடு முழங்கும்
கொழுங்கு ழற்புதுக் குதலையர் நூபுரக் குரலின்
வழங்கும் அப்பெருந் துழனிகள் வயின்தொறும் அறையும். 108

மரக தத்தினும் மற்றுள மணியினும் வனைந்த
குரக தத்தடந் தேரினம் அவைபயில் கொட்டில்
இரவி வெள்கநின்று இமைக்கின்ற இயற்கைய என்றால்
நரகம் ஒக்குமால் நன்னெடுஞ் சுவர்க்கம்இந் நகர்க்கு. 109

திருகு வெஞ்சினத்து அரக்கரும் கருநிறம் தீர்ந்தார்
அருகு போகின்ற திங்களும் மறுஅற்றது அழகைப்
பருகும் இந்நகர்த் துன்னொளி பரத்தலின் பசும்பொன்
உருகு கின்றது போன்றுளது உலகுசூழ் உவரி. 110

அண்டம் முற்றவும் விழுங்கிருள் அகற்றிநின்று அலர்வான்
கண்ட அத்தனிக் கடிநகர் நெடுமனைக் கதிர்கட்கு
உண்ட மாற்றம்ஒன்று உரைப்பரிது ஒப்பிடில் தன்முன்
விண்ட வாய்ச்சிறு மின்மினி என்னவும் விளங்கான். 111

தேனும் சாந்தமும் மான்மதச் செறிநறும் சேறும்
வான நாண்மலர்க் கற்பக மலர்களும் வயமாத்
தான வாரியும் நீரொடு மடுத்தலின் தழீஇய
மீனும் தானும்ஓர் வெறிமணம் கமழுமாம் வேலை. 112

---

106 : இகழ்தலின்–இராவணன் இகழ்ந்ததனால். மா–திசையானைகள். ஆரியன்தனி ஐங்கரக் களிறும்–சிவனுடைய குமாரனை ஒப்பற்ற ஐந்து கைகளையுடைய விநாயகன் என்ற யானையும்.

107 : எண்வகை உருவின் மூவர்–அஷ்டமூர்த்திகளான பிரமன், சிவன், திருமால் ஆகியோர். இவன் - இராவணன்

தெய்வத் தச்சனைப் புகழ்துமோ செங்கண்வாள் அரக்கன்
மெய்ஒத் தாற்றிய தவத்தையே வியத்துமோ விரிஞ்சன்
ஐயப் பாடிலா வரத்தையே மதித்துமோ அறியாத்
தொய்யல் சிந்தையேம் யாவரை யாதென்று துதிப்பேம். 113

வேறு

வானும் நிலனும் பெறும்ாறினி மற்றும் உண்டோ
கானும் பொழிலும் இவைசெங்கன கத்தி னாலும்
ஏனை மணியா லும்இயற்றிய வேனும் யாவும்
தேனும் மலரும் கனியும்தரச் செய்த செய்கை. 114

வேறு

நீரும் வையமும் நெருப்புமேல் நிமிர்நெடுங் காலும்
வாரி வானமும் வழங்கல வாகும்தம் வளர்ச்சி
ஊரின் இந்நெடுங் கோபுரத்து உயர்ச்சிகண்டு உணர்ந்தால்
மேரு எங்ஙனம் உட்குமோ உடல்முற்றும் வெள்கி. 115

முன்னம் யாவரும் இராவணன் முனியும்என் றெண்ணிப்
பொன்னின் மாநகர் மீச்செலான் கதிர்எனப் புகல்வார்
கன்னி ஆரையின் ஒளியினில் கண்வழுக் குறுதல்
உன்னி நாள்தொறும் விலங்கினன் போதலை உணரார். 116

தீய செய்குநர் தேவரால் அனையவர் சேரும்
வாயில் இல்லதோர் வரம்பமைக் குவன்என மதியாக்
காயம் என்னும்அக் கணக்கறு பதத்தையும் கடக்க
ஏயும் நன்மதில் இட்டனன் கயிலையை எடுத்தான். 117

கறங்கு கால்புகா கதிரவன் ஒளிபுகா மறலி
மறம்பு காதுஇனி வானவர் புகார்என்கை வம்பே
திறம்பு காலத்து யாவையும் சிதையினும் சிதையா
அறம்பு காதுஇந்த அணிமதிள் கிடக்கைநின்று அகத்தின். 118

கொண்ட வான்திரைக் குரைகடல் இடையதாய்க் குடுமி
எண்த வாவிசும்பு எட்டநின்று இமைக்கின்ற இயல்பால்
பண்டை நாகணைப் பள்ளியான் உந்தியில் பயந்த
அண்ட மேயும்ஒத் திருந்ததிவ் அகல்நகர் அமைதி. 119

பாடு வார்பலர் என்னின்மற் றவரினும் பலரால்
ஆடு வார்இனி அவரினும் பலருளர் அமைதி
கூடு வார்இடை இன்இயம் கொட்டுவார் முட்டில்
வீடு காண்குறும் தேவரால் விழுநடம் காண்பார். 120

வான மாதரோடு இகலுவர் விஞ்சையர் மகளிர்
ஆன மாதரோடு ஆடுவர் இயக்கியர் அவரைச்
சோனை வார்குழல் அரக்கியர் தொடருவர் தொடர்ந்தால்
ஏனை நாடியர் அருநடக் கிரியைஆய்ந் திருப்பார். 121

இழையும் ஆடையும் மாலையும் சாந்தமும் ஏந்தி
உழையர் என்னநின்று உதவுவார் அமரர்தம் மகளிர்
விழையும் போகமே ஈங்கிது வாய்கொண்டு விளம்பின்
குழையும் நெஞ்சினால் நினையினும் மாசென்று கொள்ளும். 122

பொன்னின் மால்வரை மேல்மணி பொருந்தின பொருவ
உன்னி நான்முகத் தொருவன்நின்று ஊழ்முறை உரைக்கப்
பன்னி நாள்பல பணியுழந்து அரிதினில் படைத்தான்
சொன்ன வானவர் தச்சனும் இந்நகர் துதிப்பான். 123

மகர வீணையின் மந்திர கீதத்து மறைந்த
சகர வேலையின் ஆர்கலி திசைமுகன் தடவும்
சிகர மாளிகைத் தலம்தொறும் தெரிவையர் நிவந்த
அகரு தூபத்தின் அழுந்தின முகிற்குலம் அனைத்தும். 124

பளிக்கு மாளிகைத் தலம்தொறும் இடந்தொறும் பசுந்தேன்
துளிக்கும் கற்பகத் தண்நறுஞ் சோலைகள் தோறும்
அளிக்கும் தேறல்உண்டு ஆடுநர் பாடுநர் ஆகிக்
களிக்கின் றார்அலால் கவல்கின்றார் ஒருவரைக் காணேன். 125

தேறல் மாந்தினர் தேனிசை மாந்தினர் செவ்வாய்
ஊறல் மாந்தினர் இன்னுரை மாந்தினர் ஊடல்
கூறல் மாந்தினர் அனையவர்த் தொழுதுஅவர் கோபத்து
ஆறல் மாந்தினர் அரக்கியர்க்கு உயிர்அன்ன அரக்கர். 126

எறித்த குங்குமத்து இளமுலை எழுதிய தொயில்கள்
கறுத்த மேனியில் பொலிந்தன ஊடலில் கனன்று
மறித்து நோக்கியர் மலரடி மஞ்சுளப் பஞ்சி
குறித்த கோலங்கள் பொலிந்தில அரக்கர்தம் குஞ்சி. 127

விளரிச் சொல்லியர் வாயினால் வேலையுள் மிடைந்த
பவளக் காடெனப் பொலிந்தது படைநெடுங் கண்ணால்
குவளைக் கோட்டகம் கடுத்தது குளிர்முகக் குழுவால்
முளரிக் கானமும் ஆனது முழங்குநீர் இலங்கை. 128

127: நோக்கியர்...குஞ்சி-அரக்கியரின் பாதங்களில் பூசப்பட்டிருந்த செம்பஞ்சுக் குழம்பு, அரக்கர்கள் காலில் விழுந்து வணங்கியபோது அவர்கள் தலைமயிரில் படிந்தும், செம்பட்டை மயிரானபடியால், செம்பஞ்சுக் குழம்பின் நிறம் தெரியவில்லை.

128: வாயினால்-வாயின் நிறத்தினால்.

வேறு

எழுந்தனர் திரிந்து வைகும் இடத்ததாய் இன்று காறும்
கிழிந்திலது அண்டம் என்னும் இதனையே கிளப்ப தல்லால்
அழிந்துநின்று ஆவ தென்னே அலருளோன் ஆதி யாக
ஒழிந்தபே ருயிர்கள் எல்லாம் அரக்கருக்கு உறையும் போதா. 129

காயத்தால் பெரியர் வீரம் கணக்கிலர் உலகம் கல்லும்
ஆயத்தார் வரத்தின் தன்மை அளவற்றார் அறிதல் தேற்றா
மாயத்தார் நகாக்கெங் கேனும் வரம்பும்உண் டாமே மற்றோர்
தேயத்தார் தேயம் சேறல் தெருவிலோர் தெருவின் சேறல். 130

கழல்உலாம் காலும் கால வேல்உலாம் கையும் காந்தும்
அழல்உலாம் கண்ணும் இல்லா ஆடவர் இல்லை அன்னார்
குழல்உலாம் களிவண்டு ஆர்க்கும் குஞ்சியால் பஞ்சி குன்றா
மழலையாழ்க் குதலைச் செவ்வாய் மாதரும் இல்லை மாதோ. 131

கள்ளூறக் கனிந்த பங்கி அரக்கரைக் கடுத்த காதல்
புள்ளூறத் தொடர்வ மேனி புலாலுறக் கடிது போவ
வெள்உறுப்பு எயிற்ற செய்ய தலையன கரிய மெய்ய
உள்ளூறக் களித்த குன்றின் உயர்ச்சிய ஓடை யானை. 132

வள்ளிநுண் மருங்குல் என்ன வானவர் மகளிர் உள்ளம்
தள்ளூறப் பாணி தள்ளா நடம்புரி தடங்கண் மாதர்
வெள்ளிவெண் முறுவல் தோன்ற மடந்தையர் வெள்கு கின்றார்
கள்ளிடை அரக்கர் மாதர் களியிடு குரவை காண்பார். 133

ஒறுத்தலோ நிற்க மற்றெம் உயர்படைக்கு ஒருங்குஇவ் வூர்வந்து
இறுத்தலும் எளிதாம் மற்றும் யாவர்க்கும் இயக்கம் உண்டே
கறுத்தவாள் அரக்கி மாரும் அரக்கரும் கழித்து வீசி
வெறுத்தபூண் வெறுக்கை யாலே தூரும்இவ் வீதி எல்லாம். 134

வடங்களும் குழையும் பூணும் மாலையும் சாந்தும் யானைக்
கடங்களும் கலின மாவி லாழியும் கணக்கி லாத
இடங்களும் இடங்கள் தோறும் யாற்றொடும் எடுத்த எல்லாம்
அடங்கிய தென்னில் என்னே ஆழியின் ஆழ்ந்த துண்டோ. 135

விற்படை பெரிதென் கேனோ வேற்படை பெரிதென் கேனோ
மற்படை உளதென் கேனோ வாட்படை வலிதென் கேனோ
கற்பணம் தண்டு பிண்டி பாலம்என்று இனைய காந்தும்
நற்படை உடைத்தென் கேனோ நாயகற் குரைக்கும் நாளில். 136

129: உறையும் போதா-உறை போடவும் போதாது. "உறை போடுதல்" பற்றிய விளக்கத்தை அரும்பத உரையில் காண்க.

134: இயக்கம் உண்டே - நடமாட முடியுமோ?

என்றனன் இலங்கை நோக்கி இனையன பலவும் எண்ணி
நின்றவாள் அரக்கர் வந்து நேரினும் நேர்வர் என்னுத்
தன்தகை அனைய மேனி சுருக்கிஅச் சரளச் சாரல்
குன்றிடை இருந்தான் வெய்யோன் குடகடல் குளிப்ப தானுன். 137

வேறு

இரவுக் காலம் வந்து எங்கும் இருள் படர்தல்

ஏய்வினை இறுதியின் செல்வம் எய்தினுன்
ஆய்வினை மனத்திலான் அறிஞர் சொற்கொளான்
வீவினை நினைக்கிலான் ஒருவன் மெய்இலான்
தீவினை எனஇருள் செறிந்த தெங்குமே. 138

கரித்தமூன்று எயிலுடைக் கணிச்சி வானவன்
எரித்தலை அந்தணர் இழைத்த யானையை
உரித்தபேர் உரிவையால் உலகுக்கு ஓர்உறை
புரித்தனனும்எனப் பொலியும் பொற்பதே. 139

அணங்குஅரவு அரசர்கோன் அளவில் ஆண்டெலாம்
பணங்களின் தலைதொறும் உயிர்த்த பாய்விடம்
உணங்கல்இல் உலகலொம் முறையின் உண்டுவந்து
இணங்கெரி புகையொடும் எழுந்த தென்னவே. 140

வண்மைநீங் கான்நெடு மரபின் வந்தவன்
பெண்மைநீங் காதகற் புடைய பேதையைத்
திண்மைநீங் காதவன் சிறைவைத் தான்எனும்
வெண்மைநீங் கியபுகழ் விரிந்த தென்னவே. 141

அவ்வழி அவ்விருள் பரந்த ஆயிடை
எவ்வழி மருங்கினும் அரக்கர் ஏகினர்
தெவ்அழி மந்திரத் திசையர் ஆகையால்
வெவ்வழி இருள்தர மிதித்து மீச்செல்வார். 142

இந்திரன் வளநகர்க்கு ஏகு வார்எழில்
சந்திரன் உலகினைச் சார்கு வார்சலித்து
அந்தகன் உறையுளை அணுகு வார்அழல்
வெந்தொழில் அரக்கனது ஏவல் மேயினர். 143

139: எரித்தலை அந்தணர் இழைத்த-வேள்வித் தீயிலிருந்து தாருக வனத்து முனிவர்கள் உண்டாக்கி அனுப்பிய.

142: அரக்கர் ஏகினர்-இரவு நேரத்தில் நடமாடும் இயல்புள்ள அரக்கர்கள், இருட்டியதும் வெளிக்கிளம்பித் திரியலானர்கள். தெவ்அழி மந்திரத்திசையர்-பகைவர்களை அழிக்கும் மந்திரங்களைக் கற்றவர்கள். இதற்கு வேறுவிதமாகவும் பொருள் கூறப்படும்.

பொன்னகர் மடந்தையர் விஞ்சைப் பூவையர்
பன்னக வனிதையர் இயக்கர் பாவையர்
முன்னினர் பணிமுறை மாற முந்துவார்
மின்னினம் மிடைந்தென விசும்பின் மீச்செல்வார். 144

தேவரும் அவுணரும் செங்கண் நாகரும்
மேவரும் இயக்கரும் விஞ்சை வேந்தரும்
ஏவரும் விசும்பிருள் இரிய ஈண்டினுர்
தாவரும் பணிமுறை தழுவும் தன்மையார். 145

சித்திரப் பத்தியின் தேவர் சென்றனர்
இத்துணை தாழ்த்தனம் முனியும் என்றுதம்
முத்தின்ஆ ரங்களும் முடியின் மாலையும்
உத்தரீ யங்களும் சரிய ஓடுவார். 146

சந்திரோதயம்

தீண்டரும் தீவினை தீய்க்கத் தீய்ந்துபோய்
மாண்டுஅற உலர்ந்தது மாரு திப்பெயர்
ஆண்தகை மாரிவந் தளிக்க ஆயிடை
ஈண்டுஅறம் முளைத்தென முளைத்தது இந்துவே. 147

வந்தனன் இராகவன் தூதன் வாழ்ந்தனன்
எந்தையே இந்திர ஞம்என்று ஏமுரு
அந்தம்இல் கீழ்த்திசை அளக வாள்நுதல்
சுந்தரி முகம்எனப் பொலிந்து தோன்றிற்றே. 148

கற்றைவெண் கவரிபோல் கடலின் வெண்திரை
சுற்றும்நின்று அலமரப் பொலிந்து தோன்றிற்ருல்
இற்றதென் பகைஎன எழுந்த இந்திரன்
கொற்றவெண் குடைஎனக் குளிர்வெண் திங்களே. 149

தெரிந்தொளிர் திங்கள்வெண் குடத்தி ஞல்திரை
முரிந்துயர் பாற்கடல் முகந்து மூரிவான்
சொரிந்ததே யாம்எனத் துள்ளி மீனெடும்
விரிந்தது வெண்ணிலா மேலும் கீழுமே. 150

அருந்தவன் சுரபியே ஆதி வானமா
விரிந்தபேர் உதயமே மடிவெண் திங்களா
வருந்தல்இல் முலைகதிர் வழங்கு தாரையாச்
சொரிந்தபால் ஒத்தது நிலவின் தோற்றமே. 151

151: அருந்தவன் சுரபி-வசிட்டனுடைய காமதேனு.

எண்ணுடை அனுமன்பேல் இழிந்த பூமழை
மண்ணிடை வீழ்கில மறித்தும் போகில
அண்ணல்வாள் அரக்கனை அஞ்சி ஆய்கதிர்
விண்ணிடைத் தங்கின போன்ற மீன்எலாம். 152

எல்லியின் நிமிர்இருட் குறையும் அவ்விருள்
கல்லிய நிலவின்வெண் முறியும் கவ்வின
புல்லிய பகையெனப் பொருவ போன்றன
மல்லிகை மலர்தொறும் வதிந்த வண்டெலாம். 153

வீசுறு பசுங்கதிர்க் கற்றை வெண்ணிலா
ஆசுற எங்கணும் நுழைந்து அளாயது
காசுறு கடிநகர் இலங்கை காவலன்
தூசுறை இட்டது போன்று தோன்றிற்றே. 154

இகழ்வரும் பெருங்குணத்து இராமன் எய்ததோர்
பகழியின் செலவென அனுமன் பற்றினல்
அகழ்புகுந்து அரண்புகுந்து இலங்கைக்கு அன்னவன்
புகழ்புகுந்து உலாயதோர் பொலிவும் போன்றதே. 155

அவ்வழி அனுமனும் அணுக லாம்வகை
எவ்வழி என்பதை உணர்வின் எண்ணினன்
செவ்வழி ஒதுங்கினன் தேவர் ஏத்தப்போய்
வெவ்வழி அரக்கர்ஊர் மேவல் மேயினன். 156

வேறு

அனுமான் இலங்கையின் மதிலை அடைதல்

ஆழிஅக ழாகஅரி தாய்அமரர் வாழும்
ஏழுலகின் மேலைவெளி காறும்முக டேறிக்
கேழ்அரிய பொன்கொடு சமைத்தகிளர் வெள்ளத்து
ஊழிதிரி நாளும்உலை யாமதிலை உற்றான். 157

கலங்கல்இல் கடுங்கதிர்கள் மீதுகடி தேகா
அலங்கல்அயில் வஞ்சகனை அஞ்சிஎனின் அன்றால்
இலங்கைமதில் இங்கிதனை ஏறல்அரி தென்றே
விலங்கிஅகல் கின்றன விரைந்தென வியந்தான். 158

153: (இதன் கருத்து) மல்லிகை மலர்களில் வண்டுகள் மொய்த்திருந்தது, இரவின் இருள் துண்டங்களும் நிலவின் வெண் துண்டங்களும் ஒன்றையொன்று கவ்விப் போர் செய்வது போல் காட்சியளித்தது.

155: அனுமன் பற்றினல்-அனுமான் இலங்கைக்குப் போய்ச் சேர்ந்ததன் மூலம். அன்னவன் புகழ்-இராமனுடைய புகழ்.

156: செவ்வழி ஒதுங்கினன்-நேர்ப் பாதையில் பிரவேசித்தான்.

தெவ்அள விலாதஇறை தேறல்அரி தம்மா
அவ்வளவ தன்றுஅரணம் அண்டம்இடை யாக
எவ்வளவில் உண்டுவெளி ஈறும்அது என்ஞ
வெவ்வள வரக்கனை மனக்கொள வியந்தான். 159

மடங்கல்அரி ஏறும்மத மால்களிறும் நாண
நடந்துதனி யேபுகுதும் நம்பிநனி மூதூர்
அடங்கரிய தானஅயில் அந்தகனது ஆணைக்
கடுந்திசையின் வாயனைய வாயில்எதிர் கண்டான். 160

மேருவை நிறுத்திவெளி செய்ததுகொல் விண்ணோர்
ஊர்புக அமைத்தபடி கால்கொல்உல கேழும்
சோர்வில நிலைக்கநடு இட்டதொரு தூணோ
நீர்புகு கடற்குவழி யோஎன நினைந்தான். 161

ஏழுலகின் வாழும்உயிர் யாவையும் எதிர்ந்தால்
ஊழின்முறை யன்றிஉட னேபுகும்இ தொன்றோ
வாழியர்இ யங்கும்வழி ஈதென வகுத்தால்
ஆழிஉள ஏழின்அள வன்றுபகை என்றான். 162

வெள்ளம்ஒரு நூறொடொரு நூறும்உடை வீரர்
கள்ளவினை வெவ்வலி அரக்கர்இரு கையும்
முள்எயிறும் வாளும்மிக மின்னமுறை நின்றார்
எள்ளரிய காவலினை அண்ணலும் எதிர்ந்தான். 163

சூலம்மழு வாளொடுஅயில் தோமரம் உலக்கை
காலவரி வில்பகழி சுற்பணம் முசுண்டி
கோல்கணைய நேமிகுலி சம்சுரிகை குந்தம்
பாலம்முதல் ஆயுதம் வலத்தினர் பரித்தார். 164

அங்குசம் நெடுங்கவண் அயில்சிலை வழங்கும்
வெங்குசைய பாசம்முதல் வெய்யபயில் கையார்
செங்குருதி அன்னசெறி குஞ்சியர் சினத்தோர்
பங்குனி மலர்ந்தொளிர் பலாசவனம் ஒப்பார். 165

அளக்கஅரி தாகிய கணக்கொடுஅயல் நிற்கும்
விளக்கினம் இருட்டினை விழுங்கிஒளி கால
உளக்கடிய காலன்மனம் உட்கும்மணி வாயில்
இளக்கம்இல் கடற்படை இருக்கையை எதிர்ந்தான். 166

160: புகுதும் நம்பி-புகுகின்ற அனுமான். அந்தகனது ஆணைக் கடுந்திசையின்-எமன் ஆட்சி புரியும் தென் திசையின்.

161: கடற்கு வழி-கடலுக்கு மதகுவழி.

163: இரு கையும்-இரண்டு பக்கங்களிலும்.

166: கடற்படை-கடல் போன்ற பெரும்படை.

எவ்அமரர் எவ்அவுணர் எவ்வர்உளர் என்னே
கவ்வைமுது வாயிலின் நெடுங்கடை கடப்பார்
தெவ்வர்இவர் சேமம்இது சேவகனும் யாமும்
வெவ்அமர் தொடங்கிடின் எனுய்விளையும் என்றான். 167

கருங்கடல் கடப்பதரி தன்றுநகர் காவற்
பெருங்கடல் கடப்பதரிது எண்ணம்இறை பேரின்
அருங்கடன் முடிப்பதரி தாம்அமர் கிடைக்கின்
நெருங்குஅமர் கிடக்கும்நெடு நாள்என நினைந்தான். 168

வாயில்வழி சேறல்அரிது அன்றியும் வலத்தோர்
ஆயில்அவர் வைத்தவழி ஏகல்அழகு அன்றால்
காய்கதிர் இயக்கில்மதி லைக்கடிது தாவிப்
போய்இ(ந்)நகர் புக்கிடுவென் என்றோர்அயல் போனான். 169

வேறு

இலங்கைமாதேவி அனுமானுக்கு முன் வருதல்

நாள்நா ளும்தான் நல்கிய காவல் நனிமூதூர்
வாழ்நாள் அன்னாள் போவதின் மேலே வழிநின்றாள்
தூணும் என்னும் தோளுடை யானைச் சுடரோனைக்
காணா வந்தாள் கட்செவி என்னக் கனல்கண்ணாள். 170

எட்டுத் தோளாள் நாலு முகத்தாள் உலகேழும்
தொட்டுப் பேரும் சோதி நிறத்தாள் சுழல்கண்ணாள்
முட்டிப் போரின் மூவுல கத்தை முதலோடும்
கட்டிச் சீறும் கால வலத்தாள் கமைஇல்லாள். 171

பாரா நின்றாள் எண்திசை தோறும் பலர்அப்பால்
வாரா நின்றா ரோஎன மாரி மழையேபோல்
ஆரா நின்றாள் நூபுரம் அச்சம் தருதாளாள்
வேரா மெய்யாள் மின்னின் இமைக்கும் மிளிர்பூணாள். 172

169: வலத்தோர்...அன்றால்-பலசாலிகள் ஆராய்ந்து பார்க்கும் இடத்து, பகைவர்கள் கட்டிவைத்துள்ள வாசல் வழியாக உள்ளே செல்லுதல் அழகல்ல. இது நூல் கொள்கை.

171: "முட்டிப் போரின்" "கட்டிச் சீறும்" என்பவற்றிற்குப் பதிலாக "முட்டுப் போரின்" "கட்டுச் சீறும்" என்று பாடம் இருந்தால் பொருத்தமாக இருக்கலாம். முட்டு-மோதுதல். கட்டு—பிடுங்கி.

வேல்வாள் சூலம் வெங்கதை பாசம் விளிசங்கம்
கோல்வாள் குந்தம் கொண்ட கரத்தாள் வடகுன்றம்
போல்வாள் திங்கட் போழின் எயிற்றாள் புகைவாயில்
கால்வாள் காணில் காலனும் உட்கும் கதம்மிக்காள். 173

அஞ்சு வணத்தின் ஆடை உடுத்தாள் அரவெல்லாம்
அஞ்சு வணத்தின் வேகம் மிகுத்தாள் அருளில்லாள்
அஞ்சு வணத்தின் உத்தரி யுத்தாள் அலைஆரும்
அஞ்சு வணத்தின் முத்தொளிர் ஆரத்து அணிகொண்டாள். 174

சிந்தா ரத்தின் செச்சை அணிந்தாள் தெளிநூல்யாழ்
அந்தா ரத்தின் நேர்வரு சொல்லாள் அறைதும்பி
கந்தா ரத்தின் இன்னிசை பாடிக் களிகூரும்
மந்தா ரத்தின் மாலை அலம்பு மகுடத்தாள். 175

எல்லாம் உட்கும் ஆழி இலங்கை இகல்மூதூர்
நல்லாள் அவ்வூர் வைகுஉறை ஒக்கும் நயனத்தாள்
நில்லாய் நில்லாய் என்றுரை நேர்வாள் நினையாமுன்
வல்லே சென்றாள் மாருதி கண்டான் வருகென்றான். 176

ஆகா செய்தாய் அஞ்சலை போலும் அறிவில்லாய்
சாகா மூலம் தின்றுழல் வார்பால் சலம்என்னும்
பாகார் இஞ்சிப் பொன்மதில் தாவிப் பகையாதே
போகாய் என்றாள் பொங்கனல் என்னப் புகைகண்ணாள். 177

களியா உள்ளத் தண்ணல் மனத்தில் கதம்மூழ்க
விளியா நின்றே நீதி நலத்தின் வினைஓர்வான்
அளியால் இவ்வூர் காணும் நலத்தால் அணைகின்றேன்
எளியேன் உற்றால் யாவது உனக்கிங்கு இழவென்றான். 178

என்னா முன்னம் ஏகென ஏகாது எதிர்மாற்றம்
சொன்னா யேநீ யாவன டாதொல் புரம்அட்டான்
அன்னார் எய்தற் கஞ்சுவர் அம்மா அளியத்தாய்
உன்னால் எய்தும் ஊர்கொல்இவ் வூர்என்று உறநக்காள். 179

173: வடகுன்றம்-மேருமலை. திங்கட்போழ்-சந்திரனின் (பிளக்கப்பட்ட) துண்டு. கால்வாள்-கக்குபவள்.

174: அஞ்சுவணத்தின் ஆடை உடுத்தாள்-ஐத்து வர்ணங்களையுடைய ஆடை உடுத்தவள். அரவெல்லாம் அஞ்சு வணத்தின் (அஞ்சு உவணத்தின்). வேகம் மிகுத்தாள்-பாம்புகளெல்லாம் பயப்படக் கூடிய கருடனைப் போன்ற வேகம் மிகுந்தவள். அஞ்சு வணத்தின் (அம் சுவணத்தின்) உத்தரியத்தாள்-அழகிய தங்கத்தால் ஆன மேலாடை தரித்தவள். அலை ஆரும் அஞ்சு வணத்தின் (அம் சு வள் நத்தின்) முத்தொளிர் ஆரத்து அணி கொண்டாள்-அலைகள் பொருந்திய நீரில் உண்டான நல்ல பெரிய சங்கின் முத்துக்கள் பிரகாசிக்கும் மாலையை ஆபரணமாகக் கொண்டவள்.

177: ஆகா-ஆகாதவற்றை; கூடாதவற்றை. பாகார்-(பாகு ஆர்) அழகு பொருந்திய.

நக்கா ளைக்கண்டு ஐயன் மனத்தோர் நகைகொண்டான்
அக்கால் நீயார் யார்சொல வந்தாய் உனதாவி
உக்கால் ஏதுஆம் ஓடலை என்ருள் இனிஇவ்வூர்
புக்கா லன்றிப் போகிலென் என்ருன் புகழ்கொண்டான். 180

வஞ்சம் கொண்டான் வானரம் அல்லன் வருகாலன்
துஞ்சும் கண்டால் என்னை இவன்சூழ் திரைஆழி
நஞ்சம் கொண்ட கண்ணுத லைப்போல் நகுகின்ருன்
நெஞ்சம் கண்டே கல்லென நின்றே நினைவுற்ருள். 181

இலங்கைமாதேவியும் அனுமானும் போரிடுதல்

கொல்வாம் அன்றேல் கோள்உறும் இவ்வூர் எனல்கொண்டாள்
வெல்வாய் நீயே வென்றி எனத்தன் விழிதோறும்
வல்வாய் தோறும் வெங்கனல் பொங்க மதில்வாயில்
செல்வாய் என்னு மூவிலை வேலைச் செலவிட்டாள். 182

தடித்துஆம் என்னத் தன்எதிர் செல்லும் தழல்வேலைக்
கடித்தான் நாகம் விண்ணின் முரிக்கும் கலுழன்போல்
ஒடித்தான் கையால் உம்பர் உவப்ப உயர்காலம்
பிடித்தாள் நெஞ்சம் துண்ணென எண்ணம் பிழையாதாள். 183

இற்றுச் சூலம் நீறெழு காலத்து எரிஒப்பாள்
மற்றுத் தெய்வப் பல்படை கொண்டே மலைவாளை
உற்றுக் கையால் ஆயுதம் எல்லாம் ஒழியாமல்
பற்றிக் கொள்ளா விண்ணில் எறிந்தான் பழிஓர்வான். 184

வழங்கும் தெய்வப் பல்படை காணுள் மலைவான்மேல்
முழங்கும் மேகம் என்ன உரப்பி முதிர்கின்ருள்
கழங்கும் பந்தும் குன்றுகொடு ஆடும் கரம்ஓச்சித்
தழங்கும் செந்தீச் சிந்த அடித்தாள் தகவில்லாள். 185

அடியா முன்னம் அங்கை அனைத்தும் ஒருகையால்
பிடியா என்னே பெண்இவள் கொல்லின் பிழைஎன்னு
ஒடியா நெஞ்சத்து ஓர்அடி கொண்டான் உயிரோடும்
இடிஏ றுண்ட நாகம் எனப்பார் இடைவீழ்ந்தாள். 186

விழுந்தாள் நொந்தாள் வெங்குரு திச்செம் புனல்வெள்ளத்து
அழுந்தா நின்ருள் நான்முக ஞர்தம் அருள்உன்னி
எழுந்தாள் யாரும் யாவையும் எல்லா உலகத்தும்
தொழும்தாள் வீரன் தூதுவன் முன்நின்று இவைசொன்னுள். 187

181: நஞ்சம் கொண்ட...நகுகின்ருன்-சிவனைப் போலச் சிரிக்கிருன். (சிவன் சிரித்த தால் திரிபுரம் எரிந்தது.)

184: பழி ஓர்வான்-பெண்ணைக் கொல்லுவது பெரும்பழி என்று நினைத்தவனுக.

186: அடி கொண்டான்-அடி கொடுத்தான்

வேறு

ஐயகேள் அபயம் நல்கும் அயன்அருள் அமைதி யாக
எய்திஇம் மூதூர் காப்பென் இலங்கைமா தேவி என்பேர்
செய்தொழில் இழுக்கி உள்ளம் திகைத்திந்தச் சிறுமை செய்தேன்
உய்திஎன்று அளித்தி யாயின் உணர்த்துவன் உண்மை என்றாள். 188

எத்தனை காலம் காப்பன் யான்இந்த மூதூர் என்று
முத்தனை வினவி னேற்கு முரண்வலிக் குரங்கொன் றுன்னைக்
கைத்தலம் அதனால் தீண்டிக் காய்ந்தஅன் றென்னைக் காண்டி
சித்திர நகரம் பின்னைச் சிதைவது திண்ணம் என்றான். 189

இலங்கைமாதேவி அனுமானைப் புகழ்ந்து அப்பால் செல்லுதல்

அன்னதே முடிந்தது ஐய அறம்வெல்லும் பாவம் தோற்கும்
என்னும்ஈது இயம்ப வேண்டும் தகையதோ இனிமற் றுன்னால்
உன்னிய எல்லாம் முற்றும் உனக்குமுற் றுாத துண்டோ
பொன்னகர்ப் புகுதிஎன்று புகழ்ந்துஅவள் இறைஞ்சிப் போனாள். 190

வீரனும் விரும்பி நோக்கி மெய்ம்மையே விளையு மஃதுஎன்று
ஆரியன் கமல பாதம் அகத்துற வணங்கி ஆண்டுஅப்
பூரியர் இலங்கை மூதூர்ப் பொன்மதில் தாவிப் புக்கான்
சீரிய பாலின் வேலை சிறுபிரை தெறித்த தன்னான். 191

வான்தொடர் மணியின் செய்த மையறு மாட கோடி
ஆன்றபேர் இருளைச் சீத்துப் பகல்செய்த அழகை நோக்கி
ஊன்றிய உதயத் துச்சி ஒற்றைவான் உருளைத் தேரோன்
தோன்றினன் கொல்லோ என்னா அறிவனும் துணுக்கம் கொண்டான்

மொய்ம்மணி மாட மூதூர் முழுதிருள் அகற்றும் தானே
மெய்ம்மையை உணரின் நானே மிகைஎன விலங்கிப் போனான்
இம்மதில் இலங்கை நாப்பண் எய்துமேல் தன்முன் எய்தும்
மின்மினி அல்ல னேஅவ் வெயிற்கதிர் வேந்தன் என்றான். 193

பொசிவுறு பசும்பொற் குன்றின் பொன்மதில் நடுவண் பூத்து
வசையற விளங்கும் சோதி மணியினால் அமைந்த மாடத்து
இசையினால் இலங்கை மூதூர் இருளின்மை ஆத லாலே
நிசிசரர் ஆயிற் றம்மா நெடுநகர் நிருதர் எல்லாம். 194

189: முத்தனை-பிரமனை.
193: நானே—சூரியனாகிய நானே. தன்முன்-சூரியன் முன்.

என்றனன் இயம்பி வீதி ஏகுதல் இழுக்கம் என்னாத்
தன்தகை அனைய மேனி சுருக்கிமா ளிகையின் சாரல்
சென்றனன் என்ப மன்னோ தேவருக் கமுதம் ஈந்த
குன்றென அயோத்தி வேந்தன் புகழ்எனக் குவவுத் தோளான். 195

ஆத்துறு சாலை தோறும் ஆனையின் கூடம் தோறும்
மாத்துறு மாடம் தோறும் வாசியின் பந்தி தோறும்
காத்துறு கடைகள் தோறும் கருங்கடல் கடந்த தாளான்
பூத்தொறும் தாவிச் செல்லும் பொறிவரி வண்டின் போனான். 196

பெரியநாள் ஒளிகொள் நாலு விதபணிப் பித்திப் பத்தி
சொரியுமா நிழல்கள் ஆங்குச் சுற்றலால் காலின் தோன்றல்
கரியனாய் வெளிய னாகிச் செய்யனாய்க் காட்டும் காண்டற்கு
அரியனாய் எளிய னாய்த்தன் அகத்துறை அழக னேபோல். 197

அரக்கியர் முதலியோரை அனுமான் பார்த்துச் செல்லுதல்

கானக மயில்கள் என்னக் களிமட அன்னம் என்ன
ஆனனம் கமலப் போது பொலிதர அரக்கர் மாதர்
தேன்உகு சரளச் சோலை தெய்வநீ ராற்றில் தெண்ணீர்
வானவர் மகளிர் ஆட்ட மஞ்சனம் ஆடு வாரை. 198

ஈட்டுவார் தவம்அ லால்மற்று ஈட்டினால் இயைவ தின்மை
காட்டினார் விதியார் அஃது காண்கிற்பார் காண்மின் அம்மா
பூட்டுவார் முலைபொ ருத பொய்இடை நையப் பூநீர்
ஆட்டுவார் அமரர் மாதர் ஆடுவார் அரக்கர் மாதர். 199

இலக்கண மரபிற் கேற்ற எழுவகை நரம்பின் நல்யாழ்
அலத்தகத் தளிர்க்கை நோவ அளந்தெடுத் தமைந்த பாடல்
கலக்குற முழங்கிற் றென்று சேடியர் கன்னி மார்கள்
மலர்க்கையால் மாடத் தும்பர் மழையின்வாய் பொத்து வாரை. 200

195: குன்றென - மந்தரமலை போல. அயோத்தி வேந்தன் - இராமன் அல்லது தசரதன்

196: ஆத்துறு சாலை-பசுக்கள் உள்ள தொழு. மாத்துறு மாடம்-அழகு நிறைந்த மாடமாளிகை. காத்துறு கடைகள் - காவல் காக்கப்படும் வாசல்கள்.

197: பெரிய நாள்-பெரிய நக்ஷத்திரம். கரியனாய்...அழகனேபோல்-தன் உள்ளத்தில் விற்றிருக்கும் இராமனைப்போல், அனுமான் நாலுவித மணிகளின் ஒளியால், ஒரு சமயம் கருநிறம் உடையவனாகவும். மற்றொரு சமயம் வெண்ணிறம் உடையவனாகவும், பிறிதொரு சமயம் செந்நிறம் உடையவனாகவும் காட்சியளிப்பான்; காண்பதற்கு அரியவனாகவும், சுலபத்தில் காண முடிபவனாகவும் காட்சியளிப்பான். கிருதயுகத்தில் திருமால் வெண்ணிற வடிவிலும், திரேதா யுகத்தில் செந்நிற வடிவிலும், துவாபர யுகத்தில் பச்சை வடிவிலும், கலியுகத்தில் கருநிற வடிவிலும் காட்சியளிப்பான் என்று கூறப்படுவதும் இங்கே கவனிக்கத்தக்கது.

சந்தப்பூம் பந்தர் வேய்ந்த தமனிய அரங்கில் தந்து
சிந்தித்த துதவும் தெய்வ மணிவிளக் கொளிரும் சேக்கை
வந்தொத்துத் துருத மாக்கள் விளம்பின நெறிவ ழாமல்
கந்தர்ப்ப மகளிர் ஆடும் நாடகம் காண்கின் றாரை. 201

திருத்திய பளிக்கு வேதி தெள்ளிய வேல்கள் என்னக்
கருத்தியல்பு உரைக்கும் கண்கள் கருங்கயல் செம்மை காட்ட
வருத்திய கொழுநர் தம்பால் வரம்பின்றி வளர்ந்த காமம்
அருத்திய பயிர்க்கு நீர்போல் அருநறவு அருந்து வாரை. 202

கோதறும் குவளை நாட்டம் கொழுநர்கள் நாட்டம் கொள்ளத்
தூதுளங் கனியை வென்ற துவர்த்தவாய் வெண்மை தோன்ற
மாதரும் மைந்தர் தாமும் ஒருவர்மேல் ஒருவர் வைத்த
காதல்அம் கள்ளுண் டார்போல் முறைமுறை களிக்கின் றாரை. 203

விற்படர் பவளப் பாதத்து அலத்தகம் எழுதி மேனி
பொற்பள வில்லா வாசப் புனைநறுங் கலவை பூசி
அற்புத வடிக்கண் வாளிக்கு அஞ்சனம் எழுதி அந்தில்
கற்பகம் கொடுக்க வாங்கிக் கலன்தெரிந்து அணிகின் றாரை. 204

புலிஅடு மதுகை மைந்தர் புதுப்பிழை உயிரைப் புக்கு
நலிவிட அமுத வாயால் நச்சுயிர்த்து அயிற்கண் நல்லார்
மெலிவுடை மருங்குல் மின்னின் அலமரச் சிலம்பு விம்மி
ஒலிபட உதைக்கும் தோறும் மயிர்ப்புளகு உறுகின் றாரை. 205

உள்ளுடை மயக்கால் உண்கண் சிவந்துவாய் வெண்மை ஊறித்
துள்இடைப் புருவம் கோட்டித் துடிப்பவேர் பொடிப்பத் தூய
வெள்இடை மருங்கு லார்தம் மதிமுகம் வேறென் றாகிக்
கள்ளிடைத் தோன்ற நோக்கிக் கணவரைக் கவல்கின் றாரை. 206

201: (இதன் பொருள் விளக்கம்) அழகான மலர்ப்பந்தல் போட்டு அலங்கரிக்கப்பட்ட பொன்மயமான நாட்டிய சாலையில், நினைத்ததை எல்லாம் கொடுத்து உதவும் (சிந்தாமணி என்ற) தெய்வீகமான ரத்தினம் (ஆகிய அல்லது போன்ற) விளக்கு ஒளி வீசுகின்ற இடத்தில் (மேடையில்) வந்து ஒன்று சேர்ந்து, துரிதமான தாளங்களில் பெரும் புலமை பெற்றவர்கள் வாசிக்கும் தாள வகையினின்றும் தவறாமல், கந்தர்வப் பெண்கள் ஆடும் நாட்டியத்தைப் பார்க்கின்றவர்களை (அனுமான் பார்த்தான்). தந்து சிந்தித்தது உதவும் தெய்வமணி விளக்கு-சிந்தாமணி என்ற தெய்வமணி நினைத்ததை எல்லாம் கொடுக்கக் கூடியது. அதேபோல, நாட்டிய மேடையின் விளக்குகள், ஆடுகின்றவர்களின் பாவ உணர்ச்சிகளுக்குப் பொருத்தமான ஒளியைக் கொடுத்து உதவுகின்றன. (இந்த ஒளியமைப்பை இன்றைய நாடக மேடைகளிலும் காணலாம்). சேக்கை-தங்குமிடம். இங்கே மேடை என்னும் இடத்தைக் குறிக்கிறது.

குறிப்பு: வெவ்வேறு விதமான ஒளிகள் பாய்வதும், அதனால் ஆளின் தோற்றம் மாறுவதுமான விஷயத்தைக் கம்பர் கற்பனை செய்திருக்கிறார் என்பதற்கு இந்தப் பாட்டும், 197-ம் பாட்டும் சான்றுகளாகும்.

203: கொழுநர்கள் நாட்டம் கொள்ள-கணவன்மாரின் (அரக்கர்களின்) கண்களைப் போல் சிவப்பு நிறம் ஆக.

206: கணவரைக் கவல்கின்றாரை-தன்முகம் வேற்று முகமாகத் தோன்றவே கணவன் தன்னை அடையாளம் கண்டு கொள்ளுவது எப்படி என்று எண்ணிக் கவலைப்படும் பெண்களை.

ஆலையில் மலையின் சாரல் முழையினில் அமுத வாரிச்
சோலையில் துவசர் இல்லில் சோனகர் மனையில் தூய
வேலையில் கொளவொண் ணாத வேற்கணார் குமுதச் செவ்வாய்
வால்எயிற்று ஊறு தீந்தேன் மாந்தினர் மயங்கு வாரை. 207

நலனுறு கணவர் தம்மை நவையுறப் பிரிந்து விம்மும்
முலையுறு கலவை தீய முள்இலா முளிர்ச் செங்கேழ்
மலர்மிசை மலர்பூத் தென்ன வளைக்கையால் வதனம் தாங்கி
அலமரும் உயிரி னோடு நெடிதுயிர்த்து அயர்கின் றாரை. 208

ஏதிஅம் கொழுநர் தம்பால் எய்திய சலத்தார் வைகும்
தாதியங்கு அமளிச் சேக்கை உயிர்இலா உடலின் சார்வார்
மாதுயர் காதல் தூண்ட வழியின்மேல் வைத்த கண்ணார்
தூதியர் முறுவல் நோக்கி உயிர்வந்து துடிக்கின் றாரை. 209

சங்கொடு சிலம்பும் நூலும் பாதசா லகமும் தாழப்
பொங்குபல் முரசம் ஆர்ப்ப இல்உறை தெய்வம் போற்றிக்
கொங்கலர் கூந்தற் செவ்வாய் அரம்பையர் பாணி கொட்டி
மங்கல கீதம் பாட மலர்ப்பலி வகுக்கின் றாரை. 210

இழைதொடர் வில்லும் வாளும் இருளொடு மலைய யாணர்க்
குழைதொடர் நயனக் கூர்வேல் குமரர்நெஞ் சுருவக் கோட்டி
முழைதொடர் சங்கம் பேரி முகிலென முழங்க மூரி
மழைதொடர் மஞ்ஞை என்ன விழாவொடு வருகின் றாரை. 211

பள்ளியில் மைந்த ரோடும் ஊடிய பண்பு நீங்கி
உள்ளிய கலவிப் பூசல் உடற்றுதற்கு உருத்த நெஞ்சர்
மெள்ளவே இமையை நீக்கி அஞ்சன இழுது வேய்ந்த
கள்ளவாள் நெடுங்கண் என்னும் வாளுறை கழிக்கின் றாரை. 212

ஓவியம் அனைய மாதர் ஊடினர் உணர்வோடு உள்ளம்
மேவிய கரணம் மற்றும் கொழுநரோடு ஒழிய யாணர்த்
தூவியம் பேடை என்ன மின்எனத் துவள ஏகி
ஆவியும் தாமுமே சென்று அருங்கதவு அடைக்கின் றாரை. 213

கின்னர மிதுனம் பாட வெண்மழை கிழித்துத் தோன்றும்
மின்னெனத் தரளம் வேய்ந்த வெண்ணிற விமானம் ஊர்ந்து
பன்னக மகளிர் சுற்றிப் பலாண்டிசை பரவப் பண்ணைப்
பொன்னகர் வீதி தோறும் புதுமனை புகுகின் றாரை. 214

கோவையும் குழையும் மின்னக் கொண்டலின் முரசம் ஆர்ப்பத்
தேவர்வந் தாசி கூற முனிவர்சோ பனங்கள் செப்பப்
பாவையர் குழாங்கள் சூழப் பாட்டொடு வான நாட்டுப்
பூவையர் பலாண்டு கூறப் புதுமணம் புணர்கின் றாரை. 215

214: புதுமனை புகுகின்றாரை-கல்யாணம் முடிந்தபின் கணவன்மார் வீட்டுக்கு முதல் முதலில் வரும் அரக்க மங்கையரை.

கும்பகருணனை அனுமான் காணுதல்

இயக்கியர் அரக்கி மார்கள் நாகியர் செஞ்சொல் விஞ்சை
முயற்கறை இலாத திங்கள் முகத்தியர் முதலி னோரை
மயக்கற நாடி ஏகும் மாருதி மலையின் வைகும்
கயக்கம்இல் துயிற்சிக் கும்ப கருணனைக் கண்ணில் கண்டான். 216

வேறு

ஓசனை ஏழகன்று உயர்ந்த உம்பரின்
வாசவன் மணிமுடி கவித்த மண்டபம்
ஏசற விளக்குவது இருளை எண்வகை
ஆசையின் நிலைகெட அலைக்கல் ஆன்றது. 217

அன்னதன் நடுவண்ஓர் அமளி மீமிசைப்
பன்னக அரசெனப் பரவை தான்எனத்
துன்இருள் ஒருவழித் தொக்க தாம்என
உன்னரும் தீவினை உருக்கொண் டென்னவே. 218

முன்னிய கனைகடல் முழுகி மூவகைத்
தன்இயல் கதியொடு தழுவித் தாதுகு
மன்நெடுங் கற்பக வனத்துள் வைகிய
இன்னிளந் தென்றல்வந்து இழுகி ஏகவே. 219

வானவர் மகளிர்கால் வருட மாமதி
ஆனனம் கண்டமண் டபத்துள் ஆய்கதிர்க்
கால்நகு காந்தம்மீக் கான்ற காமர்நீர்த்
தூநிற நறுந்துளி முகத்தில் தோற்றவே. 220

மூசிய உயிர்ப்பெனும் முடுகு வாதமும்
வாசலின் புறத்திடை நிறுவி வன்மையான்
நாசியின் அளவையின் நடத்தக் கண்டவன்
கூசினன் குதித்தனன் விதிர்த்த கையினன். 221

பூழியின் தொகைவிசும்பு அணவப் போய்ப்புகும்
கேழில்வெம் கிளர்கிடை உயிர்ப்புக் கேடிலா
வாழிய உலகெலாம் துடைக்கும் மாருதம்
ஊழியின் வரவுபார்த்து உழல்வ தொத்ததே. 222

217: மண்டபம்-மண்டபம்போல. எண்வகை ஆசை-எட்டுத் திசைகள்.

219: மூவகைத் தன் இயல் கதி-தன் இயல்பான மூன்று கதிகள். அவையாவன: மெதுவாகச் செல்லுதல், நடுத்தர வேகத்தில் செல்லுதல், மிக விரைவாகச் செல்லுதல்.

221: வன்மையான்-கும்பகருணன். கண்டவன்- அனுமான்.

222: கிடை உயிர்ப்பு-படுத்துக் கிடந்த வண்ணம் விடும் மூச்சு.

பகையென மதியினைப் பகுத்துப் பாடுற
வகையில்பேழ் வாய்மடுத்து அருந்து வான்எனப்
புகையொடு முழங்குபே ருயிர்ப்புப் பொங்கிய
நகைஇலா முழுமுகத்து எயிறு நாறவே. 223

தடைபுகு மந்திரம் தகைந்த நாகம்போல்
இடைபுகல் அரியதோர் உறக்கம் எய்தினுன்
கடையுக முடிவெனும் காலம் பார்த்துஅயல்
புடைபெய ராநெடுங் கடலும் போலவே. 224

வேறு

ஆவ தாகிய தன்மைய அரக்கனே அரக்கர்
கோவெ னுநின்ற குணமிலி இவன்எனக் கொண்டான்
காவல் நாட்டங்கள் பொறியுகக் கனல்எனக் கனன்ருன்
ஏவ னேஇவன் மூவரில் ஒருவனும் ஈட்டான். 225

குறுகி நோக்கிமற் றவன்தலை ஒருபதும் குறித்த
இறுகு திண்புயம் இருபதும் இவற்கிலை என்னு
மறுகி ஏறிய முனிவெனும் வடவைவெங் கனலை
அறிவெ னும்பெரும் பரவையம் புனலினுல் அவித்தான். 226

கும்பகருணனது இருப்பிடத்தை அனுமான் கடந்து செல்லுதல்

அவித்து நின்றுஎவன் ஆயினும் ஆகஎன்று அங்கை
கவித்து நீங்கிடச் சிலபகல் என்பது கருதாச்
செவிக்குத் தேன்என இராகவன் புகழினைத் திருத்தும்
கவிக்கு நாயகன் அனையவன் உறையுளைக் கடந்தான். 227

மாட கூடங்கள் மாளிகை ஒழுங்குகள் மகளிர்
ஆட ரங்குகள் அம்பலம் தேவர்ஆ லயங்கள்
பாடல் வேதிகை பட்டிமண் டபம்முதல் பலவும்
நாடி ஏகினன் இராகவன் புகழ்எனும் நலத்தான். 228

மணிகொள் வாயிலுள் சாளரத் தாள்களின் மலரில்
கணிகொள் நாளத்தில் காலினும் புகையினும் கலக்கும்
நுணுகும் வீங்கும்மற்று அவன்நிலை யாவரே நுவல்வார்
அணுவின் மேருவின் ஆழியான் எனச்செலும் அனுமன். 229

225: இந்தப் பாட்டு சரிவர அமையவில்லை என்று தோன்றுகிறது. உரையாசிரியர் நன் வலிந்து பொருள் கூறிச் சமாளித்திருக்கிருர்கள்.

229: கலக்கும்-கலக்குவான்.

ஏந்தல் இவ்வகை எவ்வழி மருங்கினும் எய்திக்
காந்தள் மெல்விரல் மடந்தையர் யாரையும் காண்பான்
வேந்தர் வேதியர் மேலுளோர் கீழுளோர் விரும்பப்
போந்த புண்ணியன் கண்ணகன் கோயிலுள் புக்கான். 230

பளிக்கு வேதிகைப் பவளத்தின் கூடத்தில் பசுந்தேன்
துளிக்கும் கற்பகப் பந்தரில் கருநிறத் தோர்பால்
வெளித்து வைகுவது அரிதென அவர்உரு மேவி
ஒளித்து வாழ்கின்ற தருமமஂனைப் பான்தனை உற்றான். 231

உற்று நின்றுஅவன் உணர்வைத்தன் உணர்வினால் உணர்ந்தான்
குற்றம் இல்லதோர் குணத்தினன் இவன்எனக் கொண்டான்
செற்றம் நீங்கிய மனத்தினன் ஒருசிறை சென்றான்
பொற்றை மாடங்கள் கோடிஓர் நொடியிடைப் புக்கான். 232

முந்த ரம்பையர் முதலினர் முழுமதி முகத்துச்
சிந்து ரம்பயில் வாய்ச்சியர் பலரையும் தெரிந்து
மந்தி ரம்பல கடந்துதன் மனத்தின்முன் செல்வான்
இந்தி ரன்சிறை இருந்தவா யிலின்கடை எதிர்ந்தான். 233

ஏதி ஏந்திய தடக்கையர் பிறைஎயிறு இலங்க
மூது ரைப்பெருங் கதைகளும் பிதிர்களும் மொழிவார்
ஓதில் ஆயிரம் ஆயிரம் உறுவலி அரக்கர்
காது வெஞ்சினக் களியினர் காவலைக் கடந்தான். 234

இந்துரசித்துவை அனுமான் பார்த்தல்

முக்கண் நோக்கினன் முதல்மகன் அறுவகை முகனும்
திக்கு நோக்கிய கரங்களும் சிலகரந்து அனையான்
ஒக்க நோக்கியர் குழாத்திடை உறங்குகின்றானைப்
புக்கு நோக்கினன் புகைபுகா வாயிலும் புகுவான். 235

வளையும் வாள்எயிற்று அரக்கனோ கணிச்சியான் மகனோ
அளையில் வாழ்அரி அனையவன் யாவனோ அறியேன்
இளைய வீரனும் ஏந்தலும் இருவரும் பலநாள்
உளையும் வெஞ்சமம் இவனொடும் உளதென உணர்ந்தான். 236

230: புண்ணியன்-விபீஷணன்.

231: கருநிறத்தோர்-அரக்கர்கள்.

235: முதல் மகன்-சிறந்த குமாரனாகிய முருகன். அனையான்-இந்திரசித்து.

இவனை இன்துணை உடையபோர் இராவணன் என்னே
புவனம் மூன்றையும் வென்றதோர் பொருள்எனப் புகறல்
சிவனை நான்முகத் தொருவனைத் திருநெடு மாலாம்
அவனை அல்லது நிகர்பிறர் என்பதும் அறிவோ. 237

என்று கைம்மறித்து இடைநின்று காலத்தை இகழ்வது
அன்று போவதென்று ஆயிரம் ஆயிரத் தடங்காத்
துன்று மாளிகை துரிசறத் துருவினன் துருவிச்
சென்று தேடினன் இந்திர சித்தினைத் தீர்ந்தான். 238

அக்கன் மாளிகை கடந்துபோய் மேல்அதி காயன்
தொக்க கோயிலும் பொருநர்கள் இல்லமும் துருவித்
தக்க மந்திரத் தலைவர்கள் மனைகளும் தடவிப்
புக்கு நீங்கினன் இராகவன் சரம்எனப் புகழோன். 239

இன்ன ராம்இரும் பெரும்படைத் தலைவர்கள் இருக்கைப்
பொன்னின் மாளிகை ஆயிர கோடியும் புக்கான்
கன்னி மாமதில் புறத்துஅவன் கரந்துறை காண்பான்
சொன்ன மூன்றினும் நடுவணது அகழியைத் தொடர்ந்தான். 240

தனிக்க டக்களி றெனஒரு துணைஇலான் தாய
பனிக்க டற்பெருங் கடவுள்தன் பரிபவம் துடைப்பான்
இனிக்க டப்பதன்று ஏழ்கடல் கிடந்ததென்று இசைத்தான்
கனிக்க டற்கதிர் தொடர்ந்தவன் அகழியைக் கண்டான். 241

பாழி நன்னெடுங் கிடங்கெனப் ப்கர்வனேல் பல்லோர்
ஊழி காலம்நின்று உலகெலாம் கல்லினும் உலவா
ஆழி வெஞ்சினத்து அரக்கனை அஞ்சிஆழ் கடல்கள்
ஏழும் இந்நகர் சுலாயகொ லாம்என இசைத்தான். 242

ஆய தாகிய அகன்புனல் அகழியை அடைந்தான்
தாய வேலையின் இருமடி விசைகொடு தாவிப்
போய காலத்தும் போக்கரி தாம்என்று புகன்றான்
நாய கன்புகழ் நடந்தபே ருலகெலாம் நடந்தான். 243

238: இகழ்வது-அலட்சியம் செய்வது (வீணாக விரயம் செய்வது.) அன்று-கூடாது.

239: அக்கன்-இந்திரசித்துவின் தம்பியாகிய அட்ச குமாரன். அதிகாயன்-இராவண னுக்குத் தானமாலை என்ற மனைவியிடம் பிறந்தவன்.

240: அவன் கரந்துறை-இராவணனது மறைவிடமான அரண்மனை. சொன்ன மூன்றினும்-நகரில் ஒன்றுக்கு வெளியே மற்றொன்றாக உள்ள மூன்று அகழிகளிலும்.

241: கனிக் கடற் கதிர் தொடர்ந்தவன்-கடலில் உதிக்கும் சூரியனைக் கனி என்று கருதிச் சிறுவயதில் தாவிப் பிடிக்க முயன்ற அனுமான்.

வேறு

இலங்கைநகர் அகழியின் வருணனை

மேக்கு நால்வகை மேகமும் கீழ்விழத்
தூக்கி னுல்அன்ன தோயத்த தாய்த்துயர்
ஆக்கி னுன்படை அன்ன அகழியை
வாக்கி னுல்உரை வைக்கவும் ஆகுமோ. 244

ஆனை மும்மத மும்பரி ஆழியும்
வான மங்கையர் குங்கும வாரியும்
நான மாதர் நறைக்குழல் நாவியும்
தேனும் ஆரமும் தேய்வையும் நாறுமால். 245

உன்னம் நாரை மகன்றில் புதாஉளில்
அன்னம் கோழிவண் டானங்கள் ஆழிப்புள்
கின்ன ரம்குரண் டம்கிலுக் கம்சிரல்
சென்னம் காகம் குணலம் சிலம்புமே. 246

நலத்த மாதர் நறைஅகில் நாவியும்
அலத்த கக்குழம் பும்செறிந் தாடிய
இலக்க ணக்கரி யோடுஇள மென்னடைக்
குலப்பி டிக்கும்ஓர் ஊடல் கொடுக்குமால். 247

நறவு நாறிய நாள்நறுந் தாமரை
துறைகள் தோறும் முகிழ்த்தன தோன்றுமால்
சிறையின் எய்திய செல்வி முகத்திேனுடு
உறவு தாம்உடை யார்ஒடுங் கார்களோ. 248

பளிங்கு செற்றிக் குயிற்றிய பாய்ஒளி
விளிம்பும் வெள்ளமும் மெய்தெரி யாதுமேல்
தெளிந்த சிந்தைய ரும்சிறி யார்களோடு
அளிந்த போதுஅறி தற்குஎளி தாவரோ. 249

நீல மேமுதல் நன்மணி நித்திலம்
மேல கீழபல் வேறொளி வீசலால்
பாலின் வேலை முதல்பல வேலையும்
கால்க லந்தன வோஎனக் காட்டுமே. 250

244: மேக்கு...தோயத்ததாய்-ஆகாயத்தில் சஞ்சரிக்கும் நான்கு வகை மேகங்களும் நீரைக் குடிப்பதற்குக் கீழே விழும்படியாக, மேல் எழும்பிய நீர் உடையதாய். நான்கு வகை மேகங்களில் புட்கலாவருத்தம் என்பது ஒன்று. இது பொன்மாரி பெய்யக்கூடியது எனவும், மிகுந்த மழையைப் பொழியக் கூடியது எனவும் வெவ்வேறு விதமாகக்கூறப் படும். துயர் ஆக்கினுன் படை அன்ன-இராவணனது விரிந்த சேனையைப் போன்ற.

அன்ன வேலே அகழியை ஆர்கலி
என்ன வேகடந்து இஞ்சியும் பிற்படத்
துன்ன ருங்கடி மாநகர் துன்னிஞன்
பின்னர் எய்திய தன்மையும் பேசுவாம். 251

கரிய நாழிகை பாதியில் காலனும்
வெருவி ஓடும் அரக்கர்தம் வெம்பதி
ஒருவ னேஒரு பன்னிரண்டு ஓசனேத்
தெருவும் மும்மைநூ ருயிரம் தேடிஞன். 252

வேறு

வேரியும் அடங்கின நெடுங்களி விளேக்கும்
பாரியும் அடங்கின அடங்கினது பாடல்
காரியம் அடங்கினர்கள் கம்மியர்கள் மும்மைத்
தூரியம் அடங்கின தொடங்கியது உறக்கம். 253

இறங்கின நிறங்கொள்பரி ஏமமுற எங்கும்
கறங்கின மறம்கொள்எயில் காவலர் துடிக்கண்
பிறங்கினர் நறுங்குழலர் அன்பர்பிரி யாதோர்
உறங்கினர் பிணங்கிஎதிர் ஊடினவர் அல்லார். 254

வடம்தரு தடங்கொள்புய மைந்தர்கல விப்போர்
கடந்தனர் இடைந்தனர் களித்தமயில் போலும்
மடந்தையர் தடந்தன முகட்டிடை மயங்கிக்
கிடந்தனர் நடந்தது புணர்ச்சிதரு கேதம். 255

வாமநறை யின்துறை மயங்கினர் மறந்தார்
காமநறை யின்துறை நுகர்ந்தவர் களித்தார்
பூமன்நறை வண்டுஅறை அலங்கமளி புக்கார்
தூமநறை யின்துறை பயின்றிலர் துயின்ருர். 256

பண்இமை அடைத்தபல கள்பொருநர் பாடல்
விண்இமை அடைத்தன விளேந்ததிருள் வீணே
தண்ணுமை அடைத்தன தழங்கிசை வழங்கும்
கண்இமை அடைத்தன அடைத்தன கபாடம். 257

விரிந்தன நரந்தம்முதல் மென்மலர் விளாகத்து
உரிஞ்சிவரு தென்றல்உணர் வுண்டயல் உலாவச்
சொரிந்தனர் கருங்கண்வரு துள்ளிதரு வெள்ளம்
எரிந்தன பிரிந்தவர்தம் எஞ்சுதனி நெஞ்சம். 258

253: மும்மைத் தூரியம்-மங்கல முரசு, வெற்றி முரசு, கொடை முரசு என்ற மூன்று வகை முரசுகள்.

இளக்கர்இழு தெஞ்சவிழும் எண்ணரு விளக்கைத்
துளக்கியது தென்றல்பகை சோரஉயர் வோரின்
அளக்கரொடு அளக்கரிய ஆசைஉறு வீயா
விளக்கென விளங்கும்மணி மெய்யுறு விளக்கம். 259

நித்தநிய மத்தொழில் முடித்துநெடு ஞானத்து
உத்தமர் உறங்கினர்கள் யோகியர் துயின்ருர்
மத்தமத வெங்களி றுறங்கின உறங்காப்
பித்தரும் உறங்கினர் இனிப்பிறர்கள் என்னும். 260

ஆயபொழுது அம்மதில் அகத்துஅரசர் வைகும்
தூயதெரு ஒன்றுெடொரு கோடிதுரு விப்போய்த்
தீயவன் இருக்கைஅயல் செய்தஅகழ் இஞ்சி
மேய்அது கடந்தனன் வினைப்பகையை வென்ருன். 261

வேறு

போர்இ யற்கை இராவணன் பொன்மனை
சீர்இ யற்கை நிரம்பிய திங்களாத்
தார கைக்குழு வின்தழு வித்தொடர்
நாரி யர்க்குறை வாம்இடம் நண்ணினுன். 262

முயற்க ருங்கறை நீங்கிய மொய்ம்மதி
அயர்க்கும் வாள்முகத்து ஆரமு தன்னவர்
இயக்கர் மங்கையர் யாவரும் எய்தியே
நயக்கும் மாளிகை வீதியை நண்ணினுர். 263

தழைந்த பேரொளி பெய்மணித் தாழ்தொறும்
இழைந்த நூலினும் இன்னிளங் காலினும்
நுழைந்து நொய்தினில் மையற நோக்கினுன்
விழைந்த தீவினை வேரற வீசினுன். 264

இராவணன் வராததால் இயக்கியர் அடைந்த விரக வேதனை

அத்தி ரம்புனை ஆனை அரக்கன்மேல்
வைத்த சிந்தையர் வாங்கும் உயிர்ப்பினர்
பத்தி ரம்புரை நாட்டம் பதைப்பறச்
சித்தி ரங்கள் எனஇருந் தார்சிலர். 265

259: பகை சோர உயர்வோரின்-பகைவர்கள் தளரும்போது வெற்றி கொண்டு மேலோங்கி நிற்போரைப்போல. அளக்கரொடு அளக்கரிய ஆசை உறு-கடல்களோடு, அளவிடமுடியாத திசைகளையும் தீண்டுகின்ற.

264: தாழ்-இங்கே தாழ்க்கோல் (திறவுகோல்) புகும் துவாரத்தைக் குறிக்கிறது.

வள்ளல் வெஞ்சர மாரனை அஞ்சியோ
மெள்ள இன்கன வின்பயன் வேண்டியோ
கள்ளம் என்கொல் அறிந்திலம் கண்முகிழ்த்து
உள்ளம் இன்றி உறங்குகின் றார்சிலர். 266

பழுதில் மன்மதன் வெங்கணை பன்முறை
உழுத கொங்கையர் ஊசல் உயிர்ப்பினர்
அழுது செய்வதென் ஆணை அரக்கனை
எழுத லாம்கொல்என்று எண்ணுகின் றார்சிலர். 267

ஆவ தொன்றரு ளாய்எனது ஆவியைக்
கூவு கின்றிலை கூறலை சென்றெனப்
பாவை பேசுவ போல்கண் பனிப்புறப்
பூவை யோடும் புலம்புகின் றார்சிலர். 268

ஈரத் தென்றல் இழுக மெலிந்துதம்
பாரக் கொங்கையைப் பார்த்தனர் பாதகன்
வீரத் தோள்களின் வீக்கம் நினைந்துயிர்
சோரச் சோரத் துளங்குகின் றார்சிலர். 269

நக்க செம்மணி நாறிய நாள்நிழல்
பக்கம் வீசுறு பள்ளியில் பல்பகல்
ஒக்க ஆசை உலக்க உலந்தவர்
செக்கர் வான்தரு திங்கள்ஒத் தார்சிலர். 270

வாளி னால்தெளி கற்பக வல்லியர்
தோளின் நாற்றிய தூங்கம ளித்துயில்
நாளி னால்செவி யில்புகு நாமயாழ்த்
தேளி னால்திகைப் பெய்துகின் றார்சிலர். 271

கவ்வு தீக்கணை மேருவைக் கால்வளைத்து
எவ்வி னான்மலை ஏந்திய ஏந்தல்தோள்
வவ்வு சாந்துதம் மாமுலை வௌவிய
செவ்வி கண்டு குலாவுகின் றார்சிலர். 272

கூடி நான்குயர் வேலையும் கோக்கநின்று
ஆடி னான்புகழ் அங்கை நரம்பினால்
நாடி நாற்பெரும் பண்ணும் நயப்புறப்
பாடி னான்பெயர் பாடுகின் றார்சிலர். 273

268: ஆவியை-உயிர்போன்ற இராவணனை.

271: நாளினால்-நாளினில்.

272: கவ்வு...ஏந்தல்-மேருமலையை வில்லாக வளைத்து, கவ்விப் பிடிப்பதும் அக்கினியை முனையாகக் கொண்டதுமான அம்பை (திரிபுர சங்காரத்தின்போது) ஏவிய சிவனின் கயிலாயமலையை ஏந்திய இராவணன்.

273: நான்குயர் வேலை-நான்கு திசைகளிலும் உள்ள கடல்கள்.கோக்க-ஒன்றுசேர. ஆடினான்-பிரளயகாலத்தில் ஆடிய சிவன். அங்கை நரம்பினால்-கைநரம்புகளையே வீணைத் தந்திகளாகக் கொண்டு. நாற்பெரும்பண்-பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என்ற நான்கு பண்கள் பாடினான்-இராவணன்,

இனைய தன்மை இயக்கியர் ஈண்டிய
மனைஓர் ஆயிரம் ஆயிரம் வாயில்போய்
அனைய வன்குலத்து ஆயிழை யார்இடம்
நினைவின் எய்தினன் நீதியின் எய்தினான். 274

வேறு

எரிசுடர் மணியின் செங்கேழ் இளவெயில் இடைவி டாது
விரிஇருள் பருகி நாளும் விளக்கின்றி விளங்கும் மாடத்து
அரிவையர் குழுவை நீக்கி ஆசையும் தாமு மேயாய்
ஒருசிறை இருந்து போன உள்ளத்தோடு ஊடு வாரும். 275

நகைஎரிக் கற்றை நெற்றி நாவிதோய்ந் தனைய ஓதி
புகைஎனத் தும்பி சுற்றப் புதுமலர் பொங்கு சேக்கைப்
பகைஎன ஏகி ஆன்ற பளிங்குடைச் சீதப் பள்ளி
மிசைஒடுங் காத காம விம்மலின் வெதும்பு வாரும். 276

சவிபடு தகைசால் வானம் தான்ஒரு மேனி யாகக்
குவியுமீன் ஆர மாக மின்கொடி மருங்கு லாகக்
கவிர்ஒளிச் செக்கர்க் கற்றை ஓதியா மழைஉண் கண்ணா
அவிர்மதி நெற்றி யாக அந்திவான் ஒக்கின் றாரும். 277

பானல்உண் கண்ணும் வண்ணப் படிமுறை மாறப் பண்ணைச்
சோனைபோன்று அளிகள் பம்பும் சுரிகுழல் கற்றை சோர
மேல்நிமிர்ந்து எழுந்த மாட வெண்ணிலா முன்றில் நண்ணி
வானமீன் கையின் வாரி மணிக்கழங் காடு வாரும். 278

உழைஉழை பரந்த வான யாற்றுநின்று'உம்பர் நாட்டுக்
குழைமுகத் தவர்கள் தந்த புனல்குளிர்ப் பிலஎன் றூடி
இழைதொடுத் திலங்கும் மாடம் இடைதடு மாற ஏறி
மழைபொதுத் தொழுகு நீரால் மஞ்சனம் ஆடு வாரும். 279

பன்னக அரசர் செங்கேழ்ப் பணமணி வலிதில் பற்றி
இன்னுயிர்க் கணவன் ஈந்தா னும்என இருத்தி விஞ்சை
மன்னவர் முடியும் பூணும் ஆரமும் பணைய மாகப்
பொன்னணி பலகை சூது துயில்கிலர் பொருது வாரும். 280

தென்னஎன் றமிர்தப் பாடல் சித்தியர் இசைப்பத் தீஞ்சொல்
பன்னக மகளிர் வள்வார்த் தண்ணுமை பாணி பேணப்
பொன்நகர்த் தரளப் பந்தர்க் கற்பகப் பொதும்பர்ப் பொற்றோள்
இன்நகை அரம்பை மாரை ஆடல்கண் டிருக்கின் றாரும். 281

278: வண்ணப்படி-கையில் வைத்துக் கழற்காய் ஆடும் நக்ஷத்திரங்களின் பலவித நிறங்களின்படி.

ஆணியின் கிடந்த காதல் அகம்சுட அருவி உண்கண்
சேணுயர் உறக்கம் தீர்ந்த சிந்தையர் செய்வ தோரார்
வீணையும் குழலும் தத்தம் மிடறும்வேற் றுமையில் தீர்ந்த
பாணிகள் அளந்த பாடல் அமிழ்துகப் பாடு வாரும். 282

தண்டலை வாழை யன்ன குறங்கிடை அல்குல் தட்டில்
கொண்டபூந் துகிலும் கோவை கலைகளும் சோரக் கூர்ங்கள்
உண்டுஅல மந்த கண்ணோடு ஊசலிட் டுலாவு கின்ற
குண்டலம் திருவில் வீசக் குரவையில் குழறு வாரும். 283

நச்செனக் கொடிய நாகக் கள்ளொடு குருதி நக்கிப்
பிச்சரின் பிதற்றி அல்குல் பூந்துகில் கலாபம் பீறிக்
குச்சரித் திறத்தின் ஓசை களம்கொளக் குழுக்கொண்டு ஈண்டிச்
சச்சரிப் பாணி கொட்டி நிறைதடு மாறு வாரும். 284

தயிர்நிறக் கள்உண்டு உள்ளம் தள்ளத்தம் அறிவு தள்ளப்
பயிர்உறத் தெய்வம் என்மேல் படிந்தது பார்மின் என்னு
உயிர்உயிர்த்து இரண்டு கையும் உச்சிமேல் உயர நீட்டி
மயிர்சிலிர்த்து உடலும் கூசி வாய்விரித்து ஒடுங்கு வாரும். 285

இத்திறத்து அரக்கி மார்கள் ஈரிரு கோடி ஈட்டம்
பத்தியின் உறையும் பத்திப் படர்நெடுந் தெருவும் பார்த்தான்
சித்தியர் உறையும் மாடத் தெருவும்பின் ஆகச் சென்றான்
உத்திசை விஞ்சை மாதர் உறையுளை முறையின் உற்றான். 286

வேறு

வளர்ந்த காதலர் மகரிகை நெடுமுடி அரக்கனை வரக்காணார்
தளர்ந்த சிந்தைதம் இடையினும் நடுங்கிட உயிரொடு தடுமாறி
களம்த வாநெடுங் கருவியின் கைகளின் செயிரியர் கலைக்கண்ணால்
அளந்த பாடல்வெவ் அரவுதம் செவிபுக அலமரல் உறுகின்றார். 287

புரியும் நன்னெறி முனிவரும் புலவரும்
புகல்இலாப் பொறைகூர
எரியும் வெஞ்சினத்து இகல்அடு கொடுந்திறல்
இராவணற்கு எஞ்ஞான்றும்
பரியும் நெஞ்சினர் இவர்என அயிர்த்தொரு
பகையொடு பனித்திங்கள்
சொரியும் வெங்கதிர் துணைமுலைக் குவைசுடக்
கொடிகளின் துடிக்கின்றார். 288

282: ஆணியின் கிடந்த காதல்-ஆணி அறைந்ததுபோல் உறுதியாக நிலைபெற்ற காதல்.
285: தெய்வம் என் மேல் படிந்தது-எனக்குச் சாமி வந்துவிட்டது.
287: கலைக்கண்ணால்-சாஸ்திர முறையின் பிரகாரம்.

சிறுகு காலங்கள் ஊழிகள் ஆம்வகை திரிந்துசிந் தனைசிந்த
முறுகு காதலின் வேதனை உழப்பவர் முயங்கிய முலைமுன்றில்
இறுகு சாந்தமும் எழுதிய குறிகளும் இன்னுயிர்ப் பொறைஈர
மறுகு வாட்கண்கள் சிவப்புற நோக்கினர் வயிர்த்தனர் உயிர்க்கின்றார்

ஆய விஞ்சையர் மடந்தையர் உறைவிடம்
ஆறிரண் டமைகோடி
தூய மாளிகை நெடுந்தெருத் துருவிப்போய்த்
தொலைவில்மூன் றுலகிற்கும்
நாய கன்பெருங் கோயிலை நண்ணுவான்
கண்டனன் நளிர்திங்கள்
மாய நந்திய வாள்முகத் தொருதனி
மயன்மகள் உறைமாடம். 290

கண்டு கண்ணொடு கருத்தொடு கடாவினன்
காரணம் கடைநின்றது
உண்டு வேறொரு சிறப்பெங்கள் நாயகற்கு
உயிரினும் இனியாளைக்
கொண்டு போந்தவன் வைத்ததோர் உறையுள்கொல்
குலமணி மனைக்கெல்லாம்
விண்டு விண்தட மார்பினில் மணிஒத்தது
இதுஎன வியப்புற்றான். 291

அரம்பை மேனகை திலோத்தமை உருப்பசி ஆதியர் மலர்க்காமன்
சரம்பெய் தூணிபோல் தளிரடி தாம்தொடச் சாமரை தடுமாறக்
கரும்பை யும்சுவை கைப்பித்த சொல்லியர் காமரம் கனிகின்ற
நரம்பின் இன்னிசை செவிபுக நாசியில் கற்பக விரைநாற. 292

விழைவு நீங்கிய மேன்மையோ ராயினும்
கீழ்மையோர் வெகுளுற்றால்
பிழைகொல் நன்மைகொல் பெறுவதென்று ஐயுறு
பீழையால் பெருந்தென்றல்
உழையர் கூவப்புக்கு ஏதெனப் பெயர்வதோர்
ஊசலின் உளதாகும்
பழையம் யாம்எனப் பண்பல செய்வரோ
பருணிதர் பயன்ஓர்வார். 293

இன்ன தன்மையின் எரிமணி விளக்கங்கள்
எழில்கெடப் பொலிகின்ற
தன்னது இன்ஒளி தழைப்புறத் துயில்வுறு
தையலைத் தகைவில்லான்

290: மயன்மகள்-மண்டோதரி; இராவணனின் முதல் மனைவி.

293: "பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும், கெழுதகைமை கேடு தரும்" என்று திருக்குறள் கூறுகின்றது.

அன்ன ளாகிய சானகி இவள்என
அயிர்த்துஅகத்து எழுவெந்தீத்
துன்னும் ஆருயிர் உடலொடு சுடுவதோர்
துயர்உழந்து இவைசொன்னான். 294

எற்பு வான்தொடர் யாக்கையால் பெறும்பயன்
இழந்தனென் இதுநிற்க
அற்பு வான்தளை இல்பிறப் பதனொடும்
இகந்துதன் அருந்தெய்வக்
கற்பு நீங்கிய கனங்குழை இவள்எனில்
காகுத்தன் புகழோடும்
பொற்பும் யானும்இவ் இலங்கையும் அரக்கரும்
பொன்றுதும் இன்றென்றான். 295

மானு யர்த்திரு வடிவினள் அவள்இவள்
மாறுகொண் டனள்கூறில்
தான்இ யக்கியோ தானவர் தையலோ
ஐயுறும் தகையாளள்
கான்உ யர்த்ததார் இராமன்மேல் நோக்கிய
காதல்கா ரிகையார்க்கு
மீன்உ யர்த்தவன் மருங்குதான் மீளுமோ
நினைந்தது மிகைஎன்றான். 296

இலக்கணங்களும் சிலஉள என்னினும்
எல்லைசென்று இறுக்கில்லா
அலக்கண் எய்துவது அணியதுண்டு என்றெடுத்து
அறைகுவது இவள்யாக்கை
மலர்க்க ருங்குழல் சோர்ந்துவாய் வெரீஇச்சில
மாற்றங்கள் பறைகின்றாள்
உலக்கும் இங்கிவள் கணவனும் அழிவும்இவ்
வியன்நகர்க்கு உளதென்றான். 297

என்று ணர்ந்துநின்று ஏமுறும் இந்நிலை
நிற்கஇத் திறன்என்னாப்
பின்று சிந்தையன் பெயர்ந்தனன் நெடுமனை
பிற்படப் பெருமேருக்
குன்று குன்றிய தகையுற ஓங்கிய
கொற்றமா ளிகைதன்னில்
சென்று புக்கனன் இராவணற்கு எடுப்பரும்
கிரியெனத் திரள்தோளான். 298

294: தகைவில்லான்-தடையில்லாமல் செல்லும் அனுமான்.
296: மீன் உயர்த்தவன்-மீன் கொடியை உடைய மன்மதன்.

நிலம் துடித்தன நெடுவரை பொடித்தன
  நிருதர்தம் குலமாதர்
பொலந் துடித்தநுண் மருங்குல்போல் கண்களும்
  புருவமும் பொற்றேளும்
வலம் துடித்தன மாதிரம் துடித்தன
  தடித்தின்றி மதிவானம்
கலந் திடித்தன வெடித்தன பூரண
  மங்கல கலசங்கள். 299

புக்கு நின்றுதன் புலன்கொடு நோக்கினன் பொருவரும் திருஉள்ளம்
நெக்கு நின்றனன் நீங்கும்அந் தோஇந்த நெடுநகர்த் திருஎன்ஞ
எக்கு லங்களின் யாவரே ஆயினும் இருவினை எல்லோர்க்கும்
ஒக்கும் ஊழ்வினை யல்லது வலியதொன்று இல்எனஉணர்வுற்றன்.300

இராவணனை அனுமான் பார்த்தல்

நூற்பெ ருங்கடல் நுணங்கிய கேள்வியன்
  நோக்கினன் இயல்நோன்தாள்
வேற்பெ ருங்கடல் புடைபரந்து ஈண்டிய
  வெள்ளிடை வியன்கோயில்
பாற்பெ ருங்கடல் பன்மணிப் பஃறிரைப்
  பரப்புடைப் படர்வேலை
மாற்க ருங்கடல் விரிந்ததே அனையதோர்
  வனப்பினன் துயில்வானை. 301

குழவி ஞாயிறு குன்றிவர்ந்து அனையன
  குருமணி நெடுமோலி
இழைக ளோடுநின்று இளவெயில் எறித்திட
  இரவெனும் பொருள்வீய
முழைகொள் மேருவின் பொருட்டிடைக் கனகனை
  முருக்கிய முரண்சீயம்
தழைகொள் தோளொடு தலைபல பரப்பிமுன்
  துயில்வதோர் தகையானை. 302

ஆய பொற்றலத்து ஆய்வளை அரம்பையர் ஆயிரர் அணிநின்று
தூய பொற்கவ ரித்திரள் இயக்கிடச் சுழிபடு பசுங்காற்றின்
வீய கற்பகத் தேன்துளி விராயன வீழ்தொறும் நெடுமேனி
தீய நற்றெடிச் சீதையை நினைதொறும் உயிர்த்துயிர்தேய்வானை.303

குழந்தை வெண்மதிக் குடுமியன் நெடுவரை குறுக்கிய குலத்தோளைக்
கழிந்து புக்கிடை கரந்தன அனங்கன்வெங் கடுங்கணை பலபாய
உழந்த வெஞ்சமத்து உயர்திசை யானையின் ஒளிமருப்பு உற்றிற்ற
பழந்த மும்பினுக்கு இடைஇடை யேசில பசும்புண்கள் அசும்பூற.304

301: பஃறிரை-பல்திரை: பல அலைகள். பாற்கடல் படுக்கைக்கும், கருங்கடல் இராவணனுக்கும் உவமை.

302: கனகனை-இரணியனை. சீயம்-நரசிங்கமூர்த்தி.

சாந்த ளாவிய கலவைமேல் தவழ்வுறு தண்தமிழ்ப் பசுந்தென்றல்
ஏந்து காமவெங் கனலினுக்கு உமிழ்அதள் துருத்தியின் உயிர்ப்பேறக்
காந்தள் மெல்விரல் சனகிமேல் மனம்முதல் கரணங்கள் கடிதோடப்
பாந்தள் நீங்கிய முழைஎனக் குழைவுறு நெஞ்சுபாழ் பட்டானை. 305

வேறு

கொண்டபேர் ஊக்கம் மூளத் திசைதொறும் குறித்து மேல்நாள்
மண்டிய செருவின் வீரத் தோள்களால் வாரி வாரி
உண்டது தெவிட்டிப் பேழ்வாய்க் கடைகள்தோ றொழுகிப் பாயும்
அண்டர்தம் புகழின் தோன்றும் வெள்ளெயிற்று அமைதி யானை. 306

வெள்ளிவெண் சேக்கை வெந்து
பொறிஎழ வெதும்பு மேனி
புள்ளிவெண் மொக்குள் என்னப்
பொடித்துவேர் கொதித்துப் பொங்கக்
கள்ளவிழ் மாலைத் தும்பி
வண்டொடும் கரிந்து சாம்ப
ஒள்இணர் மாலை தீய
உயிர்க்கின்ற உயிர்ப்பி னானை. 307

தேவியல் நேமி யானின் சிந்தைமெய்த் திருவின் ஏகப்
பூவியல் அமளி மேலாப் பொய்உறக்கு உறங்கு வானைக்
காவியங் கண்ணி தன்பால் கண்ணிய காதல் நீரின்
ஆவியை உயிர்ப்பென் றேதும் அம்மியிட்டு அரைக்கின் றானை. 308

மிகும்தகை நினைப்பு முற்ற உருவெளிப் பட்ட வேலை
நகும்தகை முகத்தன் காதல் நடுக்குறு மெய்யன் வார்தேன்
உகும்தகை மொழியாள் முன்னம் ஒருவகை உறையுள் உள்ளே
புகுந்தனள் அன்றே என்று மயிர்ப்புறம் பொடிக்கின் றானை. 309

மென்தொழில் கலாப மஞ்ஞை வேட்கைமீக் கூரு மேனும்
குன்றொழித்து ஒருமாக் குன்றின் அரிதில்சேர் கொள்கை போல
வன்தொழில் கொற்றப் பொற்றோள் மணந்திடு மடந்தை மார்கட்கு
ஒன்றொழித்து ஒன்றின் ஏக அரியதோள் ஒழுக்கி னானை. 310

வேறு

தழுவா நின்ற கருங்கடல்மீது உதய கிரியில் சுடர்தயங்க
எழுவா னென்ன மின்இமைக்கும் ஆரம் புரளும் இயல்பிற்றாய்
முழுவா னவராய் உலகம்ஒரு மூன்றும் காக்கும் முதல்தேவர்
மழுவாள் நேமி குலிசத்தின் வாய்மை துடைத்த மார்பானை. 311

305: மனம் முதல் கரணங்கள்-மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற அந்தக் கரணங்கள்.

306: தோள்களால்-கைகளால்.

311: முதல் தேவர்-(இங்கு) சிவன், திருமால், இந்திரன் ஆகிய மூவரையும் குறிக்கிறது.

வேறு

தோடுழுதண் தார்வண்டும் திசையானை
மதம்துதைந்த வண்டும் துற்ற
மாடுழுத நறுங்கலவை வயக்களிற்றின்
சிந்துரத்தை மாறு கொள்ளக்
கோடுழுத மார்பானைக் கொலைஉழுத
வடிவேலின் கொற்றம் அஞ்சித்
தாள்தொழுத பகைவேந்தர் முடிஉழுத
தழும்பிருந்த சரணத் தானை. 312

வேறு

இராவணனைப் பார்த்த அனுமானின் கோபாவேசம்

கொண்டதோர் உருவம் மாயன் குறளினும் குறுக நின்றான்
திண்தலை பத்தும் தோள்கள் இருபதும் தெரிய நோக்கிக்
கண்டனன் காண்ட லோடும் கருத்தின்முன் காலச் செந்தீ
விண்டன கண்கள் கீண்டு வெடித்தன கீழும் மேலும். 313

வேறு

தோள்ஆற்றல் என்னாகும் மேல்நிற்கும் சொல்என்னும்
வாள்ஆற்று கண்ணாளை வஞ்சித்தான் மணிமுடிஎன்
தாள்ஆற்ற லால்இடித்துத் தலைபத்தும் தகர்த்தென்தன்
ஆள்ஆற்றல் காட்டேனேல் அடியேனாய் முடியேனே. 314

நடித்துவாழ் தகைமையதோ அடிமைதான் நன்னுதலைப்
பிடித்தவாள் அரக்கனார் யான்கண்டும் பிழைப்பரோ
ஒடித்துவான் தோள்அனைத்தும் தலைபத்தும் உதைத்துருட்டி
முடித்திவ்வூர் முடித்தால்மேல் முடிவதெலாம் முடிந்தொழிக. 315

என்றூக்கி எயிறுகடித்து இருகரனும் பிசைந்தெழுந்து
நின்றூக்கி உணர்ந்துரைப்பான் நேமியோன் பணியன்றால்
ஒன்றூக்கி ஒன்றிழைத்தல் உணர்வுடைமைக்கு உரித்தன்றால்
பின்தூக்கின் இதுசாலப் பிழையாகும் எனப்பெயர்ந்தான். 316

312: (இதன் பொருள்) தன் மார்பில் அணிந்த மலர்மாலைகளின் இதழ்களைக் கிண்டும் வண்டுகளும், திசையானையின் மதநீரில் மொய்க்கும் வண்டுகளும் நெருங்கவும், தன் உடம்பில் பூசிய சந்தனமும் திசையானைகளின் சிந்தூரப்பொட்டும் பரஸ்பரம் இடம் மாறிக் கொள்ளவும், அந்த யானைகளின் தந்தங்கள் குத்திக்கிளறிய மார்பைஉடையவனை, கொலைபுரியும் தன் வேலுக்குப் பயந்து பகையரசர்கள் முன்வந்து அடி வணங்கியதால், அவர்களின் கிரீடங்கள் தேய்த்துப் புண்ணாகித் தழும்பான பாதங்களை உடையவனை. மாடுழுத-தன் இடத்தே அழுந்தப் பூசிய.

313: மாயன் குறளினும்-திருமாலின் குள்ளமான வாமன அவதாரத்தைவிட.

314: மேல் நிற்கும் சொல்-நெடுங்காலமாக இருந்துவரும் புகழ். ஆள்ஆற்றல்-ஆண்மைத் திறம்.

ஆலம்பார்த்து உண்டவன்போல் ஆற்றல்அமைந் துளர்எனினும்
சீலம்பார்த்து உரியோர்கள் எண்ணுது செய்குவரோ
மூலம்பார்த் திடின்உலகை முற்றுவிக்கும் முறைத்தெனினும்
காலம்பார்த்து உயர்வேலை கடவாத கடல்ஒத்தான். 317

இற்றைப்போர்ப் பெருஞ்சீற்றம்
என்னேடு முடிந்திடுக
கற்றைப்பூங் குழலாளைச்
சிறைவைத்த கண்டகனை
முற்றப்போர் முடித்ததொரு
குரங்கென்ருல் முனிவீரன்
கொற்றப்போர்ச் சிலைத்தொழிற்குக்
குறைவுண்டாம் எனக்குறைந்தான். 318

அந்நிலையான் பெயர்ந்துரைப்பான் ஆய்வளைக்கை அணியிழையார்
இந்நிலையான் உடன்துயில்வார் உளரல்லர் இவன்நிலையும்
புன்நிலைய காமத்தால் புலர்கின்ற நிலைபூவை
நன்னிலையின் உள்என்னும் நலன்எனக்கு நல்குமால். 319

சீதையைக் காணுமல் அனுமான் வருந்துதல்

என்றெண்ணி ஈண்டினிஓர் பயன்இல்லை எனநினையாக்
குன்றன்ன தோளவன்தன் கோமனைபிற் படப்பெயர்ந்தான்
நின்றெண்ணி உன்னுவான் அந்தோஇந் நீள்நகரில்
பொன்துன்னும் மணிப்பூணுள் இலள்என்னப் பொருமினுன். 320

கொன்ருனே கற்பழியாக் குலமகளைக் கொடுந்தொழிலால்
தின்ருனே அப்புறத்தே சேர்த்தானே சிறைஅறியேன்
ஒன்ருனும் உணரகிலேன் மீண்டினிப்போய் என்உரைக்கேன்
பொன்ருத பொழுதெனக்குக் கொடுந்துயரம் போகாதால். 321

கண்டுவரும் என்றிருக்கும் காகுத்தன் கவிகுலக்கோன்
கொண்டுவரும் என்றிருக்கும் யான்இழைத்த கோள்இதுவால்
புண்டரிக நயனத்தான் பால்இன்னம் போவேனே
விண்டவரோடு உடன்வீயாது யான்வாளா விளிவேனே. 322

கண்ணியநாள் கழிந்துளவால் கண்டிலெனுல் கனங்குழையை
விண்அடைதும் என்ருரை ஆண்டிருத்தி விரைந்தயான்
எண்ணியது முடிக்ககிலேன் யான்முடியா திருப்பேனே
புண்ணியம்என் றெருபொருள்என் உழைநின்றும் போயதால். 323

318: முனிவீரன்-இராமன்.

323: என்ருரை-அங்கதன் முதலிய வானர வீரர்களை.

ஏழுநூ றேசனைசூழ்ந்து எயில்கிடந்தது இவ்விலங்கை
வாழுமா மன்னுயிர்யான் காணாத மற்றில்லை
ஊழியான் பெருந்தேவி ஒருத்தியையும் யான்காணேன்
ஆழிதாய் இடராழி இடையேவீழ்ந் தழிவேனோ. 324

வல்லரக்கன் தனைப்பற்றி வாயாறு குருதியுகக்
கல்அரக்கும் கரதலத்தால் காட்டென்று காண்கேனோ
எல்அரக்கும் அயில்நுதிவேல் இராவணனும் இவ்வூரும்
மெல்அரக்கின் உருகிவிழ வெந்தழல்இட் டேகுவனோ. 325

வானவரே முதலோரை வினவுவெனேல் வல்லரக்கன்
தான்ஒருவன் உளனாக உரைசெய்யும் தருக்கிலரால்
ஏனையர்கள் எங்குரைப்பார் எவ்வண்ணம் தெரிகேனோ
ஊன்அழிய நீங்காத உயிர்சுமந்த உணர்வில்லேன். 326

எருவைக்கு முதலாய சம்பாதி இலங்கையில்அத்
திருவைக்கண் டனன்என்றான் அவன்உரையும் சிதைந்ததால்
கருவைக்கும் நெடுநகரைக் கடலிடையே கரையாதென்
உருவைக்கொண்டு இன்னமும்நான் உளனாகி உழல்கேனோ. 327

வடித்தார்பூங் குழலாளை வானறிய மண்ணறியப்
பிடித்தான்இவ் அடல்அரக்கன் எனும்மாற்றம் பிழையாதால்
எடுத்தாழி இலங்கைதனை இருங்கடலின் இட்டிவனை
முடித்தாலே யான்முடிதல் முறைமன்ற என்றுணர்வான். 328

எள்உறையும் ஒழியாமல் யாண்டையினும் உளனாய்த்தன்
உள்உறையும் அழகனைப்போல் எம்மருங்கும் உலாவினான்
புள்உறைஉய் யானத்தை உறநோக்கி அயல்போவான்
கள்உறையும் மலர்ச்சோலை அயல்ஒன்று கண்ணுற்றான். 329

3. காட்சிப் படலம்

[அனுமான் அசோக வனத்தில் சீதையைக் கண்ட செய்தி பற்றிக் கூறும் பகுதி.]

மாடு நின்றஅம் மணிமலர்ச் சோலையை மருவித்
தேடி இவ்வழி காண்பெனேல் தீரும்என் சிறுமை
ஊடு கண்டிலென் எனில்பின்னர் உரியதொன் றில்லை
வீடு வேன்மற்றிவ் விலங்கல்மேல் இலங்கையை வீட்டி. 330

என்று சோலைபுக் கெய்தினன் இராகவன் தூதன்
ஒன்றி வானவர் பூமழை சொரிந்தனர் உவந்தார்
அன்று வாள்அரக் கன்சிறை அவ்வழி வைத்த
துன்றல் ஓதிதன் நிலையினைச் சொல்லுவான் துணிந்தாம். 331

அரக்கியரின் நடுவே சீதை இருந்த நிலை

வன்ம ருங்குல்வாள் அரக்கியர் நெருக்கஅங் கிருந்தாள்
கல்ம ருங்கெழுந்து என்றும்ஓர் துளிவரக் காணு
நன்ம ருந்துபோல் நலன்அற உணங்கிய நங்கை
மென்ம ருங்குல்போல் வேறுள அங்கமும் மெலிந்தாள். 332

துயில்எனக் கண்கள் இமைத்தலும் முகிழ்த்தலும் துறந்தாள்
வெயிலிடைத் தந்த விளக்கென ஒளியிலா மெய்யாள்
மயிலியல் குயில் மழலையாள் மான்இளம் பேடை
அயில்எ யிற்றுவெம் புலிக்குழாத்து அகப்பட்ட தன்னாள். 333

விழுதல் விம்முதல் மெய்யுற வெதும்புதல் வெருவல்
எழுதல் ஏங்குதல் இரங்குதல் இராமனை எண்ணித்
தொழுதல் சோருதல் துளங்குதல் துயர்உழந்து உயிர்த்தல்
அழுதல் அன்றிமற்று அயல்ஒன்றும் செய்குவ தறியாள். 334

தழைத்த பொன்முலைத் தடம்கடந்து அருவிபோய்த் தாழப்
புழைத்த போலநீர் நிரந்தரம் பொழிகின்ற பொலிவால்
இழைக்கும் நுண்ணிய மருங்குலாள் இணைநெடுங் கண்கள்
மழைக்கண் என்பது காரணக் குறியென வகுத்தாள். 335

அரிய மஞ்சினோடு அஞ்சனம் முதல்இவை அதிகம்
கரிய காண்டலும் கண்ணின்நீர் கடல்புகக் கலுழ்வாள்
உரிய காதலின் ஒருவரோடு ஒருவரை உலகில்
பிரிவெ னும்துயர் உருவுகொண் டால்அன்ன பிணியாள். 336

துப்பி னால்செய்த கைகொடு கால்பெற்ற துளிமஞ்சு
ஒப்பி னான்தனை நினைதொறும் நெடுங்கண்கள் உகுத்த
அப்பி னால்நனைந்து அருந்துயர் உயிர்ப்புடை யாக்கை
வெப்பி னால்புலர்ந்து ஒருநிலை உறாதமென் துகிலாள். 337

அரிது போகவோ விதிவலி கடத்தல்என்று அஞ்சிப்
பரிதி வானவன் குலத்தையும் பழியையும் பாராச்
சுருதி நாயகன் வரும்வரும் என்பதோர் துணிவால்
கருதி மாதிரம் அனைத்தையும் அளக்கின்ற கண்ணாள். 338

கமையி னாள்திரு முகத்தயல் கதுப்புறக் கதுவிச்
சுமையு டைக்கற்றை நிலத்திடைக் கிடந்ததூ மதியை
அமைய வாயில்பெய்து உமிழ்கின்ற அயில்எயிற்று அரவின்
குமையு றத்திரண் டொருசடை யாகிய குழலாள். 339

332: கல்மருங்கெழுந்து...போல்-ஈரமற்ற கல்லிலே முளைத்து, என்றும் ஒரு துளி நீர் கூடத் தன்மீது பட்டறியாத மருந்துப் பச்சிலையைப்போல்.

ஆவி யந்துகில் புனைவதொன் றன்றிவே றறியாள்
தூவி அன்னம்மென் புனலிடைத் தோய்கிலா மெய்யாள்
தேவு தெண்கடல் அமிழ்துகொண்டு அனங்கவேள் செய்த
ஓவி யம்புகை உண்டதே ஒக்கின்ற உருவாள். 310

கண்டி லன்கொலாம் இளவலும் கனைகடல் நடுவண்
உண்டி லங்கைஎன்று உணர்ந்திலர் உலகெலாம் ஒறுப்பான்
கொண்டி றந்தமை அறிகில ராம்எனக் குழையாப்
புண்தி றந்ததின் எரிநுழைந் தால்எனப் புகைவாள். 341

மாண்டு போயினன் எருவைகட்கு அரசன்மற் றினியார்
ஆண்டை என்நிலை அறிவுறுப் பார்கள்இப் பிறப்பில்
காண்ட லோஅரிது என்றுளம் விம்முறும் கலங்கும்
மீண்டு மீண்டுபுக்கு எரிநுழைந் தாலென மெலிவாள். 342

என்னை நாயகன் இளவலை எண்ணலா வினையேன்
சொன்ன வார்த்தைகேட்டு அறிவிலள் எனத்துறந் தானோ
முன்னை ஊழ்வினை முடிந்ததோ என்றென்று முறையால்
பன்னி வாய்புலர்ந்து உணர்வுதேய்ந்து ஆருயிர் பதைப்பாள். 343

அருந்தும் மெல்அடகு ஆர்இட அருந்தும்என்று அழுங்கும்
விருந்து கண்டபோது என்உறு மோஎன்று விம்மும்
மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று மயங்கும்
இருந்த மாநிலம் செல்அரித் திடவும்ஆண்டு எழாதாள். 344

வன்கண் வஞ்சனை அரக்கர்இத் துணைப்பகல் வையார்
தின்பர் என்இனிச் செயத்தக்கது என்றுதீர்ந் தானோ
தன்கு லப்பொறை தன்பொறை எனத்தணிந் தானோ
என்கொல் எண்ணுவேன் என்னும்அங்கு இராப்பகல் இல்லாள். 345

பெற்ற தாயரும் தம்பியும் பெயர்த்தும்வந் தெய்திக்
கொற்ற மாநகர் கொண்டெழுந் தார்களோ குறித்துச்
சொற்ற ஆண்டெலாம் உறைந்தன்றி அந்நகர் துன்னான்
உற்றது உண்டெனாப் படர்உழந்து உருதன உறுவாள். 346

341: கண்டிலன் கொலாம் இளவலும்-இலக்குவன், மாயமானைத் தொடர்ந்து சென்ற இராமனை இன்னும் சந்திக்கவில்லையோ? உலகெலாம் ஒறுப்பான் கொண்டிறந்தமை-உலகையெல்லாம் துன்பம் செய்யும் இராவணன் என்னை எடுத்துக் கொண்டு இப்பால் நீங்கியதை.

343 : சொன்ன வார்த்தை-மாயமானைப் பிடிக்க இராமன் சென்றிருந்தபோது, திடீரென ஓர் ஓலம் கேட்கவே, இலக்குவனையும் இராமன் சென்ற இடத்துக்குப் போகுமாறு சீதை சொல்ல, அதற்கு இலக்குவன் மறுக்க, உடனே அவனைச் சீதை கோபித்துக் கூறிய வார்த்தைகள். விபரம் ஆரணிய காண்டத்தில் காண்க.

346 : உற்றது உண்டெனா,-(தன்னை வந்து மீட்டுக்கொண்டு போக இயலாதவாறு) இராமனுக்கு ஏதோ துன்பம் நேர்ந்திருக்கிறது என்று.

முரன்எ னத்தகும் மொய்ம்பினேர் முன்பொரு தவர்போல்
வரனும் மாயமும் வஞ்சமும் வரம்பில வல்லார்
பொரநி கழ்ந்ததோர் பூசல்உண் டாம்எனப் பொருமாக்
கரன்எ திர்ந்தது கண்டன ளாம்எனக் கவல்வாள் 347

வேறு

தெம்ம டங்கிய சேண்நிலம் கைகயர்
தம்ம டந்தைஉன் தம்பிய தாம்என
மும்ம டங்கு பொலிந்த முகத்தினன்
வெம்ம டங்கலை உன்னி வெதும்புவாள். 348

மெய்த்தி ருப்பதம் மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந்து ஏகென்ற போதினும்
சித்தி ரத்தின் அலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்கும் முகத்தினை உன்னுவாள். 349

தேங்கு கங்கைத் திருமுடிச் செங்கணுன்
வாங்கு கோல வடவரை வார்சிலை
ஏங்கும் மாத்திரத்து இற்றிரண் டாய்விழ
வீங்கு தோளை நினைந்து மெலிந்துளாள். 350

இன்னல் அம்பர வேந்தற்கு இயற்றிய
பல்ந லம்பதி னுலாயி ரம்படை
கன்னல் மூன்றில் களப்படக் கால்வளை
வில்ந லம்புகழ்ந்து ஏற்றி வெதும்புவாள். 351

ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு எம்பிநின் தம்பிநீ
தோழன் மங்கை கொழுந்தி எனச்சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள். 352

347: முரன்–ஓர் அரக்கன்; திருமால் இவனைக் கொன்ருன். முன் பொருதவர்–முனூல் போரிட்ட கரன், தூடணன், திரிசிரா முதலியவர்கள். கண்டனளாம்–இப்போது நேரில் காண்பவளாம்.

350: ஏங்கும் மாத்திரத்து–(இராமனுல் வில்லை வளைக்க முடியுமா என்று சனகன்) மனம் சோர்ந்த போது.

351: அம்பர வேந்தற்கு–இந்திரனுக்கு. பதினுலாயிரம்படை–கரன், தூடணன் முதலியோருடன் வந்த பதினுலாயிரம் படை.

352: "ஏழை ஏதலன் கீழ்மகன் என்னுது,
இரங்கி மற்றவற்கு இன்னருள் சுரந்து
மாழை மான்மட நோக்கி உன்தோழி
உம்பி எம்பிஎன்று ஒழிந்திலை உகந்த
தோழன் நீஎனக்கு இங்கொழி என்ற
சொற்கள் வந்தடி யேன்மனத் திருந்திட
ஆழி வண்ணநின் அடியிணை அடைந்தேன்
அணி பொழில்திரு அரங்கத்தம் மானே"

என்று திருமங்கையாழ்வாரும் பாடியுள்ளார்.

மெய்த்த தாதை விரும்பினன் நீட்டிய
கைத்த லங்களைக் கைகளின் நீக்கிவேறு
உய்த்த போது தருப்பையில் ஒண்பதம்
வைத்த வேதிகைச் செய்தி மனம்கொள்வாள். 353

உரம்கொள் தேமலர்ச் சென்னி உரிமைசால்
வரம்கொள் பொன்முடி தம்பி வனைந்திலன்
திரங்கு செஞ்சடை கட்டிய செய்வினைக்கு
இரங்கி ஏங்குவ தெண்ணி இரங்குவாள். 354

பரித்த செல்வம் ஒழியப் படரும்நாள்
அருத்தி வேதியர்க்கு ஆன்குலம் ஈந்துஅவர்
கருத்தின் ஆசைக் கரையின்மை கண்டுஇறை
சிரித்த செய்கை நினைந்தழும் செய்கையாள். 355

மழுவின் வாளினின் மன்னரை மூவெழு
பொழுதில் நூறிப் புலவுறு புண்ணின்நீர்
முழுகி னுன்தவம் மொய்ம்பொடு மூரிவில்
தழுவும் மேன்மை நினைந்துயிர் சாம்புவாள். 356

ஏக வாளிஅவ் இந்திரன் செம்மல்மேல்
போக ஏவி அதுகண் பொடித்தநாள்
காகம் முற்றும்ஓர் கண்ணில ஆக்கிய
வேக வென்றியைத் தன்தலை மேற்கொள்வாள். 357

வெவ்வி ராதனை மேல்வரும் தீவினை
வவ்வி மாற்றரும் சாபமும் மாற்றிய
அவ்இ ராமனை உன்னித்தன் ஆருயிர்
செவ்இ ராதுணர்வு ஒய்ந்துடல் தேம்புவாள். 358

---

353 : தாதை-சனகன். கைத்தலங்களைக் கைகளின் நீக்கி-சீதையின் கைகளைச் சனகன் கைகளினின்றும் நீக்கி (இராமன் தன் கையில் பிடித்துக்கொண்டு).

354 : தம்பி-பரதன்.

355 : படரும் நாள்-காட்டுக்குப் புறப்படும் நாள்.

356 : மூவெழு பொழுதில்-இருபத்தொரு தலைமுறைகளில். புண்ணின் நீர்-ரத்தம். முழுகினன்-பரசுராமன்.

357 : இந்திரன் செம்மல்-இந்திரனுடைய மகனான ஜயந்தன். இவன் காகம்போல் வடிவெடுத்து வந்து சீதையின் மார்பில் குத்த, இராமன் கோபம்கொண்டு ஒரு புல்லை எடுத்து ஏவ, அந்தப் புல் காகாசுரனைத் தொடர்ந்து சென்று அவனது ஒரு கண்ணைக் குத்தி அழித்ததால், அன்றுமுதல் காக்கைகளுக்கெல்லாம் ஒற்றைக்கண் பார்வை ஏற்பட்டது. இந்த நிகழ்ச்சி பற்றியும் 355-ம் பாட்டில் குறிக்கப்படும் நிகழ்ச்சி பற்றியும் முந்திய காண்டங்களில் கூறப்படவில்லை. எனவே இந்த இரண்டு பாடல்களும் செருகப்பட்ட பாடல்களாக இருக்கக்கூடும். இல்லையென்றால், முந்திய காண்டங்களில் கம்பர் பாடியிருந்தும் அப்பகுதிகள் நமக்குக் கிடைக்காமல் அழிந்திருக்கக்கூடும்.

358 : வெவ்விராதனை......மாற்றிய முன்னொரு சமயம் விராதன் என்ற அரக்கன் சீதையைத் தூக்கிக் கொண்டு ஓட, அவனை இராமனும், இலக்குவனும் வெட்டிக் கொன்ருர்கள். அப்பொழுது அவன் வேண்டுகோளுக்கு இணங்க, அவனுக்கு இடப்பட்டிருந்த சாபத்தைப் போக்கி நற்கதியை அருளினன் இராமன். இதன் விபரம் ஆரணிய காண்டம் விராதன் வதைப் படலத்தில் காண்க. செவ்இராது-செவ்வனே இராமல்.

வேறு

இருந்தனள் திரிசடை என்னும் இன்சொலில்
திருந்தினுள் ஒழியமற் றிருந்த தீவினை
அருந்திறல் அரக்கியர் அல்லும் நள்உறப்
பொருந்தலும் துயில்நறைக் களிபொ ருந்தினுர். 359

திரிசடையிடம் சீதை தனக்கு நேர்ந்த நல்ல நிமித்தங்களைக் கூறுதல்

ஆயிடைத் திரிசடை என்னும் அன்பினுள்
தாயினும் இனியவள் தன்னை நோக்கினுள்
தூயைநீ கேட்டிஎன் துணைவி யாம்எனு
மேயதோர் கட்டுரை விளம்பல் மேயினுள். 360

நலம்துடிக் கின்றதோ நான்செய் தீவினைச்
சலம்துடித்து இன்னமும் தருவ துன்மையோ
பொலந்துடி மருங்குலாய் புருவம் கண்முதல்
வலம்துடிக் கின்றில வருவது ஓர்கிலேன். 361

முனியொடு மிதிலையின் முதல்வன் வந்தநாள்
துனிஅறு புருவமும் தோளும் நாட்டமும்
இனியன துடித்தன ஈண்டும் ஆணடென
நனிதுடிக் கின்றன ஆய்ந்து நல்குவாய். 362

மறந்தனென் இதுவும்ஓர் மாற்றம் கேட்டியால்
அறந்தரு சிந்தைஎன் ஆவி நாயகன்
பிறந்துபார் முழுவதும் தம்பி யேபெறத்
துறந்துகான் புகுந்தநாள் வலம் துடித்ததால். 363

நஞ்சனை யான்வனத்து இழைக்க நண்ணிய
வஞ்சனை நாள்வலம் துடித்த வாய்மையால்
எஞ்சலில் நன்மையால் இடம் துடிக்குமால்
அஞ்சல்என்று இரங்குவாய் அடுப்பது யாதென்ருள். 364

359: *திரிசடை*-இவள் விபீஷணனின் மகள். *சீதையிடம் மிகுந்த அன்புகொண்ட உத்தமி.*

361: இன்னமும் தருவதுன்மையோ-இன்னமும் துன்பத்தைத் தருவது உண்மையோ. வலம் துடிக்கின்றில-வலது கண், வலது புருவம், வலது தோள் ஆகியவை துடிக்கவில்லை; இடது பக்கமே துடிக்கிறது. பெண்களுக்கு வலது பக்கமும், ஆண்களுக்கு இடது பக்கமும் துடிப்பது கெட்ட அறிகுறியாகும். இரு சாராருக்கும் மாறித் துடிப்பது நல்ல அறிகுறியாகும்.

என்றலும் திரிசடை இயைந்த சோபனம்
நன்றிது நன்றெனு நயந்த சிந்தையாள்
உன்துணைக் கணவனைக் உறுவது உண்மையால்
அன்றியும் கேட்டிஎன்று அறைதல் மேயினுள். 365

உன்நிறம் பசப்புற உயிர் உயிர்ப்புற
இன்நிறத் தேனிசை இனிய நண்பினுல்
மின்நிற மருங்குலாய் செவியின் மெல்லென
பொன்னிறத் தும்பிவந்து ஊதிப் போயதால். 366

ஆயது தேரின்உன் ஆவி நாயகன்
ஏயது தூதுவந்து எதிர்தல் உண்மையால்
தீயது தீயவர்க்கு எய்தல் திண்ணம்என்
வாயது கேள்என மறித்தும் கூறுவாள். 367

துயில்இலை ஆதலின் கனவு தோன்றல
அயல்விழி அன்னைகண் அமைய நோக்கினேன்
பயில்வன பழுதில பழுதுஇந் நாடென
வெயிலினும் மெய்என உரைத்தல் மேயினுள். 368

எண்ணெய்பொன் முடிதொறும் இழுகி ஏறிய
திண்ணெடுங் கழுதைபேய் பூண்ட தேரின்மேல்
அண்ணல்அவ் இராவணன் அரத்த ஆடையன்
நண்ணினன் தென்புலம் நவைஇல் கற்பினுய். 369

மக்களும் சுற்றமும் மற்று ளோர்களும்
புக்கனர் அப்புலம் போந்த தில்லையால்
சிக்கற நோக்கினென் தீய இன்னமும்
மிக்கன கேட்டியால் விளைவு கூறுவேன். 370

ஆண்தகை இராவணன் வளர்க்கும் அவ்வனம்
ஈண்டின இறந்தவால் இனங்கொள் செஞ்சிகைத்
தூண்டரும் மணிவிளக்கு அழலும் தொல்மனை
கீண்டதால் வானஏறு எறியக் கிழைநாள். 371

பிடிமதம் பிறந்தன பிறங்கு பேரியும்
இடியென முழங்குமால் இரட்டல் இன்றியே
தடியுடை முகிற்குலம் இன்றித் தாவில்வான்
வெடிபட அதிருமால் உதிரும் மீன்எனலாம். 372

---

368 : துயில் இலை-உனக்குத் தூக்கம் இல்லை. அயில் விழி அன்னை-கூரிய விழி படைத்த சீதையே. கண் அமைய நோக்கினேன்-கண்கள் சிறிது அயர்ந்து மூடிக் கொண்ட மாத்திரத்தில் கனவு கண்டேன். பயில்வன பழுதில-தோன்றும் கனவுகள் பொய்ப்பதில்லை. பழுது இந்நாடென-இந்நாட்டுக்கு அழிவு என்று. வெயிலினும் மெய் என-கண்ணுரக் காணும் வெய்யிலைவிட உண்மை என்று.

371: வான ஏறு-இடி.

372: பிடிமதம் பிறந்தன-(கெட்ட அடையாளமாக) பெண்யானைக்கு மதநீர் ஒழுகியது.

வில்பகல் இன்றியே இரவு விண்டற
எல்பக எரிந்துள தென்னத் தோன்றுமால்
மல்பக மலர்ந்ததோள் மைந்தர் சூடிய
கற்பக மாலையும் புலவு காலுமால். 373

திரியுமால் இலங்கையும் மதிலும் திக்கெலாம்
எரியுமால் கந்தர்ப்ப நகரம் எங்கணும்
தெரியுமால் மங்கல கலசம் சிந்துமால்
விரியுமால் விளக்கினை விழுங்கு மால்இருள். 374

தோரணம் முறிந்தன துணியச் சூழிமால்
வாரணம் முறியுமால் வலத்த வாள்மருப்பு
ஆரண மந்திரத்து அறிஞர் நாட்டிய
பூரண குடத்துநீர் நறவின் பொங்குமால். 375

விண்தொடர் மதியினைப் பிளந்து மின்எழும்
புண்தொடர் குருதியின் பொழியும் போர்மழை
தண்டொடு திகிரிவாள் தனுஎன்று இன்னன
மண்டுஅமர் புரியுமால் ஆழி மாறுற. 376

மங்கையர் மங்கலத் தாலி மற்றையோர்
அங்கையின் வாங்குவார் எவரும் அன்றியே
கொங்கையின் வீழ்ந்தன குறித்த ஆற்றினல்
இங்கிதன் அற்புதம் இன்னும் கேட்டியால். 377

மன்னவன் தேவிஅம் மயன் மடந்தைதன்
பின்அவிழ் ஓதியும் பிறங்கி வீழ்ந்தன
துன்னருஞ் சுடர்சுடச் சுறுக்கொண் டேறின
இன்னல்உண் டெனும்இதற்கு ஏது ஈதென. 378

என்றனள் இயம்பிவேறு இசைப்பக் கேட்டியால்
இன்றுஇவண் இப்பொழுது இயைந்தது ஓர்கனு
வன்துணைக் கோளரி இரண்டு மாறிலாக்
குன்றிடை உழுவையங் குழுக்கொண்டு ஈண்டியே. 379

---

373. வில்பகல்-பிரகாசமான பகல் நேரம்.எல்பக எரிந்துள தென்னத்தோன்றுமால்-இரவில் சூரியன் எரிப்பதாகத் தோன்றும்.

374. கந்தர்ப்ப...தெரியுமால் - கந்தர்வ நகரம் ஆகாயத்தில் எல்லாத் திசைகளிலும் காட்சியளிக்கும். அது அரசனுக்கும் நாட்டுக்கும் அச்சத்தை அளிக்கும் என்பர்.

376: குருதியின் பொழியும் போர்மழை—ஆகாயத்தைப் போர்த்த மேகங்கள் ரத்த மழை பொழியும்.

378: மயன் மடந்தை-மண்டோதரி; இவள் இராவணனுடைய பட்டமகிஷி.

379, 380: இந்த இரண்டு பாட்டுக்களிலும் விவரிக்கப்படும் கனவில் வரும் சிங்கங்கள் இரண்டும் இராம இலக்குவர்களையும், புலிக்கூட்டம் வானரப்படையையும், மதயானைகள் அரக்கர்களையும், வனம் இலங்கையையும், மாறிலாப்புரம் என்பது விரோதிகள் இல்லாத அயோத்தியையும், மயில் சீதையையும் குறிக்கின்றன.

உரம்பொரு மதகரி உறையும் அவ்வனம்
நிரம்புற வளைந்தன நெருக்கி நேர்ந்தன
வரம்பறு பிணம்படக் கொன்ற மாறிலாப்
புரம்புக மீண்டதோர் மயிலும் போயதால். 380

ஆயிரம் திருவிளக்கு அமைய நாட்டிய
சேயொளி விளக்கம்ஒன்று ஏந்திச் செய்யவள்
நாயகன் திருமனை நின்று நண்ணுதல்
மேயினள் வீடணன் கோயில் மென்சொலாய். 381

பொன்மனை புக்கஅப் பொருவில் போதினில்
என்னைநீ உணர்த்தினை முடிந்த தில்என
அன்னையே அதன்குறை காண்என்று ஆயிழை
இன்னமும் துயில்கென இருகை கூப்பினாள். 382

இவ்விடை அண்ணல்அவ் இராமன் ஏவிய
வெவ்விடை அனையபோர் வீரத் தூதனும்
அவ்விடை எய்தினன் அரிதின் நோக்குவான்
நொவ்விடை மடந்தைதன் இருக்கை நோக்கினான். 383

அவ்வயின் அரக்கியர் அறிவுற்று அம்மலர்
செவ்வைஇல் துயில்நமைச் செய்த தீங்கென
எவ்வயின் மருங்கினும் எழுந்து வீங்கினார்
வெவ்அயில் மழுஎழுச் சூலம் ஏந்தினார். 384

வயிற்றிடை வாயினர் வளைந்த நெற்றியில்
குயிற்றிய விழியினர் கொடிய நோக்கினர்
எயிற்றினுக்கு இடைஇடை யானை யாளிபேய்
துயில்கொள்வெம் பிலன்எனத் தொட்ட வாயினர். 385

ஒருபது கையினர் ஒற்றைச் சென்னியர்
இருபது தலையினர் இரண்டு கையினர்
வெருவரு தோற்றத்தர் விகட வேடத்தர்
பருவரை எனமுலை பலவும் நாற்றினர். 386

சூலம்வாள் சக்கரம் தோட்டி தோமரம்
காலவேல் கப்பணம் கற்ற கையினர்
ஆலமே உருவுகொண் டனைய மேனியார்
பாலமே தரித்தவன் வெருவும் பான்மையார். 387

381: செய்யவள்-ராஜ்யலக்ஷ்மி. நாயகன்-இராவணன்.

382: என்னை நீ உணர்த்தினை முடிந்ததில்—என்னைத் தூக்கத்திலிருந்து நீ எழுப்பி விட்டாய்; கனவு முடியவில்லை. அன்னையே-திரிசடையே. அதன் குறை—குறைக் கனவையும்.

384: அறிவுற்று - கண்விழித்து.

387. பாலமே தரித்தவன் - பிரமனின் கபாலத்தை ஏந்திய சிவன்,

கரிபரி வேங்கைமாக் கரடி யாளிபேய்
அரிநரி நாயென அணிமு கத்தினர்
வெரிந்உறு முகத்தினர் விழிகள் மூன்றினர்
புரிதரு கொடுமையர் புகையும் வாயினர். 388

எண்ணினுக்கு அளவிடல் அரிய ஈட்டினர்
கண்ணினுக்கு அளவிடல் அரிய காட்சியர்
பெண்எனப் பெயர்கொடு திரியும் பெற்றியர்
துண் எனத் துயில்உணர்ந்து எழுந்து சுற்றினர். 389

ஆயிடை உரைஅழிந்து அழகன் தேவியும்
தீஅனே யவர்முகம் நோக்கித் தேம்பினுள்
நாயகன் தூதனும் விரைவில் நண்ணினுன்
ஒய்விலன் உயர்மரப் பணையின் உம்பரான். 390

அரக்கியர் அயில்முதல் ஏந்தும் அங்கையர்
நெருக்கிய குழுவினர் துயிலும் நீங்கினர்
இருக்குநர் பலர்இதற்கு ஏது என்எனுப்
பொருக்கென அவர்இடைப் பொருந்த நோக்கினுன். 391

சீதையை அனுமான் காணுதல்

விரிமழைக் குலம்கிழித்து ஒளிரும் மின்எனக்
கருநிறைத் தரக்கியர் குழுவில் கண்டனன்
குருநிறத்து ஒருதனிக் கொண்ட லாம்எனத்
திருவுறப் பொலியும்ஓர் செல்வன் தேவியை. 392

கடக்கரும் அரக்கியர் காவல் சுற்றுளாள்
மடக்கொடி சீதையாம் மாத ரேகொலாம்
கடல்துணை நெடியதன் கண்ணின் நீர்ப்பெருந்
தடத்திடை இருந்ததோர் அன்னத் தன்மையாள். 393

வீடின தன்றுஅறன் யானும் வீகிலேன்
தேடினென் கண்டனென் தேவி யேஎனு
ஆடினன் பாடினன் அங்கும் இங்கும்பாய்ந்து
ஓடினன் உலாவினன் உவகைத் தேன்உண்டான். 394

எள்ளரும் உருவின்நல் இலக்க ணங்களும்
வள்ளல்தன் உரையொடு மாறு கொண்டில
கள்ளவாள் அரக்கன்அக் கமலக் கண்ணனுர்
உள்ளுறை உயிரினை ஒளித்து வைத்தவா. 395

395: எள்ளரும்...கொண்டில—சீதையின் அடையாளங்கள் இராமன் வருணித்ததற்குச் சற்றும் மாறுபடாமல் இருந்தன. கள்ளவாள்...வைத்தவா—இராவணன், இராமனுடைய உயிரை (சீதையை) ஒளித்து வைத்த விதம்தான் என்னே!

மூவகை உலகையும் முறையின் நீக்கிய
பாவியர் உயிர்கொள்வான் இழைத்த பண்பினுல்
ஆவதே ஐயம்இல் அரவின் நீங்கிய
தேவனே அவன்இவள் கமலச் செல்வியே. 396

மாசுண்ட மணியனுள் வயங்கு வெங்கதிர்த்
தேசுண்ட திங்களும் என்னத் தேய்ந்துளாள்
காசுண்ட கூந்தலாள் கற்பும் காவலும்
ஏசுண்ட தில்லையால் அறத்துக்கு ஈறுண்டோ. 397

புனைகழல் இராகவன் புயத்தை யோபுகழ்
வனிதையர் திலகத்தின் மனத்தின் மாண்மையோ
வனைகழல் அரசரின் வண்மை வீக்கிடும்
சனகர்தம் குலத்தையோ யாதைச் சாற்றுகேன். 398

தேவரும் பிழைத்திலர் தெய்வ வேதியர்
ஏவரும் பிழைத்திலர் அறமும் ஈறின்ருல்
யாவதிங்கு இனிச்செயல் அரியது எம்பிராற்கு
ஆவஎன் அடிமையும் பிழைத்தின் ுரும்அன்ருே. 399

கேழ்இலாள் நிறைஇறை கீண்ட தாம்எனின்
ஆழியான் முனிவெனும் ஆழி மீக்கொள
ஊழியின் இறுதிவந்து உறும்என்று உன்னினேன்
வாழிய உலகினி வரம்பில் நாளெலாம். 400

வெங்கனல் முழுகியும் புலன்கள் வீக்கியும்
நுங்குவ அருந்துவ நீக்கி நோற்றவர்
எங்குளர் குலத்தின்வந்து இல்லின் மாண்புடை
நங்கையர் மனத்தவம் நவிலற் பாலதோ. 401

பேணநோற் றதுமனைப் பிறவி பெண்மைபோல்
நாணம்நோற்று உயர்ந்தது நங்கை தோன்றலால்
மாணநோற்று ஈண்டிவள் இருந்த வாறெலாம்
காணநோற் றிலன்அவன் கமலக் கண்களால். 402

முனிவர்கள் அருந்தவர் முறையின் நின்றுளார்
இனிஇவள் தானலது யாரும் இன்மையால்
தனிமையும் பெண்மையும் தவமும் இன்னதே
வனிதையர்க்கு ஆகநல் அறத்தின் மாண்பெலாம். 403

396: முறையின் நீக்கிய–நன்னெறியினின்றும் தீநெறிக்கு மாற்றிய. பாவியர்... ஆவதே–அரக்கர்களுடைய உயிரைப் பறிப்பதற்காக மேற்கொண்ட தன்மையினுல் (எடுத்த அவதாரத்தினுல்) இப்படியெல்லாம் ஆகக் கூடியதுதான்.

399: எம்பிராற்கு ஆவ–இராமனுக்கு எல்லாம் நிறைவேறும்.

தருமமே காத்ததோ சனகன் நல்வினைக்
கருமமே காத்ததோ கற்பின் காவலோ
அருமையே அருமையே யார்இது ஆற்றுவார்
ஒருமையே எம்மனோர்க்கு உரைக்கற் பாலதோ. 404

செல்வமோ அதுஅவர் தீமை யோஇது
அல்லினும் பகலினும் அமரர் ஆட்செய்வார்
ஒல்லுமோ ஒருவர்க்குஈது உறுகண் யாதுஇனி
வெல்லுமோ தீவினை அறத்தை மெய்ம்மையால். 405

என்றிவை இனையன எண்ணி வண்ணவான்
பொன்திணி நெடுமரப் பொதும்பர் புக்குஅவண்
நின்றனன் அவ்வழி நிகழ்ந்தது என்எனில்
துன்றுபூஞ் சோலைவாய் அரக்கன் தோன்றினன். 406

4. நிந்தனைப் படலம்

[இராவணனைச் சீதை நிந்தித்துப் பேசியதைப் பற்றிக் கூறும் பகுதி]

சிகரவண் குடுமி நெடுவரை எவையும்
 ஒருவழி திரண்டன சிவண
மகரிகை வயிர குண்டலம் அலம்பும்
 திண்திறல் தோள்புடை வயங்கச்
சகரவேலையின்நீர் தழுவிய கதிரின்
 தலைதொறும் தலைதொறும் தயங்கும்
வகையபன் மகுடம் இளவெயில் எறிப்பக்
 கங்குலும் பகல்பட வந்தான். 407

உருப்பசி உடைவாள் எடுத்தனள் தொடர
 மேனகை வெள்ளடை உதவச்
செருப்பினைத் தாங்கித் திலோத்தமை செல்ல
 அரம்பையர் குழாம்புடை சுற்றக்
கருப்புரம் சாந்தம் கலவையும் மலரும்
 கலந்துமிழ் பரிமள கந்தம்
மருப்புடைப் பொருப்புஏர் மாதிரக் களிற்றின்
 வரிக்கைவாய் மூக்கிடை மடுப்ப. 408

நானநெய் விளக்கம் நாலிரு கோடி
 நங்கையர் அங்கையின் எடுப்ப
மேல்நிவந் தெழுந்த மணியுடை அணியின்
 விரிகதிர் இருளெலாம் விழுங்கக்

கால்முதல் தொடர்ந்த நூபுரம் சிலம்பக்
  கிண்கிணி கலையொடும் கலிப்பப்
பால்நிறத்து அன்னக் குழாம்படர்ந் தென்னப்
  பற்பல மழலையும் பகர. 409

அந்தரம் புகுந்த துண்டென முனிவுற்று
  அருந்துயில் நீங்கினன் ஆண்டைச்
சந்திர வதனத்து அருந்ததி இருந்த
  தண்ணறுஞ் சோலையின் தனையோ
மந்திரம் யாதோ யாரொடும் போமோ
  என்றுதம் மனம்மறு குதலால்
இந்திரன் முதலோர் இமைப்பிலா நாட்டம்
  முகிழ்த்தனர் உயிர்ப்புஅவிந் திருப்ப. 410

நீல்நிறக் குன்றின் நெடிதினில் தாழ்ந்த
  நீத்தவெள் அருவியின் நிமிர்ந்த
பால்நிறப் பட்டின் மாலைஉத் தரியம்
  பசப்புறப் பசும்பொன்ஆ ரத்தின்
மாநிற மணிகள் இடையுறப் பிறழ்ந்து
  வருகதிர் இளவெயில் பொருவச்
சூல்நிறக் கொண்மூக் கிழித்திடை துடிக்கும்
  மின்னென மார்பின்நூல் விளங்க. 411

தோள்தொறும் தொடர்ந்த மகரவாய் வயிரக்
  கிம்புரி வலயமாச் சுடர்கள்
நாள்தொறும் சுடரும் கலிகெழு விசும்பின்
  நாளொடு கோளினை நக்கத்
தாள்தொறும் தொடர்ந்த தழங்குபொற் கழலின்
  தகையொளி நெடுநிலம் தடவக்
கேள்தொறும் தொடர்ந்த முறுவல்வெண் நிலவின்
  முகமலர் இரவினும் கிளர. 412

தன்நிறத் தோடு மாறுதந்து இமைக்கும்
  நீவிஅம் தழைபட உடுத்த
பொன்நிறத் தூசு கருவரை மருங்கில்
  தழுவிய புதுவெயில் பொருவ
மின்நிறக் கதிரின் சுற்றிய பசும்பொன்
  விரல்தலை அவிர்ஒளிக் காசின்
கல்நிறக் கற்றை நெடுநிழல் பூத்த
  கற்பக முழுவனம் கவின. 413

---

410 : அந்தரம்–தீமை; விபரீதம். அருந்ததி–சீதை. சோலையின் தனையோ–இராவணனின் கோபம் சோலை வரையிலும் போய் நிற்குமோ. யாரொடும் போமோ–யார்வரையிலும் போய் முடியுமோ.

சன்னவீ ரத்த கோவைவெண் தரளம்
ஊழியின் இறுதியில் தனித்த
பொன்நெடு வரையில் தொற்றிய கோளும்
நாளும்ஒத்து இடையிடை பொலிய
மின்னொளி மௌலி உதயமால் வரையின்
மீப்படர் வெங்கதிர்ச் செல்வர்
பன்னிரு வரினும் இருவரைத் தவிர்வுற்று
உதித்ததோர் படிஒளி பரப்ப. 414

பயில்எயிற்று இரட்டைப் பணைமருப்பு ஒடியப்
படியினில் பரிபவம் சுமந்த
மயில்அடித்து ஒழுக்கின் அனையமா மதத்த
மாதிரக் காவல்மால் யானை
கயிலையின் திரண்ட முரண்தொடர் தடந்தோள்
கனகனது உயர்வரம் கடந்த
அயில்எயிற்று அரியின் சுவடுதன் கரத்தால்
அளைந்தமாக் கரியின்நின்று அஞ்ச. 415

அங்கயல் கருங்கண் இயக்கியர் துயக்கில்
அரம்பையர் விஞ்சையர்க்கு அமைந்த
நங்கையர் நாக மடந்தையர் சித்த
நாரியர் அரக்கியர் முதலாக்
குங்குமக் கொம்மைக் குவிமுலை கனிவாய்
கோகிலம் துயர்உறும் குதலை
மங்கையர் ஈட்டம் மால்வரை தழீஇய
மஞ்ஞையம் குழுஎன வயங்க. 416

தொளையுறு புழைவேய்த் தூங்கிசைக் கானம்
துயல்வுறுது ஒருநிலை தொடர
இளையவர் மிடறும் இந்நிலை இசைப்பக்
கின்னரர் முறைநிறுத் தெடுத்த
கிளையுறு பாடல் சில்லரிப் பாண்டில்
தழுவிய முழவொடு கெழுமி
அளைஉறை அரவும் அமுதவாய் உகுப்ப
அண்டமும் வையமும் அளப்ப. 417

அன்னபூஞ் சதுக்கம் சாமரை உக்கம்
ஆதியாம் வரிசையின் அமைந்த
உன்னரும் பொன்னின் மணியினில் புனைந்த
இழைக்குலம் உழைக்குலம் அனைய

---

414 : பொன்நெடு வரை-மேரு மலை. தனித்த-தனித்து நின்ற.

415 : மயில் அடித்து ஒழுக்கின்–மயிலின் கால் விரல்களைப்போல மூன்று பிரிவாக (மதநீர் பெருக்கிய).

மின்னிடை செவ்வாய் குவிமுலை பணைத்தோள்
வீங்குதேர் அல்குலார் தாங்கி
நன்னிறக் காரின் வரவுகண்டு உவக்கும்
நாடக மயிலென நடப்ப. 418

இந்திரி நெறியின் தாக்குறு கருவி
தூக்கினர் எழுவிதச் சுதியின்
மூந்துறு குணிலோடு இயைவுறு குறட்டின்
சில்லரிப் பாண்டிலின் முறையின்
மந்திர கீதத் திசைப்பதம் தொடர
வகையுறு கட்டளை வழாமல்
அந்தர வானத் தரம்பையர் கரும்பின்
பாடலார் அருகுவந் தாட. 419

அந்தில்வேள் அனங்கன் அழல்படத் துரந்த
அயில்முகப் பகழிவாய் அறுத்த
வெந்துறு புண்ணில் வேல்நுழைந் தென்ன
வெண்மதிப் பசுங்கதிர் விரவ
மந்தமா ருதம்போய் மலர்தொறும் வாரி
வயங்குநீர் மாரியின் வருந்தேன்
சிந்துநுண் துளியின் சீகரத் திவலை
உருக்கிய செம்பெனத் தெறிப்ப. 420

இழைபுரை மருங்குல் இறும்இறும் எனவும்
இறுகலா வனமுலை இரட்டை
உழைபுகு செப்பின் ஒளிதர மறைத்த
உத்தரி யத்தினர் ஒல்கிக்
குழைபொரு கமலம் கோட்டினர் நோக்கும்
குறுநகைக் குமுதவாய் மகளிர்
மழைபுரை தடங்கண் செங்கடை ஈட்டம்
மார்பினும் தோளினும் மலைய. 421

மாலையும் சாந்தும் கலவையும் பூணும்
வயங்குநுண் தூசொடு காசும்
சோலையின் தொகுதிக் கற்பகத் தருவும்
நிதிகளும் கொண்டுபின் தொடரப்
பாலின்வெண் பரவைத் திரைகருங் கிரிமேல்
பரந்தெனச் சாமரை பதைப்ப
வேலைநின்று உயரும் முயல்இல்வெண் மதியின்
வெண்குடை மீதுற விளங்க. 422

---

418 : வரிசையின் அமைந்த-முறைப்படி அமைந்தவற்றை (த் தாங்கி.)

421 : குழைபொரு கமலம் கோட்டினர் நோக்கும்-குண்டலங்களைத் தொடும் தாமரை போன்ற கண்களைக் கோணிப் பார்க்கின்றவர்களான.

ஆர்தரும் அகழி அருவரை இலங்கை
அடிபெயர்த்து இடுதொறும் அழுந்தி
நேர்தரும் பரவைப் பிறழ்திரை தவழ்ந்து
நெடுந்தடந் திசைதொறும் நிமிரச்
சார்தரும் கடுவின் எயிறுடைப் பகுவாய்
அனந்தனும் தலைதடு மாற
மூரிநீர் ஆடை இருநில மடந்தை
முதுகுஉளுக் குற்றனள் முரல. 423

கேடகத் தோடு மழுஎழுச் சூலம்
அங்குசம் கப்பணம் கிடுகோடு
ஆடகச் சுடர்வாள் அயில்சிலை குலிசம்
முதலிய ஆயுதம் அனைத்தும்
தாடகைக்கு இரட்டி எறுழ்வலிக்கு அமைந்த
தகைமையர் தடவரை பொறுக்கும்
சூடகத் தடக்கைச் சுடுசினத்து அடுபோர்
அரக்கியர் தலைதொறும் சுமப்ப. 424

விரிதளிர் முகைபூக் கொம்புஅடை முதல்வேர்
மேம்படு மணிபொனால் செய்த
தருஉயர் சோலை திசைதொறும் கரியத்
தழல்உமிழ் உயிர்ப்புமுன் தவழத்
திருமகள் இருந்த திசையறிந் திருந்தும்
திகைப்புறு சிந்தையன் கெடுத்த
ஒருமணி நெடும்பல் பஃறலை அரவின்
உழைதொறும் உழைதொறும் உலாவ. 425

இனையதோர் தன்மை எறுழ்வலி அரக்கர்
ஏந்தல்வந்து எய்துகின் றானை
அனையதோர் தன்மை அஞ்சனைச் சிறுவன்
கண்டனன் அமைவுற நோக்கி
வினையமும் செயலும் மேல்வினை பொருளும்
இவ்வழி விளங்கும்என் றெண்ணி
வனைகழல் இராமன் பெரும்பெயர் ஓதி
இருந்தனன் வந்துஅயல் மறைந்தே. 426

---

425 : கெடுத்த......உலாவ—தனது ரத்தினத்தை இழந்த, பல தலைகளை உடைய பாம்பைப்போல, பல இடங்களிலும் அலைய.

426 : ஏந்தல்—இராவணன். அஞ்சனைச் சிறுவன்—அனுமான். மேல்வினை பொருளும் - மேற்கொண்டு வினையும் பயனும்.

இராவணனைக் கண்டு சீதை அஞ்சுதல்

ஆயிடை அரக்கன் அரம்பையர் குழுவும்
அல்லவும் வேறுஅயல் அகல
மேயினன் பெண்ணின் விளக்கெனும் தகையாள்
இருந்துழி ஆண்டுஅவள் வெருவிப்
போயின உயிர ளாம்என நடுங்கிப்
பொறிவரி எறுழ்வலி புலைக்கண்
காய்சின உழுவை தின்னிய வந்த
கலைஇளம் பிணைஎனக் கரைந்தாள். 427

வேறு

கூசி ஆவி குலைவுறு வாளையும்
ஆசை யால்உயிர் ஆசழி வானையும்
காசில் கண்ணிணை சான்றெனக் கண்டனன்
ஊச லாடி உளையும் உளத்தினன். 428

வாழி சானகி வாழி இராகவன்
வாழி நான்மறை வாழியர் அந்தணர்
வாழி நல்லறம் என்றுற வாழ்த்தினன்
ஊழி தோறும் உயர்வுறும் கீர்த்தியான். 429

அவ்வி டத்தருகு எய்தி அரக்கன்தான்
எவ்வி டத்தெனக்கு இன்னருள் ஈவது
நொவ்வி டைக்குயி லேநுவல் கென்றனன்
வெவ்வி டத்தை அமிழ்தென வேண்டுவான். 430

ஈசற் காயினும் ஈடழி வுற்றிறை
வாசிப் பாடழி யாத மனத்தினன்
ஆசைப் பாடும்அந் நாணும் அடர்த்திடக்
கூசிக் கூசி இனையன கூறினன். 431

இன்றி றந்தனன் நாளை இறந்தனன்
என்தி றந்தரும் தன்மை இதால்எனைக்
கொன்றி றந்தபின் கூடுதி யோகுழை
சென்றி றங்கி மறம்தரு செங்கணாய். 432

உலகம் மூன்றும் ஒருங்குடன் ஓம்பினேன்
அலகில் செல்வத் அரசியல் ஆணையால்
திலக மேஉன் திறத்துஅனங் கன்தரும்
கலக மானது காணுதி யோகணால். 433

---

431 : ஈசற்காயினும் - சிவனிடமும்.

பூந்தண் வார்குழல் பொற்கொழுந் தேபுகழ்
ஏந்து செல்வம் இகழ்ந்தனை இன்னுயிர்க்
காந்தன் மாண்டிலன் காடு கடந்துபோய்
வாழ்ந்த வாழ்வது மானுடர் வாழ்வன்றே. 434

நோற்கின் றார்களும் நோன்பொருள் நுண்ணிதின்
பார்க்கின் றாரும் பெரும்பயன் பார்த்தியால்
வார்க்குன் றாமுலை என்சொல் மவுலிமேல்
ஏற்கின் றாரொடு உடன்உறை இன்பமால். 435

பொருளும் யாழும் விளரியும் பூவையும்
மருள நாளும் மழலை வழங்குவாய்
தெருளும் நான்முகன் செய்தது சிந்தையின்
அருளும் மின்மருங் கும்அரி தாகவோ. 436

ஈண்டு நாளும் இளமையும் என்றிவை
மாண்டு மாண்டு பிறிதுறும் ஆதலால்
வேண்டும் நாள்வறி தேவிளிந் தால்இனி
யாண்டு வாழ்வுஅவ் இடர்உழன்று ஆழ்தியோ. 437

இழவெ னக்குயிர் எய்தினும் எய்துக
குழைமு கத்துநின் சிந்தனை கோடினல்
பழகி நிற்புறு பண்புஇயை காமத்தோடு
அழகி னுக்குஇனி யார்உளர் ஆவரோ. 438

பெண்மை யும்அழ கும்பிற ழாமனத்
திண்மை யும்முதல் யாவையும் செய்யவாய்க்
கண்மை யும்பொருந் திக்கரு ணைப்படா
வண்மை என்கொல் சனகன் மடந்தையே. 439

வீட்டும் காலத்து அலறிய மெய்க்குரல்
கேட்டும் காண்டற்கு இருத்திகொல் கிள்ளைநீ
நாட்டுங் கால்நெடு நல்லறத் தின்பயன்
ஊட்டும் காலத்து இகழ்வ துறும்கொலோ. 440

தக்கது என்னுயிர் வீடுஎனில் தாழ்கிலாது
ஒக்க செல்வம் உலையும் ஒருத்திநீ
புக்கு உயர்ந்தது எனும்புகழ் போக்கிவேறு
உக்கது என்னும் உறுபழி கோடியோ. 441

434: காந்தன்-இராமன். மாண்டிலன்–இன்னும் சாகாதவனாக. காடு............வாழ்வன்றே–காட்டைவிட்டு அயோத்திக்குச் சென்று வாழ்ந்தாலும் வாழக்கூடும்; அப்படியும் வாழ்வது கேவலமான மனிதர் இயல்புதானே?

435: முலை-சீதையே. ஏற்கின்றாரொடு-தேவர்களோடு.

438: இனி யார்-என்னை விட்டால் வேறு யார்.

440: வீட்டும் காலத்து-இராமனை மாரீசன் கொன்றபோது (இது இராவணனின் பொய்யுரை).

441: தக்கது என்னுயிர் வீடு எனில்-என் உயிர் அழிவது என்று ஆகிவிட்டால்.

தேவர் தேவியர் சேவடி கைதொழும்
தாவில் மூவுல கின்தனி நாயகம்
மேவு கின்றது நின்கண் விலக்கினை
யாவர் ஏழையர் நின்னின் இலங்கிழாய். 442

குடிமை மூன்றுல கும்செயும் கொற்றத்தென்
அடிமை கோடி அருளுதி யால்எனு
முடியின் மீது முகிழ்த்துயர் கையினன்
படியின் மேல்விழுந் தான்பழி பார்க்கிலான். 443

வேறு

காய்ந்தன சலாகை அன்ன உரைவந்து கதுவா முன்னம்
தீய்ந்தன செவிகள் உள்ளம் திரிந்தது சிவந்த சோரி
பாய்ந்தன கண்கள் ஒன்றும் பரிந்திலள் உயிர்க்கும் பெண்மைக்கு
ஏய்ந்தன அல்ல வெய்ய மாற்றங்கள் இனைய சொன்னாள். 444

இராவணனை நோக்கிச் சீதை கோபத்துடன் பேசுதல்

மல்அடு திரள்தோள் வஞ்சன் மனம்பிறி தாகும் வண்ணம்
கல்லொடும் தொடர்ந்த நெஞ்சம் கற்பின்மேல் கண்டதுண்டோ
இல்லொடும் தொடர்ந்த மாதர்க்கு ஏய்வன அல்ல வெய்ய
சொல்லிது தெரியக் கேட்டி துரும்பெனக் கனன்று சொன்னாள். 445

மேருவை உருவல் வேண்டின் விண்பிளந்து ஏகல் வேண்டின்
ஈரெழு புவனம் யாவும் முற்றுவித் திடுதல் வேண்டின்
ஆரியன் பகழி வல்லது அறிந்திருந்து அறிவி லாதாய்
சீரிய அல்ல சொல்லித் தலைபத்தும் சிந்து வாயோ. 446

அஞ்சினை ஆத லாலே ஆண்தகை அற்றம் நோக்கி
வஞ்சனை மான்ஒன் றேவி மாயையால் மறைத்து வந்தாய்
உய்ஞ்சனை போதி யாயின் விடுதிஉன் குலத்துக் கெல்லாம்
நஞ்சினை எதிர்ந்த போது நோக்குமோ நினது நாட்டம். 447

பத்துள தலையும் தோளும் பலபல பகழி தூவி
வித்தக வில்லி னூற்குத் திருவிளை யாடற்கு ஏற்ற
சித்திர இலக்கம் ஆகும் அல்லது செருவில் ஏற்கும்
சத்தியை போலும் மேல்நாள் சடாயுவால் தரையில் வீழ்ந்தாய். 448

---

447 : நஞ்சினை - (இங்கு) இராமனை.

தோற்றனை பறவைக்கு அன்று துள்ளுநீர் வெள்ளம் சென்னி
ஏற்றவன் வாளால் வென்றாய் அன்றெனில் இறத்தி யன்றே
நோற்றநோன் புடைய வாழ்நாள் வரம்இவை நுனித்த எல்லாம்
கூற்றினுக் கன்றே வீரன் சரத்திற்கும் குறித்த துண்டோ. 449

பெற்றுடை வரனும் நாளும் பிறந்துடை உரனும் பின்னும்
மற்றுடை எவையும் தந்த மலரயன் முதலோர் வார்த்தை
வில்தொடை இராமன் கோத்து விடுதலும் விலக்குண்டு எல்லாம்
இற்றுடைந்து இறுதல் மெய்யே விளக்கின்முன் இருள்உண் டாமோ.

குன்றுநீ எடுத்த நாள்தன் சேவடிக் கொழுந்தால் உன்னை
வென்றவன் புரங்கள் வேவத் தனிச்சரம் துரந்த மேரு
என்துணைக் கணவன் ஆற்றற்கு உரன்இலாது இற்று வீழ்ந்த
அன்றெழுந்து உயர்ந்த ஓசை கேட்டிலை போலும் அம்மா. 451

வேறு

மலைஎடுத்து எண்திசை காக்கும் மாக்களை
நிலைகெடுத் தேன்எனும் மாற்றம் நேரும்நீ
சிலைஎடுத்து இளையவன் நிற்கச் சேர்ந்திலை
தலைஎடுத்து இன்னமும் மகளிர்த் தாழ்தியோ. 452

ஏழைநின் ஒளித்துறை இன்ன தாம்என
வாழிஎம் கோமகன் அறிய வந்தநாள்
ஆழியும் இலங்கையும் அழியத் தாழுமோ
ஊழியும் தீயும்உன் உயிரொடு ஓயுமோ. 453

வெஞ்சின அரக்கரை வீய்த்து வீயுமோ
வஞ்சனை நீசெய வள்ளல் சீற்றத்தால்
எஞ்சல்இல் உலகெலாம் எஞ்சும் எஞ்சும்என்று
அஞ்சுகின் றேன்இதற்கு அறனும் சான்றரோ. 454

அங்கண்மா ஞாலமும் விசும்பும் அஞ்சவாழ்
வெங்கணாய் புன்தொழில் விலக்கி மேல்கொளாய்
செங்கண்மால் நான்முகன் சிவன்என் றேகொலோ
எங்கள்நா யகனையும் நினைந்தது ஏழைநீ. 455

449: பறவை-சடாயு. துள்ளுநீர்......வாளால்-கங்கையைச் சடையில் ஏற்ற சிவன் கொடுத்த சந்திரஹாஸம் என்ற வாளால். நோற்ற......குறித்ததுண்டோ-நீ செய்த தவமும், அடைந்த நீண்ட ஆயுளும், வரங்களும் எமனிடமிருந்து பாதுகாப்பதற்குத்தானே ஒழிய, இராமனின் அம்பினிடமிருந்து காத்துக்கொள்ளுவதற்கு அல்லவே.

451: வென்றவன்......மேரு - சிவன் திரிபுரங்கள் எரியும்படியாகப் பாணத்தைப் பிரயோகிப்பதற்கு உதவிய மேரு மலையாகிய சிவதனுசு. (இதை இராமன் மிதிலையில் ஒடித்து சீதையை மணந்தான்).

453: ஒளித்துறை-ஒளிந்து வசிக்கும் இடம். தாழுமோ-இராமனுடைய கோபம் தணியுமோ.

455: மேல் கொளாய்-மேலான செயலைக் கைக்கொள்ளவில்லை.

மானுயர் இவர்என மனம்கொண் டாய்எனில்
கானுயர் வரைநிகர் கார்த்த வீரியன்
தான்ஒரு மனிதனால் தளர்ந்து ளான்எனில்
தேனுயர் தெரியலான் தன்மை தேர்தியால். 456

இருவர்என்று இகழ்ந்தனை என்னின் யாண்டுஎல்லை
ஒருவன்அன் றேஉலகு அழிக்கும் ஊழியான்
செருவரும் காலைஎன் மெய்ம்மை தேர்தியால்
பொருவரும் திருஇழந்து ஆவி பொன்றுவாய். 457

பொற்கணன் தம்பிஎன்று இனைய போர்த்தொழில்
விற்கொள்நாண் பொருவுதோள் அவுணர் வேறுளார்
நற்கண்ஆர் நல்லறம் துறந்த நாளினும்
இற்கணால் இறந்திலர் இறந்து நீங்கினர். 458

வேறு

பூவிலோன் ஆதி யாகப் புலன்கள்போம் நெறியில் போகா
தேவரோ அவுணர் தாமோ நிலைநின்று வினையின் தீர்ந்தார்
ஏவல்எவ் உலகும் செய்யச் செல்வம்நிற்கு இசைந்த தென்றால்
பாவமோ முன்நீ செய்த தருமமோ தெரியப் பாராய். 459

இப்பெருஞ் செல்வம் நின்கண் ஈந்தபே ரீசன் யாண்டும்
அப்பெரும் செல்வம் துய்ப்பான் இன்றுமா தவத்தின் அன்றே
ஒப்பரும் திருவும் நீங்கி உறவொடும் உலக்க உன்னித்
தப்புதி அறத்தை ஏழாய் தருமத்தைக் காமி யாதே. 460

மறம்திறம் பாத தோலா வலியினர் எனினும் மாண்டார்
அறம்திறம் பினரும் மக்கட்கு அருள்திறம் பினரும் அன்றே
பிறந்திறந்து உழலும் பாசப் பிணக்குடைப் பிணியின் தீர்ந்தார்
துறந்தரும் பகைகள் மூன்றும் துடைத்தவர் பிறர்யார் சொல்லாய்.

தென்தமிழ் உரைத்தோன் முன்னாத் தீதுதீர் முனிவர் யாரும்
புன்தொழில் அரக்கர்க்கு ஆற்றேம் நோற்கிலம் புகுந்த போதே
கொன்றருள் நின்னால் அன்னார் குறைவது சரதம் கோவே
என்றனர் யானும் கேட்டேன் நீஅதற்கு இயைவ செய்தாய். 462

456: மனிதனால் - பரசுராமனால். தளர்ந்துளான் - சக்தியெல்லாம் இழந்தான். தெரியலான்—(பரசுராமனையும் ஒடுக்கிய) இராமன். இந்தக் கதையின் விபரம் பாலகாண் டம்: பரசுராமப் படலத்தில் காண்க.

457: யாண்டு எல்லை—யுகத்தின் முடிவில்.

458: பொற்கணன் தம்பி-இரணியாக்ஷனின் தம்பியான இரணிய கசிபு; இவன் நர சிங்கத்தால் கொல்லப்பட்டவன் நற்கண்-நல்வழி. இற்கணால் இறந்திலர்-பிறருடைய மனைவி விஷயத்தில் வரம்பு கடக்காதவர்களாக.

462: தென்தமிழ் உரைத்தோன்-அகத்தியன். முனிவர் - தண்டக வனத்து முனி வர்கள்.

உன்னையும் கேட்டு மற்றுன் ஊற்றமும் உடைய நாளும்
பின்னைஇவ் அரக்கர் சேனைப் பெருமையும் முனிவர் பேணிச்
சொன்னபின் உங்கை மூக்கும் உம்பியர் தோளும் தாளும்
சின்னபின் னங்கள் செய்த அதனைநீ சிந்தி யாயோ. 463

ஆயிரம் தடக்கை யால்நின் ஐந்நான்கு கரமும் பற்றி
வாய்வழி குருதி சோரக் குத்திவான் சிறையில் வைத்த
தூயவன் வயிரத் தோள்கள் துணித்தவன் தொலைந்த மாற்றம்
நீஅறிந் திலையோ ஏகும் நெறிஅறிந் திலாத நீச. 464

கடிக்கும்வல் அரவும் கேட்கும் மந்திரம் களிக்கின் றோயை
அடுக்கும்ஈது அடாதென்று ஆன்ற ஏதுவோடு அறிவு காட்டி
இடிக்குநர் இல்லை உள்ளார் எண்ணியது எண்ணி உன்னை
முடிக்குநர் என்ற போது முடிவன்றி முடிவ துண்டோ. 465

வேறு

இராவணனின் கோபாவேசம்

என்றுஅ றத்துறை கேட்டலும் இருபது நயனம்
மின்தி றப்பன ஒத்தன வெயில்விடு பகுவாய்
குன்றுஇ றத்தெழித்து உரப்பினன் குறிப்பதென் காமத்
தன்தி றத்தையும் கடந்தது சீற்றத்தின் தகைமை. 466

வளர்ந்த தாளினன் மாதிரம் அனைத்தையும் மறைவித்து
அளந்த தோளினன் அனல்சொரி கண்ணினன் இவனைப்
பிளந்து தின்பன்என்று உடன்றனன் பெயர்ந்தனன் பெயரான்
கிளர்ந்த சீற்றமும் காதலும் எதிர்எதிர் கிடைப்ப. 467

அன்ன காலையின் அனுமனும் அருந்ததிக் கற்பின்
என்னை ஆளுடை நாயகன் தேவியை என்முன்
சொன்ன நீசன்கை தொடுவதன் முன்துகைத்து உழக்கிப்
பின்னை நின்றது செய்குவென் என்பது பிடித்தான். 468

தனியில் நின்றனன் தலைபத்தும் கடிதுஉகத் தாக்கிப்
பனியின் வேலையில் இலங்கையைக் கீழுறப் பாய்ச்சி
புனித மாதவத்து அணங்கினைச் சுமந்தனன் போவென்
இனிதின் என்பது நினைந்தனன் கரம்பிசைந் திருந்தான். 469

ஆண்டுஅவ் வாள்அரக் கன்கனன்று அண்டத்தை அழிப்பான்
மூண்ட காலவெந் தியென முற்றிய சீற்றம்
நீண்ட காதல்நீர் நீத்தத்தின் வீவுற நினைவின்
மீண்டு நின்றெரு தன்மையால் இவைஇவை விளம்பும். 470

---

464 : தூயவன்-கார்த்தவீரியார்ச்சுனன். துணித்தவன்-பரசுராமன்

வேறு

கொல்வென்என்று உடன்றேன் உன்னைக்
  கொல்கிலன் குறித்துச் சொன்ன
சொல்உள அவற்றுக் கெல்லாம்
  காரணம் தெரியச் சொல்லின்
ஒல்வதுஈது ஒல்லாது ஈதுஎன்று
  எனக்கும்ஒன்று உலகத் துண்டோ
வெல்வதும் தோற்றல் தானும்
  விளையாட்டின் விளைந்த மேல்நாள். 471

ஒன்றுகேள் உரைக்க நிற்கோர் உயிர்என உரியோன் தன்னைக்
கொன்றுகோள் இழைத்தால் நீநின் உயிர்விடக் கூற்றம் கூடும்
என்றன்ஆ ருயிரும் நீங்கும் என்பதை இயைய எண்ணி
அன்றுநான் வஞ்சம் செய்தது ஆர்எனக்கு அமரில் நேர்வார். 472

மான்என்பது அறிந்து போன மானுடர் ஆவார் மீண்டு
யான்என்பது அறிந்தால் வாரார் ஏழைமை எண்ணி நோக்கல்
தேன்என்ப தறிந்த சொல்லாய் தேவர்தாம் யாவ ரேஎம்
கோன்என்ப தறிந்த பின்னைத் திரும்புவார் குறையின் அல்லால். 473

வென்றேரும் இருப்ப யார்க்கும் மேலவர் விளிவி லாதோர்
என்றேரும் இருப்ப அன்றே இந்திரன் ஏவல் செய்ய
ஒன்ருக உலகம் மூன்றும் ஆள்கின்ற ஒருவன் யானே
மென்தோளாய் இதற்கு வேறேர் காரணம் விரிப்பதுண்டோ. 474

மூவரும் தேவர் தாமும் முரண்உக முற்றும் கொற்றம்
பாவைநின் பொருட்டி னல்ஓர் பழிபெறப் பயன்தீர் நோன்பின்
ஆவியல் மனிதர் தம்மை அடுகிலேன் அவரை ஈண்டுக்
கூவிநின்று ஏவல் கொள்வென் காணுதி குதலைச் சொல்லாய். 475

சிற்றியல் சிறுமை ஆற்றல் சிறுதொழில் மனித ரோடே
முற்றிய தாவில் வீரம் முனிவென்கண் விளையா தேனும்
இற்றைஇப் பகலில் எய்தி இருவரை ஒருகை யாலே
பற்றினென் கொணரும் தன்மை காணுதி பழிப்பி லாதாய். 476

---

471 : குறித்துச் சொன்ன சொல் உள அவற்றுக்கெல்லாம்–நான் தோற்றதாக நீ குறிப்பிட்டுக் கூறிய வாசகங்களுக்கெல்லாம்.

472 : கோள் இழைத்தால் - (உன்னைக்) கொண்டு வந்தால்.

473 : தேவர்தாம்......அல்லால்-தேவர்களில் யார்தான், தங்கள் தலைவனுகிய இராவணன்தான் சீதையை எடுத்துக்கொண்டு போனன் என்பதை அறிந்தபின் என்னை எதிர்த்துப் போர் செய்ய வருவார்கள், ஆற்றல் இழந்து நிற்காமல்.

475 : பழிபெற - (கேவலம் மனிதர்களைக் கொன்று அதனுல் என் வீரம்) பழி அடைய ஆவியல்-பசுவைப் போன்ற. மனிதர்-இராம இலக்குவர்கள்,

பதவிஇல் மனித ரேனும் பைந்தொடி நின்னைத் தந்த
உதவியை உணர நோக்கின் உயிர்க்கொலைக்கு உரியர் அல்லர்
சிதைவுறல் அவர்க்கு வேண்டின் செய்திறன் தேர்ந்தது எண்ணின்
இதம்உனக்கு ஈதே ஆகில் இயற்றுவன் காண்டி இன்னும். 477

பள்ளநீர் அயோத்தி நண்ணிப் பரதனே முதலி னோர்ஆண்டு
உள்ளவர் தம்மை எல்லாம் உயிர்குடித்து ஊழித் தீயின்
வெள்ளநீர் மிதிலை யோரை வேர்அறுத்து எளிதின் எய்திக்
கொள்வென்நின் உயிரும் என்னை அறிந்திலை குறைந்த நாளோய். 478

ஈதுரைத்து அழன்று பொங்கி எரிகதிர் வாளை நோக்கித்
தீதுயிர்க்கு இழைக்கும் நாளும் திங்கள்ஓர் இரண்டில் தேய்ந்தது
ஆதலின் பின்னை நீயே அறிந்தவாறு அறிதி என்னுப்
போதரிக் கண்ணி னாளை அகத்துவைத்து உரப்பிப் போனான். 479

இராவணன் அப்பால் செல்லுதல்

அஞ்சுவித் தானும் ஒன்றால் அறிவுறத் தேற்றி யானும்
வஞ்சியின் செவ்வி யாளை வசித்துஎன்பால் வருவீர் அன்றேல்
நஞ்சுஉமக்கு ஆவென் என்னு நகைஇலா முகத்துப் பேழ்வாய்
வெஞ்சினத் தரக்கி மார்க்கு வேறுற உணர்த்திப் போனான். 480

போயினன் அரக்கன் பின்னைப் பொங்குஅரா நுங்கிக் கான்ற
தூயவெண் மதியம் ஒத்த தோகையைத் தொடர்ந்து சுற்றித்
தீயவல் அரக்கி மார்கள் தெழீஇத்தெழித்து உரப்பிச் சிந்தை
மேயின வண்ண மெல்லாம் விளம்புவர் உடன்று மிக்கார். 481

வேறு

முன்முன் நின்றார் கண்கனல் சிந்த முடுகுற்றார்
மின்மின் என்னும் சூலமும் வேலும் இவைஓச்சிக்
கொல்மின் கொல்மின் கொன்று குறைத்துக் குடர்ஆரத்
தின்மின் தின்மின் என்று தெழித்தார் சிலரெல்லாம். 482

வையம் தந்த நான்முகன் மைந்தன் மகன்மைந்தன்
ஐயன் வேதம் ஆயிரம் வல்லோன் அறிவாளன்
மெய்யன்பு உன்பால் வைத்தனன் அல்லால் வினைவென்றோன்
செய்யும் புன்மை யாதுகொல் என்றார் சிலரெல்லாம். 483

---

479 : *தீதுயிர்க்கு......*தேய்ந்தது-உன் உயிரைக் கொல்லும் நாள் வருவதற்கு இன்னும் இரண்டு மாதங்களே உள்ளன. அத்துடன் இந்தத் தவணை முடிந்துவிடுகிறது.

480 : வசித்து-வசப்படுத்தி. வேறுற-தனியாக.

483: வையம்......மைந்தன்-பிரமனுடைய மகனான புலத்திய முனிவனின் புத்திரன் விசிரவ முனிவனுடைய மைந்தன் இராவணன்.

மண்ணில் தீய மானுயர் தத்தம் வழியோடும்
பெண்ணில் தீயோய் நின்முதல் மாயும் பிணிசெய்தாய்
புண்ணில் கோல்இட் டால்அன சொல்லிப் பொதுநோக்கால்
எண்ணிக் காணாய் மெய்ம்மையும் என்றார் சிலரெல்லாம். 484

புக்க வழிக்கும் போந்த வழிக்கும் புகைவெந்தீ
ஒக்க விதைப்பாய் உற்றனை அன்றோ உணர்வில்லாய்
இக்கணம் இற்றாய் உன்இனம் எல்லாம் உயிர்வாழச்
சிக்க உரைத்தேம் என்று தெழித்தார் சிலரெல்லாம். 485

கொல்வான் உற்றுஊர் பெற்றிமை யாதும் குறையாதோன்
வெல்வான் எங்கோன் தின்னுமின் வம்மின் இவள்மெய்யை
வல்வாய் வெய்யோன் ஏவிலின் என்னா மனம்வைத்தார்
நல்வாய் நல்லாள் கண்கள் கலுழ்ந்தாள் நகுகின்றாள். 486

இன்னோ ரன்ன எய்திய காலத்து இடைநின்றாள்
முன்னே சொன்னேன் கண்ட கனாவின் முடிவம்மா
பின்னே வாளா பேதுறு வீரேல் பிழை என்றாள்
அன்னே நன்றென் றார்அவர் எல்லாம் அறிவுற்றார். 487

அறிந்தார் போலும் முச்சடை என்பாள் அதுசொல்லப்
பிரிந்தார் சீற்றம் மன்னனை அஞ்சிப் பிரிகில்லார்
செறிந்தார் ஆய தீவினை யன்னார் தெறல்எண்ணார்
நெறிந்துஆர் ஓதிப் பேதையும் ஆவி நிலைநின்றாள். 488

5. உருக் காட்டு படலம்

[அனுமான் சீதையின் எதிரே சென்று தனது இயல்பான உருவத்தையும், பின்பு தனது பெரிய உருவத்தையும் காண்பித்ததைக் கூறும் பகுதி]

காண்டற்கு ஒத்த காலமும் ஈதே தெறுகாவல்
தூண்டற்கு ஒத்த சிந்தையி னாரும் துயில்கில்லார்
வேண்டத் துஞ்சார் என்றொரு விஞ்சை வினைசெய்தான்
மாண்டற்கு உற்றா ராம்என எல்லாம் மயர்வுற்றார். 489

துஞ்சா தாரும் துஞ்சுதல் கண்டாள் துயர்ஆற்றாள்
நெஞ்சால் ஒன்றும் உய்வழி காணாள் நெகுகின்றாள்
அஞ்சா நின்றாள் பன்னெடு நாளும் அழிவுற்றாள்
எஞ்சா அன்பால் இன்ன பகர்ந்தாங்கு இடருற்றாள். 490

487: இடைநின்றாள் - திரிசடை.

வேறு

கருமேகம் நெடுங்கடல் கார்அனையான்
தருமேதமி யேன்எனது ஆருயிர்தான்
உரும்ஏறுறழ் வெஞ்சிலை நாணொலிதான்
வருமேஉரை யாய்வலி ஆர்விதியே. 491

கல்லாமதி யேகதிர் வாள்நிலவே
செல்லாஇர வேசிறு காஇருளே
எல்லாம்எனை யேமுனி வீர்நினையா
வில்லாளனை யாதும்வி ளித்திலிரோ. 492

தழல்வீசி உலாவரும் வாடைதழீஇ
அழல்வீர்என தாவி அறிந்திலிரோ
நிழல்வீரை அனுருடன் நீர்நெடுநாள்
உழல்வீர்கொடி யீர்உரை யாடிலிரோ. 493

வாராதொழி யான்எனும் வண்மையினால்
ஓராயிர கோடிஇடர்க்கு உடையேன்
தீராஒரு நாள்வலி சேவகனே
நாராயண னேதனி நாயகனே. 494

தருஒன்றிய கான்அடை வாய்தவீர்நீ
வருவென்சில நாளினில் மாநகர்வாய்
இருஎன்றனை இன்னருள் தான்இதுவோ
ஒருவென்தனி ஆவியை உண்ணுதியோ. 495

பேணும்உணர் வேஉயி ரேபெருநாள்
நாணின்றுழல் வீர்தனி நாயகனைக்
காணும்துணை யும்கழி வீரலிர்நான்
பூணும்பழி யோடு பொருந்துவதோ. 496

முடியாமுடி மன்னன் முடிந்திடவும்
படிஏழும் நெடுந்துயர் பாவிடவும்
மடியாநெறி வந்து வனம்புகுதும்
கொடியார்வரும் என்று குலாவுவதோ. 497

என்றென்றுயிர் விம்மி இருந்தயர்வாள்
மின்துன்னும் மருங்குல் விளங்கிழையாள்
ஒன்றென்உயிர் உண்டெனின் உண்டிடர்யான்
பொன்றும்பொழு தேபுகழ் பூணும்எனா. 498

வேறு

இலங்கையில் வசிக்க நேர்ந்ததை எண்ணி சீதை மனம் நொந்து பேசுதல்

பொறைஇருந் தாற்றிஎன் உயிரும் போற்றினேன்
அறைஇருங் கழல்வற் காணும் ஆசையால்
நிறைஇரும் பல்பகல் நிருதர் நீள்நகர்ச்
சிறைஇருந் தேனைஅப் புனிதன் தீண்டுமோ. 499

உன்னினர் பிறர்என உணர்ந்தும் சூழ்ந்தவர்
சொன்னன சொன்னன செவியில் தூங்கவும்
மன்னுயிர் காத்துஇருங் காலம் வைகினேன்
என்னின்வேறு அரக்கியர் யாண்டை யார்கொலோ. 500

சொற்பிரி யாப்பழி சுமந்து தூங்குவேன்
நற்பிறப்பு உடைமையும் நாணும் நன்றரோ
கற்புடை மடந்தையர் கதைஉ ளோர்கள்தாம்
இற்பிரிந்து உய்ந்தவர் யாவர் யான்அலால். 501

பிறர்மனே எய்திய பெண்ணைப் பேணுதல்
திறன்அலது என்றுயிர்க்கு இறைவன் தீர்ந்தனன்
புறன்அலர் அவன்உறப் போது போக்கியான்
அறன்அலது இயற்றிவேறு என்கொண்டு ஆற்றுகேன். 502

எப்பொழு திப்பெரும் பழியின் எய்தினேன்
அப்பொழு தேஉயிர் துறக்கும் ஆணையேன்
ஒப்பரும் பெருமறு உலகம் ஓதயான்
துப்பழிந்து உய்வது துறக்கம் துன்னவோ. 503

அன்பழி சிந்தைய ராய ஆடவர்
வன்பழி சுமக்கினும் சுமக்க வானுயர்
துன்பழி பெரும்புகழ்க் குலத்துள் தோன்றினேன்
என்பழி துடைப்பவர் என்னின் யாவரே. 504

வஞ்சனை மானின்பின் மன்னைப் போக்கிஎன்
மஞ்சனை வைதுபின் வழிக்கொள் வாய்எனு
நஞ்சனை யான்அகம் புகுந்த நங்கையான்
உய்ஞ்சனென் இருத்தலும் உலகம் கொள்ளுமோ. 505

500: உன்னினர் பிறர் - அந்நிய புருஷர்கள் என்னைக் காமுற்றார்கள். சூழ்ந்தவர் - காவல் காக்கும் அரக்கியர்.

504: ஆடவர் - இராம இலக்குவர்கள்.

505: மன்னை - இராமனை. மஞ்சனை - இலக்குவனை. நஞ்சனையான் - இராவணன்.

வல்இயல் மறவர்தம் வருக்கம் ஆசற
வெல்லினும் வெல்கபோர் விளிந்து வீடுக
இல்இயல் அறத்தையான் இகழ்ந்து வாழ்ந்தபின்
சொல்லிய என்பழி அவரைச் சுற்றுமோ. 506

வருந்தலில் மானமா அனைய மாட்சியர்
பெருந்தவ மடந்தையர் முன்பு பேதையேன்
கருந்தனி முகிலினைப் பிரிந்து கள்வர்ஊர்
இருந்தவள் இவள்என ஏச நிற்பெனோ. 507

அற்புதன் அரக்கர்தம் வருக்கம் ஆசற
விற்பணி கொண்டரும் சிறையின் மீட்டநாள்
இற்புகத் தக்கலை என்னின் யானுடைக்
கற்பினை எப்பரிசு இழைத்துக் காட்டுகேன். 508

ஆதலால் இறத்தலே அறத்தின் ஆறெனச்
சாதல்காப் பவரும்என் தவத்தின் சாம்பினர்
ஈதலாது இடமும்வேறு இல்லை என்றொரு
போதுலாம் மாதவிப் பொதும்பர் எய்தினள். 509

அனுமன் சீதையின் முன்னே வந்து தோன்றுதல்

கண்டனன் அனுமனும் கருத்தும் எண்ணினன்
கொண்டனன் துணுக்கம்மெய் தீண்டக் கூசுவான்
அண்டர்நா யகன்அருள் தூதன் யான்எனத்
தொண்டைவாய் மயிலினைத் தொழுது தோன்றினன். 510

அடைந்தனென் அடியனேன் இராமன் ஆணையால்
குடைந்துலகு அனைத்தையும் நாடும் கொட்பினல்
மிடைந்தவர் உலப்பிலர் தவத்தை மேவலால்
மடந்தைநின் சேவடி வந்து நோக்கினேன், 511

ஈண்டுநீ இருந்ததை இடரில் வைகுறும்
ஆண்தகை அறிந்திலன் அதற்குக் காரணம்
வேண்டுமோ அரக்கர்தம் வருக்கம் வேரொடும்
மாண்டில ஈதலால் மாறு வேறுண்டோ. 512

507: மான மா - மானம் உடைய கவரிமான். முகிலினை - இராமனை.

509: சாதல் காப்பவரும் சாவைத் தடுக்கும் அரக்கியரும். என் தவத்தின் சாம்பினர் - என் தவப் பயனாகத் தூங்குகிறார்கள். இடமும் - சந்தர்ப்பமும்.

511: மிடைந்தவர் - தேடிச் சென்ற வானர வீரர்கள்.

512: காரணம் - சான்று.

ஐயுறல் உளதுஅடை யாளம் ஆரியன்
மெய்யுற உணர்த்திய உரையும் வேறுள
கையுறு நெல்லியங் கனியின் காண்டியால்
நெய்யுறு விளக்கனுய் நினையல் வேறென்ருன். 513

வேறு

என்றவன் இறைஞ்ச நோக்கி இரக்கமும் முனிவும் எய்தி
நின்றவன் நிருதன் அல்லன் நெறிநின்று பொறிகள் ஐந்தும்
வென்றவன் அல்ல ஞகில் விண்ணவன் ஆக வேண்டும்
நன்றுணர் உரையன் தூயன் நவைஇலன் போலும் என்ஞ. 514

அரக்கனே ஆக வேருேர் அமரனே ஆக அன்றிக்
குரக்கினத்து ஒருவ னேதான் ஆகுக கொடுமை ஆக
இரக்கமே ஆக வந்திங்கு எம்பிரான் நாமம் சொல்லி
உருக்கினன் உணர்வைத் தந்தான் உயிர்க்கிதின் உதவி உண்டோ 515

எனநினைத்து எய்த நோக்கி இரங்கும்என் உள்ளம் கள்ள
மனன்அகத்து உடைய ராய வஞ்சகர் மாற்றம் அல்லன்
நினைவுடைச் சொற்கள் கண்ணீர் நிலம்புகப் புலம்பா நின்ருன்
வினவுததற்கு உரியன் என்ஞ வீரநீ யாவன் என்ருள். 516

அனுமான் தான் வந்த வரலாற்றைக் கூறுதல்

ஆயசொல் தலைமேல் கொண்ட அங்கையன் அன்னை நின்னைத்
தூயவன் பிரிந்த பின்பு தேடிய துணைவன் தொல்லைக்
காய்கதிர்ச் செல்வன் மைந்தன் கவிக்குலம் அவற்றுக் கெல்லாம்
நாயகன் சுக்கி ரீவன் என்றுளன் நவையின் தீர்ந்தான். 517

மற்றவன் முன்னேன் அந்நாள் இராவணன் வலிதன் வாலின்
இற்றுகக் கட்டி எட்டுத் திசையினும் எழுந்து பாய்ந்த
வெற்றியன் தேவர் வேண்ட வேலையை விலங்கல் மத்தின்
சுற்றிய நாகம் தேய அமுதெழக் கடைந்த தோளான். 518

அன்னவன் தன்னை உம்கோன் அம்பொன்ருல் ஆவி வாங்கிப்
பின்னவற்கு அரசு நல்கித் துணைஎனப் பிடித்தான் எங்கள்
மன்னவன் தனக்கு நாயேன் மந்திரத்து உள்ளேன் வானின்
நன்னெடுங் காலின் மைந்தன் நாமமும் அனுமன் என்பேன். 519

எழுபது வெள்ளம் கொண்ட எண்ணன உலகம் எல்லாம்
தழுவி நின்று எடுப்ப வேலை தனித்தனி கடக்கும் தாள
குழுவின உம்கோன் செய்யக் குறித்தது குறிப்பின் உன்னி
வழுவில செய்தற் கொத்த வானரம் வானின் நீண்ட. 520

519: மந்திரத்து உள்ளேன் - மந்திரி வேலை பார்க்கிறேன்.

துப்புறு பரவை ஏழும் சூழ்ந்தபார் ஏழும் ஆழ்ந்த
ஒப்புறு நாகர் நாடும் உம்பர்நின்று இம்பர் காறும்
இப்புறம் தேடி நின்னை எதிர்ந்தில என்னின் அண்டத்து
அப்புறம் போயும் தேட அவதியின் அமைந்து போன. 521

புன்தொழில் அரக்கன் கொண்டு போந்தநாள் பொதிந்து தூசில்
குன்றின்எம் மருங்கின் இட்ட அணிகலக் குறியி ஞலே
வென்றியான் அடியேன் தன்னை வேறுகொண்டு இருந்து கூறி
தென்திசைச் சேறி என்ருன் அவன்அருள் சிதைவ தாமோ. 522

கொற்றவற்கு ஆண்டுக் காட்டிக் கொடுத்தபோது அடுத்த தன்மை
பெற்றியின் உணர்தற் பாற்ரே உயிர்நிலை பிறிதும் உண்டோ
இற்றைநாள் அளவும் அன்னுய் அன்றுநீ இழித்து நீத்த
மற்றைநல் அணிகள் காண்உன் மங்கலம் காத்த மன்னே. 523

ஆயவன் தன்மை நிற்க அங்கதன் வாலி மைந்தன்
ஏயவன் தென்பால் வெள்ளம் இரண்டினேடு எழுந்து சேனை
மேயின படர்ந்து தீர அனையவன் விடுத்தான் என்னைப்
பாய்புனல் இலங்கை மூதூர்க்கு என்றனன் பழியை வென்ருன். 524

எய்தின உரைத்த லோடும் எழுந்தபேர் உவகை பொங்கி
வெய்துயிர்ப்பு ஒடுங்கி மேனி வான்உற விம்மி ஓங்கி
உய்தல்வந்து உற்ற வோஎன்று அருவிநீர் ஒழுகு கண்ணுள்
ஐயசொல் அனையன் மேனி எப்படித்து அறிவை என்ருள். 525

படிஉரைத்து எடுத்துக் காட்டும் படித்தன்று படிவம் பண்பின்
முடிவுள உவமம் எல்லாம் இலக்கணம் ஒழியும் முன்னர்த்
துடியிடை அடையா ளத்தின் தொடர்வையே தொடர்தி என்ன
அடிமுதல் முடிஈ ருக அறிவுற அனுமன் சொல்வான். 526

வேறு

இராமனின் அவயவங்களை அனுமான் வருணித்தல்

சேய்இதழ்த் தாமரை என்று சேண்உளோர்
ஏயினர் அதன்துணை எளிய தில்லையால்
நாயகன் திருவடி குறித்து நாட்டுறின்
பாய்திரைப் பவளமும் குவளைப் பண்பின்ஆம். 527

523: இழித்து நீத்த - கீழே எறிந்த. மங்கலம் - தாலி.

525: எய்தின - நிகழ்ந்தவற்றை. எப்படித்து அறிவை - எப்படிப்பட்டது? அறிவிப் பாயாக.

526: பண்பின்......ஒழியும் - இயல்பாகப் பூரணத்துவம் பெற்றுள்ள உவமானங்கள் யாவும் (இராமன் விஷயத்தில்) தம இலக்ஷணங்களை இழந்துவிடும்.துடியிடை - சீதையே.

தளம்கெழு கற்பகம் முகிழும் தண்துறை
இளங்கொடிப் பவளமும் கிடக்க என்அவை
துளங்கொளி விரற்கெதிர் உதிக்கும் சூரியன்
இளங்கதிர் ஒக்கினும் ஒக்கும் ஏந்திழாய். 528

சிறியவும் பெரியவும் ஆகித் திங்களோ
மறுவில பத்துள அல்ல மற்றினி
எறிசுடர் வயிரமோ திரட்சி எய்தில
அறிகிலென் உகிர்க்குயான் உவமம் ஆவன. 529

பொருந்தில நிலனொடு போந்து கானிடை
வருந்தின எனின்அது நூலே மாறுகொண்டு
இருந்தது நின்றது புவனம் யாவையும்
ஒருங்குடன் புணர்வன உரைக்கற் பாலதோ. 530

தாங்கணைப் பணிலமும் வளையும் தாங்குஅரா
வீங்குஅணைப் பள்ளியான் எனினும் வேறினிப்
பூங்கணைக் காற்கொரு பரிசு தான்பொரும்
ஆம்கணைக்கு ஆவமோ ஆவது அன்னையே. 531

அறம்கிளர் பறவையின் அரசின் ஓங்கிய
பிறங்கெருத்து அனையன பெயரும் பெற்றுடை
மறம்கிளர் மதகரிக் கரமும் நாணின
குறங்கினுக்கு உவமைஇவ் உலகில் கூடுமோ. 532

வலம்சுழித்து ஒழுகுநீர் வழங்கு கங்கையின்
பொலஞ்சுழி என்றலும் புன்மை பூவொடு
நிலம்சுழித்து எழுமணி உந்தி நேர்இனி
இலஞ்சியும் போலும்வேறு உவமை யாண்டரோ. 533

பொருவரு மரகதப் பொலங்கொள் மால்வரை
வெருவுற விரிந்துயர் விலங்கல் ஆகத்தைப்
பிரிவற நோற்றனள் என்னின் பின்னைஅத்
திருவினில் திருவுளார் யாவர் தெய்வமே. 534

நீடுறு கீழ்த்திசை நின்ற யானையின்
கோடுறு கரம்எனச் சிறிது கூறலாம்
தோடுறு மலர்எனச் சுரும்பு சுற்றருத்
தாள்தொடு தடக்கைவே றுவமை சாலுமோ. 535

530: நூலே - புத்தகத்தை. இந்தச் செய்யுள் இராமனின் புறவடிகளை வருணிக்கிறது.

531: வளையும் - (இங்கே) சக்கரமும்.

532: அறம்கிளர்......அனையன - வேதசொரூபியான கருடனின் பிடரியைப் போன்றவை இராமனின் தொடைகள்.

535: யானை - ஐராவதம். தாள் - முழந்தாள்.

பச்சிலைத் தாமரை பகல்கண் டால்எனக்
கைச்செறி முகில்உகிர் கனகன் என்பவன்
வச்சிர யாக்கையை வகிர்ந்த வன்தொழில்
நிச்சயம் அன்றெனின் ஐயம் நீக்குமே. 536

திரண்டில ஒளிஇல திருவின் சேர்வில
முரண்தரு மேருவில் முரிய மூரிநாண்
புரண்டில புகழில பொருப்பொன்று ஒன்றுபோன்று
இரண்டில புயங்களுக்கு உவமம் ஏற்குமோ. 537

கடற்படு பணிலமும் கன்னிப் பூகமும்
மிடற்றினுக்கு உவமைஎன்று உரைப்பர் வெள்ளியோர்
உடற்பட ஒண்ணுமோ உரகப் பள்ளியான்
இடத்துறை சங்கம்ஒன்று இருக்க எங்களால். 538

அண்ணல்தன் திருமுகம் கமலம் ஆமெனில்
கண்ணினுக்கு உவமைவேறு யாது காட்டுகேன்
தண்மதி யாம்என உரைக்கத் தக்கதோ
வெண்மதி பொலிந்துடல் மெலிந்து தேயுமால். 539

வேறு

ஆரமும் அகிலும் நீவி அகன்றதோள் அமலன் செவ்வாய்
நாரம்உண்டு அலர்ந்த செங்கேழ் நளினம்என்று உரைக்க நாணும்
ஈரம்உண்டு அமுதம் ஊறும் இன்னுரை இயம்பா தேனும்
மூரல்வெண் முறுவல் பூவாப் பவளமும் மொழியற் பாற்றோ. 540

வேறு

முத்தம் கொல்லோ முழுநிலவின்
  முறியின் திறனோ முறைஅமுதச்
சொத்தின் துள்ளி வெள்ளிஇனம்
  தொடுத்த கொல்லோ துறைஅறத்தின்
வித்து முளைத்த அங்குரம்கொல்
  வேறே சிலகொல் மெய்ம்முகிழ்த்த
தொத்தின் தொகைகொல் யாதென்று
  பல்லுக் குவமை சொல்லுகேன். 541

எள்ளா நிலத்துஇந் திரநீலத்து
  எழுந்த கொழுந்தும் மரகதத்தின்
விள்ளா முழுமா நிழற்பிழம்பும்
  வேண்ட வேண்டும் மேனியதோ

536: கனகன்-இரணியன். நிச்சயம் அன்றெனின்–உண்மையோ அல்லவோ என்று சந்தேகம் ஏற்பட்டால்.

538: வெள்ளியோர்-அறிவில்லாதவர்கள். உடற்பட-உடன்பட. இடத்துறை...... இருக்க-திருமாலின் இடது கையில் பாஞ்சஜன்யம் என்ற சங்கு இருக்க (வேறொரு சங்கை உவமானமாகச் சொன்னால்).

தள்ளா ஓதி கோபத்தைக்
  கவ்வ வந்து சார்ந்துதவும்
கொள்ளா வள்ளல் திருமூக்கிற்கு
  உவமை பின்னும் குணிப்பாமோ. 542

பனிக்கச் சுரத்துக் கரன்முதலோர் கவந்தப் படையும் பல்பேயும்
தனிக்கைச் சிலையும் வானவரும் முனிவர் குழுவும் தனிஅறனும்
இனிக்கட் டழிந்தது அரக்கர்குலம் என்னும் சுருதி ஈரிரண்டும்
குனிக்கக் குனித்த புருவத்துக்கு உவமம் நீயே கோடியால். 543

வருநாள் தோன்றும் தனிமறுவும்
  வளர்வும் தேய்வும் வாளரவம்
ஒருநாள் கவ்வும் உறுகோளும்
  இறப்பும் பிறப்பும் ஒழிவுற்றால்
இருநால் பகலின் இலங்குமதி
  அலங்கல் இருளின் எழில்நிழற்கீழ்ப்
பெருநாள் நிற்பின் அவன்நெற்றிப்
  பெற்றித் தாகப் பெறும்மன்னே. 544

நீண்டு குழன்று நெய்த்துஇருண்டு நெறிந்து செறிந்து நெடுநீலம்
பூண்டு புரிந்து சரிந்துகடை சுருண்டு புகையும் நறும்பூவும்
வேண்டு மல்ல எனத்தெய்வ வெறியே கமழும் நறுங்குஞ்சி
ஈண்டு சடையா யினதென்றால் மழைஎன் றுரைத்தல் இழிவன்றே.

புல்லல் ஏற்ற திருமகளும் பூவும் பொருந்தப் புவிஏழும்
எல்லை ஏற்ற நெடுஞ்செல்வம் எதிர்ந்த ஞான்றும் அஃதின்றி
அல்லல் ஏற்ற கானகத்தும் அழியா நடையை இழிவான
மல்லல் ஏற்றின் உளதென்றால் மத்த யானை வருந்தாதோ. 546

இன்ன மொழிய அம்மொழிகேட்டு
  எரியின் இட்ட மெழுகென்னத்
தன்னை அறியாது அயர்வாளைத்
  தரையின் வணங்கி நாயகனார்
சொன்ன குறிகொள் அடையாளச்
  சொல்லும் உளவால் அவைதோகை
அன்ன நடையாய் கேட்கஎன
  அறிவன் அறைவான் ஆயினான். 547

---

542 : (இதன் கருத்து) இந்திர நீல ரத்தினத்தின் ஒளியையும், மரகதத்தின் ஒளியையும் தனக்கு உவமையாக வேண்டுவதற்காக விரும்பும் தன்மை உடையதா இராமனின் மூக்கு? (அன்று.) இந்திரகோபப் பூச்சியைப் பிடிக்க வந்த ஓணானும் இராமனுடைய மூக்குக்கு உவமையாக மாட்டாது. ஓணான் மூக்கிற்கும், இந்திர கோபம் உதடுகளுக்கும், உவமை. பின்னும் உவமை குணிப்பாமோ - வேறு உவமை சொல்ல முடியுமோ?

544 : இருநால் பகலின் இலங்குமதி - அட்டமித் திதியில் பிரகாசிக்கும் சந்திரன் அமாவாசை கழிந்த எட்டாம் நாளில் தோன்றும் பாதிச் சந்திரன்.

வேறு

நடத்தல்அரி தாகும்நெறி நாள்கள்சில தாயர்க்கு
அடுத்தபணி செய்திவண் இருத்திஎன அச்சொற்கு
உடுத்ததுகி லோடும்உயிர் உக்கஉட லோடும்
எடுத்தமுனி வோடும்அயல் நின்றதும் இசைப்பாய். 548

நீண்டமுடி வேந்தன்அருள் ஏந்திநிறை செல்வம்
பூண்டதனை நீங்கிநெறி போதலுறும் நாளில்
ஆண்டநகர் ஆரையொடு வாயில்அக லாமுன்
யாண்டையது கான்என இசைத்ததும் இசைப்பாய். 549

எள்ளரிய தேர்தரும் சுமந்திரன் இசைப்பாய்
வள்ளல்மொழி வாசகம் மனத்துயர் மறந்தாள்
கிள்ளையொடு பூவைகள் வளர்த்தல் கிளஎன்னும்
பிள்ளையொடு தன்திறம் உணர்த்துதி பெயர்த்தும். 550

மீட்டும்உரை வேண்டுவன இல்லைஎன மெய்ப்பேர்
தீட்டியது தீட்டரிய செய்கையது செவ்வே
நீட்டிதென நேர்ந்தனன் எனுநெடிய கையால்
காட்டினன்ஓர் ஆழியது வாள்நுதலி கண்டாள். 551

இராமனின் கணையாழியைக் கண்ட சீதையின் பெரு மகிழ்ச்சி

இறந்தனர் பிறந்தபயன் எய்தினர்கொல் என்கோ
மறந்தனர் அறிந்துணர்வு வந்தனர்கொல் என்கோ
துறந்தஉயிர் வந்திடை தொடர்ந்ததுகொல் என்கோ
திறம்தெரிவது என்கொல்இவண் நன்னுதலி செய்கை. 552

இழந்தமணி புற்றரவு எதிர்ந்ததென லானுள்
பழந்தனம் இழந்தது படைத்தவரை ஒத்தாள்
குழந்தையை உயிர்த்தமல டிக்குவமை கொண்டாள்
உழந்துவிழி பெற்றதோர் உயிர்ப்பொறையும் ஒத்தாள். 553

வாங்கினள் முலைக்குவையில் வைத்தனள் சிரத்தால்
தாங்கினள் மலர்க்கண்மிசை ஒத்தினள் தடந்தோள்
வீங்கினள் மெலிந்தனள் குளிர்ந்தனள் வெதுப்போடு
ஏங்கினள் உயிர்த்தனள்இது இன்னதெனல் ஆமே. 554

---

549 : நீண்டமுடி வேந்தன்-தசரதன்.

குறிப்பு: யாண்டையது கான் (வனம் எங்கே இருக்கிறது?) என்று சீதை கேட்டதாக அயோத்தியாகாண்டத்தில் அதற்குரிய இடத்தில் கூறப்படவில்லை.

550 : சுமந்திரன்-சுமந்திரனே. வள்ளல்மொழி வாசகம்-இராமன் சொன்ன ஆறுதல் மொழிகளால். பிள்ளையொடு தன்திறம்-சீதையிடம் அவள் தன்மையை.

552 : திறம் தெரிவது என்கொல்-தன்மையைக் கூறுவது எப்படி?

554 : ஆமே-ஆகுமோ? முடியுமோ?

மோக்கும்முலை வைத்துற முயங்கும்இழி நன்னீர்
நீக்கிநிறை கண்ணிணை ததும்பநெடு நீளம்
நோக்கும்நுவ லக்கருதும் ஒன்றும்நுவல் கில்லாள்
மேக்குநிமிர் விம்மலள் விழுங்கல்உறு கின்றாள். 555

நீண்டவிழி நேரிழைதன் மின்னின்நிறம் எல்லாம்
பூண்டதொளிர் பொன்அனைய பொம்மல்நிறம் மெய்யே
ஆண்தகைதன் மோதிரம் அடுத்தபொரு ளெல்லாம்
தீண்டளவில் வேதிகைசெய் தெய்வமணி கொல்லோ. 556

இருந்துபசி யால்இடர் உழந்தவர்கள் எய்தும்
அருந்தும்அமு தாகியது அறத்தவரை அண்மும்
விருந்தும்என லாகியது வீயும்உயிர் மீளும்
மருந்தும்என லாகியது வாழிமணி ஆழி. 557

இத்தகையள் ஆகிஉயிர் ஏமுற விளங்கும்
முத்தநகை யாள்விழியின் ஆலிமுலை முன்றில்
தத்திஉக மென்குதலை தள்ளஉயிர் தந்தாய்
உத்தம எனஇனைய வாசகம் உரைத்தாள். 558

வேறு

மும்மையாம் உலகம் தந்த முதல்வற்கு முதல்வன் தூதாய்ச்
செம்மையாய் உயிர்தந் தாய்க்குச் செயல்என்னால் எளியது. உண்டே
அம்மையாய் அத்தன் ஆய அப்பனே அருளின் வாழ்வே
இம்மையே மறுமை தானும் நல்கினை இசையோ டென்றாள். 559

அனுமானுக்குச் சீதை சிரஞ்சீவித்துவம் அளித்தல்

பாழிய பணைத்தோள் வீர துணையிலேன் பரிவு தீர்த்த
வாழியாய் வள்ள லேயான் மறுவிலா மனத்தேன் என்னில்
ஊழிஓர் பகலாய் ஓதும் ஆண்டெலாம் உலகம் ஏழும்
ஏழும்வீ வுற்ற ஞான்றும் இன்றென இருத்தி என்றாள். 560

---

556 : தீண்டளவில் வேதிகை செய் தெய்வமணி - தொட்ட மாத்திரத்தில் பொன்னாக மாற்றும் ஸ்பரிச வேதி என்ற கல்.

557 : அறத்தவரை-இல்லறத்தவரை.

559: எளியது உண்டே-எளிதாகச் செய்யக் கூடியது உண்டோ?

560: ஊழி ஓர் பகலாய் ஓதும் ஆண்டெலாம்-பல யுகங்கள் கொண்ட ஊழிக்காலத்தை ஒருபகல் என்று கூறும் பிரமனுடைய ஆயுள்நாள் முழுவதும். மனிதர்களுக்கு ஒருவருஷம் தேவர்களுக்கு ஒருநாள். இப்படிப்பட்ட நாட்களைக் கொண்டுள்ள நான்கு யுகங்கள் பிரமனுக்கு ஒருபகல்; இரவும் அதே அளவுடையது. இம்மாதிரியான நாட்களைக் கொண்ட நூறு வருஷங்கள்கொண்டது பிரமனது ஆயுட்காலம். அதன் முடிவில் உலகங்கள் அழியும். உலகம் ஏழும் ஏழும் - மேல் ஏழு உலகங்களும், கீழ் ஏழு உலகங்களும்.

மீண்டுரை விளம்பல் உற்ருள் விழுமிய குணத்தோய் வீரன்
யாண்டையான் இளவ லோடும் எவ்வழி எய்திற்று உன்னை
ஆண்தகை அடியேன் தன்மை யார்சொல அறிந்த தென்ருள்
தூண்திரள் தடந்தோ ளானும் உற்றது சொல்லல் உற்ருன். 561

உழைக்குலத் தீய மாய உருவுகொண்டு உறுதல் செய்தான்
மழைக்கரு நிறத்து மாய அரக்கன்மா ரீசன் என்பான்
இழைத்தட மார்பத்து அண்ணல் எய்யப்போய் வையம் சேர்வான்
அழைத்தபொய்க் குரலி ஞேசை மயக்கியது உன்னை அம்மா. 562

இக்குரல் இளவல் கேளாது ஒழிகென இறைவன் இட்டான்
மெய்க்குரல் சாபம் பின்னை விளைந்தது விதியின் வெம்மை
பொய்க்குரல்இன்று பொல்லாப்பொருள்பின்னர் பயக்கும் என்பான்
கைக்குரல் வரிவில் லானும் இளையவன் வரவு கண்டான். 563

கண்டபின் இளைய வீரன் முகத்தினுல் கருத்தை ஓர்ந்த
புண்டரீ கக்க ணுனும் உற்றது புகலக் கேட்டான்
வண்டுறை சாலை வந்தான் உன்திரு வடிவு காணுன்
உண்டுயிர் இருந்தான் இன்னல் உழப்பதற்கு ஏது ஒன்ருே. 564

தேண்டிநேர் கண்டேன் வாழி தீதிலன் எம்கோன் ஆகம்
பூண்டமெய் உயிரே போகப் பொய்உயிர் போல நின்ற
ஆண்தகை நெஞ்சி னின்றும் அகன்றிலை அழிவுண் டாமோ
ஈண்டுநீ இருந்தாய் யாண்டுஅங்கு எவ்வுயிர் விடும்இ ராமன். 565

அந்நிலை ஆய அண்ணல் ஆண்டுநின்று அன்னை நின்னைத்
துன்இருங் கானும் யாறும் மலைகளும் தொடர்ந்து நாடி
இன்னுயிர் இன்றி ஏகும் இயந்திரப் படிவம் ஒப்பான்
தன்னுயிர் புகழ்க்கு விற்ற சடாயுவை வந்து சார்ந்தான். 566

வந்துஅவன் மேனி நோக்கி வானுயர் துயரின் வைகி
எந்தைநீ உற்ற தன்மை இயம்பென இலங்கை வேந்தன்
சுந்தரி நின்னைச் செய்த வஞ்சனை சொல்லச் சொல்ல
வெந்தன உலகம் என்ன நிமிர்ந்தது சீற்ற வெந்தீ. 567

சீறிஇவ் உலகம் மூன்றும் தீய்ந்துகச் சினவாய் அம்பால்
நூறுவென் என்று கைவில் நோக்கிய காலை நோக்கி
ஊறுஒரு சிறியோன் செய்ய முனிதியோ உலகை உள்ளம்
ஆறுதி என்று தாதை ஆற்றலின் சீற்றம் ஆறி. 568

எவ்வழி ஏகி உற்ருன் யாண்டையான் உறையுள் யாது
செவ்வியோய் கூறு கென்னச் செப்புவான் உற்ற காலை
வெவ்விய விதியின் கொட்பால் வீடினன் கழுகின் வேந்தன்
எவ்விய வரிவில் செங்கை இருவரும் இடரின் வீழ்ந்தார். 569

அயர்த்தவர் அரிதில் தேறி ஆண்தொழில் தாதைக்கு அன்று
செயத்தகு கடன்கள் யாவும் தேவரும் மருளச் செய்தார்
கயத்தொழில் அரக்கன் தன்னை நாடிநாம் காண்டும் என்னுப்
புயல்தொடும் குடுமிக் குன்றும் கானமும் கடந்து போனுர். 570

அவ்வழி நின்னைக் காணுது அயர்த்தவர் அரிதில் தேறி
செவ்வழி நயனம் செல்லும் நெடுவழி சேறு செய்ய
வெவ்வழல் தன்னில் உற்ற மெழுகென அழியும் மெய்யன்
இவ்வழி இனைய பன்னி அறிவழிந் திரங்கல் உற்ருன். 571

வேறு

கன்மத்தை ஞாலத்தவர் யார்உளர் கடக்க வல்லார்
பொன்மொய்த்த தோளான் மயல்கொண்டு புலன்கள் வேருய்
நன்மத்தம் நாகத்து அயல்சூடிய நம்ப னேபோல்
உன்மத்தன் ஆனுன் தனைஒன்றும் உணர்ந்தி லாதான். 572

போதாயின போதுஉன தண்புனல் ஆடல் பொய்யோ
சீதாபவ ளக்கொடி அன்னவள் தேடி என்கண்
நீதாதரு கிற்றிலே யேல்நெருப்பு ஆதி என்னுக்
கோதாவரி யைச்சினம் கொண்டனன் கொண்டல் ஒப்பான். 573

குன்றேகடிது ஓடிநற் கோமளக் கொம்பர் அன்ன
என்தேவியைக் காட்டுதி காட்டலே என்னின் இவ்அம்பு
ஒன்றேஅமை யும்உன் னுடைக்குலம் உள்ள எல்லாம்
இன்றேபிள வாளரி யாக்கரி யாக்க என்ருன். 574

பொன்மான்உரு வால்சில மாயை புணர்க்க அன்ருே
என்மான்அகல் வுற்றனள் இப்பொழுது என்கண் என்னு
நன்மான்களே நோக்கிஉம் நாமமும் மாய்ப்பென் இன்றே
வில்மாண்கொலே வாளியின் என்று வெகுண்டு நின்ருன். 575

வேறுற்ற மனத்தவன் இன்ன விளம்பி நோவ
ஆறுற்ற நெஞ்சின் தனதுஆருயிர் ஆய தம்பி
கூறுற்ற சொல்என் றுளகோதறு நன்ம ருந்தால்
தேறுற்று உயிர்பெற் றியல்பும்சில சொல்லல் உற்ருன். 576

573: (இதன் பொருள்) "உதயகாலம் வந்ததும் (சீதை) உன் குளிர்ந்த நீரில் குளிப்பது பொய்யோ? (ஆகவே, அவளே நன்கு அறிந்த நீ) பவளக்கொடி போன்ற சீதையைத் தேடி என்னிடம் சேர்ப்பித்துவிடு. இல்லேயென்ருல் நெருப்பாக வெந்துவிடுவாய்'' என்று கோதாவரி நதியைப் பார்த்து மேகத்தை ஒப்பான நிறம் படைத்த இராமன் கோபித்தான்.

வந்தான்இளை யானொடு வானுயர் தேரின் வைகும்
நந்தாவிளக் கின்வரும் எம்குல நாதன் வாழும்
சந்தார்தடங் குன்றினில் தன்உயிர்க் காத லோனும்
செந்தாமரைக் கண்ணனும் நட்டனர் தேவர் உய்ய. 577

உண்டாயதும் உற்றதும் முற்றும் உணர்த்தி உள்ளம்
புண்தான்என நோவுற விம்முறு கின்ற போழ்தின்
எண்தான்உழந்து இட்டனும் ஏந்திழை யாங்கள் காட்டக்
கண்டான்உயிர் வேதமும் போதமும் காண்கி லாதான். 578

தணிகின்ற நம்சொல் தொடர்தன்மைஅத் தன்மை தன்னைத்
துணிகொண் டிலங்கும் சுடர்வேலவன் தூய நின்கண்
அணிகண் டுழியே அமுதம்தெளித் தாலும் ஆருப்
பிணிகொண் டதுபண்டு அதுண்டாயினும் பேர்ப்ப தன்றால். 579

அயர்வுற்றுஅரி தில்தெளிந்து அம்மலைக்கு அப்பு றத்தோர்
உயர்பொற்கிரி யுற்றுளன் வாலிஎன்று ஓங்கல் ஒப்பான்
துயருற்றஇ ராவணன் வாலிடைப் பண்டு தூங்க
மயர்வுற்றபொ ருப்பொடு மால்கடல் தாவி வந்தான். 580

ஆயானைஓர் அம்பினில் ஆருயிர் வாங்கி அன்பில்
தூயான்வயின் அவ்வரசு ஈந்தவன் சுற்று சேனை
மேயாவரு வாய்என விட்டனன் மேவு காறும்
ஏயான்இருந் தான்இடை திங்கள்இ ரண்டி ரண்டும். 581

பிற்கூடிய சேனை பெருந்திசை பின்ன தாக
விற்கூடுநு தல்திரு நின்அடி மேவ ஏவித்
தெற்குஊடுரு வக்கடிது ஏவினன் என்னை என்ன
முற்கூடிய கூறினன் காலம்ஓர் மூன்றும் வல்லான். 582

வேறு

அன்பினன் அம்மொழி உரைக்க ஆரியன்
வன்பொறை நெஞ்சினன் வருத்தம் உன்னுவாள்
என்புற உருகினள் இரங்கி ஏங்கினள்
துன்பமும் உவகையும் சுமந்த உள்ளத்தாள். 583

577: நந்தா விளக்கின் வரும்-சூரியனிடமிருந்து புதல்வனாகத் தோன்றிய. எம் குல நாதன்-சுக்கிரீவன். குன்றினில்-இருசியமுக மலையில்.

579: நம் சொல்-சுக்கிரீவன் முதலிய வானரர்களாகிய எங்கள் சொல். வேலவன்-இராமன்.

580: பொற்கிரி-கிஷ்கிந்த மலை.

582: முற்கூடிய-முன்னால் நடந்தவற்றை. காலம்...வல்லான்-மூன்று காலத்தையும் அறியும் ஞானியான அனுமான்.

நையுறு சிந்தையள் நயன வாரியின்
தொய்யல்வெஞ் சுழியிடைச் சுழிக்கும் மேனியள்
ஐயநீ அளப்பரும் அளக்கர் நீந்தினை
எய்தியது எப்பரிசு இயம்பு வாய்என்ருள். 584

சுருங்கிடை நின்உயிர்த் துணைவன் தூயதாள்
ஒருங்குடை உணர்விஞர் ஓய்வில் மாயையின்
பெருங்கடல் கடந்தனர் பெயரும் பெற்றிபோல்
கருங்கடல் கடந்தனென் காலி னுல்என்ருன். 585

இத்துணைச் சிறியதோர் எண்ணில் யாக்கையை
தத்தினை கடல்அது தவத்தின் ஆயதோ
சித்தியின் இயன்றதோ செப்பு வாய்என்ருள்
முத்தினும் நிலவினும் முறுவல் முற்றினுள். 586

அனுமான் தனது பெரிய உருவத்தைக் காட்டல்

சுட்டினன் நின்றனன் தொழுத கையினன்
விட்டுயர் தோளினன் விசும்பின் மேக்குயர்
எட்டரு நெடுமுகடு எய்த நீளுமேல்
முட்டும்என்று உருவொடு வளைந்த மூர்த்தியான். 587

செவ்வழிப் பெருமைஎன்று உரைக்கும் செம்மைதான்
வெவ்வழிப் பூதம்ஓர் ஐந்தின் மேலதோ
அவ்வழித்து அன்றெனின் அனுமன் பாலதோ
எவ்வழித்து ஆகும்என்று எண்ணும் ஈட்டதோ. 588

ஒத்துயர் கனகவான் கிரியின் ஓங்கிய
மெய்த்துறு மரந்தொறும் மின்மி னிக்குலம்
மொய்த்துள வாம்என முன்னும் பின்னரும்
தொத்தின தாரகை மயிரின் சுற்றெலாம். 589

கண்தலம் அறிவொடு கடந்த காட்சியன்
விண்தலம் இருபுடை ளிளங்கும் மெய்ம்மைஅக்
குண்டலம் இரண்டும்அக் கோளின் மாச்சுடர்
மண்டலம் இரண்டொடு மாறு கொண்டவே. 590

ஏண்இல ஒருகுரங்கு ஈதென்று எண்ணலா
ஆணியை அனுமனை அமைய நோக்குவான்
சேணுயர் பெருமையோர் திறத்தது அன்றெனு
நாணுறும் உலகெலாம் அளந்த நாயகன். 591

586: யாக்கையை-உடம்பை உடையவனே. சித்தியின்-மந்திர சித்தியினுல்.
590: மண்டலம் இரண்டு-சூரியமண்டலமும், சந்திர மண்டலமும்,
591: நோக்குவான்-திருமால் நோக்குவான்.

எண்திசை மருங்கினும் உலகம் யாவினும்
தண்டல்இல் உயிரெலாம் தன்னை நோக்கின
அண்டமென் றதின்உறை அமரர் யாரையும்
கண்டனன் தானும்தன் கமலக் கண்களால். 592

எழுந்துயர் நெடுந்தகை இரண்டு பாதமும்
அழுந்துற அழுத்தலின் இலங்கை ஆழ்கடல்
விழுந்தது நிலமிசை விரிந்த வெண்திரை
தழைந்தன புரண்டன மீனம் தாமெலாம். 593

வஞ்சிஅம் மருங்குல்அம் மறுவில் கற்பினள்
கஞ்சமும் புரைவன கழலும் கண்டிலாள்
துஞ்சினர் அரக்கர்என்று உவக்கும் சூழ்ச்சியாள்
அஞ்சினென் இவ்வுரு அடங்கு வாய்என்றாள். 594

முழுவதும் இவ்வுருக் காண முற்றிய
குழுவிலது உலகுஇனிக் குறுகு வாய்என்றாள்
எழுவினும் எழில்இலங்கு இராமன் தோள்களைத்
தழுவின ளாம்எனத் தளிர்க்கும் தன்மையாள். 595

ஆண்தகை அனுமனும் அருள்அ தாம்என
மீண்டனன் விசும்பெனும் பதத்தை மீச்செல்வான்
காண்டலுக்கு எளியதோர் உருவம் காட்டினன்
தூண்டல்இல் விளக்குஅனாள் இனைய சொல்லினள். 596

வேறு

இடந்தாய் உலகை மலையோடும்
  எடுத்தாய் விசும்பை இவைசுமக்கும்
படந்தாழ் அரவை ஒருகரத்தால்
  பறித்தாய் எனினும் பயன்இன்றால்
நடந்தாய் இடையே என்றாலும்
  நாணும் நினக்கு நளிர்கடலைக்
கடந்தாய் என்றால் என்னாகும்
  காற்றும் அனைய கடுமையாய். 597

ஆழி நெடுங்கை ஆண்தகைதன்
  அருளும் புகழும் அழிவின்றி
ஊழி பலவும் நிலைநிறுத்தற்கு
  ஒருவன் நீயே உளையானாய்
பாழி நெடுந்தோள் வீரநின்
  பெருமைக் கேற்பப் பகைஇலங்கை
ஏழு கடற்கும் அப்புறத்தது
  ஆகா திருந்தது இழிவன்றோ. 598

597: இடந்தாய், எடுத்தாய்-இடந்தாயென்றாலும், எடுத்தாயென்றாலும். நாணும்-மகாவல்லமை பொருந்திய உனக்கு இந்தச் செயல்கள் அற்பமானவையும், நாணத்தைத் தரக்கூடியவையும் ஆகும்.

அறிவும் ஈதே உருஈதே ஆற்றல் ஈதே ஐம்புலத்தின்
செறிவும் ஈதே செயல்ஈதே தேற்றம் ஈதே தேற்றத்தின்
நெறியும் ஈதே நினைவுஈதே நீதி ஈதே நினக்கென்றால்
வெறியர் அன்றோ குணங்களால் விரிஞ்சன் முதலா மேலானோர். 599

மின்நேர் எயிற்று வல்அரக்கர் வீக்கம் நோக்கி வீரற்குப்
பின்னே பிறந்தான் அல்லாதோர் துணைஇ லாத பிழைநோக்கி
உன்னா நின்றே உடைகின்றேன் ஒழிந்தேன் ஐயம் உயிர்உயிர்த்தேன்
என்னே நிருதர் என்னுவர் இவனே எம்கோன் துணைஎன்றால். 600

மாண்டேன் எனினும் பழுதன்றே இன்றே மாயச் சிறைநின்றும்
மீண்டேன் என்னை ஒறுத்தாரைக் குலங்க ளோடும் வேர்அறுத்தேன்
பூண்டேன் எங்கோன் பொலங்கழலும் புகழே யன்றிப் புன்பழியும்
தீண்டேன் என்று மனம்மகிழ்ந்தாள் திருவின்முகத்துத் திருஅன்னாள்.

அண்ணல் பெரியோன் அடிவணங்கி அறிய உரைப்பான் அருந்ததியே
வண்ணக் கடலின் இடைக்கிடந்த மணலின் பலரால் வானரத்தின்
எண்ணற் கரிய படைத்தலைவர் இராமற்கு அடியார் யான்அவர்தம்
பண்ணைக் கொருவன் எனப்போந்தேன் ஏவக் கடவ பணிசெய்வேன்.

வானரப் படையின் பெருக்கை அனுமான் கூறுதல்

வெள்ளம் ஏழு பத்துளதால் வீரன் சேனை இவ்வேலைப்
பள்ளம் ஒருகை நீர்அள்ளிக் குடிக்கப் போதும் பான்மையதோ
கள்ள அரக்கர் கடிஇலங்கை காணா தொழிந்த தால்அன்றோ
உள்ள துணையும் உளதாவது அறிந்த பின்னும் உளதாமோ. 603

வாலி இளவல் அவன்மைந்தன் மயிந்தன் துமிந்தன் வயக்குமுதன்
நீலன் இடபன் குமுதாக்கன் பனசன் சரபன் நெடுஞ்சாம்பன்
காலன் அனைய துன்மருடன் காம்பன் கவயன் கவயாக்கன்
ஞாலம் அறியும் நற்சங்கன் வினதன் துவிந்தன் நளன்என்பான். 604

தம்பன் தூமத் தனிப்பேரோன் ததியின் வதனன் சதவலிஎன்று
இம்பர் உலகோடு எவ்வுலகும் எடுக்கும் மிடுக்கர் இராமன்கை
அம்பின் உதவும் படைத்தலைவர் அவரை நோக்கின் இவ்வரக்கர்
வம்பின் முலையாய் உறையிடவும் போதார் கணக்கு வரம்புண்டோ.

599: ஐம்புலத்தின் செறிவும்-ஐந்து புலன்களையும் அடக்கும் தன்மையும். வெறியர்-வெறுமையானவர்; இல்லாதவர்.

603: உள்ள துணையும் உளதாவது-இன்றுவரையும் இலங்கை அழியாமல் இருப்பது.

6. சூடாமணிப் படலம்

[இராமனிடம் கொண்டுபோய்க் கொடுக்கும்படி சீதை தனது சூடாமணியை (தலையில் சூடும் இரத்தினத்தை) அனுமானிடம் கொடுத்தது பற்றிக் கூறும் பகுதி]

உண்டுதுணை என்னஎளி தோஉலகின் அம்மா
புண்டரிகை போலும்இவள் இன்னல்புரி கின்றுள்
அண்டமுதல் நாயகனது ஆவிஅனை யாளைக்
கொண்டகல்வ தேகருமம் என்றுணர்வு கொண்டான். 606

கேட்டிஅடி யேன்உரை முனிந்தருளல் கேளான்
வீட்டியிடு மேல்அவனை வேறல்வினை யன்றுல்
நீட்டிஇனி என்பயன் இராமன்எதிர் நின்னைக்
காட்டிஅடி தாழ்வென்இது காண்டிஇது காலம். 607

பொன்திணி பொலங்கொடிஎன் மென்மயிர் பொருந்தித்
துன்றிய புயத்தினிது இருக்கதுயர் விட்டாய்
இன்துயில் விளைக்கஓர் இமைப்பின்இறை வைகும்
குன்றிடை உனைக்கொடு குதிப்பென்இடை கொள்ளேன். 608

அறிந்திடை அரக்கர்தொடர் வார்கள்உள ராமேல்
முறிந்துதிர நூறிஎதிர் என்சினம் முடிப்பேன்
நெறிந்தகுழல் நின்நிலைமை கண்டுநெடி யோன்பால்
வெறுங்கைபெய ரேன்ஒருவ ராலும்விளி யாதேன். 609

இலங்கையொடும் ஏகுதிகொல் என்னினும் இடந்தென்
வலங்கொள்ஒரு கைத்தலையில் வைத்தெதிர் தடுப்பான்
விலங்கினரை நூறிவரி வெஞ்சிலையி னோர்தம்
பொலங்கொள்கழல் தாழ்குவென்இது அன்னைபொருள் அன்றுல். 610

அருந்ததி உரைத்திஅழ கற்குஅருகு சென்றுன்
மருந்தனைய தேவிநெடு வஞ்சர்சிறை வைப்பில்
பெருந்துயரி னோடும்ஒரு வீடுபெறல் இல்லாது
இருந்தனள் எனப்பகரின் என்அடிமை என்னும். 611

606: இன்னல் புரிகின்றுள்–துன்பத்தை அனுபவிக்கிறுள்.

607: முனிந்தருளல்-கோபிக்காதே. கேளான்......யன்றுல்–இராவணன் உன்னைக் கொன்றுவிட்டால், அப்புறம் அவனை வெல்லுதல் ஒரு காரியத்தில் சேர்ந்ததல்ல. நீட்டி இனி என்பயன்–இனி நீண்ட நேரம் பேசி என்ன பயன்?

610: இலங்கையோடும் ஏகுதிகொல் என்னினும்–இலங்கையோடு பெயர்த்தெடுத்து என்னைக் கொண்டுபோய் விடுவாயோ என்றுலும். தடுப்பான்-தடுப்பதற்கு. வெஞ்சிலையினோர்–இராம இலக்குவர்கள்.

புண்தொடர்வு அகற்றிய புயத்தினெடு புக்கேன்
விண்டவர் வலத்தையும் விரித்துரைசெய் கேனே
கொண்டுவரு கிற்றிலென் உயிர்க்குறுதி கொண்டேன்
கண்டுவரு கிற்றிலென் எனக்கழறு கேனே. 612

இருக்கும்மதில் சூழ்கடி இலங்கையை இமைப்பின்
உருக்கிளரி யால்இகல் அரக்கரையும் ஒன்ருய்
முருக்கிநிரு தக்குலம் முடித்துவினை முற்றிப்
பொருக்கஅகல் கென்னினும்அது இன்றுபுரி கின்றேன். 613

இந்துநுதல் நின்னெடுஇவண் எய்திஇகல் வீரன்
சிந்தையுறு வெந்துயர் தவிர்ந்துதெளி வோடும்
அந்தம்இல் அரக்கர்குலம் அற்றவிய நூறி
நந்தல்இல் புவிக்கண்இடர் பின்களைதல் நன்ருல். 614

வேறினி விளம்பஉள தன்றுவிதி யால்இப்
பேறுபெற என்கண்அருள் தந்தருளு பின்னே
ஆறுதுயர் அஞ்சொல்இள வஞ்சிஅடி யன்தோள்
ஏறுகடி தென்றுதொழுது இன்னடி பணிந்தான். 615

வேறு

ஏய நன்மொழி எய்தவி எம்பிய
தாயை முன்னிய கன்றனை யான்தனக்கு
ஆய தன்மை அரியதன் ருூம்எனத்
தூய மென்சொல் இனையன சொல்லுவாள். 616

அரிய தன்றுநின் ஆற்றலுக் கேற்றதே
தெரிய எண்ணினை செய்வதும் செய்தியே
உரியது அன்றென ஓர்கின்றது உண்டதுஎன்
பெரிய பேதைமைச் சில்மதிப் பெண்மையால். 617

வேலை யின்இடை யேவந்து வெய்யவர்
கோலி வெஞ்சரம் நின்னெடும் கோத்தபோது
ஆலம் அன்னவர்க்கு அல்லைஎற்கு அல்லையால்
சால வும்தடு மாறும் தனிமையோய். 618

612: புக்கேன் - நான் இராமனிடம் சென்று. விண்டவர்—இராவணன் முதலிய அரக்கர்கள்.

614: இவண்-இப்பொழுது. வீரன்-இராமன்.

616: மென்சொல்-சீதை.

618: வெஞ்சரம் நின்னெடும் கோத்தபோது-நீ என்னை எடுத்துச் செல்லும்போது அரக்கர்கள் உன்மீது அம்புகளைத் தொடுத்தால். ஆலம்......அல்லையால்-அவர்களை விஷம்போல அழிக்கத் தனியனுன உன்னால் முடியாது; எனக்கு உன்னால் உதவியில்லாமல் போகும். தடுமாறும்-தடுமாறுவாய்.

அன்றி யும்பிறிது உள்ளதுஒன்று ஆரியன்
வென்றி வெஞ்சிலை மாசுணும் வேறினி
நன்றி என்பதம் வஞ்சித்த நாய்களின்
நின்ற வஞ்சனை நீயும் நினைத்தியோ. 619

கொண்ட போரின்எம் கொற்றவன் வில்தொழில்
அண்டர் ஏவரும் காணஎன் ஆக்கையைக்
கண்ட வாள்அரக் கன்விழி காகங்கள்
உண்ட போதன்றி யான்உளென் ஆவெனே. 620

வெற்றி நாணுடை வில்லியர் வில்தொழில்
முற்ற நாண்இல் அரக்கியர் மூக்கொடும்
அற்ற நாணினர் ஆயின போதன்றிப்
பெற்ற நாணமும் பெற்றிய தாகுமோ. 621

பொற்பி றங்கல் இலங்கை பொருந்தலர்
எற்பு மால்வரை ஆகில தேஎனின்
இற்பி றப்பும் ஒழுக்கும் இழுக்கம்இல்
கற்பும் யான்பிறர்க்கு எங்ஙனம் காட்டுகேன். 622

அல்லல் மாக்கள் இலங்கைய தாகுமோ
எல்லை நீத்த உலகங்கள் யாவும்என்
சொல்லி னுல்சுடு வேன்அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன். 623

வேறும் உண்டுரை கேள்அது மெய்ம்மையோய்
ஏறு சேவகன் மேனிஅல் லால்இடை
ஆறும் ஐம்பொறி நின்னையும் ஆண்எனக்
கூறும் இவ்வுருத் தீண்டுதல் கூடுமோ. 624

தீண்டி னுன்எனின் இத்தனை சேண்பகல்
ஈண்டு மோஉயிர் மெய்யின் இமைப்பின்முன்
மாண்டு தீர்வென்என் றேநிலம் வன்கையால்
கிண்டு கொண்டெழுந்து ஏகினன் கீழ்மையான். 625

620; கண்ட-ஆசையோடு பார்த்த. அரக்கன்-இராவணன்.

622: அற்ற நாணினர்-அறுந்த தாலியினர். பெற்ற நாணமும்-நான் அடைந்துள்ள நாணம் என்ற பெண்மைக் குணமும்.

624; ஏறு சேவகன்-பெரிய வீரனை இராமன். ஆறும் ஐம்பொறி நின்னையும்-பஞ்சேந்திரியங்களும் அடங்கிய உன்னையும். கூறும்-உலகம் கூறும்.

625: ஈண்டுமோ உயிர் மெய்யின்-(இராவணனின்) உயிர் (அவனது) உடம்பில் பொருந்தி இருக்குமோ. ("என் உயிர் என் உடம்பில் பொருந்தி இருக்குமோ" என்றும் பொருள் கூறலாம்).

மேவு சிந்தைஇல் மாதரை மெய்தொடின்
தேவு வன்தலை சிந்துக நீஎனப்
பூவில் வந்த புராதன னேபுகல்
சாவம் உண்டெனது ஆருயிர் தந்ததால். 626

அன்ன சாவம் உளதென ஆண்மையான்
மின்னு மோலியன் மெய்ம்மையன் வீடணன்
கன்னி என்வயின் வைத்த கருணையாள்
சொன்ன துண்டு துணுக்கம் அகற்றுவாள். 627

ஆயது உண்மையி னானும் அதன்றெனின்
மாய்வென் என்றும் அறம்வழு வாதென்றும்
நாய கன்வலி எண்ணியும் நானுடைத்
தூய்மை காட்டவும் இத்துணை தூங்கினேன். 628

ஆண்டு நின்றும் அரக்கன் அகழ்ந்துகொண்டு
ஈண்டு வைத்தது இளவல் இயற்றிய
நீண்ட சாலை யொடுநிலை நின்றது
காண்டி ஐயநின் மெய்உணர் கண்களால். 629

தீர்வி லேன்இது ஒருபக லும்சிலை
வீரன் மேனியை மானும்இவ் வீங்குநீர்
நார நாள்மலர்ப் பொய்கையை நண்ணுவேன்
சோரும் ஆருயிர் காக்கும் துணிவினால். 630

ஆத லான்அது காரியம் அன்றுஐய
வேத நாயகன் பால்இனி மீண்டனை
போதல் காரியம் என்றனள் பூவைஅக்
கோதி லானும் இனையன கூறினான். 631

நன்று நன்றிவ் உலகுடை நாயகன்
தன்து ணைப்பெருந் தேவி தவத்தொழில்
என்று சிந்தை களித்துஉவந்து ஏத்தினான்
நின்ற சங்கை இடரொடு நீங்கினான். 632

இருளும் ஞாலம் இராவண னால்இது
தெருளும் நீஇனிச் சில்பகல் தங்குறின்
மருளும் மன்னவற்கு யான்சொலும் வாசகம்
அருளு வாய்என் றடியின் இறைஞ்சினான். 633

626: தேவு-தெய்வம் கொடுத்த வரத்தினைக் கொண்ட; வெட்டினாலும் மீண்டும் முளைக்கும்படியாக வரம்பெற்ற. புராதனனே-பிரமனே. சாவம்-சாபம். அதன் விபரம்: ஒரு சமயம் புஞ்சிகஸ்தலை என்ற தேவலோகத்துப் பெண், பிரமனைக் கண்டு தொழுவதற்காகப் போய்க் கொண்டிருந்தபோது அவளை இராவணன் கற்பழித்தான்; அதை அறிந்த பிரமன் கோபம் கொண்டு, "நீ உன்னை விரும்பாத பெண்களைப் பலாத்காரமாகத் தொட்டால் அப்பொழுதே உன் தலைகள் வெடித்து உதிர, நீ சாவாய்" என்று இராவணனை நோக்கிச் சாபமிட்டான். ஆரணிய காண்டம் 885-ம் பாட்டிலும் இந்தச் சாபம் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

628: தூங்கினேன்-தாமதித்தேன்.

629: இளவல் இயற்றிய நீண்ட சாலை-இலக்குவன் கட்டிய பர்ணசாலை.

இராமன் முதலியோருக்குச் சீதை கூறியனுப்பிய செய்தி

இன்னும் ஈண்டொரு திங்கள் இருப்பல்யான்
நின்னை நோக்கிப் பகர்ந்தது நீதியோய்
பின்னை ஆவி பிடிக்கின்றி லேன்என்றன்
மன்னன் ஆணை இதனை மனக்கொள்நீ. 634

ஆரம் தாழ்திரு மார்பற்கு அமைந்ததோர்
தாரம் தான்அல ளேனும் தயாஎனும்
ஈரம் தான்மனத் தில்லைஎன் றாலும்தன்
வீரம் காத்தலை வேண்டென்று வேண்டுவாய். 635

ஏத்தும் வென்றி இளையவற்கு ஈதொரு
வார்த்தை கூறுதி மன்அரு ளால்எனைக்
காத்தி ருந்தவற் கேகடன் இன்றிடை
கோத்த வெஞ்சிறை வீடென்று கூறுவாய். 636

திங்கள் ஒன்றில்என் செய்தவம் தீர்தலால்
இங்கு வந்தில னேஎனின் யாணர்நீர்க்
கங்கை யாற்றங் கரைஅடி யேற்குத்தன்
செங்கை யால்கடன் செய்கென்று செப்புவாய். 637

சிறக்கும் மாமியர் மூவர்க்கும் சீதைஆண்டு
இறக்கின் றாள்தொழு தாள்எனும் இன்னசொல்
அறத்தின் நாயகன் பால்அருள் இன்மையால்
மறக்கு மாயினும் நீமற வேல்ஐயா. 638

வந்தெ னைக்கரம் பற்றிய வைகல்வாய்
இந்த இப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலும் தொடேன்என்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய். 639

ஈண்டு நான்இருந்து இன்னுயிர் மாயினும்
மீண்டு வந்து பிறந்துதன் மேனியைத்
தீண்ட லாவதோர் தீவினை தீர்வரம்
வேண்டி னாள்தொழு தென்று விளம்புவாய். 640

அரசு வீற்றிருந் தாளவும் ஆய்மணிப்
புரசை யானையின் வீதியில் போதவும்
விரசு கோலங்கள் காண விதியிலேன்
உரைசெய் தென்னைஎன் ஊழ்வினை உன்னுவேன். 641

636: மன்அருளால்-இராமனின் கட்டளையால். இன்றிடை...கூறுவாய்-நடுவே இப்போது ஏற்பட்ட கொடுஞ் சிறையிலிருந்து விடுவிப்பது என்று கூறுவாய்.

637: தவம்-விரதம்.

தன்னை நோக்கி உலகம் தளர்தற்கும்
அன்னை நோய்க்கும் பரதன்அங்கு ஆற்றும்
இன்னல் நோய்க்கும்அங்கு ஏகுவ தன்றியே
என்னை நோக்கிஇங்கு எங்ஙனம் எய்துமோ. 642

வேறு

எந்தையாய் முதலிய கிளைஞர் யார்க்கும்என்
வந்தனை விளம்புதி கவியின் மன்னனைச்
சுந்தரத் தோளனைத் தொடர்ந்து காத்துப்போய்
அந்தம்இல் நெடுநகர்க்கு அரசன் ஆக்கென்பாய். 643

இத்திறம் அனையவள் இயம்ப இன்னமும்
தத்துறல் ஒழிந்திலீர் தைய லீர்எனு
எத்திறத்து ஏதுவும் இயைந்த இன்னுரை
ஒத்தன தெரிவுற உணர்த்தி னுன்அரோ. 644

வேறு

சீதையை அனுமான் தேற்றுதல்

வீவாய் நீஇவண் மெய்அஃதே
ஒய்வான் இன்னுயிர் உய்வானும்
போவான் அந்நகர் புக்கன்றே
வேய்வான் மௌலியும் மெய்யன்றே. 645

கைத்தோ டும்சிறை கற்போயை
வைத்தோன் இன்னுயிர் வாழ்வானும்
பொய்த்துழ் வில்லிகள் போவாராம்
இத்தோடு ஒப்பது யாதுண்டே. 646

நல்லோய் நின்னை நலிந்தோரைக்
கொல்லோம் எம்உயிர் கொண்டங்கே
எல்லோ மும்செல எம்கோனும்
வில்லோ டும்செல வேண்டாவோ. 647

நீந்தா இன்னலின் நீந்தாமே
தேய்ந்தா ருதபெ ருஞ்செல்வம்
ஈந்தா னுக்குனை ஈயாதே
ஒய்ந்தால் எம்மின் உயர்ந்தார்யார். 648

நன்றாய் நல்வினை நல்லோரைத்
தின்றார் தம்குடர் பேய்தின்னக்
கொன்றா லல்லது கொள்ளேன்நாடு
என்றா னுக்கிவை ஏலாவோ. 649

643: கவியின் மன்னனை-சுக்கிரீவனை. சுந்தரத் தோளனை-இராமனை.

645: (இதன் பொருள்) நீ இங்கே இறப்பாயாம்; அது உண்மையாம். இப்போது மனம் தளர்ந்திருக்கும் இராமன் உயிரோடு இருப்பானும். அந்த அயோத்தி நகருக்குத் திரும்பிப் போவானும். போய் அல்லவா முடிசூடப் போகிறான்! இது உண்மையன்றோ!—(இவ்வாறு அனுமான் வேடிக்கையாகப் பேசி, எதிர்மறைப் பொருளை உணர்த்துகிறான்).

மாட்டா தார்சிறை வைத்தோயை
மீட்டாம் என்கிலம் மீள்வாமேல்
நாட்டார் நல்லவர் நல்நூலும்
கேட்டார் இவ்வுரை கேட்பாரோ. 650

பூண்டாள் கற்புடை யாள்பொய்யாள்
தீண்டா வஞ்சகர் தீண்டாமுன்
மாண்டாள் என்று மனம்தேறி
மீண்டால் வீரம் விளங்காதோ. 651

கெட்டேன் நீஉயிர் கேதத்தால்
விட்டாய் என்றிடின் வெவ்அம்பால்
ஒட்டா ரோடுஉலகு ஓர்ஏழும்
சுட்டா லும்தொலை யாஅன்றோ. 652

முன்னே கொல்வான் மூவுலகும்
பொன்னே ஓங்கிய போர்வில்லான்
என்னே நின்நிலை ஈதென்றால்
பின்னே செம்மை பிடிப்பானோ. 653

கோள்ஆ ளூர்உயிர் கோளோடும்
மூளா வெஞ்சினம் முற்றாகா
மீளா வேல்அயல் வேறுண்டோ
மாளா தோபுவி வானோடும். 654

தாழித் தண்கடல் தம்மோடும்
ஏழுக்கு ஏழுல கெல்லாம்அன்று
ஆழிக் கையவன் அம்பம்மா
ஊழித் தீயென உண்ணாவோ. 655

படுத்தான் வானவர் பற்றாரைத்
தடுத்தான் தீவினை தக்கோரை
எடுத்தான் நல்வினை எந்நாளும்
கொடுத்தான் என்றிவை கொள்ளாரோ. 656

651: விளங்காதோ-விளங்காது என்ற எதிர்மறைப் பொருள்.

652: கெட்டேன்-''தொலைந்தேன் போ'' என்று வியப்பினால் சொல்லும் வார்த்தை. தொலையா அன்றோ-பழியும் பாவமும் தீராது அல்லவா?

653: முன்னே கொல்வான் மூவுலகும்-உன்னை இராவணன் தூக்கிக் கொண்டு வருவதற்கு முன்னமேயே, மூன்று உலகங்களிலும் உள்ள அரக்கர்களைக் கொல்லுவதாக தண்டக வனத்து முனிவர்களிடம் உறுதி கூறிய இராமன். செம்மை-சாந்தம்.

654: மீளாவேல்-(இராமனின் கோபம்) குறையாவிட்டால். அயல் வேறுண்டோ-கோபத்துக்கு வேறு இலக்கு உண்டோ.

655: தாழி-ஆழ்ந்திருப்பது; (தாழ் இத்-தாழ்ந்திருக்கும் இந்த). ஏழுக்கு ஏழுலகெல்லாம்—பதினான்கு உலகங்கள் முழுவதையும்.

656: வானவர் பற்றாரை-தேவர்களின் விரோதிகளான அரக்கர்களை. என்றிவை கொள்ளாரோ-என்று இவற்றை உலகத்தார் கருதமாட்டார்களோ?

சின்னாள் நீஇடர் தீராதாய்
இன்னு வைகலின் எல்லோரும்
நன்னாள் காணுதல் நன்றன்றோ
உன்னால் நல்லறம் உண்டானால். 657

புளிக்கும் கண்டகர் புண்நீருள்
குளிக்கும் பேய்குடை யும்தோறும்
ஒளிக்கும் தேவர் உவந்துள்ளம்
களிக்கும் நல்வினை காணாயோ. 658

வேறு

ஊழியின் இறுதியின் உரும் எறிந்தெனக்
கேழ்கிளர் சுடுகணை கிழித்த புண்பொழி
தாழ்இருங் குருதியின் தரங்க வேலைகள்
ஏழும்ஒன் றாகநின்று இரைப்பக் காண்டியால். 659

சூல்இரும் பெருவயிறு அலைத்துச் சோர்வுறும்
ஆலியங் கண்ணியர் அறுத்து நீத்தன
வாலியும் கடப்பதற்கு அரிய தாய்வளர்
தாலியம் பெருமலை தயங்கக் காண்டியால். 660

விண்ணின்நீ ளியநெடுங் கழுதும் வெஞ்சிறை
எண்ணின்நீ ளியபெரும் பறவை ஈட்டமும்
புண்ணின்நீர்ப் புணரியில் படிந்து பூவையர்
கண்ணின்நீர் ஆற்றினில் குளிப்பக் காண்டியால். 661

கரம்பயில் முரசினம் கறங்கக் கைதொடர்
நரம்புகள் இமிழ்இசை நவில நாடகம்
அரம்பையர் ஆடிய அரங்கின் மீதினில்
குரங்குகள் தனித்தனிக் குதிப்பக் காண்டியால். 662

புரைஉறு புன்தொழில் அரக்கர் புண்பொழி
திரைஉறு குருதியா று ஈர்ப்பச் செல்வன
வரையுறு பிணப்பெரும் பிறக்கம் மண்டின
கரையுறு நெடுங்கடல் தூர்ப்பக் காண்டியால். 663

வினையுடை அரக்கராம் இருந்தை வெந்துகச்
சனகிஎன்று ஒருதழல் நடுவண் தங்கலால்
அனகன்கை அம்பெனும் அளவில் ஊதையால்
கனகம்நீடு இலங்கைநின்று உருகக் காண்டியால். 664

தாக்கலில் இராவணன் தலையில் தாவின
பாக்கியம் அனையநின் பழிப்பில் மேனியை
நோக்கிய கண்களை நுதிகொள் மூக்கினால்
காக்கைகள் கவர்ந்துகொண்டு உண்ணக் காண்டியால். 665

மேலுறும் இராவணற்கு அழிந்து வெள்கிய
நீல்உறு திசைக்கரி திரிந்து நிற்பன
வால்உறும் அனையவன் தலையை வவ்வலின்
காலுறு கணைதடிந்து இடுவ காண்டியால். 666

நீர்த்தெழு கணைமழை வழங்க நீலவான்
வேர்த்ததென்று இடைஇடை வீசும் தூசுபோல்
போர்த்தெழு பொலங்கொடி இலங்கைப் பூழியோடு
ஆர்த்தெழு கழுதுஇரைத்து ஆடக் காண்டியால். 667

நீல்நிறத்து அரக்கர்தம் குருதி நீத்தம்நீர்
வேலைமிக்கு ஆற்றொடு மீள வேலைசூழ்
ஞாலம்முற் றும்கடை யுகத்தும் நச்சுஅருக்
காலனும் வெறுத்துயிர் காலக் காண்டியால். 668

அணங்கிள மகளிரொடு அரக்கர் ஆடுறும்
மணம்கிளர் கற்பகச் சோலை வாவிவாய்ப்
பிணங்குறு வால்முறை பிடித்து மாலைய
கணம்கொடு குரக்கினம் குளிப்பக் காண்டியால். 669

செப்புறல் என்பல தெய்வ வாளிகள்
இப்புறத்து அரக்கரை முருக்கி ஏகின
முப்புறத் துலகையும் முடிக்க மூட்டலால்
அப்புறத்து அரக்கரும் அவியக் காண்டியால். 670

ஈண்டொரு திங்கள்நீ இடரின் வைகவும்
வேண்டுவ தன்றுயான் விரைவில் வீரனைக்
காண்டலே குறைவுபின் காலம் வேண்டுமோ
ஆண்தகை இனிஒரு பொழுதும் ஆற்றுமோ. 671

ஆவிஉண் டென்னும்ஈது உண்டுஉன் ஆருயிர்ச்
சேவகன் திருவுருத் திண்டத் தீந்திலாப்
பூவில தளிர்இல பொரிந்து வெந்திலாக்
காவில கொடிஇல நெடிய கான்எலாம். 672

சோகம்வந்து உறுவது தெளிவு தோய்ந்தன்றே
மேகம்வந்து இடித்துஉரும் ஏறு வீழ்கினும்
ஆகமும் புயங்களும் அழுந்த ஐந்தலை
நாகம்வந்து அடர்ப்பினும் உணர்வு நண்ணுமோ. 673

மத்துறு தயிரென வந்து சென்றிடை
தத்துறும் உயிரொடு புலன்கள் தள்ளுறும்
பித்துநின் பிரிவினில் பிறந்த வேதனை
எத்தனை உளஅவை எண்ணும் ஈட்டவோ. 674

666: மேலுறும்-வந்து தாக்கும். காலுறு-காற்றைப்போன்ற.
668: வெறுத்துயிர்கால-வெறுப்படைந்து உயிரைக் கக்க, அல்லது பெருமூச்சுவிட.

இந்நிலை உடையவன் தரிக்கும் என்றெனும்
பொய்ந்நிலை காண்டியான் புகன்ற யாவும்உன்
கைந்நிலை நெல்லியங் கனியின் காட்டுகேன்
மெய்ந்நிலை உணர்ந்துநீ விடைதந்து ஈஎன்றான். 675

தீர்த்தனும் கவிக்குலத்து இறையும் தேவிநின்
வார்த்தைகேட்டு உவப்பதன் முன்னர் மாக்கடல்
தூர்த்தன இலங்கையைச் சூழ்ந்து மாக்குரங்கு
ஆர்த்தன கேட்டுஉவந்து இருத்தி அன்னைநீ. 676

எண்ணரும் பெரும்படை ஈண்டி இந்நகர்
நண்ணிய பொழுதத்து நடுவண் நங்கைநீ
விண்ணுறக் கலுழன்மேல் விளங்கும் விண்டுவின்
கண்ணனை என்நெடும் புயத்தில் காண்டியால். 677

அங்கதன் தோள்மிசை இளவல் அம்மலை
பொங்குவெங் கதிர்எனப் பொலியப் போர்ப்படை
இங்குவந்து இறுக்கும்நீ இடரின் எய்துறும்
சங்கையும் நீங்குதி தனிமை நீங்குவாய். 678

குராவரும் குழலிநீ குறித்த நாளினில்
விராவரும் நெடுஞ்சிறை மீட்கி லான்எனில்
பராவரும் பழியொடும் பாவம் பற்றுதற்கு
இராவணன் அல்லனே இராமன் என்றனன். 679

வேறு

சீதை மனம் மகிழ்ந்து கூறும் வாசகங்கள்

ஆக இம்மொழி ஆசில கேட்டறி வுற்றாள்
ஓகை கொண்டுக ளிக்கும்ம னத்தவள் உய்ந்தாள்
போகை நன்றிவன் என்பது புந்தியின் வைத்தாள்
தோகை யும்சில வாசகம் இன்னன சொன்னாள். 680

சேறி ஐயவி ரைந்தனை தீயவை எல்லாம்
வேறு யான்இனி ஒன்றும் விளம்பலென் மேலோய்
கூறு கின்றன முன்குறி உற்றன கோமாற்கு
ஏறும் என்றவை சொல்லென இன்ன இசைப்பாள். 681

675: தரிக்கும் - உயிரோடு இருப்பான்.

நாகம் ஒன்றிய நல்வரை யின்தலே மேல்நாள்
ஆகம் வந்தெனே வள்ளுகிர் வாளின் அளேந்த
காகம் ஒன்றை முனிந்தயல் கல்எழு புல்லால்
வேக வெம்படை விட்டது மெல்ல இசைப்பாய். 682

அங்குஅது அஞ்சி நடுங்கி அயன்பதி அண்மி
இங்கு நின்வரவு என்ன எனக்கனல்வு எய்த
மங்கை பங்கனெடு எண்திசை யும்செல மற்ருேர்
தங்கள் தங்கள் இடங்கள் மறுத்தமை தைப்பாய். 683

இந்தி ரன்தரு மைந்தன் உறும்துயர் யாவும்
அந்த ரத்தினில் நின்றவர் கண்டினி அந்தோ
எந்தை தன்சரண் அன்றிஓர் தஞ்சமும் இன்ருல்
வந்து அவன்சரண் வீழ்கென உற்றதும் வைப்பாய். 684

ஐய நின்சர ணம்சரண் என்றுஅவன் அஞ்சி
வையம் வந்து வணங்கிட வள்ளல் மகிழ்ந்தே
வெய்ய வன்கண் இரண்டொடு போகென விட்ட
தெய்வ வெம்படை உற்றுள தன்மை தெரிப்பாய். 685

எந்தை நின்சர ணம்சரண் என்றஇ தன்ஞல்
முந்தை நின்குறை யும்பொறை தந்தனம் முந்துன்
சந்தம் ஒன்று கொடித்திரள் கண்கள் தமக்கே
வந்தொர் நன்மணி நிற்கென வைத்ததும் வைப்பாய். 686

வேகம் விண்டு சயந்தன் வணங்கி விசும்பில்
போக அண்டர்கள் கண்டுஅலர் கொண்டு பொழிந்தார்
நாக நம்பன் இளங்கிளே நன்குண ராத
பாகு தங்கிய வென்றியின் இன்சொல் பணிப்பாய். 687

என்ஓர் இன்னுயிர் மென்கிளிக்கு யார்பெயர் ஈகேன்
மன்ன என்றலும் மாசறு கேகயன் மாதுஎன்
அன்னே தன்பெயர் ஆகென அன்பினெடு அந்நாள்
சொன்ன மெய்ம்மொழி சொல்லுதி மெய்ம்மை தொடர்ந்தோய் 688

683: அது – காகம். கனல்வு - கோபம். மங்கை பங்கனெடு–சிவனிடத்திலும். இடங்கள் மறுத்தமை–இருப்பிடங்களுக்கு வராதே என்று தடுத்ததை. தைப்பாய்–பொருந்தும்படி கூறு.

684: இந்திரன் தரு மைந்தன்–இந்திரனுடைய குமாரன் சயந்தனின் வடிவான காகம். எந்தை, அவன் - இராமன்.

685: அவன்-சயந்தன். வள்ளல்-இராமன். கண் இரண்டொடு–இரண்டாவது கண். தெய்வ வெம்படை–புல் ஆயுதம்.

686: இதன்ஞல்-இதனுல். சந்தம் ஒன்று கொடித்திரள்–வடிவத்தைப் பொருந்தியுள்ள காக்கைக் கூட்டத்தின். வந்தொர் நன்மணி நிற்கென–கண்ணின் ஒரே ஒரு கருமணி மாத்திரம் இருக்கக் கடவது. வைத்ததும் வைப்பாய்-அருள் செய்ததையும் கூறுவாய்.

683-ம் பாட்டிலிருந்து 687-ம் பாட்டு முடிய பல ஓலேப் பிரதிகளில் இல்லே என்று கூறப் படுகிறது.

என்று ரைத்தினிது இத்தனை பேரடை யாளம்
ஒன்றுஉ ணர்த்துவது இல்என எண்ணி உணர்ந்தாள்
தன்தி ருத்துகி லில்பொதி வுற்றது தானே
வென்றது அச்சுடர் மேலொடு கீழுற மெய்யால். 689

வாங்கி னாள்தன் மலர்க்கையி னால்மனம் உன்னா
ஏங்கி னான்அவ் அனுமனும் என்கொல்இ தென்னா
வீங்கி னான்வியந் தான்உல கேழும் விழுங்கித்
தூங்கு காரிருள் முற்றும் இரிந்தது சுற்றும். 690

மஞ்சுஅ லங்குஒளி யோனும்இம் மாநகர் வந்தான்
அஞ்ச லன்என வெங்கண் அரக்கர் அயிர்த்தார்
சஞ்ச லம்புரி சக்கர வாகம் உடன்தாழ்
கஞ்ச மும்மலர் வுற்றன காந்தின காந்தம். 691

கூந்தல் மென்மழை கொள்முகில் மேல்எழு கோளின்
வேந்தன் அன்னது மெல்இயல் தன்எழில் மேனி
சேந்தது அந்தம்இல் சேவகன் சேவடி என்னக்
காந்து கின்றது காட்டினள் மாருதி கண்டான். 692

சூடை யின்மணி கண்மணி ஒப்பது தொல்நாள்
ஆடை யின்கண் இருந்தது பேரடை யாளம்
நாடி வந்தெனது இன்னுயிர் நல்கினை நல்லோய்
கோடி என்று கொடுத்தனள் மெய்ப்புகழ் கொண்டாள். 693

தொழுது வாங்கினன் சுற்றிய தூசினன் முற்றப்
பழுது ருவகை பந்தனை செய்தனன் வந்தித்து
அழுது மும்மை வலங்கொடு இறைஞ்சினன் அன்போடு
எழுது பாவையும் ஏத்தினள் ஏகினன் இப்பால். 694

7. பொழில் இறுத்த படலம்

[அனுமான் தனது வருகையை இராவணனுக்கு அறிவிப்பதற்காக அசோக வனத்தை அழித்ததைப் பற்றிக் கூறும் பகுதி]

நெறிக்கொடு வடக்குறு நினைப்பினில் நிமிர்ந்தான்
பொறிக்குல மலர்ப்பொழில் இடைக்கடிது போனான்
சிறுத்தொழில் முடித்துஅகறல் தீதெனல் தெரிந்தான்
மறித்தும்ஓர் செயற்குரிய காரியம் மதித்தான். 695

691: ஒளியோனும்-சூரியனும். காந்தின காந்தம் சூடாமணியில் பதித்துள்ள சூரிய காந்தக் கற்கள் பிரகாசித்தன. இந்தப் பாட்டு சில பிரதிகளில் இல்லை.

692: வேந்தன்-சூரியன். சேவகன்-இராமன்.

695: வடக்குறு- வடதிசையில் செல்லும். நிமிர்ந்தான்-பெரிய வடிவத்தை (அனுமான்) கொண்டான். சிறுத்தொழில் - சீதையை வந்து பார்த்த சாதாரணமான காரியம். செயற்குரிய-செய்யத்தக்க பெரிய.

ஈனம்உறு பற்றலரை எற்றிஎயில் மூதூர்
மீனநில யத்தின்உற வீசிவிழி மானே
மானவன் மலர்க்கழலின் வைத்துமிலென் என்றால்
ஆனபொழுது எப்பரிசில் நான்அடியன் ஆவேன். 696

வஞ்சனே அரக்கனே நெருக்கிநெடு வாலால்
அஞ்சினுடன் அஞ்சுதலே தோளுற அசைத்தே
வெஞ்சிறையில் வைத்துமிலென் வென்றுமிலென் என்றால்
தஞ்சம்ஒரு வர்க்கொருவர் என்றல்தக வாமோ. 697

கண்டநிரு தக்கடல் கலக்கிஎன் வலத்தில்
திண்திறல் அரக்கனும் இருக்கஓர் திறத்தின்
மண்டஉத ரத்தவள் மலர்க்குழல் பிடித்துக்
கொண்டுசிறை வைத்திடுத லின்குறைவ துண்டோ. 698

மீட்டும்இனி எண்ணும்வினே வேறும்உள தன்றால்
ஓட்டிஇவ் அரக்கர்உயிர் உண்டுஉரிமை எல்லாம்
காட்டும்இது வேகருமம் அன்னவர் கடும்போர்
மூட்டும்வகை யாவதுகொல் என்றுமுயல் கின்றான். 699

இப்பொழிலி னேக்கடிது இறுக்குவென் இறுத்தால்
அப்பெரிய பூசல்செவி சார்தலும் அரக்கர்
வெப்புறு சினத்தர்எதிர் மேல்வருவர் வந்தால்
துப்புற முருக்கிஉயிர் உண்பல்இது சூதால். 700

வந்தவர்கள் வந்தவர்கள் மீள்கிலர் மடிந்தால்
வெந்திறல் அரக்கனும் விலக்கரு வலத்தால்
முந்துமெனின் அன்னவன் முடித்தலே முறித்தென்
சிந்தைஉறு கோபமும் அவித்தினிது செல்வேன், 701

அசோக வனத்தை அனுமான் அழித்தல்

என்றுநினே யாஇரவி சந்திரன் இயங்கும்
குன்றம்இரு தோளனேய தன்உருவு கொண்டான்
அன்றுலகு எயிற்றிடைகொள் ஏனம்எனல் ஆனான்
துன்றுகடி காவினே அடிக்கொடு துகைத்தான். 702

முடிந்தன பிளந்தன முறிந்தன நெரிந்த
மடிந்தன பொடிந்தன மறிந்தன முறிந்த
இடிந்தன தகர்ந்தன எரிந்தன கரிந்த
ஒடிந்தன ஒசிந்தன உதிர்ந்தன பிதிர்ந்த. 703

698: மண்ட உதரத்தவள்-இராவணனின் முதல் மனேவியான மண்டோதரி.
699: உரிமை-இராமனுக்கு அடிமையாக உள்ள சொந்த முறை. அன்னவர்-அரக்கர்.
702: குன்றம்-மேருமலே. ஏனம்-வராக மூர்த்தி.

வேரொடு பறிந்தசில வெந்தசில விண்ணில்
காரொடு செறிந்தசில காலினொடும் ஓடித்
தூரொடு பறிந்தசில தும்பியொடு வானோர்
ஊரொடு மலைந்தசில உக்கசில நெக்க. 704

சோலைமுதல் மற்றவை சுழற்றிய திசைப்போர்
ஆனைநுக ரக்குளகும் ஆனஅடி பற்றா
மேல்நிமிர விட்டன விசும்பின்வழி மீப்போய்
வானவர்கள் நந்தன வனத்தையும் ஒடித்த. 705

அலைந்தன கடல்திரை அரக்கர்அகல் மாடம்
குலைந்துக இடிந்தன குலக்கிரிக ளோடும்
மலைந்துபொடி யுற்றன மயங்கிநெடு வானத்து
உலைந்துவிழு மீனினொடு வெண்மலர் உதிர்ந்த. 706

முடக்கும்நெடு வேரொடு முகந்துலகம் முற்றும்
கடக்கும்வகை வீசின களித்ததிசை யானை
மடப்பிடியி னுக்குதவ மையின்நிமிர் கைவைத்து
இடுக்கியன ஒத்தன எயிற்றினிடை நால்வ. 707

விஞ்சைஉல கத்தினும் இயக்கர்மலை மேலும்
துஞ்சுதல்இல் வானவர் துறக்கநக ரத்தும்
பஞ்சியடி வஞ்சியர்கள் மொய்த்தனர் பறித்தார்
நஞ்சம்அனை யானுடைய சோலையின் நறும்பூ. 708

பொன்திணி மணிப்பரு மரன்திசைகள் போவ
மின்திரிவ ஒத்தன வெயிற்கதிரும் ஒத்த
ஒன்றினொடும் ஒன்றிடை புடைத்துதிர ஊழின்
தம்திரள்க ளோடுவிழு தாரகையும் ஒத்த. 709

புள்ளினொடு வண்டுமிஞி றும்கடிகொள் பூவும்
கள்ளும்முகை யும்தளிர்க ளோடினிய காயும்
வெள்ளநெடு வேலையிடை மீனினம் விழுங்கித்
துள்ளின மரன்பட நெரிந்தன துடித்த. 710

தூவிய மலர்த்தொகை சுமந்துதிசை தோறும்
பூவின்மணம் நாறுவ புலால்கமழ்கி லாத
தேவியர்க ளோடும்உயர் தேவர்இனி தாடும்
ஆவிஎன லாயதிரை ஆர்கலிகள் அம்மா. 711

இடந்தமணி வேதியும் இறுத்தகடி காவும்
தொடர்ந்தன துரந்தன படிந்துநெறி தூரக்
கடந்துசெலல் என்பது கடந்ததுஇரு காலால்
நடந்துசெல லாகும்என லாகியது நன்னீர். 712

712: கடந்து செலல்......நன்னீர்-தாண்டித்தான் செல்லவேண்டுமென்ற நிலைபோய், காலால் நடந்து சென்று விடலாம் என்று துணியத் தக்கவாறு கடல் தூர்ந்துவிட்டது.

வேனில்விளை யாடுசுட ரோனின்ஒளி விம்மும்
வானினிடை வீசிய இரும்பணை மரத்தால்
தானவர்கள் மாளிகை தகர்ந்துபொடி ஆய
வானஇடி யால்ஒடியும் மால்வரைகள் மான. 713

எண்ணில்தரு கோடிகள் எறிந்தன செறிந்தே
தண்ணென்மழை போல்இடை தழைத்தது சலத்தால்
அண்ணல்அனு மான்அடல் இராவணனது அந்நாள்
விண்ணின்ஒரு சோலையுள தாம்என விதித்தான். 714

தேன்உறை துளிப்பநிறை புள்பல சிலம்பப்
பூநிறை மணித்தரு விசும்பினிடை யேபோய்
மேல்முறை நெருக்கஒளி வாளொடுவில் வீச
வானிடை நடாயநெடு மானம்எனல் ஆன. 715

சாகநெடு மாப்பணை தழைத்தன தனிப்போர்
நாகம்அனை யான்எறிய மேல்நிமிர்வ நாளும்
மாகநெடு வானிடை இழிந்துபுனல் வாரும்
மேகம்என லாயநெடு மாகடலின் வீழ்வ. 716

வேறு

ஊனம் உற்றிட மண்ணின் உதித்தவர்
ஞானம் முற்றிட நண்ணுவர் வீடெனத்
தான கற்பகத் தண்தரு விண்தலம்
போன புக்கன முன்உறை பொன்னகர். 717

மணிகொள் குட்டிமம் மட்டித்து மண்டபம்
துணிப டுத்தயல் வாவிகள் தூர்த்தொளிர்
திணிசு வர்த்தலம் சிந்திச் செயற்கரும்
பணிப டுத்துயர் குன்றம் படுத்தரோ. 718

வேங்கை செற்று மராமரம் வேர்பறித்து
ஓங்கு கற்பகம் பூவொடு ஒடித்துஉராய்ப்
பாங்கர் சண்பகப் பத்தி பறித்தயல்
மாங்க னிப்பணை மட்டித்து மாற்றியே. 719

சந்த னங்கள் தகர்ந்தன தாள்பட
இந்த னங்களின் வெந்துஎரி சிந்திட
முந்துஅ னங்க வசந்தன் முகம்கெட
நந்த னங்கள் கலங்கி நடுங்கவே. 720

717: தான...........பொன்னகர்–இராவணன் தேவலோகத்திலிருந்து பிடுங்கிக் கொண்டு வந்து அசோகவனத்தில் நட்டிருந்த கற்பக மரங்கள், அனுமானால் பிடுங்கி எறியப்பட்டதன் காரணமாகப் பழையபடியும் தேவலோகத்துக்கே போய்ச் சேர்ந்தன.

காம ரம்களி வண்டு கலங்கிட
மாம ரங்கள் மடிந்தன மண்ணொடு
தாம்அ ரங்கஅ ரங்கு தகர்ந்துக
பூம ரங்கள் எரிந்து பொரிந்தவே. 721

குழையும் கொம்பும் கொடியும் குயிற்குலம்
விழையும் தண்தளிர்ச் சூழலும் மென்மலர்ப்
புழையும் வாசப் பொதும்பும் பொலன்கொள்தேன்
மழையும் வண்டும் மயிலும் மடிந்தவே. 722

பவள மாக்கொடி வீசின பன்மழை
துவளும் மின்எனச் சுற்றிடச் சூழ்வரை
திவளும் பொற்பணை மாமரம் சேர்ந்தன
கவள யானையின் ஓடையின் காந்தவே. 723

பறவை ஆர்த்தெழும் ஓசையும் பன்மரம்
இறஎ டுத்த இடிக்குரல் ஓசையும்
அறவன் ஆர்த்தெழும் ஓசையும் அண்டத்தின்
புறநி லத்தினும் கைம்மிகப் போயதே. 724

பாட லம்படர் கோங்கொடும் பன்னிசைப்
பாட லம்படர் வண்டொடும் பஃறிரைப்
பாட லம்புறு வேலையில் பாய்ந்தன
பாட லம்படப் புள்ளினம் பார்ப்பொடே. 725

வண்ட லம்புன லாற்றின் மராமரம்
வண்ட லம்புன லாற்றின் மடிந்தன
விண்ட லம்புக னீங்கிய வெண்புனல்
விண்ட லம்புக நீண்மரம் வீழ்ந்தவே. 726

724: அறவன்-தருமத்தின் வடிவமான அனுமான்.

725: (இதன் பொருள்) (அனுமானால் பிடுங்கி எறியப்பட்ட) பாதிரி மரங்களும், படர்ந்து வளர்ந்த கோங்கு மரங்களும், சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற இசைப் பாடல்களைப் பாடுகின்ற அழகிய வண்டுகளோடும், மிகுந்த துன்பத்தை அடையவே பறவைகள் தம் குஞ்சுகளோடும், எண்ணிறந்த பல அலைகள் கரைப் புறங்களில் வீசுகின்ற கடலில் போய் விழுந்தன. பொருள் கூறுவதற்குப் பாட்டைப் பிரிக்கவேண்டிய முறை: "பாடலம் படர் கோங்கொடும், பன் இசைப் பாடல் படர் அம் வண்டொடும், பாடு அலம் படப் புள்ளினம் பார்ப்பொடே, பாடு அலம்புறு வேலையில் பாய்ந்தன." பாடலம்-பாதிரி. படர்-படர்ந்து வளர்ந்த, பாடுகின்ற. பன்-சிறப்பித்துச் சொல்லப்படுகிற. பாடு அலம்புறு வேலையில்–(கரைப்) புறத்தில் (அலை) மோதும் கடலில். பாடு அலம் பட-மிகுந்த துன்பம் உண்டாக.

726: (இதன் பொருள்) வண்டுகள் ஒலிக்கும் அழகிய பாதைகளிலிருந்த ஆச்சாமரங்கள் வண்டலோடு அழகிய நீர் ஓடுகின்ற ஆற்றில் போய் விழுந்தன. ஆகாயத்தைப் போய் அடையுமாறு நீண்டு வளர்ந்த மரங்கள், திருமாலின் (பாதங்களைப் பிரம்தேவன்) கழுவியதால் உற்பத்தியாகிய, வானத்திலிருந்து இறங்கிப் பூமிக்கு வந்த, வெண்மையான நீர்கொண்ட கங்கையில் போய் விழுந்தன. பாட்டைப் பிரிக்க வேண்டிய முறை: "வண்டு அலம்பு நல் ஆற்றின் மராமரம் வண்டல் அம்புனல் ஆற்றின் மடிந்தன; விண் தலம் புக நீள்மரம், விண்டு அலம்பு, கம் நீங்கிய, வெண்புனல் வீழ்ந்தவே." அலம்பு-ஒலிக்கும், கழுவியதால். ஆற்றின்–வழியில், ஆற்றில். "வண்டல் அம்புனல் ஆற்றின்" என்பது காவேரி யாற்றைக் குறிப்பதாகவும் கூறுவர்.

தாம ரைத்தடம் பொய்கைசெஞ் சந்தனந்
தாம ரைத்தன வொத்தது கைத்தலின்
காம ரக்களி வண்டொடுங் கள்ளொடுங்
காம ரக்கடல் பூக்கடல் கண்டவே. 727

சிந்து வாரந் திசைதொறுஞ் சென்றன
சிந்து வாரம் புரைதிரை சேர்ந்தன
தந்து வாரம் புதவொடு தாளறத்
தந்து வாரந் துகள்படச் சாய்ந்தவே. 728

நந்த வானத்து நாள்மலர் நாறின
நந்த வானத்து நாள்மலர் நாறின
சிந்த வானந் திரிந்துகச் செம்மணி
சிந்த வானந் திரிந்த திரைக்கடல். 729

புல்லும் பொற்பணைப் பன்மணிப் பூமரம்
கொல்லும் இப்பொழு தேஎனும் கொள்கையால்
எல்லி இட்டு விளக்கிய இந்திரன்
வில்லும் ஒத்தன விண்ணுற வீசின. 730

727: (இதன் பொருள்) (அனுமான் மரங்களை வீசி எறிந்து) குழப்புவதால் விசாலமான தாமரைப் பொய்கைகள் சிவப்புச் சந்தனக் கட்டையை அரைத்துக் கரைத்தது போல் இருக்கின்றன. காமரம் என்னும் இசை பாடுகின்ற வண்டுகளோடும், தேனோடும் அசோக வனத்து மரங்கள் (போய் விழுந்ததால்) கடலை மலர்க் கடலாக மாற்றியது. பாட்டைப் பிரிக்க வேண்டிய முறை: "துகைத்தலின் தாமரைத் தடம் பொய்கை செஞ் சந்தனம் தாம் அரைத்தன ஒத்தது; காமரக் களி வண்டொடும் கள்ளொடும் கா மரம் கடல் பூக்கடல் கண்டவே" "காமரங் கடல்" என்பது எதுகை நயத்துக்காக "காமரக் கடல்" என்று வந்துள்ளதாகக் கொள்ளவேண்டும். இந்தப் பாட்டுக்கு வேறு விதமாகப் பொருள் கூறப்படுவதும் உண்டு.

728: (இதன் பொருள்) நொச்சி மரங்கள் எல்லாத் திசைகளிலும் பறந்து சென்று கடலின் நீண்ட அழகிய உயர்ந்த அலைகளில் சேர்ந்தன. அத்துடன், சந்தன மரங்கள் (அரக்கர்) தம் வாசல் கதவுகளோடு, தாழ்ப்பாள்களும் முறியும்படியாக எறியப்பட்டு, (கதவுகளும், தாழ்ப்பாள்களும்) தூளாகும்படியாக விழுந்தன. பாட்டைப் பிரிக்கவேண்டிய முறை: "சிந்துவாரம் திசைதொறும் சென்றன, சிந்து வார் அம் புரை திரை சேர்ந்தன. ஆரம் தம் துவாரம் புதவொடு தாள் அறத் தந்து, துகள்படச் சாய்ந்தவே."

729: (இதன் பொருள்) வாசனை வீசுகின்ற நந்தவன மரங்களில் அன்று மலர்ந்த மலர்கள், ஆகாயத்தில் மிகுதியாகச் சிதறி நக்ஷத்திர மலர்களைப் போலப் பிரகாசித்தன; புளிய மரங்கள் வானத்தில் சுழன்று வந்து விழுந்ததால், கடலின் வெண்ணிறச் சங்குகள் அழகிய முத்துக்களைச் சிந்திக்கொண்டு ஓடின. பாட்டைப் பிரிக்க வேண்டிய முறை: "நாறின நந்த வானத்து நாள் மலர், நந்த வானத்து நாள்மலர் நாறின; சிந்த வானம் திரிந்து உக திரைக்கடல் வால் நந்து செம்மணி சிந்த இரிந்த." நந்தவானத்து–நந்தவனத்தின், மிகுதியாக வானத்தில். நாள்மலர்-அன்று மலர்ந்த மலர், நக்ஷத்திரம் என்ற மலர். நாறின-மணம் வீசின, பிரகாசித்தன. சிந்த வானம்–புளிய மரம். (சிந்தம் என்பது தெலுங்கு வார்த்தை. வானம்-உலர்ந்த மரம்.) செம்மணி–அழகிய முத்து. வால் நந்து-வெண்ணிறச் சங்கு. "வானம்" என்பதற்கு அக்கினி, மரக் கனி, உலர்ந்த காய், போதல், வாசனை, அஸ்திவாரக் குழி என்றெல்லாம் பல பொருள்கள் இருப்பதால், இப் பாட்டுக்கு இன்னும் பலவிதமாகப் பொருள் கூற இடம் உண்டு.

730: கொல்லும்-அரக்கர்களை அனுமான் கொல்வான். எல்லி.........வீசின-ஆகாயத்தைத் தொடும்படியாக வீசப்பட்ட பூமரங்கள், (அரக்கர்களின் நாசத்துக்கு முன்னறிவிப்பாக அல்லது உற்பாதமாக) இரவிலே இந்திர தனுசு தோன்றியதுபோலக் காட்சி பளித்தன.

மயக்கில் பொற்குல வல்லிகள் வாரிநேர்
இயக்கு றத்திசை தோறும் எறிந்தன
வெயிற்க திர்க்கற்றை அற்றுற வீழ்ந்தன
புயற்க டல்தலை புக்கன போல்வன. 731

ஆனைத் தானமும் ஆடல் அரங்கமும்
பானத் தானமும் பாய்பரிப் பந்தியும்
ஏனைத் தாரணி தேரொடும் இற்றன
கானத்து ஆர்தரு அண்ணல் கடாவவே. 732

பெரிய மாமர னும்பெருங் குன்றமும்
விரிய வீசலின் மின்நெடும் பொன்மதில்
நெரிய மாடம் நெருப்பெழ நீறெழ
இரியல் போன இலங்கையும் எங்கணும். 733

வேறு

தொண்டையங் கனிவாய்ச் சீதை துயக்கினால் என்னைச் சுட்டாய்
விண்டவா னவர்தம் முன்னே விரிபொழில் இறுத்து வீசக்
கண்டனை நின்றாய் என்று காணுமேல் அரக்கன் காய்தல்
உண்டென வெருவி னன்போல் ஒளித்தனன் உடுவின் கோமான். 734

காசறு மணியும் பொன்னும் காந்தமும் கனல்வ தாய
மாசறு மரங்க ளாகக் குயிற்றிய மதனச் சோலை
ஆசைகள் தோறும் ஐயன் கைகளால் அள்ளி அள்ளி
வீசினன் விளக்க லாலே விளங்கின உலக மெல்லாம். 735

கதறின வெருவி உள்ளம் கலங்கின விலங்கு கண்கள்
குதறின பறவை வேலை குளித்தன குளித்தி லாத
பதறின பதைத்த வானில் பறந்தன மறிந்து பார்வீழ்ந்து
உதறின சிறையை மீள ஒடுக்கின உலந்து போன. 736

தோட்டொடும் துதைந்த தெய்வ மரந்தொறும் தொடுத்த புள்தம்
கூட்டொடும் துறக்கம் புக்க குன்றெனக் குவவு திண்தோள்
சேட்டகல் பரிதி மார்பன் சீறியும் தீண்டல் தன்னால்
மீட்டுஅவன் கருணை செய்தால் பெறும்பதம் விளம்ப லாமோ. 737

பொய்ம்முறை அரக்கர் காக்கும் புள்ளுறை புதுமென் சோலை
விம்முறும் உள்ளத்து அன்னம் இருக்கும்அவ் விருக்கம் ஒன்றும்
மும்முறை உலகம் எல்லாம் முற்றுற முடிவ தான
அம்முறை ஐயன் வைகும் ஆல்என நின்ற தம்மா. 738

உறுசுடர்ச் சூடைக் காசுஅவ் உயிரினை உயிர்ஒப் பானுக்கு
அறிகுறி யாக விட்டாள் ஆதலான் வறியள் அந்தோ
செறிகுழற் சீதைக் கென்றோர் சிகாமணி தெரிந்து வாங்கி
எறிகடல் ஈவ தென்ன எழுந்தனன் இரவி என்பான். 739

தாழ்இரும் பொழில்கள் எல்லாம் துடைத்தொரு தமியன் நின்றான்
ஏழினோடு ஏழு நாடும் அளந்தவன் எனலும் ஆனான்
ஆழியின் நடுவண் நின்ற அருவரைக்கு அரசும் ஒத்தான்
ஊழியின் இறுதிக் காலத்து உருத்திர மூர்த்தி ஒத்தான். 740

இன்னன நிகழும் வேலை அரக்கியர் எழுந்து பொங்கிப்
பொன்மலை என்ன நின்ற புனிதனைப் புரிந்து நோக்கி
அன்னஈ தென்னை மேனி யார்கொல்என் றச்சம் உற்றார்
நன்னுதல் தன்னை நோக்கி அறிதியோ நங்கை என்றார். 741

தீயவர் தீய செய்தல் தீயவர் தெரியின் அல்லால்
தூயவர் தெரிதல் உண்டோ நும்முடைச் சூழல் எல்லாம்
ஆயமான் எய்த அம்மான் இளையவன் அரக்கர் செய்த
மாயம்என்று உரைக்க வேயும் மெய்யென மையல் கொண்டேன். 742

என்றனள் அரக்கி மார்கள் வயிறலைத்து இரியல் போகிக்
குன்றமும் உலகும் வானும் கடல்களும் குலைய ஓட
நின்றசெய் குன்று கண்டான் நீக்குவல் இதனை என்னாத்
தன்தடக் கைகள் நீட்டிப் பற்றினன் தாதை ஒப்பான். 743

கண்கொள அரிது மீது கார்கொள அரிது திண்கால்
எண்கொள அரிது இராவும் இருள்கொள அரிது மாக
விண்கொள நிவந்த மேரு வெள்குற வெதும்பி உள்ளம்
புண்கொள உயர்ந்தது இப்பார் பொறைகொள அரிது போலாம்.

பொங்கொளி நெடுநாள் ஈட்டிப் புதியபால் பொழிவ தொக்கும்
திங்களை நக்கு கின்ற இருள்எலாம் வாரித் தின்ன
அங்கைபத் திரட்டி யான்தன் ஆணையால் அழகு மாணப்
பங்கயத்து ஒருவன் தானே பசும்பொனால் படைத்த தம்மா. 745

தூண்எலாம் சுடரும் காசு சுற்றெலாம் முத்தம் செம்பொன்
பேணலாம் மணியின் பத்தி பிடரெலாம் ஒளிகள் விம்மச்
சேணெலாம் விரியும் கற்றைச் சேயொளிச் செல்வற் கேயும்
பூணலாம் எம்ம னோரால் புகழலாம் புதுமைத் தன்றே. 746

வெள்ளியங் கிரியைப் பண்டு வெந்தொழில் அரக்கன் வேரோடு
அள்ளினன் என்னக் கேட்டான் அத்தொழிற்கு இழிவு தோன்றப்
புள்ளிமா மேரு என்னும் பொன்மலை எடுப்பான் போல
வள்உகிர்த் தடக்கை தன்னால் மண்ணின்றும் வாங்கி அண்ணல். 747

742: ஆய மான்-மாரீசனாகிய மான்.

விட்டனன் இலங்கை தன்மேல் விண்ணுற விரிந்த மாடம்
பட்டன பொடிக ளான பரந்தன பாங்கு நின்ற
சுட்டன பொறிகள் பின்னைத் துளங்கினர் அரக்கர் தாமும்
கெட்டனர் வீரர் அம்மா பிழைப்பரோ கேடு சூழ்ந்தார். 748

நீர்இடு துகிலர் அச்ச நெருப்பிடு நெஞ்சர் நெக்குப்
பீரிடும் உருவர் தெற்றிப் பிணங்கிடு தாளர் பேழ்வாய்
ஊர்இடு பூசல் ஆர உளைத்தனர் ஓடி உற்றார்
பார்இடு பழுவச் சோலை பாலிக்கும் பருவத் தேவர். 749

அனுமான் அசோக வனத்தை அழித்ததை இராவணனிடம் சென்று பருவத் தேவர்கள் தெரிவித்தல்

அரிபடு சீற்றத் தான்தன் அருகுசென்று அடியின் வீழ்ந்தார்
கரிபடு திசையின் நீண்ட காவலாய் காவல் ஆற்றோம்
கிரிபடு குவவுத் திண்தோள் குரங்கிடை கிழித்து வீச
எரிபடு துகிலின் நொய்தின் இற்றது கடிகா என்றார். 750

சொல்லிட எளிய தன்றால் சோலையைக் காலின் கையின்
புல்லொடு துகளும் இன்றிப் பொடிபட நூறிப் பொன்னால்
வில்லிடு வேரம் தன்னை வேரொடு வாங்கி வீசச்
சில்இடம் ஒழியத் தெய்வ இலங்கையும் சிதைந்த தென்றார். 751

ஆடகத் தருவின் சோலை பொடிபடுத்து அரக்கர் காக்கும்
தேடரும் வேரம் வாங்கி இலங்கையும் சிதைத்த தம்மா
கோடரம் ஒன்றே நன்றிவ் இராக்கதர் கொற்றம் சொற்றல்
மூடரும் மொழியார் என்ன மன்னனும் முறுவல் செய்தான். 752

தேவர்கள் பின்னும் மன்ன அதன்உருச் சுமக்கும் திண்மைப்
பூவல யத்தை அன்றோ புகழ்வது புலவர் போற்றும்
மூவரின் ஒருவன் என்று புகல்கினும் முடிவி லாத
ஏவம்அக் குரங்கை ஐய காணுதி இன்னே என்றார். 753

மண்தலம் கிழிந்த வாயில் மறிகடல் மோழை மண்ட
எண்திசை சுமந்த மாவும் தேவரும் இரியல் போகத்
தொண்டைவாய் அரக்கி மார்கள் சூல்வயி றுடைந்து சோர
அண்டமும் பிளந்து விண்ட தாமென அனுமன் ஆர்த்தான். 754

749: நீர்–சிறு நீர். பீரிடும்-இரத்தம் பீரிடும். உளைத்தனர்-ஊளையிட்டனர். பருவத் தேவர்–ஆறு பருவ காலங்களுக்கும் உரிய தேவர்கள்.

8. கிங்கரர் வதைப் படலம்

[கிங்கரர்கள் என்னும் அரக்கர் கூட்டத்தை அனுமான் போரிட்டுக் கொன்றதைப் பற்றிக் கூறும் பகுதி]

அருவரை முழையின் முட்டும் அசனியின் இடிப்பும் ஆழி
வெருவரும் முழக்கும் ஈசன் வில்இறும் ஒலியும் என்னக்
குருமணி மகுட கோடி முடித்தலை குலுங்கும் வண்ணம்
இருபது செவியி னூடும் நுழைந்ததவ் எழுந்த ஓசை. 755

புல்லிய முறுவல் தோன்றப் பொருமையும் சிறிது பொங்க
எல்லைஇல் ஆற்றல் மாக்கள் எண்ணிறந் தாரை ஏவி
வல்லையின் அகலா வண்ணம் வானையும் வழியை மாற்றிக்
கொல்லலிர் குரங்கை நொய்தின் பற்றுதிர் கொணர்திர்என்றான்.756

சூலம்வாள் முசலம் கூர்வேல் தோமரம் தண்டு பிண்டி
பாலமே முதலாய் உள்ள படைக்கலம் பரித்த கையர்
ஆலமே அனைய மெய்யர் அகலிடம் அழிவு செய்யும்
காலமே எழுந்த மூரிக் கடல்எனக் கடிது செல்வார். 757

நானிலம் அதனின் உண்டு போர்என நவிலின் அச்சொல்
தேனினும் களிப்புச் செய்யும் சிந்தையர் தெரித்தும் என்னில்
கானினும் பெரியர் ஓசை கடலினும் பெரியர் கீர்த்தி
வானினும் பெரியர் மேனி மலையினும் பெரியர் மாதோ. 758

திருகுறும் சினத்துத் தேவர் தானவர் என்னும் தெவ்வர்
இருகுறும் பெறிந்து நின்ற இசையினர் வசைஎன் றெண்ணிப்
பொருகுறும் பென்று வென்றி புணர்வது பூவுண் வாழ்க்கை
ஒருகுறுங் குரங்கென் றெண்ணி நெடிதுநாண் உழக்கும் நெஞ்சர்.759

கட்டிய வாளர் இட்ட கவசத்தர் கழலர் திக்கைத்
தட்டிய தோளர் மேகம் தடவிய கையர் வானை
எட்டிய முடியர் தாளால் இடறிய பொருப்பர் ஈட்டிக்
கொட்டிய பேரி என்ன மழைஎனக் குமுறும் சொல்லார். 760

வானவர் எறிந்த தெய்வ அடுபடை வடுக்கள் மற்றைத்
தானவர் துரந்த ஏதித் தழும்பொடு தயங்கும் தோளர்
யானையும் பிடியும் வாரி இடும்பில வாயர் ஈன்ற
கூனல்வெண்பிறையின் தோன்றும் எயிற்றினர் கொதிக்கும்கண்ணர்.

சக்கரம் உலக்கை தண்டு தாரைவாள் பரிகம் சங்கு
முற்கரம் முசுண்டி பிண்டி பாலம்வேல் சூலம் முட்கோல்
பொற்கரக் குலிசம் பாசம் புகர்மழு எழுபொற் குந்தம்
விற்கருங் கணைவிட் டேறு கழுக்கடை எழுக்கள் மின்ன. 762

பொன்நின்று கனலும் தெய்வப் பூணினர் பொருப்புத் தோளர்
மின்நின்ற படையும் கண்ணும் வெயில்விரிக் கின்ற மெய்யர்
என்என்றார்க்கு என்என் என்றார் எய்திய தறிந்தி லாதார்
முன்நின்றார் முதுகு தீயப் பின்நின்றார் மூர்ச்சிக் கின்றார். 763

வெய்துறு படையின் மின்னர் வில்லினர் வீசு காலர்
மையுறு விசும்பில் தோன்றும் மேனியர் மடிக்கும் வாயர்
கைபரந் துலகு பொங்கிக் கடையுகம் முடியும் காலைப்
பெய்யவென்று எழுந்த மாரிக்கு உவமைசால் பெருமைபெற்றார். 764

பனியுறு சோலை சிந்தி வேரமும் பறித்த தம்மா
தனிஒரு குரங்கு போலாம் நன்றுநம் தருக்கென் கின்றார்
இனிஒரு பழிமற் றுண்டோ இதனின்என்று இரைத்துப் பொங்கி
முனிவுறு மனத்தில் தாவி முந்துற முடுகு கின்றார். 765

எற்றுறு முரசும் வில்நாண் ஏறவிட் டெடுத்த ஆர்ப்பும்
சுற்றுறு கழலும் சங்கும் தெழிதெழித்து உரப்பும் சொல்லும்
உற்றுஉடன்று ஒன்றாய் ஓங்கி ஒலித்தெழுந்து ஊழிப் பேர்வில்
நற்றிரைக் கடல்க ளோடு மழைகளை நாவ டக்க. 766

தெருவிடம் இல்என்று எண்ணி வானிடைச் செல்கின் றாரும்
புருவமும் சிலையும் கோட்டிப் புகைஉயிர்த்து உயிர்க்கின் றாரும்
ஒருவரின் ஒருவர் முந்தி முறைமறுத்து உருக்கின் றாரும்
விரிவிலது இலங்கை என்று வழிபெறார் விழிக்கின் றாரும். 767

வாளினை விதிர்க்கின் றாரும் வாயினை மடிக்கின் றாரும்
தோளுறத் தட்டிக் கல்லைத் துகள்படத் துகைக்கின் றாரும்
தாள்பெயர்த்து இடம்பெ றாது தருக்கினர் நெருக்கு வாரும்
கோள்வளை எயிறு தின்று தீயெனக் கொதிக்கின் றாரும். 768

வேறு

அனைவரும் மலைஎன நின்றார் அளவறு படைகள் பயின்றார்
அனைவரும் அமரின் உயர்ந்தார் அகலிடம் நெளிய நடந்தார்
அனைவரும் வரனின் அமைந்தார் அசனியின் அணிகள் அணிந்தார்
அனைவரும் அமரரை வென்றார் அசுரரை உயிரை அயின்றார். 769

குறுகின தலைவரும் மின்போல் குரைகழல் உரகரும் வன்போர்
முறுகின பொழுதின் உடைந்தார் முதுகிட முறுவல் பயின்றார்
இறுகின நிதிகிழ வன்பேர் இசைகெட அளகை எறிந்தார்
தெறுகுநர் இன்மையின் வன்தோள் தினவுற உலகு திரிந்தார். 770

770: நிதி கிழவன்-குபேரன்.

வரைகளை இடறுமின் என்றால் மறிகடல் பருகுமின் என்றால்
இரவியை விழவிடும் என்றால் எழுமழை பிழியுமின் என்றால்
அரவினது அரசினை ஒன்றோ தரையினொடு அரையுமின் என்றால்
தரையினை எடும்எடும் என்றால் ஒருவர்அது அமைதல் சமைந்தார். 771

தூளியின் நிமிர்பட லம்போய் இமையவர் விழிதுற வெம்போர்
ஆளியின் இனமென வன்தாள் அடுபுலி நிரைஎன விண்தோய்
மீளியின் அணிஎன அன்றேல் விரிகடல் விடம்என எஞ்சார்
வாளியின் விசைகொடு திண்கார் வரைவரு வனஎன வந்தார். 772

பொறிதர விழிஉயிர் ஒன்றோ புகைஉக அயில்ஒளி மின்போல்
செறிதர உரும்அதிர் கின்றார் திசைதொறும் விசைகொடு சென்றார்
எறிதரு கடையுக வன்கால் இடறிட உருமின் இனம் போய்
மறிதர மழைஅகல் விண்போல் வடிவழி பொழிலை வளைந்தார். 773

வயிர்ஒலி வளைஒலி வன்கார் மழையொலி முரசொலி மண்பால்
உயிர்உலை வுறநிமி ரும்போர் உறும்ஒலி செவியின் உணர்ந்தான்
வெயில்விரி கதிரவ னும்போய் வெருவிட வெளியிடை விண்தோய்
கயிலையின் மலைஎன நின்றான் அனையவர் வருதொழில் கண்டான். 774

இதஇயல் இதுஎன முந்தே இயைவுற இனிது தெரிந்தான்
பதஇயல் அறிவு பயந்தால் அதின்நல பயன்உள துண்டோ
சிதவியல் கடிபொழில் ஒன்றே சிதறிய செயல்தரு திண்போர்
உதவியல் இனிதின் உவந்தான் எவரினும் அதிகம் உயர்ந்தான். 775

இவன்இவன் இவன்என நின்றார் இதுஎன முதல்வர் எதிர்ந்தார்
பவனனின் முடுகி நடந்தார் பகல்இர வுறமிடை கின்றார்
புவனியும் மலையும் விசும்பும் பொருவரு நகரும் உடன்போர்
துவனியில் அதிர விடம்போல் சுடர்விடு படைகள் துரந்தார். 776

மழைகளும் மறிகட லும்போய் மறைதர முரசம் அறைந்தார்
முழைகளின் இதழ்கள் திறந்தார் முதிர்புகை கதுவ முனிந்தார்
பிழைஇல படஅர வின்தோள் பிடர்இற அடிஇடு கின்றார்
கழைதொடர் வனம்எரி உண்டால் எனஎறி படைஞர் கலந்தார். 777

775: (இதன் பொருள்) அனைவரையும்விட மிக உயர்ந்தவனான அனுமான், அசோக வனத்து மரங்களை முறித்தெறிந்த இதுதான் இதமானசெயல் என்று பொருத்தமாக நன்கு அறிந்தான். பக்குவமான அறிவு உதயமானால் அதைக் காட்டிலும் நற்பயன் உள்ளது வேறொன்று உண்டோ? அழிந்துபட்ட அசோகவனம் ஒன்று மட்டுமே, அரக்கர்கள் சிதறி ஓடும் போரை தனக்கு உதவுகின்ற இயல்பைக் கண்டு மிகவும் மகிழ்ந்தான். சிதவியல்—சிதைவு இயல். உதவியல்—உதவு இயல்.

777: அரவின் தோள்-பூமியைச் சுமக்கும் ஆதிசேஷனுடைய தோள்,

அறிவனும் அதனை அறிந்தான் அருகினில் அழகின் அமைந்தார்
இறவினின் உதவு நெடுந்தார் உயர்மரம் ஒருகை இயைந்தான்
உறவரு துணைஎன அன்றோ உதவிய அதனை உவந்தான்
நிறைகடல் கடையும் நெடுந்தாள் மலைஎன நடுவண் நிமிர்ந்தான். 778

கிங்கரர்களை அனுமான் கொல்லுதல்

பருவரை புரைவன வன்தோள் பனிமலை அருவி நெடுங்கால்
சொரிவன பலஎன மண்தோய் துறைபொரு குருதி சொரிந்தார்
ஒருவரை ஒருவர் தொடர்ந்தார் உயர்தலை உடைய உருண்டார்
அருவரை நெரிய விழும்பேர் அசனியும் அசைய அறைந்தான். 779

பறைபுரை விழிகள் பறிந்தார் படியிடை நெடிது படிந்தார்
பிறைபுரை எயிறும் இழந்தார் பிடரொடு தலைகள் பிளந்தார்
குறைஉயிர் சிதற நெரிந்தார் குடரொடு குருதி குழைந்தார்
முறைமுறை படைகள் எறிந்தார் முடைஉடல் மறிய முறிந்தார். 780

புடையிடை விடுகன லின்காய் பொறியிடை மயிர்கள் புகைந்தார்
தொடையொடு முதுகு துணிந்தார் சுழிபடு குருதி சொரிந்தார்
படையிடை ஒடிய நெடுந்தோள் பறிதர வயிறு திறந்தார்
இடையிடை மலையின் விழுந்தார் இகல்பொர முடுகி எழுந்தார். 781

புதைபட இருளின் மிடைந்தார் பொடியிடை நெடிது புரண்டார்
விதைபடும் உயிரர் விழுந்தார் விழியொடு விளியும் இழந்தார்
கதையொடு முதிர மலைந்தார் கணைபொழி சிலையர் கலந்தார்
உதைபட உரனும் நெரிந்தார் உயிரொடு குருதி உமிழ்ந்தார். 782

அயல்அயல் மலைகொடு அறைந்தார்
அடுபகை அளகை அடைந்தார்
வியல்இடம் மறைய விரிந்தார்
மிசைஉல கடைய மிடைந்தார்
புயல்தொடு மலையின் விழுந்தார்
புடைபுடை திசைதொறும் சென்றார்
உயர்வுற விசையின் எறிந்தார்
உடலொடும் உலகு துறந்தார். 783

வேறு

பற்றித் தாளொடு தோள்பறித் தெறிந்தனன் பாரின்
இற்ற வெஞ்சிறை வெற்பின மாம்எனக் கிடந்தார்
கொற்ற வாலிடைக் கொடுந்தொழில் அரக்கரை அடங்கச்
சுற்றி வீசலின் பம்பர மாம்எனச் சுழன்றார். 784

782: விதைபடும் உயிரர்-விதைகளைப் போலச் சிதறும் உயிரை உடையவர்களாக (என்று பொருள் கூறுவர்). "தங்கள் உயிர் அழியாது என்று பெருமைப்பட்டுக் கொண்டவர்கள்" என்றும் பொருள் கூறலாம். விதை-பெருமை.

வாள்கள் இற்றன இற்றன வரிசிலை வயிரத்
தோள்கள் இற்றன இற்றன சுடர்மழுச் சூலம்
நாள்கள் இற்றன இற்றன நகைஎயிற்று ஈட்டம்
தாள்கள் இற்றன இற்றன படையுடைத் தடக்கை. 785

தெறித்த வன்தலை தெறித்தன செறிசுடர்க் கவசம்
தெறித்த பைங்கழல் தெறித்தன சிலம்பொடு பொலந்தார்
தெறித்த பன்மணி தெறித்தன பெரும்பொறித் திறங்கள்
தெறித்த குண்டலம் தெறித்தன கண்மணி சிதறி. 786

உக்க பற்குவை உக்கன துவக்குஎலும்பு உதிரம்
உக்க முற்கரம் உக்கன முசுண்டிகள் உடைவுற்று
உக்க சக்கரம் உக்கன உடல்திறந்து உயிர்கள்
உக்க கப்பணம் உக்கன உயர்மணி மகுடம். 787

தாள்க ளால்பலர் தடக்கைக ளால்பலர் தாக்கும்
தோள்க ளால்பலர் சுடர்விழி யால்பலர் தொடரும்
கோள்க ளால்பலர் குன்றுக ளால்பலர் தத்தம்
வாள்க ளால்பலர் மரங்களி னால்பலர் மடிந்தார். 788

ஈர்க்கப் பட்டனர் சிலர்சிலர் இடியுண்டு பட்டார்
பேர்க்கப் பட்டனர் சிலர்சிலர் பிடியுண்டு பட்டார்
ஆர்க்கப் பட்டனர் சிலர்சிலர் அடியுண்டு பட்டார்
பார்க்கப் பட்டனர் சிலர்சிலர் பயமுண்டு பட்டார். 789

ஓடிக் கொன்றனன் சிலவரை உடல்உடல் தோறும்
கூடிக் கொன்றனன் சிலவரைக் கொடிநெடு மரத்தால்
சாடிக் கொன்றனன் சிலவரைப் பிணந்தொறும் தடவித்
தேடிக் கொன்றனன் சிலவரைக் கறங்கெனத் திரிவான். 790

முட்டி னார்பட முட்டினன் முறைமுறை முடுகிக்
கிட்டி னார்படக் கிட்டினன் கிரிஎன நெருங்கிக்
கட்டி னார்படக் கட்டினன் கைகளால் மெய்யில்
தட்டி னார்படத் தட்டினன் மலைஎனத் தகுவான். 791

உறக்கி னும்கொல்லும் உணரினும் கொல்லுமால் விசும்பில்
பறக்கி னும்கொல்லும் படரினும் கொல்லும்மின் படைக்கை
நிறக்க ருங்கழல் அரக்கர்கள் நெறிதொறும் பொறிகள்
பிறக்க நின்றெறி படைகளைத் தடக்கையால் பிசையும். 792

சேறும் வண்டலும் மூளையும் நிணமுமாய்ச் செறிய
நீறு சேர்நெடுந் தெருவெலாம் நீத்தமாய் நிரம்ப
ஆறு போல்வரும் குருதிஅவ் அனுமனால் அலைப்புண்டு
ஈறில் வாய்தொறும் உமிழ்வதே ஒத்ததவ் இலங்கை. 793

கருதி வாலினும் கையினும் கடிகையில் கட்டிச்
சுருதி யேஅன்ன மாருதி மரத்திடை துரப்பான்
நிருதர் எந்திரத்து இடுகரும் பாம்என நெரிவார்
குருதி சாறெனப் பாய்ந்தது குரைகடல் சூனே. 794

எடுத்த ரக்கரை எறிதலும் அவர்உடல் எற்றக்
கொடித்திண் மாளிகை இடிந்தன மண்டபம் குலேந்த
தடக்கை யானைகள் மடிந்தன கோபுரம் தகர்ந்த
பிடிக்கு லங்களும் புரவியும் அவிந்தன பெரிய. 795

தத்தம் மாடங்கள் தம்உட லால்சிலர் தகர்த்தார்
தத்தம் மாதரைத் தம்கழ லால்சிலர் தவிர்த்தார்
தத்தம் மாக்களைத் தம்படை யால்சிலர் தடிந்தார்
எத்தி மாருதி தடக்கைக ளால்விசைத் தெறிய. 796

ஆடல் மாக்களிறு அனையவன் அரக்கியர்க்கு அருளி
வீடு நோக்கியே செல்கென சிலவரை விட்டான்
கூடி ஞர்க்குஅவர் உயிர்எனச் சிலவரைக் கொடுத்தான்.
ஊடி ஞர்க்குஅவர் மனைதொறும் சிலவரை உய்த்தான். 797

தருள லாம்உடல் தெற்றிள லாம்உடல் சதுக்கத்து
உருள லாம்உடல் உவரிள லாம்உடல் உள்ளூர்க்
கருள லாம்உடல் காயம்ள லாம்உடல் அரக்கர்
தெருள லாம்உடல் தேயம்ள லாம்உடல் சிதறி. 798

ஊன்ள லாம்உயிர் கவருறும் காலன்ஒய்ந்து உலந்தான்
தான்ள லாரையும் மாருதி சாடுகை தவிரான்
மீன்ள லாம்உயிர் மேகம்ள லாம்உயிர் மேன்மேல்
வான்ள லாம்உயிர் மற்றும்ள லாம்உயிர் சுற்றி. 799

ஆக இச்செரு விளைவுறும் அமைதியின் அரக்கர்
மோகம் உற்றன ராம்என முறைமுறை முனிந்தார்
மாகம் முற்றவும் மாதிரம் முற்றவும் வளைந்தார்
மேகம் ஒத்தனர் மாருதி வெய்யவன் ஒத்தான். 800

அடல்அ ரக்கரும் ஆர்த்தலின் அலைத்தலின் அயரப்
புடைபெ ருத்துயர் பெருமையில் கருமையில் பொலிவின்
மிடல்அ யிற்படை மீனென விலங்கலின் கலங்கும்
கடல்நி கர்த்தனர் மாருதி மந்தரம் கடுத்தான். 801

798: உள்ளூர்க் கரு-உள்ளூரின் நடுப் பகுதி. காயம்-ஆகாயம்.

கரத லத்தினும் காலினும் வாலினும் கதுவ
நிரைம ணித்தலை நெரிந்துகச் சாய்ந்துயிர் நீப்பார்
சுரர்ந டுக்குற அமுதுகொண் டெழுந்தநாள் தொடரும்
உரகர் ஒத்தனர் அனுமனும் கலுழனே ஒத்தான். 802

மானம் உற்றதம் பகையினுல் முனிவுற்று வளைந்த
மீனு டைக்கடல் உலகினில் உளஎலாம் மிடைந்த
ஊன்அ றக்கொன்று துகைக்கவும் ஒழிவிலா நிருதர்
ஆனை ஒத்தனர் ஆள்அரி ஒத்தனன் அனுமன். 803

எய்த எற்றின எறிந்தன ஈர்த்தன இகலில்
பொய்த குத்தின பொதுத்தன தொளைத்தன போழ்ந்த
கொய்த சுற்றின பற்றின குடைந்தன பொலிந்த
ஐயன் மற்பெரும் புயத்தன புண்அளப் பரிதால். 804

கார்க்க ருந்தடங் கடல்களும் மழைமுகில் கணமும்
வேர்க்க வெஞ்செரு விளைத்தெழும் வெள்எயிற் றரக்கர்
போர்க்குள் ஆர்த்தெழும் பூசலில் ஐயனைப் புகழ்வுற்று
ஆர்க்கும் விண்ணவர் அமலையே உயர்ந்ததன் றமரில். 805

மேவும் வெஞ்சினத்து அரக்கர்கள் முறைமுறை விசையால்
ஏவும் பல்படை எத்தனை கோடிகள் எனினும்
தூவும் தேவரும் மகளிரும் முனிவரும் சொரிந்த
பூவும் புண்களும் தெரிந்தில மாருதி புயத்தில். 806

பெயர்க்கும் சாரிகை கறங்கெனத் திசைதொறும் பெயர்வின்
உயர்க்கும் விண்மிசை ஒங்கலின் மண்ணின்வந்து உறலின்
அயர்த்து வீழ்ந்தனர் அழிந்தனர் அரக்கராய் உள்ளோர்
வெயர்த்தி லன்மிசை உயிர்த்திலன் நல்லற வீரன். 807

எஞ்ச லில்கணக்கு அறிந்திலம் இராவணன் ஏவ
நஞ்சம் உண்டவ ராம்என அனுமன்மேல் நடந்தார்
துஞ்சி னுரல்லது யாவரும் அமர்த்தொழில் தொலைவுற்று
அஞ்சி னுர்இல்லை அரக்கரில் வீரர்மற்று யாரோ. 808

802: தொடரும்-விட்டுப் பிரியாமல் காவல் காக்கும். கருடன் தேவலோகத்திலிருந்து அமுதத்தை எடுத்து வர முயன்றபோது, பார்வையிலேயே நஞ்சுள்ள பாம்புச் சாதியார் இருவர் அமுதத்துக்குக் காவல் இருப்பது கண்டு, அவ்விருவரின் கண்களிலும் புழுதியைத் தூவி, அப்புறம் அவர்களைக் கொன்றுவிட்டு அமுதத்தைக் கொண்டுவந்த செய்தி இப்பாட்டில் குறிப்பிடப்படுகிறது.

806: பூவும் புண்களும் தெரிந்தில-மலர்களுக்கும் புண்களுக்கும் வித்தியாசம் தெரியவில்லை அனுமானுக்கு (என்று பொருள் கூறுவர்).

வந்த கிங்கரர் ஏஎனும் மாத்திரை மடிந்தார்
நந்த வானத்து நாயகர் ஓடினர் நடுங்கிப்
பிந்து காலினர் கையினர் பெரும்பயம் பிடரின்
உந்த ஆயிரம் பிணக்குவை மேல்விழுந்து உளைவார். 809

விரைவில் உற்றனர் விம்மினர் யாதொன்றும் விளம்பார்
கரத லத்தினுல் பட்டதும் கட்டுரைக் கின்ருர்
தரையில் நிற்கிலர் திசைதொறும் நோக்கினர் சலிப்பார்
அரசன் மற்றவர் அலக்கணே உரைத்திட அறிந்தான். 810

இறந்து நீங்கின ரோஇன்றென் ஆணையை இகழ்ந்து
துறந்து நீங்கின ரோஅன்றி வெஞ்சமர் தொலைந்தார்
மறந்து நீங்கின ரோஎன்கொல் வந்ததென் றுரைத்தான்
நிறம்செ ருக்குற வாய்தொறும் நெருப்புமிழ் கின்ருன். 811

வேறு

சலம்தலைக் கொண்டன ராய தன்மையார்
அலந்திலர் செருக்களத் தஞ்சி ஞர்அலர்
புலம்தெரி பொய்க்கரி புகலும் புன்கணுர்
குலங்களின் அவிந்தனர் குரங்கி ணுல்என்ருர். 812

ஏவலின் எய்தினர் இருந்த எண்திசைத்
தேவரை நோக்கினுன் நாணும் சிந்தையான்
யாவதென்று அறிந்திலிர் போலு மால்என்ருன்
மூவகை உலகையும் விழுங்க மூள்கின்ருன். 813

மீட்டுஅவர் உரைத்திலர் பயத்தின் விம்முவார்
தோட்டலர் இனமலர்த் தொங்கல் மோலியான்
வீட்டியது அரக்கரை என்னும் வெவ்வுரை
கேட்டதோ கண்டதோ கிளத்து வீர்என்ருன். 814

கண்டனம் ஒருபுடை நின்று கண்களால்
தெண்திரைக் கடலென வளைந்த சேனையை
மண்டலம் திரிந்துஒரு மரத்தி ஞல்உயிர்
உண்டதுஅக் குரங்குஇனம் ஒழிவ தன்றென்ருர். 815

809: ஏஎனும் மாத்திரை ('ஏ' என்ற எழுத்துக்கு இரண்டு மாத்திரையாதலால்) இரண்டு மாத்திரை நேரம் (என்று பொருள் கூறுவர்). 'ஏ' என்பதனை விரைவுக் குறிப்பாகவும் கொள்ளலாம் என்று தோன்றுகிறது. நாயகர்-காவலர்; பருவத்தின் தேவர்கள்.

815: மண்டலம் திரிந்து-வளைந்து வளைந்து வந்து. இனம் ஒழிவதன்றென்ருர்-இன்னும் அப்பால் போகவில்லை என்ருர்கள்.

9. சம்புமாலி வதைப் படலம்

[சம்புமாலி என்ற அரக்கன், அனுமானல் கொல்லப்பட்டதைக் கூறும் பகுதி]

கூம்பின கையன் நின்ற குன்றெனக் குவவுத் திண்தோள்
பாம்பிவர் தறுகண் சம்பு மாலிஎன் பவனைப் பாரா
வாம்பரித் தானை யோடு வளைத்துஅதன் மறனை மாற்றித்
தாம்பினில் பற்றித் தந்தென் மனச்சினம் தணித்தி என்றான். 816

ஆயவன் வணங்கி ஐய அளப்பரும் அரக்கர் முன்னர்
நீஇது முடித்தி என்று நேர்ந்தனை நினைவின் எண்ணி
ஏயினை என்னப் பெற்றால் என்னின்யார் உயர்ந்தார் என்னாப்
போயினன் இலங்கை வேந்தன் போர்ச்சினம் போவ தொப்பான்.

தன்னுடைத் தானை யோடும் தயமுகன் தருகஎன்று ஏய
மன்னுடைச் சேனை யோடும் தாதைவந் தீந்த வாளின்
மின்னுடைப் பரவை யோடும் வேறுளோர் சிறப்பின் விட்ட
பின்னுடை அனிகத் தோடும் பெயர்ந்தனன் பெரும்போர் பெற்றான்.

உரும்ஒத்த முழக்கின் செங்கண் வெள்எயிற்று ஓடை நெற்றிப்
பருமித்த கிரியில் தோன்றும் வேழமும் பதுமத் தண்ணல்
நிருமித்த எழிலி முற்றிற்று என்னலாம் நிலைய நேமிச்
சொரிமுத்த மாலை சூழும் துகிற்கொடித் தடந்தேர் சுற்ற. 819

காற்றினை மருங்கில் கட்டிக் கால்வகுத் துயிரும் கூட்டிக்
கூற்றினை ஏற்றி அன்ன குலப்பரி குழுவக் குன்றின்
தூற்றினின் எழுப்பி ஆண்டுத் தொகுத்தன சுழலும் கண்ண
வேற்றினப் புலிஏறு என்ன வியந்தெழும் பதாதி ஈட்டம். 820

தோமரம் உலக்கை கூர்வாள் சுடர்மழு குலிசம் தோட்டி
தாம்அரம் தின்ற கூர்வேல் தழலொளி வட்டம் சாபம்
காமர்தண்டு எழுக்கள் காந்தும் கப்பணம் கால பாசம்
மாமரம் வலயம் வெங்கோல் முதலிய வயங்க மாதோ. 821

எத்திய அயில்வேல் குந்தம் எழுக்கழு முதல ஏந்தி
குத்திய திளைப்ப மீதில் குழுவின மழைமாக் கொண்மூப்
பொத்துகு பொருவில் நன்னீர் சொரிவன போவ போலச்
சித்திரப் பதாகை ஈட்டம் திசைதொறும் செறிவ செல்ல. 822

பல்லியம் துவைப்ப நன்மாப் பணிலங்கள் முரலப் பொற்றேர்ச்
சில்லிகள் இடிப்ப வாசி சிரித்திடச் செறிபொற் றாரும்
வில்லும்நின்று இசைப்ப யானை முழக்கம்விட் டார்ப்ப விண்தோய்
ஒல்ஒலி வானில் தேவர் உரைதெரிவு ஒழிக்க மன்னே. 823

818: தாதை-சம்புமாலியின் தகப்பன் பிரகத்தன்.
820: வேற்றினப் புலி ஏறு–வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த ஆண் புலிகள்..

மின்நகு கிரிகள் யாவும் மேருவின் விளங்கித் தோன்றத்
தொல்நகர் பிறவும் எல்லாம் பொலிந்தன துறக்கம் என்ன
அன்னவன் சேனை செல்ல ஆர்கலி இலங்கை ஆய
பொன்நகர் துறந்து பொங்கி ஆர்த்தெழு தூளி போர்ப்ப. 824

ஆயிரம் ஐந்தொடு ஐந்தாம் ஆழியந் தடந்தேர் அத்தேர்க்கு
ஏயின இரட்டி யானை யானையின் இரட்டி பாய்மா
போயின பதாதி சொன்ன புரவியின் இரட்டி போலாம்
தீயவன் தடந்தேர் சுற்றித் தெற்றெனச் சென்ற சேனை. 825

வில்மறைக் கிழவர் நாணு விஞ்சையர் வரத்தின் மிக்கார்
வன்மறக் கண்ணர் ஆற்றல் வரம்பிலா வயிரத் தோளார்
தொல்மறக் குலத்தர் தூணி தூக்கிய புறத்தர் மார்பாம்
கல்மறைத் தொளிரும் செம்பொற் கவசத்தர் கடுந்தேர் ஆட்கள்.

பொருதிசை யானை ஊரும் புனிதனைப் பொருவும் பொற்பர்
சுரிபடைத் தொழிலும் மற்றை அங்குசத் தொழிலும் தொக்கார்
நிருதியின் பிறந்த வீரர் நெருப்பிடை பொழியும் கண்ணர்
பரிதியின் பொலியும் மெய்யர் படுமதக் களிற்றின் பாகர். 827

ஏர்கெழு திசையும் சாரி பதினெட்டும் இயல்பின் எண்ணிப்
போர்கெழு படையும் கற்ற வித்தகப் புலவர் போரில்
தேர்கெழு மறவர் யானைச் சேவகர் திறத்தில் செல்லும்
தார்கெழு புரவி என்னும் தம்மனம் தாவப் போனார். 828

அந்நெடுந் தானை சுற்ற அமரரை அச்சம் சுற்றப்
பொன்நெடுந் தேரில் போனான் பொருப்பிடை நெருப்பில் பொங்கித்
தன்நெடுங் கண்கள் காந்தத் தாழ்பெருங் கவசம் மார்பின்
மின்னிட வெயிலும் வீச வில்இடும் எயிற்று வீரன். 829

நந்தன வனத்துள் நின்ற நாயகன் தூதன் தானும்
வந்திலர் அரக்கர் என்னும் மனத்தினன் வழியை நோக்கிச்
சந்திரன் முதல ஆன மீனெலாம் தழுவ நின்ற
இந்திர தனுவின் தோன்றும் தோரணம் இவர்ந்து நின்றான். 830

கேழ்இரு மணியும் பொன்னும் விசும்பிருள் கிழித்து நீக்கும்
ஊழ்இருங் கதிர்க ளோடும் தோரணத்து உம்பர் மேலான்
சூழ்இருங் கதிர்க ளெல்லாம் தோற்றிடச் சுடரும் சோதி
ஆழியின் நடுவண் தோன்றும் அருக்கனே அனையன் ஆனான். 831

826: புறத்தர்-முதுகை உடையவர்கள்.

827: யானை ஊரும் புனிதனை-ஐராவதத்தில் ஏறிவரும் இந்திரனை. நிருதியின் பிறந்த வீரர்-நிருதி என்னும் தென்மேற்குத் திசைக் காவல் பெண்ணின் வம்சத்தில் பிறந்தவர்கள்

830: தோரணம் - தோரண வாசல்.

செல்லொடு மேகம் சிந்தத் திரைக்கடல் இரைப்புத் தீரக்
கல்அளை கிடந்த நாகம் உயிரொடு விடமும் காலக்
கொல்எயிற்று அரக்கர் நெஞ்சில் குடிபுக அச்சம் வீரன்
வில்லென இடிக்க விண்ணோர் நடுக்குற வீரன் ஆர்த்தான். 832

நின்றன திசைக்கண் வேழம் நெடுங்களிச் செருக்கு நீங்கத்
தென்திசை நமனும் உள்ளம் துணுக்கெனச் சிந்தி வானில்
பொன்றல்இல் மீன்கள் எல்லாம் பூவென உதிரப் பூவும்
குன்றமும் பிளக்க வீரன் புயத்திடைக் கொட்டி ஆர்த்தான். 833

அவ்வழி அரக்கர் எல்லாம் அலைநெடுங் கடலின் ஆர்த்தார்
செவ்வழிச் சேறல் ஆற்றார் பிணப்பெருங் குன்றம் தெற்றி
வெவ்வழிக் குருதி வெள்ளம் புடைமிடைந்து உயர்ந்து வீங்க
எவ்வழிச் சேறும் என்றார் தமர்உடம்பு இடறி வீழ்வார். 834

ஆண்டுநின்று அரக்கன் வெவ்வேறு அணிவகுத்து அனிகம் தன்னை
மூண்டுஇரு புடையும் முன்னும் முறைமுறை முடுக ஏவித்
துண்டினன் தானும் திண்தேர் தோரணத் திருந்த தோன்றல்
வேண்டியது எதிர்ந்தான் என்ன வீங்கினன் விசயத் திண்தோள். 835

ஐயனும் அமைந்து நின்றான் ஆழியான் அளவில் ஆற்றல்
நெய்சுடர் விளக்கில் தோன்றும் நெற்றியே நெற்றி யாக
மொய்ம்மயிர்ச் சேனை பொங்க முரண்அயில் உகிர்வாள் மொய்த்த
கைகளே கைக ளாகக் கடைக்கூழை திருவா லாக. 836

வயிர்கள்வால் வளைகள் விம்ம வரிசிலை சிலைப்ப மாயப்
பயிர்கள்ஆர்ப்பு எடுப்ப மூரிப் பல்லியம் முழங்கப் பற்றிச்
செயிர்கொள்வாள் அரக்கர் சீற்றம் செருச்கினர் படைகள் சிந்தி
வெயில்கள்போல் ஒளிகள் வீச வீரன்மேல் கடிது விட்டார். 837

வேறு

சம்புமாலியும் அனுமானும் போரிடுதல்

கருங்கடல் அரக்கர்தம் படைக்கலம் கரத்தால்
பெருங்கடல் உறப்புடைத்து இறுத்துகப் பிசைந்தான்
விரிந்தன பொறிக்குலம் நெருப்பென வெகுண்டுஆண்டு
இருந்தவன் கிடந்ததொர் எழுத்தெரிந்து எடுத்தான். 838

832: கல்-மலை. வீரன் வில்லென-இராமனுடைய வில்லைப்போல. வீரன் ஆர்த்தான்-அனுமான் ஆரவாரம் செய்தான்.

836: ஐயனும்-அனுமானும். ஆழியான்-திருமாலான இராமனின். ஆற்றல்—ஆற்றலை உடைய (அனுமான்). நெற்றியாக-முன்னணிப் படையாக. மயிர்ச்சேனை-மயிர்க் கூட்டம். கைகளாக-பக்கச் சேனைகளாக.

இருந்தனன் எழுந்தனன் இழிந்தனன் உயர்ந்தான்
திரிந்தனன் புரிந்தனன் எனநனி தெரியார்
விரிந்தவர் குவிந்தவர் விலங்கினர் கலந்தார்
பொருந்தினர் பிரிந்தனர் களப்படப் புடைத்தான். 839

எறிந்தன எய்தன இடிஉரும் எனமேல்
செறிந்தன படைக்கலம் இடக்கையில் சிதைத்தான்
முறிந்தன தெறும்கரி முடிந்தன தடந்தேர்
மறிந்தன பரிநிறை வலக்கையில் மலைந்தான். 840

இழந்தன நெடுங்கொடி இழந்தன இருங்கோடு
இழந்தன நெடுங்கரம் இழந்தன வியல்தாள்
இழந்தன முழங்கொலி இழந்தன மதப்பாடு
இழந்தன பெருங்கதம் இருங்கவுள் யானை. 841

நெரிந்தன தடஞ்சுவர் நெரிந்தன பெரும்பார்
நெரிந்தன நுகம்புடை நெரிந்தன அதன்கால்
நெரிந்தன கொடிஞ்சில்கள் நெரிந்தன வியன்தார்
நெரிந்தன கடும்பரி நெரிந்தன நெடுந்தேர். 842

ஒடிந்தன உருண்டன உலந்தன புலந்த
இடிந்தன எரிந்தன நெரிந்தன எழுந்த
மடிந்தன மறிந்தன முறிந்தன மலைபோல்
படிந்தன முடிந்தன கிடந்தன பரிமா. 843

வெருண்டனர் வியந்தனர் விழுந்தனர் எழுந்தார்
மருண்டனர் மயங்கினர் மறந்தனர் இறந்தார்
உருண்டனர் உலைந்தனர் உழைத்தனர் பிழைத்தார்
சுருண்டனர் புரண்டனர் தொலைந்தனர் மலைந்தார். 844

கரிகொடு கரிகளைக் களப்படப் புடைத்தான்
பரிகொடு பரிகளைத் தலத்திடைப் படுத்தான்
வரிசிலை வயவரை வயவரின் மடித்தான்
நிரைமணித் தேர்களைத் தேர்களின் நிரைத்தான். 845

மூளையும் உதிரமும் முழங்கிருங் குழம்பாய்
மீளருங் குழைபடக் கரிவிழுந் தழுந்தத்
தாளொடு தலைஉகத் தடநெடுங் கிரிபோல்
தோளொடு நிருதரை வாளொடும் துகைத்தான். 846

மல்லொடு மலைமலைத் தோளரை வளைவாய்ப்
பல்லொடு நெடுங்கரப் பகட்டொடும் படுத்தான்
வில்லொடும் அயிலொடும் விறலொடும் விளிக்கும்
சொல்லொடும் உயிரொடும் நிலத்தொடும் துகைத்தான். 847

புகைநெடும் பொறிபுகும் திசைதொறும் பொலிந்தான்
சிகைநெடும் சுடர்விடும் தேர்தொறும் சென்றான்
தகைநெடுங் கரிதொறும் பரிதொறும் சரித்தான்
நகைநெடும் படைதொறும் தலைதொறும் நடந்தான். 848

வென்றிவெம் புரவியின் வெரிநினும் விரவார்
மன்றல்அம் தார்அணி மார்பினும் மணித்தேர்
ஒன்றின்நின்று ஒன்றினும் உயர்மத மழைதாழ்
குன்றினும் கடையுகத்து உரும்எனக் குதித்தான். 849

பிரிவரும் பெருநெடுங் கால்எனப் பெயரா
இருவினை துடைத்தவர் அறிவென எவர்க்கும்
வரிமுலை விலைக்கென மதித்தயல் வழங்கும்
தெரிவையர் மனம்எனக் கறங்கெனத் திரிந்தான். 850

அண்ணல்அவ் அரியினுக்கு அடியவர் அவன்சீர்
நண்ணுவர் எனும்பொருள் நவையறத் தெரிப்பான்
மண்ணினும் விசும்பினும் மருங்கினும் மலைந்தார்
கண்ணினும் மனத்தினும் தனித்தனி கலந்தான். 851

கொடித்தடந் தேரொடும் குரகதக் குழுவை
அடித்தொரு தடக்கையின் நிலத்திடை அரைத்தான்
இடித்துநின்று அதிர்கதத்து எயிற்றுவன் பொருப்பைப்
பிடித்தொரு தடக்கையின் உயிர்உகப் பிழிந்தான். 852

கறுத்தெழு நிறத்தினர் எயிற்றினர் கயிற்றார்
செறுத்துஎரி விழிப்பவர் சிகைக்கழு வலத்தார்
மறுத்தெழு மறலிகள் இவர்என அதிர்ந்தார்
ஒறுத்துஉருத் திரன்எனத் தனித்தனி உதைத்தான். 853

சக்கரம் தோமரம் உலக்கைதண்டு அயில்வாள்
மிக்கன தேர்பரி குடைகொடி விரவி
உக்கன குருதிஅம் பெருந்திரை உருட்டிப்
புக்கன கடலிடை நெடுங்கரப் பூட்கை. 854

எட்டின விசும்பினை எழுப்பட எழுந்த
முட்டின மலைகளை முயங்கின திசையை
ஒட்டின ஒன்றைஒன்று ஊடுஅடித்து உடைந்து
தட்டுமுட் டாடின தலையொடு தலைகள். 855

வேறு

கானே காவல் வேழக் கணங்கள் கதவாள் அரிகொன்ற
வானே எய்தத் தனியே நின்ற மதமால் வரைஒப்பான்
தேனே புரைகண் கனலே சொரியச் சீற்றம் செருக்கினன்
தானே ஆனான் சம்பு மாலி காலன் தனைஒப்பான். 856

காற்றில் கடிய கலினப் புரவி நிருதர் களத்துஉக்கார்
ஆற்றுக் குருதி நிணத்தோடு அடுத்த அள்ளல் பெருங்கொள்ளைச்
சேற்றில் செல்லாத் தேரின் ஆழி ஆழும் நிலைதேரா
வேற்றுச் செல்லும் வெளியோ இல்லை எளியன் விரைகின்றான். 857

ஏதி ஒன்றால் தேரும் அஃதால் எளியோர் உயிர்கோடல்
நீதி அன்றால் உடன்வந் தாரைக் காக்கும் நிலைஇல்லாய்
சாதி அன்றேல் பிறிதென் செய்தி அவர்பின் தனிநின்றாய்
போதி என்றான் பூத்த மரம்போல் புண்ணால் பொலிகின்றான். 858

நன்று நன்றுன் கருணை என்னு நெருப்பு நகநக்கான்
பொன்று வாரில் ஒருவன் என்றாய் போலும் எனைஎன்னு
வன்திண் சிலையின் வயிரக் காலால் வடித்திண் சுடர்வாளி
ஒன்று பத்து நூறு நூறா யிரமும் உதைப்பித்தான். 859

செய்தி செய்தி சிலைகைக் கொண்டால் வெறுங்கை திரிவோரை
நொய்தின் வெல்வ தரிதோ என்னு முறுவல் உறநக்கான்
அய்யன் அங்கும் இங்கும் காலால் அழியும் மழையென்ன
எய்த எய்த பகழி எல்லாம் எழுவால் அகல்வித்தான். 860

முற்ற முனிந்தான் நிருதன் முனியா முன்னும் பின்னும்சென்று
உற்ற பகழி உறாது முறியா உதிர்கின் றதைஉன்னுச்
சுற்றும் நெடுந்தேர் ஓட்டித் தொடர்ந்தான் தொடரும்துறைகாணான்
வெற்றி எழுவை மழுவாய் அம்பால் அறுத்து வீழ்த்தினான். 861

சம்புமாலியை அனுமான் கொல்லுதல்

சலித்தான் ஐயன் கையால் எய்யும் சரத்தை உகச்சாடி
ஒலித்தார் அமரர் கண்டார் ஆர்ப்பத் தேரின் உட்புக்குக்
கலித்தான் சிலையைக் கையால் வாங்கிக் கழுத்தின் இடைஇட்டு
வலித்தான் பகுவாய் மடித்து மலைபோல் தலைமண் இடைவீழ. 862

குதித்துத் தேரும் கோல்கொள் ஆளும் பரியும் குழம்பாக
மிதித்துப் பெயர்ந்து நெடுந்தோ ரணத்தை வீரன்மேற்கொண்டான்
கதித்துப்பு அழிந்து கழிந்தார் பெருமை கண்டு களத்துஅஞ்சி
உதித்துப் புலர்ந்த தோல்போல் உருவத்து அமரர் ஓடினார். 863

பிரிந்து புலம்பும் மகளிர் காணக் கணவர் பிணம்பற்றி
விரிந்த குருதிப் பேராறு ஈர்த்து மனைகள் தொறும்வீச
இரிந்தது இலங்கை எழுந்தது அழுகை இன்றிங்கு இவனாலே
சரிந்தது அரக்கர் வலிஎன்று எண்ணி அறமும் தளிர்த்ததால். 864

புக்கார் அமரர் பொலந்தார் அரக்கன் பொருவில் பெருங்கோயில்
விக்கா நின்றார் விளம்பல் ஆற்றார் வெருவி விம்முவார்
நக்கான் அரக்கன் நடுங்கல் என்றான் ஐய நமர்எல்லாம்
உக்கார் சம்பு மாலி உலந்தான் ஒன்றே குரங்கென்றார். 865

865: அமரர்-பருவத் தேவர்.

என்னும் அளவின் எரிந்து வீங்கி எழுந்த வெகுளியான்
உன்ன உன்ன உதிரக் குமிழி விழியூடு உமிழ்கின்றான்
சொன்ன குரங்கை யானே பிடிப்பன் கடிது தொடர்ந்தென்றான்
அன்னது கண்ட சேனைத் தலைவர் ஐவர் அறிவித்தார். 866

10. பஞ்ச சேனாபதிகள் வதைப் படலம்

[இராவணனால் அனுப்பப்பட்ட ஐந்து சேனாபதிகளை அனுமான் கொன்றதைப் பற்றிக் கூறும் பகுதி]

சிலந்தி உண்பதோர் குரங்கின்மேல் சேறியேல் திறலோய்
கலந்த போரில்நின் கட்புலக் கடுங்கனல் கதுவ
உலந்த மால்வரை அருவியாறு ஒழுக்கற்றது ஒப்பப்
புலர்ந்த மாமதம் பூக்கும்அன் றேதிசைப் பூட்கை. 867

இலங்கு வெஞ்சினத்து அஞ்சிறை எறுழ்வலிக் கலுழன்
உலங்கின் மேல்எழுந் தென்னநீ குரங்கின்மேல் உருத்தால்
அலங்கல் மாலைநின் புயம்நினைந்து அல்லும்நன் பகலும்
குலுங்கும் வன்துயர் நீங்குமால் வெள்ளியங் குன்றம். 868

உறுவது என்கொலோ உரன்அழி வென்பதொன்று உடையார்
பெறுவது யாதொன்றும் காண்கிலர் கேட்கிலர் பெயர்ந்தார்
சிறுமை ஈதொப்பது யாதுநீ குரங்கின்மேல் சேறின்
முறுவல் பூக்கும்அன் றேநின்ற மூவர்க்கும் முகங்கள். 869

அன்றி யும்உனக்கு ஆளின்மை தோன்றுமால் அரச
வென்றி இல்லவர் மெல்லியோர் தமைச்செல விட்டாய்
நன்றி நீஇன்று காண்டியேல் எமைச்செல நயத்தி
என்று கைதொழுது இறைஞ்சினர் அரக்கனும் இசைந்தான். 870

உலகம் மூன்றும்தம் உடைமைபெற் றார்என உவந்தார்
திலகம் மண்ணுற வணங்கினர் கோயிலின் தீர்ந்தார்
அலகில் தேர்பரி யானையோடு அடைந்தபோர் அரக்கர்
தொலைவில் தானையைக் கதும்என வருகெனச் சொன்னான். 871

ஆனை மேல்முரசு அறைந்தனர் வள்ளுவர் அழைத்தார்
பேன வேலையின் புடைபரந் ததுபெருஞ் சேனை
சோனை மாமழை முகிலெனப் போர்ப்பணை துவைத்த
மீன வானிடை மின்எனப் படைக்கலம் மிடைந்த. 872

866: அறிவித்தார்-அறிவித்த செய்தியை அடுத்த படலத்தில் காண்க.

867: (இதன் கருத்து) நீ ஒரு அற்பக் குரங்கை எதிர்த்துப் போரிடப் போனால், முன்பு உன்னிடம் தோற்று மதநீர் வறண்டுபோன திசையானைகள், உன்னை அற்பமாகக் கருதி, பயமும் தெளிந்து, பழையபடியும் மதநீரைப் பெருக்கும் அல்லவா?

தானை மாக்கொடி மழைபொதுத்து உயர்நெடுந் தாள
மானம் மாற்றரு மாருதி முனியநாள் உலந்து
போன மாற்றலர் புகழ்எனக் கால்பொரப் புரண்ட
வான யாற்றுவெண் திரைஎன வரம்பில பரந்த. 873

விரவு பொற்கழல் விசித்தனர் வெரிந்உற்று விளங்கச்
சரம்ஒ டுக்கின புட்டிலும் சாத்தினர் சமையக்
கருவி புக்கனர் அரக்கர்மாப் பல்லணம் கவினப்
புரவி இட்டதேர் பூட்டினர் பருமித்த பூட்கை. 874

ஆறு செய்தன ஆனையின் மதங்கள்அவ் ஆற்றைச்
சேறு செய்தன தேர்களின் சில்லிஅச் சேற்றை
நீறு செய்தன புரவியின் குரம்மற்றந் நீற்றை
வீறு செய்தன அப்பரிக் கலினமா விலாழி. 875

வழங்கு தேர்களின் இடிப்பொடு வாசியின் ஆர்ப்பும்
முழங்கு வெங்களிற்று அதிர்ச்சியும் மொய்கழல் ஒலியும்
தழங்கு பல்லியத்து அமலையும் கடையுகத்து ஆழி
முழங்கும் ஓதையின் மும்மடங்கு எழுந்தது முடுகி. 876

ஆழித் தேர்த்தொகை ஐம்பதி னுயிரம் அஃதே
சூழிப் பூட்கைக்கும் தொகைஅவற் றிரட்டியின் தொகைய
ஊழிக் காற்றன்ன புரவிமற்று அவற்றினுக் கிரட்டி
பாழித் தோள்நெடும் படைக்கலப் பதாதியின் பகுதி. 877

கூய்த்த ரும்தொறும் தருந்தொறும் தானைவெங் குழுவின்
நீத்தம் வந்துவந்து இயங்கிடும் இடன்இன்றி நெருங்கக்
காய்த்துஅ மைந்தவெங் கதிர்ப்படை ஒன்றென்று கதுவித்
தேய்த்தெ ழுந்தன பொறிக்குலம் மழைக்குலம் தீய. 878

பண்ம ணிக்குல யானையின் புடைதொறும் பரந்த
ஒண்ம ணிக்குலம் மழையிடை உரும்என ஒலிப்பக்
கண்ம ணிக்குலம் கனல்எனக் காந்துவ கதுப்பின்
தண்ம ணிக்குலம் மழைஎழு கதிர்எனத் தழைப்ப. 879

தொக்க தாம்படை சுரிகுழல் மடந்தையர் தொடிக்கை
மக்கள் தாயர்மற்று யாவரும் தொடர்ந்தனர் மறுகி
ஒக்க ஏகுதும் என்றனர் குரங்கின்முன் ஒருவர்
புக்கு மீண்டிலர் என்றழுது இரங்கினர் புலம்பி. 880

ஐந்து சேனுபதிகளும் படைகளோடு செல்லுதல்

கைப ரந்தெழு சேனையங் கடலிடைக் கலந்தார்
செய்கை தாம்வரும் தேரிடைக் கதிர்எனச் செல்வார்
மெய்க லந்தமால் நிரைவரும் உவமையை வென்ருர்
ஐவ ரும்பெரும் பூதங்கள் ஐந்தும்ஒத்து அமைந்தார். 881

878: கூய்த் தரும்தொறும்-கூப்பிட்டு அழைக்கப்படும் போதெல்லாம்.

முந்துஇ யம்பல கறங்கிட முறைமுறை பொறிகள்
சிந்தி அம்புறு கொடுஞ்சிலை உரும்எனத் தெறிப்பார்
வந்துஇ யம்புறு முனிவர்க்கும் அமரர்க்கும் வலியார்
இந்தி யம்பகை யாயவை ஐந்தும்ஒத்து இயைந்தார். 882

வாச வன்வயக் குலிசமும் வருணன்வன் கயிறும்
ஏசில் தென்திசைக் கிழவன்தன் எரிமுனை எழுவும்
ஈசன் வன்தனிச் சூலமும் என்றிவை ஒன்றும்
ஊசி போல்வதோர் வடுச்செயா நெடும்புயம் உடையார். 883

சூர்த டிந்தவன் மயிலிடைப் பறித்தவன் தோகை
பார்ப யந்தவன் அன்னத்தின் இறகிடைப் பறித்த
மூரி வெஞ்சிறகு இடையிட்டுத் தொடுத்தன முறுக்கி
வீர சூடிகை கயிறிட்டு நெற்றியின் விசித்தார். 884

பொன்தி ணிந்ததோள் இராவணன் மார்பொடும் பொருத
அன்றி ழந்தகோடு அரிந்திடும் அழகுறு குழையர்
நின்ற வன்திசை நெடுங்களி யானையின் நெற்றி
மின்தி ணிந்தன ஓடையின் வீரபட் டத்தர். 885

வேறு

நிதிநெடுங் கிழவனை நெருக்கி நீள்நகர்ப்
பதியொடும் பெருந்திருப் பறித்த பண்டைநாள்
விதியென அன்னவன் வெந்நிட்டு ஓடவே
பொதியொடும் வாரிய பொலன்கொள் பூணினர். 886

இந்திரன் இசைஇழந்து ஏகு வான்இகல்
தந்திமுன் கடாவினன் முடுகத் தாம்அதன்
மந்தர வால்அடி பிடித்து வல்லையேல்
உந்துதி நீஎன வலித்த ஊற்றத்தார். 887

பால்நிறுத்து அந்தணன் பணிய னுகிநின்
கோல்நினைத் திலன்என உலகம் கூறலும்
நீல்நிறத்து இராவணன் முனிவு நீக்குவான்
காலனைக் காலினில் கையில் கட்டினர். 888

மலைகளை நகும்தட மார்பர் மால்கடல்
அலைகளை நகும்நெடுந் தோளர் அந்தகன்
கொலைகளை நகும்நெடுங் கொலையர் கொல்லன்ஊது
உலைகளை நகும்அனல் உமிழும் கண்ணினர். 889

883: கயிறும்-பாசாயுதமும்.
886: நிதி நெடுங் கிழவனை-குபேரனை. அன்னவன்-குபேரன்.
888: பால் நிறுத்து-விதியை ஆராய்ந்து. அந்தணன்-பிரமன்.

தோல்கிளர் திசைதொறும் உலகைச் சுற்றிய
சால்கிளர் முழங்கெரி தழங்கி ஏறினும்
கால்கிளர்ந்து அடிப்பினும் காலம் கையுற
மால்கடல் கிளரினும் சரிக்கும் வன்மையார். 890

இவ்வகை ஐவரும் எழுந்த தானையர்
மொய்கிளர் தோரணம் அதனை முற்றினர்
கையொடு கையுற அணியும் கட்டினர்
ஐயனும் அவர்நிலை அமைய நோக்கினன். 891

அரக்கர்தம் ஆற்றலும் அளவில் சேனையின்
தருக்கும்அம் மாருதி தனிமைத் தன்மையும்
பொருக்கென நோக்கிய புரந்த ராதியர்
இரக்கமும் அவலமும் துளக்கும் எய்தினர். 892

இற்றனர் அரக்கர்இப் பகலு ளேஎனக்
கற்றுணர் மாருதி களிக்கும் சிந்தையான்
முற்றுறச் சுலாவிய முடிவில் தானையைச்
சுற்றுற நோக்கித்தன் தோளை நோக்கினன். 893

புன்தலைக் குரங்கிது போலு மால்அமர்
வென்றது விண்ணவர் புகழை வேரொடும்
தின்றவல் அரக்கரைத் தீர்த்தது அன்றுஇதால்
என்றனர் அயிர்த்தனர் நிருதர் எண்ணிலார். 894

ஆயிடை அனுமனும் அமரர் கோன்நகர்
வாயில்நின்று அவ்வழிக் கொணர்ந்து வைத்தமாச்
சேய்ஒளித் தோரணத்து உம்பர்ச் சேண்நெடு
மீஉயர் விசும்பையும் கடக்க வீங்கினன். 895

வீங்கிய வீரனை வியந்து நோக்கிய
தீங்கியல் அரக்கரும் திருகி னர்சினம்
வாங்கிய சிலையினர் வழங்கி னர்படை
ஏங்கின சங்கினம் இடித்த பேரியே. 896

எறிந்தனர் எய்தனர் எண்ணி றந்தன
பொறிந்தெழு படைக்கலம் அரக்கர் போக்கினர்
செறிந்தன மயிர்ப்புறம் தினவு தீர்வுறச்
சொறிந்தன எனஇருந்து ஐயன் தூங்கினன். 897

உற்றுடன் அரக்கரும் உருத்து உடன்றனர்
செற்றுற நெருக்கினர் செருக்கு சிந்தையார்
மற்றையர் வரும்பரிசு இவரை வல்விரைந்து
எற்றுவன் எனஎழு அனுமன் ஏந்தினன். 898

890: காலம் கையுற-யுகம் முடியும் ஊழிக்காலம் தோன்ற.

பஞ்ச சேனபதிகளுடன் அனுமான் செய்த போர்

ஊக்கிய படைகளும் உருத்த வீரரும்
தாக்கிய பரிகளும் தடுத்த தேர்களும்
மேக்குயர் கொடியுடை மேக மாலைபோல்
நூக்கிய கரிகளும் புரள நூக்கினன். 899

வார்மதக் கரிகளின் கோடு வாங்கிமாத்
தேர்படப் புடைக்கும்அத் தேரின் சில்லியால்
வீரரை உருட்டும்அவ் வீரர் வாளினல்
தாருடைப் புரவியைத் துணியத் தாக்குமால். 900

இரண்டுதேர் இரண்டுகைத் தலத்தும் ஏந்திஅங்கு
இரண்டுபா லினும்வரும் கரியை எற்றுமால்
இரண்டுமா மதகரி இருகை யால்எடுத்து
இரண்டுபா லினும்வரும் பரியை எற்றுமால். 901

மாஇரு நெடுவரை வாங்கி மண்ணின்இட்டு
ஆயிரம் தேர்பட அரைக்கு மால்அழித்து
ஆயிரம் களிற்றைஓர் மரத்தி னல்அடித்து
ஏஎனும் மாத்திரத்து எற்றி முற்றுமால். 902

உதைக்கும்வெங் கரிகளை உழக்கும் தேர்களை
மிதிக்கும்வன் புரவியைத் தேய்க்கும் வீரரை
அதுக்கும்வல் எழுவினல் அரைக்கும் மண்ணிடைக்
குதிக்கும்வன் தலையிடைக் கடிக்கும் குத்துமால். 903

விசையின்மான் தேர்களும் களிறும் விட்டுஅகல்
திசையும்ஆ காயமும் செறியச் சிந்துமால்
குசைகொள்பாய் பரியொடும் கொற்ற வேலொடும்
பிசையுமால் அரக்கரைப் பெருங்க ரங்களால். 904

தீயுறு பொறியுடைச் செங்கண் வெங்கைமா
மீயுறத் தடக்கையால் வீரன் வீசுதோறு
ஆய்பெருங் கொடியன கடலின் ஆழ்வன
பாயுடை நெடுங்கலம் படுவ போன்றவே. 905

தாரொடும் உருளொடும் தடக்கை யால்தனி
வீரன்விட் டெறிந்தன கடலின் வீழ்வன
வாரியின் எழுசுடர்க் கடவுள் வானவன்
தேரினை நிகர்த்தன புரவித் தேர்களே. 906

மீயுற விண்ணிடை முட்டி வீழ்வன
ஆய்பெருந் திரைக்கடல் அழுவத்து ஆழ்வன
ஒய்வன புரவிவாய் உதிரம் கால்வன
வாயிடை எரியுடை வடவை போன்றவே. 907

வரிந்துற வல்லிதின் சுற்றி வாலினுல்
விரிந்துற வீசலின் கடலின் வீழ்குநர்
திரிந்தனர் செறிகயிற்று அரவி னுல்திரி
அருந்திறல் மந்தரம் அனைய ராயினுர். 908

வீரன்வன் தடக்கையால் எடுத்து வீசிய
வார்மதக் களிற்றினில் தேரின் வாசியின்
மூரிவெங் கடல்புகக் கடிது முந்தின
ஊரின்வெங் குருதியாறு இரைப்ப ஓடின. 909

பிறைக்கடை எயிற்றன பிலத்தின் வாயன
கறைப்புனல் பொறிகளோடு உமிழும் கண்ணன
உறைத்தபு படையன உதிர்ந்த யாக்கைகள்
மறைத்தன மகரதோ ரணத்தை வானுற. 910

குன்றுள மரம்உள குலங்கொள் பேர்எழு
ஒன்றல பலவுள உயிர்உண் பான்உளன்
அன்றினர் பலர்உளர் ஐயன் கையினில்
பொன்றுவ தல்லது புறத்துப் போவரோ. 911

முழுமுதல் கண்ணுதல் முருகன் தாதைகைம்
மழுஎனப் பொலிந்தொளிர் வயிர வான்தனி
எழுவினில் பொலங்கழல் அரக்கர் ஈண்டிய
குழுவினைக் களப்படக் கொன்று நீக்கினுன். 912

வேறு

உலந்தது தானை உவந்தனர் உம்பர்
அலைந்தலை உற்றதுஅவ் ஆழி இலங்கை
கலந்தது அழுங்குர லின்கடல் ஓதை
வலந்தரு தோளவர் ஐவரும் வந்தார். 913

ஈர்த்தெழு செம்புனல் எக்கர் இழுக்கத்
தேர்த்துணை ஆழி அழுந்தினர் சென்ருர்
ஆர்த்தனர் ஆயிரம் ஆயிரம் அம்பால்
தூர்த்தனர் அஞ்சனை தோன்றலும் நின்ருன். 914

எய்த கடுங்கணை யாவையும் எய்தா
நொய்தக லும்படி கைகளின் நூருப்
பொய்து அகடு ஒன்று பொருந்தி நெடுந்தேர்
செய்த கடும்பொறி ஒன்று சிதைத்தான். 915

915: பொய்து அகடு ஒன்று பொருந்தி-துளைக்கப்பட்டு, நடுவில் நாட்டப்பட்டதாகிப் பொருந்தி (என்று பொருள் கூறுவர்).

உற்றறு தேர்சிதை யாமுன் உயர்ந்தான்
முற்றின வீரனே வானின் முனிந்தான்
பொற்றிரள் நீள்எழு ஒன்று பொறுத்தான்
எற்றினன் அஃதவன் வில்லினில் ஏற்ருன். 916

முறிந்தது மூரிவில் அம்முறி யேகொண்டு
எறிந்த அரக்கன்ஓர் வெற்பை எடுத்தான்
அறிந்த மனத்தவன் அவ்எழு வேகொண்டு
எறிந்த அரக்கனே இன்னுயிர் உண்டான். 917

ஒழிந்தவர் நால்வரும் ஊழி உருத்த
கொழுந்துறு தீஎன வெஞ்சிலே கோலாப்
பொழிந்தனர் வாளி புகைந்தன கண்கள்
விழுந்தன சோரிஅவ் வீரன் மணித்தோள். 918

ஆயிடை வீரனும் உள்ளம் அழன்ருன்
மாய அரக்கர் வலத்தை உணர்ந்தான்
மீஎரி உய்ப்பதோர் கற்செல விட்டான்
தீயவர் அச்சிலே யைப்பொடி செய்தார். 919

தொடுத்த தொடுத்த சரங்கள் துரந்த
அடுத்தன மார்பின் அழுந்த அனந்தம்
மிடல்தொழி லான்விடு தேரொடும் நொய்தின்
எடுத்தொரு வன்தனே விண்ணின் எறிந்தான். 920

ஏய்ந்தெழு தேரும்அவ் விண்ணினே எல்லாம்
நீந்தியது ஓடி நிமிர்ந்தது வேகம்
ஓய்ந்தது வீழ்வதன் முன்உயர் பாரில்
பாய்ந்தவன் மேல்உடன் மாருதி பாய்ந்தான். 921

மதத்த களிற்றினில் வாள்அரி ஏறு
கதித்தது பாய்வது போல்கதி கொண்டு
குதித்தனன் மால்வரை மேனி குழம்ப
மிதித்தனன் வெஞ்சின வீரருள் வீரன். 922

மூண்ட சினத்தவர் மூவர் முனிந்தார்
தூண்டிய தேரர் சரங்கள் துரந்தார்
வேண்டின வெம்சமம் வேறு விளேப்பார்
யாண்டினி ஏகுதி என்றெதிர் சென்ருன். 923

திரண்டுயர் தோளிணே அஞ்சனே சிங்கம்
அரண்தரு விண்உறை வார்களும் அஞ்ச
முரண்தரு தேர்அவை ஆண்டொரு மூன்றின்
இரண்டை இரண்டுகை யில்கொ டெழுந்தான். 924

916: வீரனே–துர்த்தரன் என்ற அரக்கனே.

தூங்கிய பாய்பரி சூதர் உலைந்தார்
வீங்கிய தோளவர் விண்ணின் விசைத்தார்
ஆங்கது கண்டவர் போய்அக லாமுன்
ஓங்கிய மாருதி ஒல்லையின் உற்ருன். 925

கால்நிமிர் வெஞ்சிலை கையின் இறுத்தான்
ஆனவர் தூணியும் அம்பும் அறுத்தான்
ஏனைய வெம்படை இல்லவர் எஞ்சார்
வானிடை நின்றுயர் மல்லின் மலைந்தார். 926

வெள்ளை எயிற்றர் கறுத்துயர் மெய்யர்
பிள்ள விரித்த பெரும்பில வாயர்
கொள்ள உருத்துஅடர் கோளரவு ஒத்தார்
ஒள்ளிய வீரன் அருக்கனை ஒத்தான். 927

தாம்பென வாலின் வரிந்துஉயர் தாளோடு
ஏம்பல்இ லார்இரு தோள்கள் இறுத்தான்
பாம்பென நீங்கினர் பட்டனர் வீழ்ந்தார்
ஆம்பல் நெடும்பகை போல்பவன் நின்ருன். 928

நின்றனன் ஏனையன் நின்றது கண்டான்
குன்றிடை வாவுறு கோளரி போல
மின்திரி வன்தலை மீது குதித்தான்
பொன்றிய வன்புவி தேரொடு புக்கான். 929

வேறு

வஞ்சமும் களவும் வெஃகி வழிஅலா வழிமேல் ஓடி
நஞ்சினும் கொடியர்ஆகி நவைசெயற்கு உரிய நீரார்
வெஞ்சின அரக்கர் ஐவர் ஒருவனே வெல்லப் பட்டார்
அஞ்செனும் புலன்கள் ஒத்தார் அவனும்நல் அறிவை ஒத்தான். 930

நெய்தலை உற்ற வேற்கை நிருதர்அச் செருவில் நேர்ந்தார்
உய்தலை உற்று மீண்டார் ஒருவரும் இல்லை உள்ளார்
கைதலைப் பூசல் பொங்கக் கடுகினர் காலன் உட்கும்
ஐவரும் உலந்த தன்மை அனைவரும் அமையக் கண்டார். 931

928: ஆம்பல் நெடும் பகை—அல்லி மலர்களுக்குப் பகைவனை சூரியன்.

930: வெஞ்சின.........ஒத்தான்—அரக்கர்கள் ஐவர்; அவன் ஒருவன். அனுமான் வெல்லவே, இறந்துபட்ட அரக்கர்கள் ஐம்புலன்களை ஒத்தார்கள். அனுமானே புலன்களை அடக்கும் நல் அறிவை ஒத்தான்.

பஞ்ச சேனுபதிகள் கொல்லப்பட்டதை இராவணனிடம் பருவத் தேவர்கள் கூறுதல்

இறுக்குறும் இன்னே நம்மை இக்குரங்கு என்ன ஏங்கி
மறுக்குறு கின்ற நெஞ்சின் மாதரை வைது நோக்கி
உறுக்குறு சொல்லார் ஊழித் தீஎன உலகம் ஏழும்
சுறுக்கொள நோக்கு வான்தன் செவித்தொளே தீயச் சொன்னுர். 932

தானையும் உலந்தது ஐவர் தலைவரும் சமைந்தார் தாக்கப்
போனபின் நாடி யாரும் எய்தும்போர் புரிகி லாமை
வானையும் வென்று ளோரை வல்லையில் மடிய நூறி
ஏனையர் இன்மை சோம்பி இருந்ததக் குரங்கும் என்ருர். 933

11. அக்க குமாரன் வதைப் படலம்

[இராவணனுடைய மகன் அக்கன் (அட்சன்) அனுமானுல் கொல்லப்பட்டதைக் கூறும் பகுதி]

கேட்டலும் வெகுளி வெந்தீக் கிளர்ந்தெழும் உயிர்ப்பன் ஆகித்
தோட்டலர் தெரியல் மாலே வண்டொடும் சுறுக்கொண் டேற
ஊட்டுஅரக்கு உண்ட போலும் நயனத்தான் ஒருப்பட் டானைத்
தாள்துணே தொழுது மைந்தன் தடுத்துஇடை தருதி என்ருன். 934

முக்கணுன் ஊர்தி அன்றே மூன்றுலகு அடியில் தாயோன்
ஒக்கஊர் பறவை அன்றே அவன்துயில் உரகம் அன்றே
திக்கயம் அல்ல தேபுன் குரங்கின்மேல் சேறி போலாம்
இக்கடன் அடியேற்கு ஈதி இருத்திஈண்டு இனிதின் எந்தாய். 935

அண்டர்கோன் தன்னேப் பற்றித் தருகெனு அடியேன் நிற்கக்
கொண்டனே என்முன் தன்னேப் பணிஎன நெஞ்சம் கொண்டது
உண்டுஅது தீரும் அன்றே உரன்இலாக் குரங்கொன் றேனும்
எண்திசை வென்ற நீயே ஏவுதி என்னே என்ருன். 936

932: நோக்குவான் தன்–இராவணனுடைய. சொன்னுர்-சோலேயைக் காவல் செய்வோர் கூறினர்.

933: புரிகிலாமை-செய்யாததால்.

934: மைந்தன்-அக்க குமாரன். இடை தருதி-அனுமானேடு போர் செய்ய இடம் கொடு.

935: முக்கணுன் ஊர்தி-சிவனுடைய வாகனமாகிய காளே. பறவை-கருடன். உரகம்-ஆதிசேஷன்.

936: அண்டர்கோன்-இந்திரன். என்முன்-என் தமையன் இந்திரசித்து. கொண்டது-கொண்ட குறை அல்லது விருப்பம்.

கொய்தளிர் கோதும் வாழ்க்கைக் கோடரத்து உருவு கொண்டு
கைதவம் இயற்றி ஈண்டோர் சிறுபழி இழைக்கும் கற்பால்
எய்தினன் இமையா முக்கண் ஈசனே என்ற போதும்
நொய்தினில் வென்று பற்றித் தருகுவென் நொடியில் நின்பால். 937

துண்டத்தூண் அதனில் தோன்றும் கோளரி சுடர்வெண் கோட்டு
மண்தொத்த நிமிர்ந்த கேழல் ஆயினும் மலைதல் ஆற்றுது
அண்டத்தைக் கடந்து போகி அப்புறத்து அகலின் என்பால்
தண்டத்தை இடுதி அன்றே நின்வயின் தந்தி லேனேல். 938

அக்க குமாரன் புறப்படுதல்

எனஇவை இயம்பி ஈதி விடைஎன இறைஞ்சி நின்ற
வனைகழல் வயிரத் திண்தோள் மைந்தனை மகிழ்ந்து நோக்கித்
துணைபரித் தேர்மேல் ஏறிச் சேறிஎன்று இனைய சொன்னான்
புனைமலர்த் தாரி னானும் போர்அணி அணிந்து போனான். 939

ஏறினன் என்ப மன்னோ இந்திரன் இகலின் இட்ட
நூறொரு நூறு பூண்ட நொறில்வயப் புரவி நோன்தேர்
கூறினர் அரக்கர் ஆசி குமுறின முரசக் கொண்மூ
ஊறின உரவுத் தானை ஊழிபேர் கடலை ஒப்ப. 940

பொருகடல் மகரம் எண்ணின் எண்ணலாம் பூட்கை பொங்கித்
திரிவன மீன்கள் எண்ணின் எண்ணலாம் செம்பொன் திண்தேர்
உருவுறும் மணலை எண்ணின் எண்ணலாம் உரவுத் தானை
வருதிரை நிரையை எண்ணின் எண்ணலாம் வாவும் வாசி. 941

ஆறிரண்டு அடுத்த எண்ணின் ஆயிரம் குமரர் ஆவி
வேறிலாத் தோழர் வென்றி அரக்கர்தம் வேந்தர் மைந்தர்
ஏறிய தேரர் சூழ்ந்தார் இறுதியின் யாவும் உண்பான்
சீறிய காலத் தீயின் செறிசுடர்ச் சிகைகள் அன்னார். 942

மந்திரக் கிழவர் மைந்தர் மதிநெறி அமைச்சர் மக்கள்
தந்திரத் தலைவர் ஈன்ற தனயர்கள் பிறரும் தாதைக்கு
அந்தரத்து அரம்பை மாரில் தோன்றினர் ஆதி ஆயோர்
எந்திரத் தேரர் சூழ்ந்தார் ஈரிரண்டு இலக்கம் வீரர். 943

தோமரம் உலக்கை சூலம் சுடர்மழு குலிசம் தோட்டி
ஏமரு வரிவில் வேல்கோல் ஈட்டிவாள் எழுவிட் டேறு
மாமரம் வீசு பாசம் வளைஅயில் வயிரத் தண்டு
காமரு கணையம் குந்தம் கப்பணம் கால நேமி. 944

938: கோளரி-நரசிம்ம மூர்த்தி. கேழல்-வராக மூர்த்தி.

என்றிவை முதல ஆய எழில்திகழ் படைகள் ஈண்டி
மின்திரண் டனைய ஆகி வெயிலொடு நிலவு வீசத்
துன்றுஇருந் தூளி பொங்கித் துறுதலால் இறுதி செல்லாப்
பொன்திணி உலகம் யாவும் பூதலம் ஆன மாதோ. 945

காகமும் கழுகும் பேயும் காலனும் கணக்கில் காலம்
சேகுற வினையின் செய்த தீமையும் தொடர்ந்து செல்லப்
பாகியல் கிளவிச் செவ்வாய் படைவிழி பணைத்த வேய்த்தோள்
தோகையர் மனமும் தொக்க தும்பியும் தொடர்ந்து சுற்ற. 946

உழைக்குல நோக்கி னார்கள் உலந்தவர்க்கு உரிய மாதர்
அழைத்தழு குரலின் வேலை அமலையின் அரவச் சேனை
தழைத்தெழும் ஒலியின் நானாப் பல்லியம் துவைத்த லால்விண்
மழைக்குரல் இடியின் சொன்ன மாற்றங்கள் ஒளிப்ப மன்னோ. 947

வெயிற்கதிர் மணிகள் வீசும் விரிகதிர் விழுங்க வெய்ய
அயிற்கரம் மணிகள் காலும் அவிர்ஒளி பருக அஃகா
எயிற்றிளம் பிறைகள் ஈன்ற இலங்கொளி ஒதுங்க யாணர்
உயிர்க்குலம் இரவும் அன்று பகல்அன்றென்று உணர்வு தோன்ற. 948

ஓங்கிருந் தடந்தேர் பூண்ட உளைவயப் புரவி ஒல்கித்
தூங்கின வீழத் தோளும் கண்களும் இடத்துத் துள்ள
வீங்கின மேகம் எங்கும் குருதிநீர்த் துள்ளி வீழ்ப்ப
ஏங்கின காகம் ஆர்ப்ப இருளில்விண் இடிப்ப மாதோ. 949

வெள்ளவெஞ் சேனை சூழ விண்ணுளோர் வெருவி விம்ம
உள்ளம்நொந்து அனுங்கி வெய்ய கூற்றமும் முறுவல் துன்னத்
துள்ளிய சுழல்கண் பேய்கள் தோள்புடைத்து ஆர்ப்பத் தோன்றும்
கள்ளவிழ் அலங்க லானைக் காற்றின்சேய் வரவு கண்டான். 950

இந்திர சித்தோ மற்றவ் இராவண னேயோ என்னாச்
சிந்தையின் உவகைகொண்டு முனிவுற்ற குரக்குச் சீயம்
வந்தனன் முடிந்த தன்றோ மனக்கருத் தென்ன வாழ்த்திச்
சுந்தரத் தோளை நோக்கி இராமனைத் தொழுது சொன்னான். 951

எண்ணிய இருவர் தம்முன் ஒருவனேல் யான்முன செய்த
புண்ணியம் உளதாம் எம்கோன் தவத்தொடும் பொருந்தினானே
நண்ணிய நானும் நின்றேன் காலனும் நணுகி நின்றான்
கண்ணிய கருமம் இன்றே முடிக்குவென் கடிதின் என்றான். 952

பழிஇலது உருஎன் றாலும் பஃறலை அரக்கன் அல்லன்
விழிகள்ஆ யிரமும் கொண்ட வேந்தைவென் றானும் அல்லன்
மொழியின்மற்று அரன்சே யான முரண்தொழில் முருகன் அல்லன்
அழிவில்ஒண் குமரன் யாரோ அஞ்சனக் குன்றம் அன்னான். 953

953: விழிகள்.........அல்லன்-இந்திரனை ஜயித்த இந்திரசித்து அல்லன்.

என்றவன் உவந்து விண்தோய் இந்திர சாபம் என்ன
நின்றதோ ரணத்தின் உம்பர் இருந்ததோர் நீதி யானை
வன்தொழில் அரக்கன் நோக்கி வாளெயிறு இலங்க நக்கான்
கொன்றதிக் குரங்கு போலாம் அரக்கர்தம் குழாத்தை என்றான். 954

அன்னதாம் அச்சொல் கேட்ட சாரதி ஐய கேண்மோ
இன்னதாம் என்னல் ஆமோ உலகியல் இகழல் அம்மா
மன்னனோடு எதிர்ந்த வாலி குரங்கென்றால் மற்றும் உண்டோ
சொன்னது துணிவில் கொண்டு சேறிஎன்று உணரச் சொன்னான். 955

விடம்திரண் டனைய மெய்யான் அவ்வுரை விளம்பக் கேளா
இடம்புகுந்து இனையசெய்த இதனொடு சீற்றம் எஞ்சத்
தொடர்ந்துசென்று உலகம் மூன்றும் துருவினென் ஒழிவு றாமல்
கடந்துபின் குரங்கென்று ஓதும் கருவையும் களைவென் என்றான். 956

அக்க குமாரனின் படைகளும் அநுமானும் போர் செய்தல்

ஆர்த்தெழுந்து அரக்கர் சேனை அஞ்சனைக் குரிய குன்றைப்
போர்த்தது பொழிந்த தம்மா பொருபடைப் பருவ மாரி
வேர்த்தனர் திசைகாப் பாளர் சலித்தன விண்ணும் மண்ணும்
தார்த்தனி வீரன் தானும் தனிமையின் அவர்மேல் சார்ந்தான். 957

எறிந்தனர் நிருதர் வெய்தின் எய்தன படைகள் யாவும்
முறிந்தன வீரன் மேனி முட்டின மூரி யானை
மறிந்தன மடிந்த தேரும் வாவும்மாக் குழுவும் ஆவி
பிரிந்தன வரம்பில் யாக்கை இலங்கைதன் நிலையில் பேர. 958

காய்எரி முளிபுற் கானில் கலந்தெனக் காற்றின் செம்மல்
ஏஎனும் அளவில் கொல்லும் நிருதர்க்கோர் எல்லை இல்லை
போயவர் உயிரும் போகித் தென்புலம் படர்தல் பொய்யாது
ஆயிர கோடி தூதர் உளர்கொலோ நமனுக் கம்மா. 959

வரவுற்றார் வாரா நின்றார் வந்தவர் வரம்பில் வெம்போர்
பொரவுற்ற பொழுதும் வீரன் மும்மடங் காற்றல் பொங்கி
இரவிப்பொற் கதிரோன் ஊழி இறுதியில் காய்வ தொத்தான்
உரவுத்தோள் அரக்கர் எல்லாம் என்பிலா உயிர்கள் ஒத்தார். 960

வேறு

பிள்ளப் பட்டன நுதல்ஓ டைக்கரி
பிறர்பொற் றேர்பரி பிழையாமல்
அள்ளப் பட்டழி குருதிப் பொருபுனல்
ஆறா கப்படி சேறாக

955: மன்னனோடு-இராவணனோடு.

வள்ளப் பட்டன மகரக் கடலென
  மதில்சுற் றியபதி மறலிக்கோர்
கொள்ளேப் பட்டன உயிர்என் னும்படி
  கொன்ருன் ஐம்புலன் வென்ருனே. 961

தேரே பட்டன என்ருர் சிலர்சிலர்
  தெறுகண் செம்முக வயிரத்தோள்
பேரே பட்டன என்ருர் சிலர்சிலர்
  பரியே பட்டன பெரிதென்ருர்
காரே பட்டன நுதல்ஓ டைக்கட
  கரியே பட்டன கடிதென்ருர்
நேரே பட்டனர் படமா டேதனி
  நில்லா உயிரொடு நின்ருரே. 962

ஆழிப் பொருபடை நிருதர் பெருவலி
  அடலோர் ஆய்மகள் அடுபேழ்வாய்த்
தாழிப் படுதயிர் ஒத்தார் மாருதி
  தனிமத் தென்பதொர் தகையானுன்
ஏழ்இப் புவனமும் இடைவாழ் உயிர்களும்
  எறிவேல் இளேயவர் இனமாக
ஊழிப் பெயர்வதொர் புனல்ஒத் தார்அனல்
  ஒத்தான் மாருதம் ஒத்தானே. 963

கொன்ருன் உடன்வரு குழுவைச் சிலர்பலர்
  குறைகின் ருர்உடல் குலேகின்ருர்
பின்ரு நின்றனர் உதிரப் பெருநதி
  பெருகா நின்றன அருகுஆரும்
நின்ருர் நின்றிலர் தனிநின் ருன்ஒரு
  நேமித் தேரொடும் அவன்நேரே
சென்ருன் வன்திறல் அயில்வாய் அம்புகள்
  தெரிகின் ருன்விழி எரிகின்ருன். 964

உற்ருன் இந்திர சித்துக்கு இளேயவன்
  ஒருநா ளேபலர் உயிர்உண்ணக்
கற்ரு னும்முகம் எதிர்வைத் தான்அது
  கண்டார் விண்ணவர் கசிவுற்ருர்
எற்ரும் மாருதி நிலேஎன் பார்இனி
  இமையா விழியினே இவைஒன்ருே
பெற்ரும் நல்லது பெற்ரும் என்றனர்
  பிரியாது எதிர்எதிர் செறிகின்ருர். 965

961: வள்ளப்பட்டன மகரக் கடலென-தோணிகள் இருந்த கடலென. வள்ளப் பட்டன-வள்ளம் பட்டன.

எய்தான் வாளிகள் எரிவாய் உமிழ்வன
ஈரேழ் எதிர்அவை பார்சேரப்
பொய்தான் மணிஎழு ஒன்றால் அன்றது
பொடியாய் உதிர்வுற வடிவாளி
வெய்தா யினபல விட்டான் வீரனும்
வேறோர் படையிலன் மாறுவெங்
கைதா னேபொரு படையா கத்தொடர்
காலார் தேரதன் மேலானான். 966

தேரில் சென்றெதிர் கோல்கொள் வான்உயிர்
தின்றான் அப்பொரு செறிதிண்தேர்
பாரில் சென்றது பரிபட் டனஅவன்
வரிவில் சிந்திய பகழிக்கோல்
மார்பில் சென்றன சிலபொற் றோளிடை
மறைவுற் றனசில அறவோனும்
நேரில் சென்றவன் வயிரக் குனிசிலை
பற்றிக் கொண்டெதிர் உறநின்றான். 967

ஒருகை யால்அவன் வயிரத் திண்சிலை
உற்றுப் பற்றலும் உரவோனும்
இருகை யால்இவன் வலியா முன்னம்அது
இற்றோ டியதுஇவர் பொற்றோளான்
சுரிகை யால்அவன் உருவிக் குத்தலும்
அதனைச் சொற்கொடு வருதூதன்
பொருகை யால்இடை பிதிர்வித் தான்முதிர்
பொறிஓ டும்படி பறியாவே. 968

வாளா லேபொர லுற்றான் இற்றது
மண்சே ராமுனம் வயிரத்திண்
தோளா லேபொர முடுகிப் புக்கிடை
தழுவிக் கோடலும் உடல்முற்றும்
நீள்ஆர் அயிலென மயிர்தைத் திடமணி
நெடுவா லவன்உடல் நிமிர்வுற்று
மீளா வகைபுடை சுற்றிக் கொண்டது
பற்றிக் கொண்டனன் மேலானான். 969

பற்றிக் கொண்டவன் வடிவா ளெனஒளிர்
பல்இற் றுகநிமிர் படர்கையால்
எற்றிக் கொண்டலின் இடைநின்று உமிழ்சுடர்
மின்னின் இனம்விழு வனஎன்ன
முற்றிக் குண்டலம் முதலா மணிஉக
முழைநா லாஇவர் குடர்நாலக்
கொற்றத் திண்சுவல் வயிரக் கைகொடு
குத்திப் புடைஒரு குதிகொண்டான். 970

966: பொய்தான்-பயனற்றவையாகச் செய்தான்.

967: கோல் கொள்வான்-தேர்ப் பாகன்.

அக்க குமாரனை அனுமான் கொல்லுதல்

நீத்தாய் ஓடின உதிரப் பெருநதி
  நீரா கச்சிலை பாராகப்
போய்த்தாழ் செறிதசை அரிசிந் தினபடி
  பொங்கப் பொரும்உயிர் போகாமுன்
மீத்துஆ நிமிர்சுடர் வயிரக் கைகொடு
  பிடியா விண்ணொடு மண்காணத்
தேய்த்தான் ஊழியின் உலகேழ் தேயினும்
  ஒருதன் புகழ்இறை தேயாதான். 971

புண்தாழ் குருதியின் வெள்ளத்து உயிர்கொடு
  புக்கார் சிலர்சிலர் பொதிபேயின்
பண்டா ரத்திடை இட்டார் தம்உடல்
  பட்டார் சிலர்சிலர் பயம்உந்தத்
திண்டா டித்திசை அறியா மறுகினர்
  சென்றார் சிலர்சிலர் செலவற்றார்
கண்டார் கண்டதோர் திசையே விசைகொடு
  கால்விட் டார்படை கைவிட்டார். 972

மீனாய் வேலையை உற்றார் சிலர்சிலர்
  பசுவாய் வழிதொறும் மேய்வுற்றார்
ஊன்ஆர் பறவையின் வடிவுற் றார்சிலர்
  சிலர்நான் மறையவர் உருவானார்
மானார் கண்இள மடவார் ஆயினர்
  முன்னே தம்குழல் வகிர்வுற்றார்
ஆனார் சிலர்சிலர் ஐயா நின்சரண்
  என்றார் நின்றவர் அரிஎன்றார். 973

தம்தா ரமும்உறு கிளையும் தமைஎதிர்
  தழுவும் தொறும்நும தமர்அல்லோம்
வந்தோம் வானவர் என்றே கினர்சிலர்
  சிலர்மா னுயர்என வாய்விட்டார்
மந்தா ரம்கிளர் பொழில்வாய் வண்டுகள்
  ஆனார் சிலர்சிலர் மருள்கொண்டார்
இந்துஆர் எயிறுசள் இறுவித் தார்சிலர்
  எரிபோல் குஞ்சியை இருள்வித்தார். 974

971: சிலை-அம்மிக் கல்.

974: நுமதமர் அல்லோம்-நாங்கள் உங்களுடைய சுற்றத்தார்களல்ல (என்று பயத்தினால் பொய் சொன்னார்கள்).

வேறு

குண்டலக் குழைமுகக் குங்குமக் கொங்கையார்
வண்டலைத்து எழுகுழற் கற்றைகால் வருடவே.
விண்டுஅலத் தகவிரைக் குமுதவாய் விரிதலால்
அண்டமுற் றுளதுஅவூர் அழுதபே ரமலையே. 975

கதிர்எழுந் தனையசெந் திருமுகக் கணவன்மார்
எதிர்எழுந்து அடிவிழுந்து அழுதுசோர் இளநலார்
அதிநலங் கோதைசேர் ஓதியோடு அன்றுஅவூர்
உதிரமும் தெரிகிலாது இடைபரந் தொழுகியே. 976

தாவில்வெஞ் செருநிலத் திடைஉலந் தவர்தம்மேல்
ஓவியம் புரைநலார் விழுதொறும் சிலர்உயிர்த்து
ஏவுகண் களும்இமைத் திலர்களாம் இதுஎலாம்
ஆவிஒன்று உடல்இரண் டாயதா லேகொலாம். 977

ஓடினர் உயிர்கள்நாடு உடல்கள்போல் உதவியால்
வீடினர் வீடினர் மிடைஉடல் குவைகள்வாய்
நாடினர் மடநலார் நவைஇலா நண்பரைக்
கூடினர் ஊடினர் உம்பர்வாழ் கொம்பனர். 978

தீட்டுவாள் அனையகண் தெரிவையோர் திருவனுள்
ஆட்டில்நின்று அயர்வதோர் அறுதலைக் குறையினைக்
கூட்டிஎன் ஆர்உயிர்த் துணைவன்என் கோனைநீ
காட்டுவாய் ஆதிஎன்று அழுதுகை கூப்பினள். 979

ஏந்தினள் தலையைஓர் எழுதருங் கொம்பனள்
காந்தன்நின்று ஆடுவான் உடல்கவந் தத்தினை
வேந்தன்நீ அலசினுய் விடுதியால் நடம்எனுப்
பூந்தளிர்க் கைகளால் மெய்யுறப் புல்லினள். 980

நாடினர் நாடியே நனைவரும் கொம்பனர்
வாடினர் கணவர்தம் மார்புறத் தழுவியே
வீடினர் அவ்வயின் வெருவிவிண் ணவர்கள்தாம்
ஓடினர் அரசன்மாட்டு அணுகிநின்று உரைசெய்வார். 981

வேறு

மண்டோதரி அழுதல்

கயல்மகிழ் கண்ணிணை கலுழி கான்றுகப்
புயல்மகிழ் புரிகுழல் பொடிஅ ளாவுற
அயன்மகன் மகன்மகன் அடியின் வீழ்ந்தனள்
மயன்மகள் வயிறுஅலைத்து அலறி மாழ்கினள். 982

981: விண்ணவர்கள்-பருவகாலத் தேவர்கள்.

982: அயன்மகன் மகன்மகன்-பிரமனுடைய புத்திரனுன புலத்தியனுடைய மகன் விச்சிரவசுவின் குமாரனுன இராவணன். மயன் மகள்-மயனுடைய மகளும் இராவணனுடைய மூத்த மனைவியுமான மண்டோதரி.

தாவரும் திருநகர்த் தைய லார்முதல்
ஏவரும் இடைவிழுந்து இரங்கி ஏங்கினர்
காவலன் கால்மிசை விழுந்து காவல்மாத்
தேவரும் அழுதனர் களிக்கும் சிந்தையார். 983

12. பாசப் படலம்

[அனுமானை இந்திரசித்து நாகபாசம் என்ற பிரம்மாஸ்திரத்தினால் கட்டிக்கொண்டு வந்ததைக் கூறும் பகுதி.]

அவ்வழி அவ்வுரை கேட்ட. ஆண்தகை
வெவ்விழி எரிஉக வெகுளி வீங்கினன்
எவ்வழி உலகமும் குலைய இந்திரத்
தெவ்அழி தரஉயர் விசயச் சீர்த்தியான். 984

அரம்சுடர் வேல்தனது அனுசன் இற்றசொல்
உரம்சுட எரிஉயிர்த்து ஒருவன் ஓங்கினன்
புரம்சுட வரிசிலைப் பொருப்பு வாங்கிய
பரம்சுடர் ஒருவனைப் பொருவும் பான்மையான். 985

ஏறினன் விசும்பினுக்கு எல்லை காட்டுவான்
ஆறிரு நூறுபேய் பூண்ட ஆழித்தேர்
கூறின கூறின சொற்கள் கோத்தலால்
பீறின நெடுந்திசை பிளந்தது அண்டமே. 986

வேறு

ஆர்த்தன கழலும் தாரும் பேரியும் அசனி அஞ்ச
வேர்த்துயிர் குலைய மேனி வெதும்பினன் அமரர் வேந்தன்
சீர்த்தது போரும் என்னாத் தேவர்க்கும் தேவர் ஆய
மூர்த்திகள் தாமும் தத்தம் யோகத்தின் முயற்சி விட்டார். 987

தம்பியை உன்னும் தோறும் தாரைநீர் ததும்பும் கண்ணன்
வம்பியல் சிலையை நோக்கி வாய்மடித்து உருத்து நக்கான்
கொம்பியல் மாய வாழ்க்கைக் குரங்கினல் குரங்கா ஆற்றல்
எம்பியோ தேய்ந்தான் எந்தை புகழன்றோ தேய்ந்த தென்றான். 988

வேல்திரண் டனவும் வில்லும் மிடைந்தவும் வெற்பென் றாலும்
கூறிரண் டாக்கும் வாட்கைக் குழுவையும் குணிக்கல் ஆற்றேம்
சேறுஇரண்டு அருகு செய்யும் செறிமதச் சிறுகண் யானை
ஆறுஇரண்டு அஞ்சு நூற்றின் இரட்டிதேர்த் தொகையும்அஃதே 989

984: சீர்த்தியான்-இந்திரசித்து.

ஆயமாத் தானை தான்வந்து அண்மியது அண்ம ஏனைத்
தீயவாள் நிருதர் வேந்தர் சேர்ந்தவர் சேரத் தேரின்
ஏஎனும் அளவில் வந்தான் இராவணன் இருந்த யாணர்
வாயில்தோய் கோயில் புக்கான் அருவிசோர் வயிரக் கண்ணுன். 990

தாளிணை விழுந்தான் தம்பிக்கு இரங்கினுன் தறுக ணுனும்
தோளிணை பற்றி ஏந்தித் தழுவினன் அழுது சோர்ந்தான்
வாளிணை நெடுங்கண் மாதர் வயிறலைத்து அலறி மாழ்க
மீளிபோல் மொய்ம்பி னுனும் விலக்கினன் விளம்பல் உற்ருன். 991

ஒன்றுநீ உறுதி ஓராய் உற்றிருந்து உளைய கிற்றி
வன்திறல் குரங்கின் ஆற்றல் மரபுளி உணர்ந்தும் அன்னே
சென்றுநீர் பொருதிர் என்று திறத்திறம் செலுத்தித் தேயக்
கொன்றனை நீயே அன்ருே அரக்கர்தம் குழுவை என்ருன். 992

கிங்கரர் சம்பு மாலி கேடிலா ஐவர் என்றிப்
பைங்கழல் அரக்க ரோடும் உடன்சென்ற பகுதிச் சேனை
இங்கொரு வரும்மீண் டார்தாம் இல்லையேல் குரங்கது எந்தாய்
சங்கரன் அயன்மால் என்பார் தாம்எனும் தகைய தாமே. 993

திக்கய வலியும் மேல்நாள் திரிபுரம் தீயச் செற்ற
முக்கணன் கயிலை யோடும் உலகொரு மூன்றும் வென்ருய்
அக்கனைக் கொன்று நின்ற குரங்கினை ஆற்றல் காட்டி
புக்கினி வென்றும் என்ருல் புலம்பன்றிப் புலமைத் தாமோ. 994

அனுமானைப் பிடித்துக் கொண்டுவர இந்திரசித்து புறப்படுதல்

ஆயினும் ஐய நொய்தின் ஆண்தொழில் குரங்கை யானே
ஏஎனும் அளவில் பற்றித் தருகுவென் இடர்என்று ஒன்று
நீஇனி உழக்கற் பாலை அல்லைநீடு இருத்தி என்னுப்
போயினன் அமரர் கோவைப் புகழொடு கொண்டு போந்தான். 995

உடைந்தவல் இருள்நோற் றுப்பல் உருக்கொடுஅக் கதிர்க்கு ழாங்கள்
மிடைந்தன மிலேச்சி யாங்கும் மெய்யணி பலவும் மின்னக்
குடைந்துவெம் பகைவர் ஊன்தோய் கொற்றப்போர் வாள்வில் வீச
அடைந்தகார் அரக்கர் தானை அகலிடம் இடம்இன் றென்ன. 996

ஆழியம் தேரும் மாவும் அரக்கரும் உருக்கும் செங்கண்
சூழிவெங் கோப மாவும் துவன்றிய நிருதர் சேனை
ஊழிவெங் கடலின் சுற்ற ஒருதனி நடுவண் நின்ற
பாழிமா மேரு ஒத்தான் வீரத்தின் பன்மை தீர்ப்பான். 997

சென்றனன் என்ப மன்னே திசைகளோடு உலகம் எல்லாம்
வென்றவன் இவன்என் ருலும் வீரத்தே நின்ற வீரன்
அன்றது கண்ட ஆழி அனுமனை அமரின் ஆற்றல்
நன்றென உவகை கொண்டான் யாவரும் நடுக்கம் உற்ருர். 998

994: அக்கனை-அக்க குமாரனை.

இலைகுலாம் பூணி ஞனும் இரும்பிணக் குருதி ஈரத்து
அலகில்வெம் படைகள் தெற்றி அளவிடற் கரிய ஆகி
மலைகளும் கடலும் யாறும் கானமும் பெற்று மற்றோர்
உலகமே ஒத்த தம்மா போர்ப்பெருங் களம்என்று உன்ன. 999

வெப்படை கில்லா நெஞ்சில் சிறியதோர் விம்மல் கொண்டான்
அப்படை வேலை யன்ன பெருமையர் ஆற்ற லோடும்
ஒப்படை கில்லார் எல்லாம் உலந்தனர் குரங்கும் ஒன்றே
எப்படை கொண்டு வெல்வது இராமன்வந்து எதிர்க்கின் என்றான்.

கண்அனார் உயிரே ஒப்பார் கைப்படைக் கலத்தில் காப்பார்
எண்ணலாம் தகையர் அல்லர் இறந்துஎதிர் கிடந்தார் தம்மை
மண்ணுளே நோக்கி நின்று வாய்மடித்து உருத்து மாயாப்
புண்ணுளே கோலிட் டன்ன மானத்தால் புழுங்கு கின்றான். 1001

கானிடை அத்தைக்கு உற்ற குற்றமும் கரனார் பாடும்
யானுடை எம்பி வீந்த இடுக்கணும் பிறவும் எல்லாம்
மானுடர் இருவ ரானும் வானரம் ஒன்றி னானும்
ஆனதே உளஎன் வீரம் அழகிற்றே அம்ம என்றான். 1002

நீப்புண்ட உதிர வாரி நெடுந்திரைப் புணரி தோன்ற
ஈர்ப்புண்டற்கு அரிய ஆய பிணக்குவடு இடறிச் செல்வான்
தேய்ப்புண்ட தம்பி யாக்கை சிவப்புண்ட கண்கள் தீயில்
காய்ப்புண்ட செம்பில் தோன்றக் கறுப்புண்ட மனத்தன் கண்டான்.

தாருகன் குருதி யன்ன குருதியில் தனிமாச் சீயம்
கூர்உகிர் கிளைத்த கொற்றக் கனகன்மெய்க் குழம்பின் தோன்றத்
தேர்உகக் கையின் வீரச் சிலைஉக வயிரச் செங்கண்
நீர்உகக் குருதி சிந்த நெருப்புக உயிர்த்து நின்றான். 1004

வெவ்விலை அயில்வேல் உந்தை வெம்மையைக் கருதி ஆவி
வவ்வுதல் கூற்றும் ஆற்றான் மாறுமா றுலகின் வாழ்வார்
அவ்வுல கத்து ளாரும் அஞ்சுவர் ஒளிக்க ஐயா
எவ்வுல கத்தை உற்றாய் எம்மைநீத்து எளிதின் எந்தாய். 1005

ஆற்றலன் அனையன் ஆகி அறிவழிந்து அயரும் வேலை
சீற்றம்என் றொன்று தானே மேல்நிமிர் செலவிற் றாகித்
தோற்றிய துன்ப நோயை உள்ளுறத் துரந்த தம்மா
ஏற்றஞ்சால் ஆணிக்குஆணி எதிர்செலக் கடாய தென்ன. 1006

1002: அத்தை–சூர்ப்பனகை.

1004: தாருகன்-சூரபன்மனின் தம்பியும், முருகனால் கொல்லப்பட்டவனுமான ஒரு அசுரன். கனகன்-இரணியன்.

வேறு

ஈண்டிவை நிகழ்வுளி இரவி தேர்எனத்
தூண்டுறு தேரின்மேல் தோன்றும் தோன்றலே
மூண்டுமுப் புரம்சுட முடுகும் ஈசனின்
ஆண்தகை வனேகழல் அனுமன் நோக்கினன். 1007

வேறு

வென்றேன் இதன்முன் சிலவீரரை என்னும் மெய்ம்மை
அன்றே முடுகிக் கடிதுஎய்த அழைத்த தம்மா
ஒன்றே இனிவெல் லுதல்தோற்பது அடுத்தது உள்ளது
இன்றே சமையும் இவன்இந்திர சித்து என்பான். 1008

கட்டுஏ றும்நறுங் கமழ்கண்ணிஇக் காளே என்கைப்
பட்டால் அதுவே அவ்இராவணன் பாடு மாகும்
கெட்டோம் எனஎண் ணிஅக்கேடரும் கற்பி னளே
விட்டே கும்அதன் றிஅரக்கரும் வெம்மை தீர்வார். 1009

ஒன்றோ இதனல்வரும் ஊதியம் ஒண்மை யானேக்
கொன்றேன் எனில்இந் திரனும்துயர்க் கோளும் நீங்கும்
இன்றே குடிகெட் டதுஅரக்கர்இ லங்கை மூதூர்
வென்றேன் அவ்இரா வணன்தன்னேயும் வேரொடு என்றான். 1010

அக்கா லேஅரக் கரும்ஆனேயும் தேரும் மாவும்
முக்கால் உலகம் ஒருமூன்றையும் வென்று முற்றிப்
புக்கா னின்முன்புக்கு உயர்பூசல் பெருக்கும் வேலே
மிக்கா னும்வெகுண் டொர்மராமரம் கொண்டு மிக்கான். 1011

இந்திரசித்துவின் படைகளே அனுமான் அழித்தல்

உதையுண் டனயா னேஉருண்டன யானே ஒன்றோ
மிதியுண் டனயா னேவிழுந்தன யானே மேன்மேல்
புதையுண் டனயா னேபுரண்டன யானே போரால்
வதையுண் டனயா னேமறிந்தன யானே மண்மேல். 1012

வேறு

முடிந்த தேர்க்குலம் முறிந்தன தேர்க்குலம் முரண்இற்று
இடிந்த தேர்க்குலம் இற்றன தேர்க்குலம் அச்சுஇற்று
ஒடிந்த தேர்க்குலம் உக்கன தேர்க்குலம் நெக்குப்
படிந்த தேர்க்குலம் பறிந்தன தேர்க்குலம் படியில். 1013

சிரம்நெ ரிந்தவும் கண்மணி சிதைந்தவும் செறிதாள்
தரம்நெ ரிந்தவும் முதுகிறச் சாய்ந்தவும் தார்ப்பூண்
உரம்நெ ரிந்தவும் உதிரங்கள் உமிழ்ந்தவும் ஒண்பொற்
குரம்நெ ரிந்தவும் கொடுங்கழுத்து ஒடிந்தவும் குதிரை. 1014

பிடியுண் டார்களும் பிளத்தல்உண் டார்களும் பெருந்தோள்
ஒடியுண் டார்களும் தலைஉடைந் தார்களும் உருவக்
கடியுண் டார்களும் கழுத்திழந் தார்களும் கரத்தால்
அடியுண் டார்களும் அச்சம்உண் டார்களும் அரக்கர். 1015

வட்ட வெஞ்சிலை ஓட்டிய வாளியும் வயவர்
விட்ட விட்டவெம் படைகளும் வீரன்மேல் வீழ்ந்த
சுட்ட வல்இரும்பு அடைகலைச் சுடுகலா ததுபோல்
பட்ட பட்டன திசைதொறும் பொறியொடும் பரந்த. 1016

சிகைஎ ழுஞ்சுடர் வாளிகள் இந்திர சித்து
மிகைஎ ழுஞ்சினத்து அனுமன்மேல் விட்டன வெந்து
புகைஎ ழுந்தன எரிந்தன கரிந்தன போக
நகைஎ ழுந்தன அழிந்தன வானுளோர் நாட்டம். 1017

தேரும் யானையும் புரவியும் அரக்கரும் சிந்திப்
பாரின் வீழ்தலும் தான்ஒரு தனிநின்ற பணைத்தோள்
வீரர்வீரனும் முறுவலும் வெகுளியும் வீங்க
வாரும் வாரும்என்று அழைக்கின்ற அனுமன்மேல் வந்தான். 1018

புரந்த ரன்தலை பொதிர்எறிந் திடப்புயல் வானில்
பரந்த பல்உரும் ஏற்றினம் வெறித்துயிர் பதைப்ப
நிரந்த ரம்தலை நெடுநிலம் சுமந்தபேர் உரகன்
சிரம்து ளங்கிட அரக்கன்வெஞ் சிலையைநாண் தெறித்தான். 1019

ஆண்ட நாயகன் தூதனும் அயனுடை அண்டம்
கீண்ட தாம்எனக் கிரிஉக நெடுநிலம் கிழிய
நீண்ட மாதிரம் வெடிபட அவன்நெடுஞ் சிலையில்
பூண்ட நாண்இறத் தன்எழில் தோள்களைப் புடைத்தான். 1020

நல்லை நல்லைஇஞ் ஞாலத்துள் நின்ஒக்கும் நல்லார்
இல்லை இல்லையால் எறுழ்வலிக்கு யாரொடும் இகல
வல்லை வல்லைஇன்று ஆகும்நீ படைத்துள வாழ்நாட்கு
எல்லை எல்லைஎன்று இந்திர சித்துவும் இசைத்தான். 1021

நாளுக்கு எல்லையும் நிருதராய் உலகத்தை நலியும்
கோளுக்கு எல்லையும் கொடுந்தொழிற்கு எல்லையும் கொடியீர்
வாளுக்கு எல்லையும் வந்தன வகைகொடு வந்தேன்
தோளுக்கு எல்லைஒன் றில்லைஎன்று அனுமனும் சொன்னான். 1022

இச்சி ரத்தையைத் தொலைப்பென்என்று இந்திரன் பகைஞன்
பச்சி ரத்தம்வந்து ஒழுகிட வானவர் பதைப்ப
வச்சி ரத்தினும் வலியன வயிரவான் கணைகள்
அச்சி ரத்தினும் மார்பினும் அழுத்தலும் அனுமன். 1023

குறிது வான்என்று குறைந்திலன் நெடுஞ்சினம் கொண்டான்
மறியும் வெண்திரை மாகடல் உலகெலாம் வழங்கிச்
சிறிய தாய் சொன்ன திருமொழி சென்னியில் சூடி
நெறியில் நின்றதன் நாயகன் புகழ்என நிமிர்ந்தான். 1024

பாகம் அல்லது கண்டிலன் அனுமனைப் பார்த்தான்
மாக வன்திசை பத்தொடும் வரம்பிலா உலகிற்கு
ஏக நாதனை எறுழ்வலித் தோள்பிடித்து ஈர்த்த
மேக நாதனும் மயங்கின னுமென வியந்தான். 1025

நீண்ட வீரனும் நெடுந்தடக் கைகளை நீட்டி
ஈண்டு வெஞ்சரம் எய்தன எய்திடா வண்ணம்
மீண்டு போய்விழ வீசிஅங்கு அவன்விட்ட தடந்தேர்
பூண்ட பேயொடு சாரதி தரைப்படப் புடைத்தான். 1026

ஊழிக் காற்றன்ன ஒருபரித் தேர்அவண் உதவப்
பாழித் தோளவன் அத்தடந் தேர்மிசைப் பாய்ந்தான்
ஆழிப் பல்படை அனையன அளப்பரும் சரத்தால்
வாழிப் போர்வலி மாருதி மேனியை மறைத்தான். 1027

உற்ற வாளிகள் உரத்தடங் கினஉக உதருக்
கொற்ற மாருதி அனையவன் தேர்மிசைக் குதித்துப்
பற்றி வன்கையால் பறித்தெழுந்து உலகெலாம் பலகால்
முற்ற வென்றபோர் மூரிவெஞ் சிலையினை முறித்தான். 1028

முறிந்த வில்லின்வல் ஓசைபோய் முடிவதன் முன்னர்
மறிந்த போரிடை வழிக்கொள்வான் வயிரவாட் படையால்
செறிந்த வான்பெரு மலைகளைச் சிறகறச் செயிரா
எறிந்த இந்திரன் இட்டவார் சிலையினை எடுத்தான். 1029

நூறு நூறுபேர் வாளிஓர் தொடைகொண்டு நொய்தின்
மாறில் வெஞ்சினத்து இராவணன் மகன்சிலை வளைத்தான்
ஊறு தன்நெடு மேனியில் பலபட ஒல்கி
ஏறு சேவகன் தூதனும் சிறிதுபோது இருந்தான். 1030

ஆர்த்த வானவர் ஆகுலம் கொண்டறி வழிந்தார்
பார்த்த மாருதி தாருஒன்று அங்கையால் பற்றித்
தூர்த்த வாளிகள் முறைமுறை துணிபடச் சுற்றிப்
போர்த்த பொன்நெடு மணிமுடித் தலையிடைப் புடைத்தான். 1031

பார மாமரம் முடியுடைத் தலையிடைப் படலும்
தாரை யின்நெடுங் கற்றைகள் சொரிவன தயங்க
ஆர மால்வரை அருவியின் அழிகொழுங் குருதி
சோர நின்றுடல் துளங்கினன் அமரரைத் தொலைத்தான். 1032

நின்று போதம்வந்து உறுதலும் நிறைபிறை எயிற்றைத்
தின்று தேவரும் முனிவரும் அவுணரும் திகைப்பக்
குன்று போல்நெடும் மாருதி ஆகமும் குலுங்க
ஒன்று போல்வன ஆயிரம் பகழிகோத்து உய்த்தான். 1033

உய்த்த வெஞ்சரம் உரத்தினும் கரத்தினும் ஒளிப்பக்
கைத்த சிந்தையன் மாருதி நனிதவ கனன்ருன்
வித்த கன்சிலே விடுகணே விசையினும் கடுகி
அத்த டம்பெரும் தேரொடும் எடுத்தெறிந்து ஆர்த்தான். 1034

கண்ணின் மீச்சென்ற இமைஇடைக் கலப்பதன் முன்னம்
எண்ணம் மீச்சென்ற எறுழ்வலித் திறலுடை இகலோன்
புண்ணின் மீச்சென்று பொழிபுனல் பசும்புலால் பொடிப்ப
விண்ணின் மீச்சென்ற தேரொடும் பார்மிசை விழுந்தான். 1035

விழுந்து பார்அடை யாமுனம் மின்னெனும் எயிற்ருன்
எழுந்து மாவிசும்பு எய்தினன் இடைஅவன் படையில்
செழுந்தண் மாமணித் தேர்க்குலம் யாவையும் சிதைய
உழுந்து பேர்வதன் முன்நெடு மாருதி உதைத்தான். 1036

ஏறு தேரிலன் எதிர்நிற்கும் உரன்இலன் எரியில்
சீறு வெஞ்சினம் திருகினன் அந்தரம் திரிவான்
வேறு செய்வதோர் வினேபிறிது இன்மையின் விரிஞ்சன்
மாறி லாப்பெரும் படைக்கலம் தொடுப்பதே மதித்தான். 1037

பூவும் பூநிற அயினியும் தீபமும் புகையும்
தாவில் பாவனே யால்கொடுத்து அருச்சனே சமைத்தான்
தேவு யாவையும் உலகமும் திருத்திய தெய்வக்
கோவில் நான்முகன் படைக்கலம் தடக்கையில் கொண்டான். 1038

அனுமான் மீது இந்திரசித்து பிரம்மாஸ்திரத்தை விடுதல்

கொண்டு கொற்றவெஞ் சிலேநெடு நாணெடு கூட்டிச்
சண்ட வேகத்த மாருதி தோளொடும் சார்த்தி
மண்து ளங்கிட மாதிரம் துளங்கிட மதிதோய்
விண்து ளங்கிட மேருவும் துளங்கிட விட்டான். 1039

தணிப்ப ரும்பெரும் படைக்கலம் தழல்உமிழ் தறுகண்
பணிக்கு லங்களுக்கு அரசினது உருவினேப் பற்றித்
துணுக்கம் உற்றுஉயர் கலுழனும் நடுக்குறச் சுற்றிப்
பிணித்தது அப்பெரு மாருதி தோள்களேப் பிறங்க. 1040

திண்ணென் யாக்கையைத் திசைமுகன் படைசென்று திருக
அண்ணல் மாருதி அன்றுதன் பின்சென்ற அறத்தின்
கண்ணின் நீரொடும் கனகதோ ரணத்தொடும் கடைநாள்
தண்ணென் மாமதி கோளொடும் சாய்ந்தெனச் சாய்ந்தான். 1041

1034: ஒளிப்ப-அழுந்த.

சாய்ந்த மாருதி சதுமுகன் படையெனும் தன்மை
ஆய்ந்து மற்றிதன் ஆணையை அவமதித்து அகறல்
ஏய்ந்தது அன்றென எண்ணினன் கண்முகிழ்த்து இருந்தான்
ஒய்ந்த தாம்இவன் வலிஎன அரக்கன்வந்து உற்ருன். 1042

உற்ற காலையின் உயிர்கொடு திசைதொறும் ஒதுங்கி
அற்றம் நோக்கினர் நிற்கின்ற வாள்எயிற்று அரக்கர்
சுற்றும் வந்துடல் சுற்றிய தொளைஎயிற்று அரவைப்
பற்றி ஈர்த்தனர் ஆர்த்தனர் தெழித்தனர் பலரால். 1043

குரக்கு நல்வலம் குறைந்ததுஎன்று ஆவலம் கொட்டி
இரைக்கும் மாநகர் எறிகடல் ஒத்ததெம் மருங்கும்
திரைக்கும் மாசுணம் வாசுகி ஒத்தது தேவர்
அரக்கர் ஒத்தனர் மந்தரம் ஒத்தனன் அனுமன். 1044

கறுத்த மாசுணம் கனகமா மேனியைக் கட்ட
அறத்துக்கு ஆங்கொரு தனித்துணை எனநின்ற அனுமன்
மறத்து மாருதம் பொருதநாள் வாள்அரா அரசு
புறத்துச் சுற்றிய மேருமால் வரையையும் போன்ருன். 1045

வந்தி ரைத்தனர் மைந்தரும் மகளிரும் மழைபோல்
அந்த ரத்தினும் விசும்பினும் திசைதொறும் ஆர்ப்பார்
முந்தி உற்றபேர் உவகைக்கோர் கரைஇலே மொழியின்
இந்தி ரன்பிணிப் புண்டநாள் ஒத்ததவ் இலங்கை. 1046

13. பிணி வீட்டு படலம்

[அனுமானைக் கட்டிய பிரம்மாஸ்திரத்தை இந்திரசித்து விடுவித்த செய்தியையும், அரக்கர்கள் கயிறுகளால் கட்டியதை அனுமான் தானே விடுவித்துக்கொண்ட செய்தியையும் கூறும் பகுதி]

எய்யுமின் ஈருமின் எறிமின் போழுமின்
கொய்யுமின் குடரினைக் கூறு கூறுகள்
செய்யுமின் மண்ணிடைத் தேய்மின் தின்னுமின்
உய்யுமேல் இல்லைநம் உயிர்என் ருேடுவார். 1047

மைத்தடங் கண்ணியர் மைந்தர் யாவரும்
பைத்தலை அரவெனக் கனன்று பைதலை
இத்தனை பொழுதுகொண் டிருப்ப தோஎன
மொய்த்தனர் கொலைசெய முயல்கின் ருர்சிலர். 1048

நச்சடை படைகளால் நலியும் ஈட்டதோ
வச்சிர உடல்மறி கடலின் வாய்மடுத்து
உச்சியின் அழுத்துமின் உருத்துஅது இன்றெனில்
கிச்சிடை இடும்எனக் கிளக்கின் றூர்சிலர். 1049

எந்தையை எம்பியை எம்மு னோர்களைத்
தந்தனை போகெனத் தடுக்கின் றூர்பலர்
அந்தரத்து அமரர்தம் ஆணை யால்இவன்
வந்ததென்று உயிர்கொள மறுகி னூர்சிலர். 1050

ஓங்கல்அம் பெருவலி உயிரின் அன்பரை
நீங்கலம் இன்றொடு நீங்கி னும்இனி
ஏங்கலம் இவன்சிரத்து இருந்த லால்திரு
வாங்கலம் என்றமும் மாத ரார்பலர். 1051

கொண்டனர் எதிர்செலும் கொற்ற மாநகர்
அண்டம்உற் றதுநெடிது ஆர்க்கும் ஆர்ப்பது
கண்டம்உற்று உளஅருங் கணவர்க்கு ஏங்கிய
குண்டல முகத்தியர்க்கு உவகை கூரவே. 1052

வடிஉடைக் கனற்படை வயவர் மால்கரி
கொடிஉடைத் தேர்பரி கொண்டு வீசலின்
இடிபடச் சிதைந்தமால் வரையின் இல்லெலாம்
பொடிபடக் கிடந்தன கண்டு போயினன். 1053

முயிறுஅலைத்து எழுமுது மரத்தின் மொய்ம்புதோள்
கயிறுஅலைப் புண்டது கண்டும் காண்கிலாது
எயிறுஅலைத்து எழும்இதழ் அரக்கர் ஏழையர்
வயிறலைத்து இரியலின் மயங்கி னூர்பலர். 1054

ஆர்ப்புற அஞ்சினர் அடங்கி னூர்பலர்
போர்ப்புறச் செயலினைப் புகல்கின் றூர்பலர்
பார்ப்புறப் பார்ப்புறப் பயத்தி னுல்பதைத்து
ஊர்ப்புறத்து இரியலுற்று ஓடு வார்பலர். 1055

காந்துறு கதழ்எயிற்று அரவின் கட்டுஒரு
பூந்துணர் சேர்த்தெனப் பொலியும் வாள்முகம்
தேர்ந்துறு பொருள்பெற எண்ணிச் செய்யுமின்
வேந்துறல் பழுதென விளம்பு வார்சிலர். 1056

ஒளிவரு நாகத்துக்கு ஒல்கி யன்றுதன்
எளிவரவு இன்றுஇதன் எண்ணம் வேறெனக்
களிவரு சிந்தையால் காண்டி நங்களைச்
சுளிகிலே யாம்எனத் தொழுகின் றூர்சிலர். 1057

1050: உயிர் கொள-தேவர்களின் உயிரைக் கொள்ள,
1055: பார்ப்புற-பார்க்க.

பைங்கழல் அனுமனைப் பிணித்த பாந்தளைக்
கிங்கரர் ஒருபுடை கிளர்ந்து பற்றினர்
ஐம்பதி னுயிரர் அளவில் ஆற்றலர்
மொய்ம்பினில் எறுழ்வலிக் கலுழன் மும்மையார். 1058

திண்திறல் அரக்கர்தம் செருக்குச் சிந்துவான்
தண்டல்இல் தன்உருக் கரந்த தன்மையான்
மண்டுஅமர் தொடங்கினன் வான ரத்துருக்
கொண்டனன் அந்தகன் கொல்என் றார்பலர். 1059

கட்டுண்டு வரும் அனுமானை இலங்கை வாசிகள் மாளிகையிலிருந்து பார்த்தல்

அரமியத் தலம்தொறும் அம்பொன் மாளிகைத்
தரமுறு நிலைதொறும் சாள ரம்தொறும்
முரசெறி கடைதொறும் இரைத்து மொய்த்தனர்
நிரைவளை மகளிரும் நிருதர் மைந்தரும். 1060

கயிலையின் ஒருதனிக் கணிச்சி வானவன்
மயில்இயல் சீதைதன் கற்பின் மாட்சியால்
எயிலுடைத் திருநகர் சிதைப்ப எய்தினன்
அயில்எயிற்று ஒருகுரங் காய்என் பார்பலர். 1061

அரம்பையர் விஞ்சைநாட்டு அளக வல்லியர்
நரம்பினும் இனியசொல் நாக நாடியர்
கரும்பியல் சித்தியர் இயக்கர் கன்னியர்
வரம்பறு சும்மையர் தலைம யங்கினர். 1062

நீரிடைக் கண்துயில் நெடிய நேமியும்
தாருடைத் தனிமலர் உலகின் தாதையும்
ஓர்உடல் கொண்டுதம் உருவம் மாற்றினர்
பாரிடைப் புகுந்தனர் பகைத்தென் பார்பலர். 1063

அரக்கரும் அரக்கியர் குழாமும் அல்லவர்
கரக்கிலர் நெடுமழைக் கண்ணின் நீரது
விரைக்குழல் சீதைதன் மெலிவு நோக்கியோ
இரக்கமோ அறத்தினது எளிமை யேகொலோ. 1064

ஆண்தொழில் அனுமனும் அவரொ டேகினன்
மீண்டிலன் வேறிலன் விரும்பல் உற்றிலன்
ஈண்டுஇனி யான்தொடர்ந்து இலங்கை வேந்தனைக்
காண்டலே நலன்எனக் கருத்தின் எண்ணினன். 1065

எந்தையது அருளினும் இராமன் சேவடி
சிந்தைசெய் நலத்தினும் தேவர் ஈந்தன
முந்துள வரத்தினும் பாசம் முற்றுறச்
சிந்துவென் அயர்வுறு சிந்தை சீரிதால். 1066

வளையிற்று அரக்கனை உற்று மந்திரத்து
அளவறு முதியரும் அறிய ஆணையால்
விளைவினை விளம்பினுல் மிதிலை நாடியை
இளகினன் என்வயின் ஈதல் ஏயுமால். 1067

அல்லதூஉம் அவனுடைத் துணைவர் ஆயினுர்க்கு
எல்லையும் தெரிவுறும் எண்ணும் தேறலாம்
வல்லவன் நிலைமையும் மனமும் தேறலாம்
சொல்உக முகம்எனும் தூது சொல்லவே. 1068

வாலிதன் இறுதியும் மரத்துக் குற்றதும்
கூலவெஞ் சேனையின் குணிப்பி லாமையும்
மேலவன் காதலன் வலியும் மேன்மையும்
நீல்நிறத்து இராவணன் நெஞ்சின் நிற்குமால். 1069

ஆதலால் அரக்கனை எய்தி ஆற்றலும்
நீதியும் மனக்கொள நிறுவி நின்றதில்
பாதியின் மேற்செல நூறிப் பைப்பையப்
போதலே கருமம்என்று அனுமன் போயினுன். 1070

கடவுளர்க்கு அரசனைக் கடந்த தோன்றலும்
புடைவரும் பெரும்படைப் புணரி போர்த்தெழ
விடைபிணிப்பு உண்டது போலும் வீரனைக்
குடைகெழு மன்னன்இல் கொண்டு போயினுன். 1071

தூதுவர் ஓடினர் தொழுது தொல்லைநாள்
மாதிரம் கடந்தவற் குறுகி மன்னநின்
காதலன் மரைமலர்க் கடவுள் வாளியால்
ஏதில்வா னரம்பிணிப் புண்ட தாம்என்ருர். 1072

கேட்டலும் கிளர்சுடர் கெட்ட வான்என
ஈட்டிருள் விழுங்கிய மார்பின் யானையின்
கோட்டுஎதிர் பொருதபேர் ஆரம் கொண்டுஎதிர்
நீட்டினன் உவகையின் நிமிர்ந்த நெஞ்சினுன். 1073

1069: மரத்துக்குற்றதும்–இராம பாணத்தால் மராமரங்களுக்கு ஏற்பட்ட கதியும் (கிஷ்கிந்தா காண்டம்: மராமரப் படலம் பார்க்க.) மேலவன் காதலன்-சூரியனுடைய குமாரனை சுக்கிரீவன்.

1070: நின்றதில்-என்னுல் கொல்லப்பட்டவர்கள் போக மீதியுள்ள அரக்கர் படையில்.

1071: கடவுளர்க்கு அரசனைக் கடந்த தோன்றலும்-இந்திரனை வென்ற இந்திரசித்தும்.

எல்லைஇல் உவகையால் இவர்ந்த தோளினன்
புல்லுற மலர்ந்தகண் குமுதப் பூவினன்
ஒல்லையின் ஓடிநீர் உரைத்தென் ஆணையால்
கொல்லலை தருகெனக் கூறு வீர்என்ருன். 1074

அவ்வுரை தூதரும் ஆணை யால்வரும்
தெவ்உரை நீக்கினுன் அறியச் செப்பினுர்
இவ்வுரை நிகழ்வுழி இருந்த சீதையாம்
வெவ்வுரை நீங்கினுள் நிலைவி ளம்புவாம். 1075

இறுத்தனன் கடிபொழில் எண்இ லோர்பட
ஒறுத்தனன் என்றுகொண்டு உவக்கின் ருள்உயிர்
வெறுத்தனள் சோர்வுற வீரற்கு உற்றதைக்
கறுத்தல்இல் சிந்தையாள் கவன்று கூறினுள். 1076

வேறு

அனுமான் பிடிபட்ட செய்தி அறிந்து சீதை வருந்துதல்

ஓவி யம்புகை உண்டது போல்ஒளிர்
பூவின் மெல்லியல் மேனிபொ டியுறப்
பாவி வேடன்கைப் பார்ப்புறப் பேதுறும்
தூவி அன்னம்அன் னுள்இவை சொல்லினுள். 1077

உற்றுஉண் டாய விசும்பை உருவினுய்
முற்றுண் டாய்கலை யாவையும் முற்றுறக்
கற்றுண் டாய்ஒரு கள்ள அரக்கனுல்
பற்றுண் டாய்இது வோஅறப் பான்மையே. 1078

கடல்க டந்து புகுந்தனை கண்டகர்
உடல்க டந்துநின் ஊழி கடந்திலை
அடல்க டந்ததி ரள்புயத் தையநீ
இடர்கள் தந்தனை வந்துஇடர் மேலுமே. 1079

ஆழி காட்டிஎன் ஆருயிர் காட்டினுய்
ஊழி காட்டுவென் என்றுரைத் தேன்அது
வாழி காட்டும்என்று உண்டுஉன் வரைப்புயப்
பாழி காட்டிப் பழியையும் காட்டினுய். 1080

கண்டு போயின நீள்நெறி காட்டிட
மண்டு போரின் அரக்கனை மாய்த்துஎனைக்
கொண்டு மன்னவன் போம்எனும் கொள்கையைத்
தண்டி னுய்எனக்கு ஆருயிர் தந்தநீ. 1081

1076; உவக்கின்ருள்-சீதை. வீரற்கு-அனுமானுக்கு. சிந்தையாள்-திரிசடை.

ஏயப் பன்னினள் இன்னன தன்உயிர்
தேயக் கன்று பிடியுறத் தீங்குறும்
தாயைப் போலத் தளர்ந்து மயங்கினுள்
தீயைச் சுட்டதொர் கற்பெனும் தீயினுள். 1082

பெருந்த கைப்பெரி யோனேப்பி ணித்தபோர்
முருந்தன் மற்றை உலகொரு மூன்றையும்
அருந்த வப்பய னுல்அர சாள்கின்றுன்
இருந்த அப்பெருங் கோயில்சென்று எய்தினுன். 1083

வேறு

அனுமான் சென்றபோது இராவணன் இருந்த நிலை

தலங்கள் மூன்றிற்கும் பிறிதொரு மதிதழைத் தென்ன
அலங்கல் வெண்குடைத் தண்ணிழல் அவிர்ஒளி பரப்ப
வலங்கொள் தோளினுன் மண்ணின்று வானுற எடுத்த
பொலங்கொள் மாமணி வெள்ளியங் குன்றெனப் பொலிய. 1084

புள்உ யர்த்தவன் திகிரியும் புரந்தரன் அயிலும்
தள்இல் முக்கணுன் கணிச்சியும் தாக்கிய தழும்பும்
கள்உ யிர்க்குமென் குழலியர் முகிழ்விரல் கதிர்வாள்
வள்உ கிர்ப்பெருங் குறிகளும் புயங்களின் வயங்க. 1085

துன்று செம்மயிர்ச் சுடர்நெடுங் கற்றைகள் சுற்ற
நின்று திக்குற நிரல்படக் கதிர்க்குழாம் நிமிர
ஒன்று சீற்றத்தின் உயிர்ப்பெனும் பெரும்புகை உயிர்ப்பத்
தென்தி சைக்கும்ஓர் வடவனல் திருத்திய தென்ன. 1086

மரக தக்கொழும் கதிரொடு மாணிக்க நெடுவாள்
நரக தேயத்துள் நடுக்குரு இருளேயும் நக்கச்
சிரம்அ னேத்தையும் திசைதொறும் திசைதொறும் செலுத்தி
உரகர் கோன்இனிது அரசுவீற் றிருந்தனன் ஒப்ப. 1087

குவித்த பன்மணிக் குப்பைகள் கலேயொடும் கொழிப்பச்
சவிச்சு டர்க்கலன் அணிந்தபொற் றேளொடு தயங்கப்
புவித்த டம்படர் மேருவைப் பொன்முடி என்னக்
கவித்து மால்இருங் கருங்கடல் இருந்தது கடுப்ப. 1088

சிந்து ராகத்தின் செறிதுகில் கச்சொடு செறியப்
பந்தி வெண்முத்தின் அணிகலன் மூழுநிலாப் பரப்ப
இந்து வெண்குடை நீழலில் தாரகை இனம்பூண்டு
அந்தி வான்உடுத்து அல்லுவீற் றிருந்ததாம் என்ன. 1089

1085: புள் உயர்த்தவன்-கருடக் கொடியைத் தூக்கியவனுன திருமால்.

வண்மைக் கும்திரு மறைகட்கும் வானினும் பெரிய
திண்மைக் கும்தனி உறையுளாம் முழுமுகம் திசையில்
கண்வைக் கும்தொறும் களிற்றெடு மாதிரம் காக்கும்
எண்மர்க் கும்மற்றை இருவர்க்கும் பெரும்பயம் இயற்ற. 1090

ஏக நாயகன் தேவியை எதிர்ந்ததன் பின்னை
நாகர் வாழிடம் முதலென நான்முகன் வைகும்
மாக மால்விசும்பு ஈறென நடுவண வரைப்பில்
தோகை மாதர்கள் மைந்தரின் தோன்றினர் சுற்ற. 1091

வான ரங்களும் வானவர் இருவரும் மனிதர்
ஆன புன்தொழி லோர்என இகழ்கின்ற அவரும்
ஏனை நின்றவர் இருடியர் சிலர்ஒழிந்து யாரும்
தூந வின்றவேல் அரக்கர்தம் குழுவொடு சுற்ற. 1092

நரம்பு கண்அகத் துள்உறை நறைநின்ற பாண்டில்
நிரம்பு சில்லரி பாணியும் குறடுநின்று இசைப்ப
அரம்பை மங்கையர் அமிழ்துகுத் தாலன்ன பாடல்
வரம்பில் இன்னிசை செவிதொறும் செவிதொறும் வழங்க. 1093

கூடு பாணியின் இசையொடும் முழவொடும் கூடத்
தோடு சீறடி விழிமனம் கையொடு தொடரும்
ஆடல் நோக்குறின் அருந்தவ முனிவர்க்கும் அமைந்த
வீடு மீட்குறும் மேனகை மேல்நகை விளங்க. 1094

ஊடி ஞர்முகத்து உறுநறை ஒருமுகம் உண்ணக்
கூடி ஞர்முகக் களிநறை ஒருமுகம் குடிப்பப்
பாடி ஞர்முகத்து ஆரமுது ஒருமுகம் பருக
ஆடி ஞர்முகத்து அணிஅமுது ஒருமுகம் அருந்த. 1095

தேவ ரோடிருந்து அரசியல் ஒருமுகம் செலுத்த
மூவ ரோடுமா மந்திரம் ஒருமுகம் முயலப்
பாவ காரிதன் பாவகம் ஒருமுகம் பயிலப்
பூவை சானகி உருவொடு ஒருமுகம் பொருந்த. 1096

காந்தள் மெல்விரல் சனகிதன் கற்பெனும் கடலை
நீந்தி ஏறுவது எங்ஙன்என்று ஒருமுகம் நினையச்
சாந்துஅ ளாவிய கொங்கைநன் மகளிர்தற் சூழ்ந்தார்
ஏந்தும் ஆடியின் ஒருமுகம் இயல்புடன் இலங்க. 1097

1090: எண்மர்க்கும்–எட்டுத் திசைப் பாலகர்களுக்கும். இருவர்க்கும்–மேல், கீழ் என்ற இரு திசைகளையும் காக்கும் துருவன், ஆதிசேடன் என்ற இருவர்க்கும்.

1096: மூவரோடு-மந்திரிகள், பிரதானிகள், சேனாதிபதிகள் ஆகியவரோடு (என்றும்) ஆசாரியன், புரோகிதன், மந்திரிகளோடு (என்றும் பொருள் கூறுவர்).

பொதும்பர் வைகுதேன் புக்குஅருந் துதற்குஅகம் புலரும்
மதம்பெய் வண்டெனச் சனகிமேல் மனம்செல மறுகி
வெதும்பு வார்அகம் வெந்தழி வார்முலே விழிநீர்
ததும்பு வார்விழித் தாரைவேல் தோள்தொறும் தாக்க. 1098

மாறுஅ ளாவிய மகரந்தம் நறவுண்டு மகளிர்
வீறுஅ ளாவிய முகிழ்முலே மெழுகிய சாந்தின்
சேறுஅ ளாவிய சிறுநறுஞ் சீகரத் தென்றல்
ஊறுஅ ளாவிய கடுஎன உடலிடை நுழைய. 1099

திங்கள் வாள்நுதல் மடந்தையர் சேய்அரிக் கிடந்த
அங்க யல்தடந் தாமரைக்கு அலரியோன் ஆகி
வெங்கண் வானவர் தானவர் என்றிவர் விரியாப்
பொங்கு கைகளாம் தாமரைக்கு இந்துவே போன்று. 1100

இருந்த எண்திசைக் கிழவனே மாருதி எதிர்ந்தான்
கருந்திண் நாகத்தை நோக்கிய கலுழனில் கனன்ருன்
திருந்து தோளிடை வீக்கிய பாசத்தைச் சிந்தி
உருந்து நஞ்சுபோல் பவன்வயின் பாய்வென்என்று உடன்ருன். 1101

உறங்கு கின்றபோது உயிர்உண்டல் குற்றம்என்று ஒழிந்தேன்
பிறங்கு பொன்மணி ஆசனத்து இருக்கவும் பெற்றேன்
திறங்கள் என்பல சிந்திப்பது இவன்தலே சிதறி
அறம்கொள் கொம்பினே மீட்டுடன் அகல்வென்என்று அமைந்தான்.

தேவர் தானவர் முதலினர் சேவகன் தேவி
காவல் கண்டுஇவண் இருந்தவர் கட்புலன் கதுவப்
பாவ காரிதன் முடித்தலே பறித்திலென் என்ருல்
ஏவ தாம்இனி மேல்செயும் ஆள்வினே என்ருன். 1103

மாடுஇ ருந்தமற்று இவன்புணர் மங்கையர் மறுகி
ஊடுஇ ரிந்திட முடித்தலே திசைதொறும் உருட்டி
ஆடல் கொண்டுநின்று ஆர்க்கின்றது அதுகொடி தம்மா
தேடி வந்ததோர் குரங்கெனும் வாசகம் சிறிதோ. 1104

நீண்ட வாள்எயிற்று அரக்கனேக் கண்களின் நேரே
காண்டல் வேண்டிஇவ் உயிர்சுமந்து எதிர்சில கழறி
மீண்ட போதுஉண்டு வசைப்பொருள் வென்றிலேன் எனினும்
மாண்ட போதினும் புகழன்றி மற்றும்ஒன் றுண்டோ. 1105

என்று தோளிடை இறுக்கிய பாசம்இற்று ஏகக்
குன்றின் மேல்எழு கோளரி ஏறெனக் குதியில்
சென்று கூடுவல் என்பது சிந்தனே செய்யா
நின்று காரியம் அன்றென நீதியின் நினேந்தான். 1106

1102: இருக்கவும்-இராவணன் இருக்கவும். கொம்பினே—சீதையை.

வேறு

கொல்லலாம் வலத்தனும் அல்லன் கொற்றமும்
சொல்லலாம் தரத்தனும் அல்லன் தொல்லைநாள்
அல்லலாம் திரண்டன நிறத்தன் ஆற்றலை
வெல்லலாம் இராமனல் பிறரும் வெல்வரோ. 1107

என்னையும் வெலற்குஅரிது இவனுக்கு ஈண்டிவன்
தன்னையும் வெலற்குஅரிது எனக்குத் தாக்கினல்
அன்னவே காலங்கள் கழியும் ஆதலால்
துன்னரும் செருத்தொழில் தொடங்கல் தூயதோ. 1108

ஏழ்உயர் உலகங்கள் யாவும் இன்புறப்
பாழிவன் புயங்களோடு அரக்கன் பஃறலைப்
பூழியில் புரட்டல்என் பூணிப் பாம்என
ஊழியான் விளம்பிய உரையும் ஒன்றுண்டால். 1109

இங்கொரு திங்களே இருப்பல் யான்என
அங்கண்நா யகன்தனது ஆணை கூறிய
மங்கையும் இன்னுயிர் துறத்தல் வாய்மையால்
பொங்குவெஞ் செருவிடைப் பொழுது போக்கினல். 1110

ஆதலால் அமர்த்தொழில் அழகிற் றன்றுஅருந்
தூதனும் தன்மையே தூய்தெனறு உன்னினன்
வேதநா யகன்தனித் துணைவன் வென்றிசால்
ஏதில்வாள் அரக்கனது இருக்கை எய்தினன். 1111

தீட்டிய வாள்எனத் தெறுகண் தேவியர்
ஈட்டிய குழுவிடை இருந்த வேந்தற்குக்
காட்டினன் அனுமனைக் கடலின் ஆரமுது
ஊட்டிய உம்பரை உலைய ஒட்டினன். 1112

புவனம்எத் தனைஅவை அனைத்தும் போர்கடந்த
அவனைஉற்று அரிஉரு வான ஆண்தகை
சிவன்எனச் செங்கணன் என்னச் சேவகன்
இவன்எனக் கூறிநின்று இருகை கூப்பினன். 1113

நோக்கிய கண்களால் நொறில் கனற்பொறி
தூக்கிய அனுமன்மெய் மயிர் சுறுக்கொளத்
தாக்கிய உயிர்ப்பொடும் தவழ்ந்த வெம்புகை
வீக்கிய அவன்உடல் விசித்த பாம்பினே. 1114

1109: ஊழியான் விளம்பிய-இராமன் தண்டக வனத்து முனிவர்களிடம் கூறிய.

1113; அவனை-இராவணனை. அரி உருவான-குரங்கு உருவமான. செங்கணன்-திருமால், கூப்பினன்-இந்திரசித்து கூப்பினன்.

அன்னதோர் வெகுளியன் அமரர் ஆதியர்
துன்னிய துன்னலர் துணுக்கம் சுற்றுற
என்இவண் வரவுநீ யாரை என்றுஅவன்
தன்மையை வினவினன் கூற்றின் தன்மையான். *1115*

"நீ யார்?" என்று அனுமானை இராவணன் வினவுதல்

நேமியோ குலிசியோ நெடுங்க ணிச்சியோ
தாமரைக் கிழவனோ தறுகண் பஃறலைப்
பூமிதாங்கு ஒருவனோ பொருது முற்றுற
நாமமும் உருவமும் கரந்து நண்ணினாய். *1116*

நின்றுஅசைத்து உயிர்கவர் நீலக் காலனோ
குன்றுஅசைத்து அயில்உற எறிந்த கொற்றனோ
தென்திசைக் கிழவனோ திசைநின் றாட்சியர்
என்றிசைக் கின்றவர் யாருள் யாவன்நீ. *1117*

அந்தணர் வேள்வியின் ஆக்கி ஆணையின்
வந்துற விடுத்ததோர் வயவெம் பூதமோ
முந்தொரு மலருளோன் இலங்கை முற்றுறச்
சிந்தெனத் திருத்திய தறுகண் தெய்வமோ. *1118*

ஆரைநீ என்னைஇங்கு எய்து காரணம்
ஆர்உனை விடுத்தவர் அறிய ஆணையால்
சோர்விலை சொல்லுதி என்னச் சொல்லினான்
வேரொடும் அமரர்தம் புகழ்வி ழுங்கினான். *1119*

அனுமான் கூறும் பதில்

சொல்லிய அனைவரும் அல்லென் சொன்னஅப்
புல்லிய வலியினோர் ஏவல் பூண்டிலேன்
அல்லியங் கமலமே அனைய செங்கண்ஓர்
வில்லிதன் தூதன்யான் இலங்கை மேயினேன். *1120*

அனையவன் யார்என அறிதி ஆதியேல்
முனைவரும் அமரரும் மூவர் தேவரும்
எனையவர் எனையவர் யாவர் யாவையும்
நினைவரும் இருவினை முடிக்க நின்றுளோன். *1121*

1116. நேமியோ-சக்கராயுதம் தரித்த திருமாலோ. குலிசியோ-வச்சிராயுதம் தரித்த இந்திரனோ.கணிச்சியோ-சூலாயுதம் தரித்த சிவனோ.பூமிதாங்கு ஒருவனோ-ஆதிசேடனோ.

1117: தென்திசைக் கிழவனோ-அகத்தியனோ. எமனோ (என்றும் கூறுவார்கள்).

1120: வில்லி-வில்வீரனான இராமன்.

வேறு

ஈட்டிய வலியும் மேல்நாள் இயற்றிய தவமும் யாணர்
கூட்டிய படையும் தேவர் கொடுத்தநல் வரமும் கொட்பும்
தீட்டிய பிறவும் எய்தித் திருத்திய வாழ்வும் எல்லாம்
நீட்டிய பகழி ஒன்ருல் முதலொடு நீக்க நின்ருன். 1122

தேவரும் பிறரும் அல்லன் திசைக்களி றல்லன் திக்கின்
காவலர் அல்லன் ஈசன் கயிலையங் கிரியன் அல்லன்
மூவரும் அல்லன் மற்றை முனிவரும் அல்லன் எல்லைப்
பூவல யத்தை ஆண்ட புரவலன் புதல்வன் போலாம். 1123

போதமும் பொருந்து கேள்விப் புரையறு பயனும் பொய்தீர்
மாதவம் சார்ந்த தீரா வரங்களும் மற்றும் முற்றும்
யாதுஅவன் நினைந்தான் அன்ன பயத்தன ஏது வேண்டின்
வேதமும் அறனும் சொல்லும் மெய்யற மூர்த்தி வில்லோன். 1124

காரணம் கேட்டி யாயின் கடைஇலா மறையின் கண்ணும்
ஆரணம் காட்ட மாட்டா அறிவினுக்கு அறிவும் அன்னேன்
போர்அணங்கு இடங்கர் கவ்வப் பொதுநின்று முதலே என்ற
வாரணம் காக்க வந்தான் அமரரைக் காக்க வந்தான். 1125

மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த காரணன் கைவில் ஏந்திச்
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும்விட்டு அயோத்தி வந்தான்.

அறம்தலை நிறுத்தி வேதம் அருள்சுரந்து அறைந்த நீதித்
திறம்தெரிந்து உலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்துக நூறித் தக்கோர் இடர்துடைத்து ஏக ஈண்டுப்
பிறந்தனன் பிறவி நோய்க்கு மருந்திவன் பிறிதொன் றுண்டோ.

அன்னவற்கு அடிமை செய்வேன் நாமமும் அனுமன் என்பேன்
நன்னுதல் தன்னைத் தேடி நாற்பெருந் திசையும் போந்த
மன்னரில் தென்பால் வந்த தானைக்கு மன்னன் வாலி
தன்மகன் அவன்தன் தூதன் வந்தனென் தனியேன் என்ருன். 1128

என்றலும் இலங்கை வேந்தன் எயிற்றினம் எழிலி நாப்பண்
மின்திரிந் தென்ன நக்கு வாலிசேய் விடுத்த தூத
வன்திற லாய வாலி வலியன்கொல் அரசின் வாழ்க்கை
நன்றுகொல் என்ன லோடும் நாயகன் தூதன் நக்கான். 1129

1125: முதலே-ஆதிமூலமே.

அஞ்சலே அரக்க பார்விட்டு அந்தரம் அடைந்தான் அன்றே
வெஞ்சின வாலி மீளான் வாலும்போய் விளிந்த தன்றே
அஞ்சன மேனி யான்தன் அடுகணை ஒன்ருல் மாழ்கித்
துஞ்சினன் எங்கள் வேந்தன் சூரியன் தோன்றல் என்ருன். 1130

என்னுடை ஈட்டி ஞல்அவ் வாலியை எறுழ்வாய் அம்பால்
இன்னுயிர் உண்டது இப்போது யாண்டையான் இராமன் என்பான்
அன்னவன் தேவி தன்னை அங்கதன் நாடல் உற்ற
தன்மையை உரைசெய் கென்னச் சமீரணன் தனயன் சொல்வான்.

தேவியை நாடி வந்த செங்கணுற்கு எங்கள் கோமான்
ஆவிஒன் ருக நட்டான் அருந்துயர் துடைத்தி என்ன
ஓவியர்க்கு எழுத ஒண்ணு உருவத்தன் உருமை யோடும்
கோவியல் செல்வம் முன்னே கொடுத்துவா லியையும் கொன்ருன்.

ஆயவன் தன்னேடு ஆண்டுத் திங்கள்ஓர் நான்கும் வைகி
மேயவெஞ் சேனை சூழ வீற்றினிது இருந்த வீரன்
போய்இனி நாடும் என்னப் போந்தனம் புகுந்தது ஈதுஎன்று
ஏயவன் தூதன் சொன்ஞன் இராவணன் இதனைச் சொன்ஞன். 1133

உம்குலத் தலைவன் தன்னேடு
ஒப்பிலா உயர்ச்சி யோனை
வெங்கொலை அம்பின் கொன்ருற்கு
ஆள்தொழில் மேற்கொண் டீரேல்
எங்குஉலப் புறும்நும் சீர்த்தி
நும்மொடும் இயைந்த தென்ருல்
மங்குலின் பொலிந்த ஞாலம்
மாதுமை உடைத்து மாதோ. 1134

தம்முனைக் கொல்வித்து அன்னுற் கொன்றவற்கு அன்பு சான்ற
உம்இனத் தலைவன் ஏவ யாதெனக்கு உணர்த்தல் உற்றது
எம்முனைத் தூது வந்தாய் இகல்புரி தன்மை என்னை
நும்மினைக் கொல்லாம் நெஞ்சம் அஞ்சலை நுவறி என்ருன். 1135

வேறு

துணர்த்த தாரவன் சொல்லிய சொற்களைப்
புணர்த்து நோக்கிப் பொதுநின்ற நீதியை
உணர்த்தி ஞல்அது உறும்என உன்னரும்
குணத்தி ஞனும் இனையன கூறிஞன். 1136

1130: வாலும் போய் விளிந்ததன்றே-வாலி இறந்தபோது அவனுடைய வாலும் அழிந்துவிட்டது என்று இராவணனைப் பரிகசித்துக் கூறுகிருன் அனுமான். முன் ஒரு சமயம் வாலியின் வாலில் கட்டுண்டு இராவணன் பெருங்கஷ்டத்துக்கு உள்ளாஞன் என்பது குறிப்பிடத்தக்கது.

1131: என்னுடை ஈட்டிஞல்-என்ன காரணத்தால். அன்னவன்-இராமன். நாடல்-தேடுதல். சமீரணன் தனயன்-வாயு குமாரஞன அனுமான்.

இராவணனுக்கு அனுமான் நீதிகளை எடுத்துக் கூறுதல்

தூது வந்தது சூரியன் கான்முளை
ஏது ஒன்றிய நீதி இயைந்தன
சாது என்றுணர் கிற்றியேல் தக்கன
கோதி றந்தன நின்வயின் கூறுவாம். 1137

வறிது வீழ்த்தனை வாழ்க்கையை மன்அறம்
சிறிதும் நோக்கலை தீமை திருத்தினய்
இறுதி உற்றுள தாயினும் இன்னும்ஓர்
உறுதி கேட்டி உயிர்நெடிது ஓம்புவாய். 1138

போயிற் றேநின் புலன்வென்று போற்றிய
வாயின் தீர்வரி தாகிய மாதவம்
காயின் தீர்வரும் கேடரும் கற்பினள்
தீயின் தூயவ ளைத்துயர் செய்ததால். 1139

இன்று வீந்தது நாளைச் சிறிதிறை
நின்று வீந்தத லால்நிறை நிற்குமோ
ஒன்று வீந்தது நல்உணர் உம்பரை
வென்று வீக்கிய ஆக்கம் விதியினல். 1140

தீமை நன்மையைத் தீர்த்தல்ஒல் லாதெனும்
வாய்மை நீக்கினை மாதவத் தால்வந்த
தூய்மை தூயவள் தன்வயின் தோன்றிய
நோய்மை யால்துடைக் கின்றனை நோக்கலாய். 1141

திறம்தி றம்பிய காமச் செருக்கினல்
மறந்து தத்தம் மதியின் மயங்கினர்
இறந்தி றந்திழிந்து'ஏறுவ தேயலால்
அறம்தி றம்பினர் ஆருளர் ஆயினர். 1142

நாமத்து ஆழ்கடல் ஞாலத்து அவிந்தவர்
ஈமத் தால்மறைந் தார்இள மாதர்பால்
காமத் தால்இறந் தார்களி வண்டுறை
தாமத் தாரினர் எண்ணினும் சால்வரோ. 1143

பொருளும் காமமும் என்றிவை போக்கிவேறு
இருள்உண் டாம்என எண்ணலர் ஈதலும்
அருளும் காதலின் தீர்தலும் அல்லதோர்
தெருள்உண் டாம்என எண்ணலர் சீரியோர். 1144

இச்சைத் தன்மையி னில்பிறர் இல்லினை
நச்சி நாளும் நகையுற நாணிலன்
பச்சை மேனி புலர்ந்து பழிபடூஉம்
கொச்சை ஆண்மையும் சீர்மையில் கூடுமோ. 1145

ஓத நீர்உல காண்டவர் உன்துணைப்
போத நீதியர் ஆருளர் போயினர்
வேத நீதி விதிவழிச் செல்வரும்
காதல் நீஅறத்து எல்லை கடத்தியோ. 1146

வெறுப்புண் டாய ஒருத்தியை வேண்டினல்
மறுப்புண் டாயபின் வாழ்கின்ற வாழ்வினில்
உறுப்புண் டாய்நடு ஓங்கிய நாசியை
அறுப்புண் டால்அது அழகென லாகுமோ. 1147

பாரை நூறுவ பற்பல பொற்புயம்
ஈரை நூறு தலைஉள என்னினும்
ஊரை நூறும் கடுங்கன லுள்பொதி
சீரை நூறுஅவை சேமம் செலுத்துமோ. 1148

புரம்பி ழைப்பரும் தீப்புகப் பொங்கியோன்
நரம்பி ழைத்தநின் பாடலின் நல்கிய
வரம்பி ழைக்கும் மறைபிழை யாதவன்
சரம்பி ழைக்கும்என் றெண்ணுதல் சாலுமோ. 1149

ஈறில் நாள்உக எஞ்சலில் நல்திரு
நூறி நொய்தினை யாகி நுழைதியோ
வேறும் இந்நகை ஆய வினைத்தொழில்
தேறி னார்பலர் காமிக்கும் செவ்வியோய். 1150

பிறந்து ளார்பிற வாத பெரும்பதம்
சிறந்து ளார்மற்றும் தேவர்க்கும் தேவராய்
இறந்து ளார்பலர் யாரும் இராமனை
மறந்து ளார்உள ராகிலர் வாய்மையால். 1151

ஆத லால்தன் அரும்பெறல் செல்வமும்
ஓது பல்கிளை யும்உயி ரும்பெறச்
சீதை யைத்தரு கென்றெனச் செப்பினன்
சோதி யான்மகன் நிற்கெனச் சொல்லினன். 1152

என்ற லும்இவை சொல்லியது எற்கொரு
குன்றில் வாழும் குரங்குகொ லாம்இது
நன்று நன்றென மாநகை செய்தனன்
வென்றி என்றென்று தான்அன்றி வேறிலான். 1153

குரக்கு வார்த்தையும் மானிடர் கொற்றமும்
இருக்க நிற்கநீ என்கொல் அடா'இரும்
புரத்தி னுள்தரும் தூது புகுந்தபின்
அரக்க ரைக்கொன்றது அஃதுஉரை யாய்என்றான். 1154

1152: சோதியான் மகன்–சூரிய குமாரனான சுக்கிரீவன்.

காட்டு வார்இன்மை யால்கடி காவினை
வாட்டி னேன்என்னைக் கொல்லவந் தார்களை
வீட்டி னேன்பின்னும் மென்மையி னுல்உன்றன்
மாட்டு வந்தது காணும் மதியினுல். 1155

இராவணன் அனுமானைக் கொல்லச் சொன்னபோது விபீஷணன் தடுத்தல்

என்னும் மாத்திரத்து ஈண்டுஎரி நீண்டுஉக
மின்னும் வாள்எயிற் றன்சினம் வீங்கினுன்
கொல்மின் என்றனன் கொல்லியர் சேர்தலும்
நில்மின் என்றனன வீடணன் நீதியான். 1156

ஆண்டெ ழுந்துநின்று அண்ணல் அரக்கனை
நீண்ட கையின் வணங்கினன் நீதியாய்
மூண்ட கோபம் முறையதன் ருும்என
வேண்டும் மெய்யுரை பைய விளம்பினுன். 1157

வேறு

அந்தணன் உலகம் மூன்றும் ஆதியின் அறத்தின் ஆற்றல்
தந்தவன் மரபின் வந்தாய் தவநெறி உணர்ந்து தக்கோய்
இந்திரன் திருவை மாற்றும் இறைவநீ இயம்பு தூது
வந்தனென் என்ற பின்பும் கோறியோ மறைகள் வல்லோய். 1158

பூதலப் பரப்பின் அண்டப் பொகுட்டின்உட் புறத்துப் பொய்தீர்
வேதம்உற்று உயர்ந்த வைப்பின் வேறுவே றிடத்து வேந்தர்
மாதரைக் கொலைசெய் தார்கள் உளர்என வரினும் வந்த
தூதரைக் கொன்றுளார்கள் யாவரே தொல்லை நல்வோர். 1159

பகைப்புலன் நணுகி உய்த்தார் பகர்ந்தது பகர்ந்து பற்ருர்
மிகைப்புலன் அடக்கி மெய்ம்மை விளம்புதல் விரதம் பூண்ட
தகைப்புலக் கருமத் தோரைக் கோறலின் தக்கார் யார்க்கும்
நகைப்புலன் பிறிதுண் டாமே நம்குலம் நவைஇன் ருமே. 1160

முத்தலை எஃகன் மற்றை முராந்தகன் முனிவன் முன்னு
அத்தலை நம்மை நோனு அமரர்க்கும் நகையிற் ருமால்
எத்தலை உலகம் காக்கும் வேந்தநீ வேற்ருேர் ஏவ
இத்தலை எய்தி னுனைக் கொல்லுதல் இழுக்கம் இன்னும். 1161

1155: காட்டுவார்–இராவணனைக் காட்டுவார். காவினை-அசோக வனத்தை.

1160: மிகைப்புலன்-கோபம்.

1161: முத்தலை எஃகன்-திரிசூலம் தரித்த சிவன். முராந்தகன்-முரன் என்ற அசுரனை அழித்த திருமால். முனிவன்-பிரமன்.

இளையவள் தன்னைக் கொல்லாது இருசெவி மூக்கொடு ஈர்ந்து
விளைவுஉரை என்று விட்டார் வீரராய் மெய்ம்மை ஓர்வார்
களைதியேல் ஆவி நம்பால் இவன்வந்து கண்ணில் கண்ட
அளவுஉரை யாமல் செய்தி ஆதிஎன்று அமையச் சொன்னான். 1162

வேறு

நல்லது உரைத்தாய் நம்பிஇவன் நவைசெய் தானே யானாலும்
கொல்லல் பழுதே போய்அவரைக் கூறிக் கொணர்தி கடிதென்னாத்
தொல்லை வாலை மூலம்அறச் சுட்டு நகரைச் சூழ்போக்கி
எல்லை கடக்க விடுமின்கள் என்றான் நின்றார் இரைத்தெழுந்தார்.

பிரம்மாஸ்திரத்தை இந்திரசித்து விடுவித்தலும், அனுமானை அரக்கர்கள் கயிறுகளால் கட்டி இழுத்தலும்

ஆய காலத்து அயன்படையோடு இருப்ப ஆகாது அனல்இடுதல்
தூய பாசம் எனப்பலவும் கொணர்ந்து பிணிமின் தோள்என்னா
மேய தெய்வப் படைக்கலத்தை மீட்டான் அமரர் போர்வென்றான்
ஏனனமுன் இடைபுக்குத் தொடைவன் கயிற்றால் பிணித்துஈர்த்தார்.

நாட்டின் நகரின் நடுவுள்ள கயிறு நவிலும் தகையனவோ
வீட்டின் ஊசல் நெடும்பாசம் அற்ற தேரும் விசி துறந்த
மாட்டும் புரவி ஆயம்எலாம் மருவி வாங்கும் தொடையழிந்த
பூட்டும் வல்லி மூட்டோடும் புரசை இழந்த போர்யானை. 1165

மண்ணில் கண்ட வானவரை
வலியில் கவர்ந்த வரம்பெற்ற
எண்ணற் கரிய ஏனையரை
இகலில் பறித்த தமக்குஇயைந்த
பெண்ணிற்கு இயையும் மங்கலத்தில்
பிணித்த கயிறே இடைபிழைத்த
கண்ணில் கண்ட வன்பாசம்
எல்லாம் இட்டுக் கட்டினார். 1166

கடவுட் படையைக் கடந்துஅறத்தின்
ஆணை கடந்தேன் ஆகாமே
விடுவித் தளித்தார் தெவ்வரே
வென்றேன் அன்றோ இவர்வென்றி
சுடுவிக் கின்றது இவ்வூரைச்
சுடுகென்று உரைத்த துணிவென்று
நடுவுற்று அமையம் உறநோக்கி
முற்றும் உவந்தான் நவையற்றான். 1167

1163: போய் அவரைக் கூறிக் கொணர்தி-போய்ச் சொல்லி இராம இலக்குவர்களை இங்கு அழைத்துக்கொண்டு வா.

1166. கண்ட, கவர்ந்த, பெற்ற, பறித்த-கயிறுகளைக் குறிக்கின்றன.

நொய்ய பாசம் புறம்பிணிப்ப
நோன்மை இலன்போல் உடல்நுணங்கி
வெய்ய அரக்கர் புறத்தலைப்ப
வீடும் உணர்ந்தே விரைவில்லா
ஐயன் விஞ்சை தனைஅறிந்தும்
அறியா தான்போல் அவிஞ்சைஎனும்
பொய்யை மெய்போல் நடிக்கின்ற
யோகி போன்றுன் போகின்றுன். 1168

வேந்தன் கோயில் வாயிலொடு
விரைவில் கடந்து வெள்ளிடையின்
போந்து புறம்நின்று இரைக்கின்ற
பொறைதீர் மறவர் புறம்சுற்ற
ஏந்து நெடுவால் கிழிசுற்றி
முற்றும் தோய்த்தார் இழுதுஎண்ணெய்
காந்து கடுந்தீக் கொளுத்தினர்
ஆர்த்தார் அண்டம் கடிகலங்க. 1169

ஒக்க ஒக்க உடன்விசித்த உலப்பி லாத உரப்பாசம்
பக்கம் பக்கம் இருகூறுய் நூறு யிரவர் பற்றினர்
புக்க படைஞர் புடைகாப்போர் புணரிக் கணக்கர் புறம்செல்வோர்
திக்கின் அளவால் அயல்நின்று காண்போர்க்கு எல்லை தெரிவரிதால்.

அந்த நகரும் கடிகாவும் அழிவித்து அக்கன் முதலாயோர்
சிந்த நூறிச் சீதையொடும் பேசி மனிதர் திறம்செப்ப
வந்த குரங்கிற்கு உற்றதனை வம்மின் காண வம்மென்று
தம்தம் தெருவும் வாயில் தொறும் யாரும் அறியச் சாற்றினர். 1171

ஆர்த்தார் அண்டத்து அப்புறத்தும்
அறிவிப் பார்போல் அங்கோடுஇங்கு
ஈர்த்தார் முரசம் எற்றினர்
இடித்தார் தெழித்தார் எம்மருங்கும்
பார்த்தார் ஓடிச் சானகிக்கும்
பகர்ந்தார் அவளும் உயிர்பதைத்தாள்
வேர்த்தாள் உலந்தாள் விம்மினள்
விழுந்தாள் அழுதாள் வெய்துயிர்த்தாள். 1172

தாயே அனைய கருணையான் துணையை ஏதும் தகவில்லா
நாயே அனைய் வல்லரக்கர் நலியக் கண்டால் நல்காயோ
நீயே உலகுக்கு ஒருசான்று நிற்கே தெரியும் கற்பினல்
தூயேன் என்னில் தொழுகின்றேன் எரியே அவனைச் சுடல்என்றுள்.

1173: கருணையான்–இராமன். துணையை அனுமானை. சுடல்–சுடாதே.

வேறு

வெளுத்தவெண் ணகையவள் விளம்பும் ஏல்வையின்
ஒளித்தவெங் கனலவன் உள்ளம் உட்கினுன்
தளிர்த்தன மயிர்ப்புறம் சிலிர்ப்பத் தன்மையால்
குளிர்த்ததுஅக் குரிசில்வால் என்பு கூரவே. 1174

வேறு

மற்றினிப் பலஎன் வேலே வடவனல் புவிஅ ளாய
கற்றைவெம் கனலி மற்றைக் காயத்தீ முனிவர் காக்கும்
முற்றுறு மும்மைச் செந்தீ முப்புரம் முருங்கச் சுட்ட
கொற்றவன் நெற்றிக் கண்ணின் வன்னியும் குளிர்ந்த அன்றே. 1175

அண்டமும் கடந்தான் அங்கை அனலியும் குளிர்ந்தது அங்கிக்
குண்டமும் குளிர்ந்த மேகத்து உரும்எலாம் குளிர்ந்த கொற்றச்
சண்டவெங் கதிர ஆகித் தழங்கிருள் விழுங்கும் தாவில்
மண்டலம் குளிர்ந்த மீளா நரகமும் குளிர்ந்த மாதோ. 1176

வெற்பினுல் இயன்ற தன்ன மேனியை விழுங்கி வெந்தீ
நிற்பினும் சுடாது நின்ற நீர்மையை நினேவில் நோக்கி
அற்பினர் அருத சிந்தை அனுமனும் சனகன் பாவை
கற்பினுல் இயன்ற தென்பான் பெரியதோர் களிப்பன் ஆனுன். 1177

அற்றைஅவ் இரவில் தான்தன் அறிவினுல் முழுதும் உன்னப்
பெற்றிலன் எனினும் ஆண்டொன்று உள்ளது பிழையுருமே
மற்றுறு பொறிமுன் செல்ல மறைந்துசெல் அறிவு மானக்
கற்றிலா அரக்கர் தாமே காட்டலில் தெரியக் கண்டான். 1178

முழுவதும் தெரிய நோக்கி முற்றும்ஊர் முடிவில் சென்ருன்
வழுவுறு காலம் ஈதென்று எண்ணினன் வலிதில் பற்றித்
தழுவினன் இரண்டு நூரு யிரம்புயம் தடக்கை தாம்போடு
எழுவென நால விண்மேல் எழுந்தனன் விழுந்த எல்லாம். 1179

இற்றவாள் அரக்கர் நூரு யிரவரும் இழந்த தோளார்
முற்றினுர் உலந்தார் ஐயன் மொய்ம்பினேடு உடலே மூழ்கச்
சுற்றிய கயிற்றி னேடும் தோன்றுவான் அரவின் சுற்றம்
பற்றிய கலுழன் என்னப் பொலிந்தனன் விசும்பின் பாலான். 1180

1174: என்பு கூரவே-எலும்பு வரையிலும்.

1175: காயத் தீ-ஆகாயத்தில் உள்ள தீ; பசித் தீ (என்றும் கூறுவர்). மும்மைச் செந்தீ: காருக பத்தியம், ஆகவனீயம், தட்சிணுக்கினி என்னும் மூவகை வேதாக்கினிகள்.

1176: அண்டமும் கடந்தான்-பிரமன்.

துன்னலர் புரத்தை முற்றும் சுடுதொழில் தொல்லை யோனும்
பன்னின பொருளும் நாணப் பாதகர் இருக்கை பற்ற
மன்னனை வாழ்த்திப் பின்னை வயங்கெரி மடுப்பென் என்னாப்
பொன்னகர் மீதே தன்போர் வாலினைப் போக விட்டான். 1181

தன்இறைக்கு உறுகண் வெய்யோர் தாம்இயற் றலும்கேட்டு இன்னே
அன்னவர்க்கு இறுதி யாக அணிநகர் அழிப்பல் என்னாச்
செந்நிறச் சிகைய வெம்போர் மழுப்பின்னர்ச் சேறல் ஒக்கும்
அல்நிறத்து அண்ணல் தூதன் அனல்கெழு கொற்ற நீள்வால். 1182

அப்புஉறழ் வேலை காறும் அலங்குபேர் இலங்கை தன்னை
எப்புறத் தளவும் தீய ஒருகணத்து எரித்த கொட்பால்
துப்புஉறழ் மேனி அண்ணல் மேருவில் குழையத் தோளால்
முப்புரத்து எய்த கோலே ஒத்ததம் மூரிப் போர்வால். 1183

உகக்கடை உலகம் யாவும் உணங்குற ஒருதன் நாட்டம்
சிகைக்கொழுங் கனலை வீசும் செயல்முனம் பயில்வான் போல
மிகைத்தெழு தீயர் ஆயோர் விரிநகர் வீயப் போர்வால்
தகைத்தலின் நோன்மை சாலும் தனிவீரன் சேணில் உய்த்தான்.

வெள்ளியின் பொன்னின் நானா விளங்குபொன் மணியின் விஞ்சை
தெள்ளிய கடவுள் தச்சன் கைம்முயன்று அரிதில் செய்த
தள்ளரு மனைகள் தோறும் முறைமுறை தாவிச் சென்றான்
ஒள்எரி யோடும் குன்றத்து ஊழிவீழ் உருமோடு ஒப்பான். 1185

அனுமான் இலங்கையை எரித்தல்

நீல்நிற நிருதர் யாண்டும் நெய்பொழி வேள்வி நீக்கப்
பால்வரும் பசியன் அன்பால் மாருதி வாலைப் பற்றி
ஆலம்உண் டவன்நன்று ஊட்ட உலகெலாம் அழிவின் உண்ணும்
காலமே என்ன மன்னோ கனலியும் கடிதின் உண்டான். 1186

1181: தொல்லையோனும்-சிவனும்.

1182: தன் இறைக்கு-(மழுவின்) இறைவனான சிவனுக்கு. சிவனுடைய அம்சம் உடையவனாதலால் "இறைக்கு" என்பது அனுமானையும் குறிக்கும்.

1183: அண்ணல்-சிவன். கோலே-(திருமாலாகிய) அம்பையே. திரிபுரத்தைச் சிவன் அழித்தபோது, மேரு மலையை வில்லாகவும், திருமாலை அம்பாகவும் கொண்டான்.

1184: இந்தப் பாட்டு சில பிரதிகளில் இல்லை.

14. இலங்கை எரியூட்டு படலம்

[அனுமான் இலங்கையை எரித்ததைப் பற்றிக் கூறும் பகுதி]

கொடியைப் பற்றி விதானம் கொளுத்தியே
நெடிய தூணைத் தழுவி நெடுஞ்சுவர்
முடியச் சுற்றி முழுதும் முருக்கிற்ருல்
கடிய மாமனை தோறும் கடுங்கனல். *1187*

வாசல் இட்ட எரிமணி மாளிகை
மூச முட்டி முழுதும் முருக்கலால்
ஊசல் இட்டன ஓடி உலைந்துபோய்ப்
பூசல் இட்ட இரியல் புரமெலாம். *1188*

மணியின் ஆய வயங்கொளி மாளிகை
பணியில் செஞ்சுடர்க் கற்றை பரத்தலால்
திணிகொள் தீயுற்றது உற்றில தேர்கிலார்
அணிவ ளைக்கைநல் லார்அல மந்துளார். *1189*

வான கத்தை நெடும்புகை மாய்த்தலால்
போன திக்கறி யாது புலம்பினர்
தேன்அ கத்த மலர்பல சிந்திய
கான கத்து மயில்அன்ன காட்சியார். *1190*

கூய்க்கொ ழும்புனல் குஞ்சியில் கூந்தலில்
மீச்சொ ரிந்தனர் வீரரும் மாதரும்
ஏய்த்த தன்மையி னுல்எரி இன்மையும்
தீக்கொ ழுந்தின வும்தெரி யாமையால். *1191*

இல்லில் தங்கு வயங்கெரி யாவையும்
சொல்லில் தீர்ந்தன போல்வன தொல்உருப்
புல்லிக் கொண்டன மாயைப் புணர்ப்பறக்
கல்லித் தம்இயல்பு எய்தும் கருத்தர்போல். *1192*

ஆயது அங்கோர் குறள்உரு வாய்அடித்
தாய்அ ளந்துல கங்கள் தரக்கொள்வான்
மீஎ ழுந்த கரியவன் மேனியின்
போய்எ ழுந்து பரந்தது வெம்புகை. *1193*

1190: போன திக் கறியாது-கணவர் தப்பிச் சென்ற திசையறியாமல் (என்றும் பொருள் கூறுவர்).

1191: ஏய்த்த தன்மையினுல்–தங்கள் செம்பட்டை மயிரும் தீக்கொழுந்தும் ஒன்று போல இருந்ததால்.

1192: சொல்லில் தீர்ந்தன-இராவணனது கட்டளை என்ற நிர்ப்பந்தம் நீங்கிவிட்டது போல. புல்லிக் கொண்டன-தழுவிக்கொண்டன.

1193: குறள் உருவாய்-வாமன வடிவமாய். கரியவன்–திருமால்.

நீலம் நின்ற நிறத்தன கீழ்நிலை
மாலின் வெஞ்சின யானையை மானுவ
மேல்வி ழுந்தெரி முற்றும் விழுங்கலால்
தோல்உ ரிந்து கழன்றன தோல்எலாம். 1194

மீதுஇ மம்கலந் தாலன்ன வெம்புகை
சோதி மங்கலத் தீயொடு சுற்றலால்
வீதி மங்குலின் வீழ்புனல் மீப்படர்
ஓதி மங்களின் மாதர் ஒதுங்கினர். 1195

பொடித்தெ ழுந்து பெரும்பொறி போவன
இடிக்கு லங்களின் வீழ்தலும் எங்கணும்
வெடித்த வேலை வெதும்பிட மீன்குலம்
துடித்து வெந்து புலர்ந்துயிர் சோர்ந்தவால். 1196

பருகு தீமடுத்து உள்ளுறப் பற்றலால்
அருகு நீடிய ஆடகத் தாரைகள்
உருகி வேலையின் ஊடுபுக் குற்றன
திருகு பொன்நெடும் தண்டின் திரண்டவால். 1197

உரையின் முந்துஉலகு உண்ணும் எரிஅதால்
வரைநி வந்தன பன்மணி மாளிகை
நிரையின் நீள்நெடுஞ் சோலையின் நிற்குமோ
தரையும் வெந்தது பொன்எனும் தன்மையால். 1198

கல்வி னும்வலி தாம்புகைக் கற்றையால்
எல்லி பெற்றது இமையவர் நாட்டிடம்
வல்லி கோலி நிவந்தன மாமணிச்
சில்லி யோடும் திரண்டன தேரெலாம். 1199

பேய மன்றினில் அன்று பிறங்கெரி
மாயர் உண்ட நறவை மடுத்ததால்
தூயர் என்றிலர் வைகிடம் துன்னினால்
தீயர் அன்றியும் தீமையும் செய்வரால்: 1200

தழுவு இலங்கை தழங்கெரி தாய்ச்செல
வழுவில் வேலை உலையின் மறுகின
எழுகொ ழும்சுடர்க் கற்றைசென் றெய்தலால்
குழுவு தண்புனல் மேகம் கொதித்தவே. 1201

1194: கீழ்நிலை......மானுவ......(யானைகள் நெருப்பில் வெந்து தோல் கழலப் பெற்றதால்) கிழக்குத் திசையில் உள்ள ஐராவதம் என்ற யானையைப்போல வெளுத்து விட்டன.

1199: திரண்டன-தீயில் உருகி ஒரே பிண்டமாகத் திரண்டுவிட்டன.

ஊனில் ஓடும் எரியொடு உயங்குவார்
கானில் ஓடும் நெடும்புனல் காண்எனு
வானில் ஓடும் மகளிர் மயங்கினுர்
வேனில் ஓடுஅருந் தேரிடை வீழ்ந்தனர். 1202

தேன்அ வாம்பொழில் தீப்படச் சிந்திய
சோனை மாமலர்த் தும்பி தொடர்ந்துஅயல்
போன தீச்சுடர் புண்டரி கத்தடம்
கானம் ஆம்என வீழ்ந்து கரிந்தவே. 1203

நற்க டன்இது நம்உயிர் நாயகர்
மற்க டம்தெற மாண்டனர் வாழ்விலம்
இற்க டந்தினி ஏகலம் யாம்எனு
விற்க டந்த நுதலியர் வீடினுர். 1204

பூக்க ரிந்து முறிபொறி யாய்அடை
நாக்க ரிந்து சினைநறும் சாம்பராய்
மீக்க ரிந்து நெம்பணை வேர்உறக்
காக்க ரிந்து கருங்கரி ஆனவே. 1205

கார்மு ழுக்க எழும்கனல் கற்றைபோய்
ஊர்மு ழுக்க வெதுப்ப உருகின
சோர்ஒ ழுக்கம் அருமையின் துன்றுபொன்
வேர்வி ழுப்பது போன்றன விண்ணெலாம். 1206

நெருக்கி மீமிசை ஓங்கும் நெருப்பழல்
செருக்கும் வெண்கதிர்த் திங்களைச் சென்றுற
உருக்கும் மெய்யின் அமுதம் உகுத்தலால்
அரக்க ரும்சிலர் ஆவிபெற் ருர்அரோ. 1207

பருதி பற்றி நிமிர்ந்தெழு பைங்கனல்
கருகி முற்றும் எரிந்தெழு கார்மழை
அருகு சுற்றும் இருந்தைய தாய்அதின்
உருகு பொற்றிரள் ஒத்தனன் ஒண்கதிர். 1208

தளைகொ ளுத்திய தாவுஎரி தாமணி
முளைகொ ளுத்தி முகத்திடை மொய்த்தபேர்
உளைகொ ளுத்த உலந்துலை வுற்றன
வளைகு ளப்பின் மணிநிற வாசியே. 1209

எழுந்து பொற்றலத்து ஏறலின் நீள்புகைக்
கொழுந்து சுற்ற உயிர்ப்பிலர் கோளும்உற்று
அழுந்து பட்டுளர் ஒத்தயர்ந் தார்அழல்
விழுந்து முற்றினர் கூற்றை விழுங்குவார். 1210

1202: வேனில்...தேரிடை - பேய்த்தேரிடை; அதாவது, கானல் நீரில்.
1206: கார் முழுக்க-மேகங்களை மூழ்கடிக்க. ஊர்-அமராவதி நகரம்.

கோசி கத்துகில் உற்றகொ ழுங்கனல்
தூசின் உத்தரி கத்தொடு சுற்றுரு
வாச மைக்குழல் பற்ற மயங்கினர்
பாசி ழைப்பர வைப்படர் அல்குலார். 1211

வேறு

நிலவி லங்கிய துகிலினை நெருப்புண நிருதர்
இலவி னும்சில முத்துள எனும்நகை இளையார்
புலவி யின்கரை கண்டவர் அமுதுகப் புணரும்
கலவி யின்கரை கண்டிலர் மண்டினர் கடல்மேல். 1212

பஞ்ச ரத்தொடு பசுநிறக் கிளிவெந்து பதைப்ப
அஞ்ச னக்கணின் அருவிநீர் முலைமுன்றில் அலைப்பக்
குஞ்ச ரத்தன கொழுநரைத் தழுவுறும் கொதிப்பால்
மஞ்சி டைப்புகும் மின்எனப் புகையிடை மறைந்தார். 1213

வரையி னைப்புரை மாடங்கள் எரிபுக மகளிர்
புரையில் பொற்கலன் விசும்பிடை வில்லிடப் போவார்
கரைஇல் நுண்புகைப் படலையில் கரிந்தனர் கலங்கித்
திரையின் உட்பொலி சித்திரப் பாவையின் செயலார். 1214

அகரும் அம்நறும் சாந்தமும் முதலிய அநேகம்
புகர்இல் நன்மரத் துறுவெறி உலகெலாம் போர்ப்பப்
பகரும் ஊழியில் காலவெங் கடுங்கனல் பருகும்
மகர வேலையின் வெந்தன நந்தன வனங்கள். 1215

மினல்ப ரந்தெழு கொழுஞ்சுடர் உலகெலாம் விழுங்க
நினைவ ரும்பெருந் திசையுற விரிகின்ற நிலையால்
சினைப ரந்தெரி சேர்ந்தில நின்றவும் சிலவும்
கனல்ப ரந்தவும் தெரிகில கற்பகக் கானம். 1216

மூளும் வெம்புகை விழுங்கலின் சுற்றுற முழுநீர்
மாளும் வண்ணமா மலைநெடுந் தலைதொறும் மயங்கிப்
பூளை வீஅன்ன போவன புணரியில் புனல்மீன்
மீள யாவையும் தெரிந்தில முகில்கணம் மிசைய. 1217

மிக்க வெம்புகை விழுங்கலின் வெள்ளியங் கிரியும்
ஒக்க வெற்பினோடு அன்னமும் காக்கையின் உருவ
பக்க வேலையின் படியது பாற்கடல் முடிவில்
திக்கு யங்களும் கயங்களும் வேற்றுமை தெரியா. 1218

1216: நிலையால்-தமது இயற்கையால் கற்பக மரங்கள் ஒளி வீசுவதால்.

1218: வெற்பினோடு-சாதாரணமான கருநிற மலைகளோடு. பக்க வேலை–அருகில் உள்ள சாதாரணமான கருங்கடல். திக் கயங்களும்-வெண்ணிறமான திசை யானைகளும். கயங்களும் - சாதாரணமான கரு யானைகளும்.

கரிந்து சிந்திடக் கடுங்கனல் தொடர்ந்துடல் கதுவ
உரிந்த மெய்யினர் ஓடினர் நீரிடை ஒளிப்பார்
விரிந்த கூந்தலும் குஞ்சியும் மிடைதலில் தாழும்
எரிந்து வேகின்ற ஒத்தன எறிதிரைப் பரவை. 1219

மருங்கின் மேல்ஒரு மகவுகொண் டொருதனி மகவை
அருங்கை யால்பற்றி மற்றொரு மகவுபின் அரற்ற
நெருங்கி ஞரொடு நெறிகுழல் சுறுக்கொள நீங்கிக்
கருங்க டல்தலை வீழ்ந்தனர் அரக்கியர் கதறி. 1220

வில்லும் வேலும்வெங் குந்தமும் முதலிய விறகாய்
எல்லு டைச்சுடர் எனப்புகல் எலெலாம் உருகித்
தொல்லை நன்னிலை தொடர்ந்தபேர் உணர்வினர் தொழிலால்
சில்லி உண்டையின் திரண்டன படைக்கலத் திரள்கள். 1221

செய்தொ டர்க்கன வல்லியும் புரசையும் சிந்தி
நொய்தின் இட்டவன் தறிபறித்து உடல்எரி நுழைய
மொய்த டச்செவி நிறுத்திவால் முதுகினில் முறுக்கிக்
கைஎ டுத்தழைத்து ஓடின ஓடைவெங் கரிமா. 1222

வெருளும் வெம்புகைப் படலையின் மீச்செல வெருவி
இருளும் வெங்கடல் விழுந்தன எழுந்தில பறவை
மருளும் மீன்கணம் விழுங்கிட உலந்தன மனத்துஓர்
அருள்இல் வஞ்சரைத் தஞ்சம்என்று அடைந்தவர் அனைய. 1223

நீரை வற்றிடப் பருகிமா நெடுநிலம் தடவித்
தாரு வைச்சுட்டு மலைகளைத் தழற்செய்து தனிமா
மேரு வைப்பற்றி எரிகின்ற காலவெங் கனல்போல்
ஊரை முற்றுவித்து இராவணன் மனைபுக்கது உயர்தீ. 1224

வான மாதரும் மற்றுள மகளிரும் மறுகிப்
போன போனதிக்கு அறிகிலர் அனைவரும் போனர்
ஏனை நின்றவர் எங்கணும் இரிந்தனர் இலங்கைக்
கோன்அவ் வானவர் பதிகொண்ட நாள்எனக் குலைந்தார். 1225

நாவி யும்நறுங் கலவையும் கற்பகம் நக்க
பூவும் ஆரமும் அகிலும்என்று இனையன புகையத்
தேவு தண்மழை செறிபெருங் குலமெனத் திசையின்
பாவை மார்நறுங் குழல்களும் பரிமளம் கமழ்ந்த. 1226

சூழும் வெஞ்சுடர் தொடர்ந்திட யாவரும் தொடரா
ஆழி வெஞ்சினத்து ஆண்தொழில் இராவணன் மனையின்
ஊழி வெங்கனல் உண்டிட உலகம்என்று உயர்ந்த
ஏழும் வெந்தன எரிந்தன நெடுநிலை ஏழும். 1227

1226: திசையின் பாவைமார்-திசைகளுக்குரிய தேவிமார்
1227: நெடு நிலை ஏழும்-இராவணனது அரண்மனை மாடியின் ஏழு அடுக்குகளும்.

பொன்திருத்தியது ஆதலின் இராவணன் புரைதீர்
குன்றம் ஒத்துயர் தடநெடு மாநிலைக் கோயில்
நின்றது உற்றுஎரி பருகிட நெகிழ்வுற உருகித்
தென்தி சைக்கும்ஓர் மேருஉண் டாம்எனத் தெரிந்த. 1228

தீயிலிருந்து தப்ப இராவணன் முதலியோர் புட்பக விமானத்தில் ஏறிச் செல்லுதல்

அனைய காலையின் அரக்கனும் அரிவையர் குழுவும்
புனைம ணிப்பொலி புட்பக விமானத்துப் போனார்
நினையும் மாத்திரை யாவரும் நீங்கினர் நினையும்
வினைஇ லாமையின் வெந்ததுஅவ் விலங்கல்மேல் இலங்கை. 1229

ஆழித் தேரவன் அரக்கரை அழல்எழ நோக்கி
ஏழுக்கு ஏழென அடுக்கிய உலகங்கள் எரியும்
ஊழிக் காலம்வந் துற்றதோ பிறிதுவேறு உண்டோ
பாழித் தீச்சுட வெந்ததுஎன் நகர்எனப் பகர்ந்தான். 1230

கரங்கள் கூப்பினர் தம்கிளை திருவொடும் காணார்
இரங்கு கின்றவல் அரக்கர்ஈது இயம்பினர் இறையோய்
தரங்க வேலையின் நெடியதன் வால்இட்ட தழலால்
குரங்கு சுட்டதுஈது என்றலும் இராவணன் கொதித்தான். 1231

இன்று புன்தொழில் குரங்குதன் வலியினால் இலங்கை
நின்று வெந்துமா நீறெழு கின்றது செந்தீத்
தின்று தேக்கிடு கின்றது தேவர்கள் சிரிப்பார்
நன்று நன்றுபோர் இராவணன் வலிஎன நக்கான். 1232

வேறு

உண்டநெ ருப்பைக், கண்டனர் பற்றிக்
கொண்டணை கென்றான், அண்டரை வென்றான். 1233

உற்றுஅக லாமுன், செற்ற குரங்கைப்
பற்றுமின் என்றான், முற்ற முனிந்தான். 1234

சார்அயல் நின்றார், வீரர் விரைந்தார்
நேருதும் என்றார், தேரினர் சென்றார். 1235

எல்லைஇ கந்தார், வில்லர்வெ குண்டார்
பல்அதி காரத், தொல்லர் தொடர்ந்தார். 1236

வேறு

நீர்கெழு வேலை நிமிர்ந்தார், தார்கெழு தானை சமைந்தார்
போர்கெழு மாலை புனைந்தார், ஓர்எழு வீரர் உயர்ந்தார். 1237

விண்ணினை வேலை விளிம்புஆர், மண்ணினை ஓடி வளைந்தார்
அண்ணலை நாடி அணைந்தார், கண்ணினில் வேறுஅயல் கண்டார்.

பற்றுதிர் பற்றுதிர் என்பார், எற்றுதிர் எற்றுதிர் என்பார்
முற்றினர் முற்றும் முனிந்தார், கற்றுணர் மாருதி கண்டான். 1239

ஏல்கொடு வஞ்சர் எதிர்ந்தார், கால்கொடு கைகொடு கார்போல்
வேல்கொடு கோலினர் வெந்தீ, வால்கொடு தானும் வளைந்தான்.

பாதவம் ஒன்று பறித்தான், மாதிரம் வாலின் வளைத்தான்
மோதினன் மோத முனிந்தார், ஏதியும் நாளும் இழந்தார். 1241

நூறிட மாருதி நொந்தார், ஊறிட ஊன்இடு புண்நீர்
சேறிட ஊர்அடு செந்தீ, ஆறிட ஓடினது ஆருய். 1242

தோற்றினர் துஞ்சினர் அல்லார், ஏற்றிகல் வீரர் எதிர்ந்தார்
காற்றின் மகன்கலை கற்ருன், கூற்றினும் மும்மடி கொன்ருன். 1243

மஞ்சுறழ் மேனியர் வன்தோள், மொய்ம்பினர் வீரர் முடிந்தார்
ஐம்பதி னுயிரர் அல்லார், பைம்புனல் வேலை படிந்தார். 1244

தோய்ச்சனன் வாலதி தோயாக், காய்ச்சின வேலை கலந்தார்
போய்ச்சிலர் பொன்றினர் போனுர், ஏச்சென மைந்தர் எதிர்ந்தார்.

சுற்றின தேரினர் தோலா, வில்தொழில் வீரம் விளைத்தார்
எற்றினன் மாருதி எற்ற, உற்றெழு வோரும் உலந்தார். 1246

விட்டுயர் விஞ்சையர் வெந்தீ, வட்ட முலைத்திரு வைகும்
புள்திரள் சோலை புறத்தும், சுட்டிலது என்பது சொன்னுர். 1247

வந்தவர் சொல்ல மகிழ்ந்தான், வெந்திறல் வீரன் வியந்தான்
உய்ந்தனென் என்னஉயர்ந்தான், பைந்தொடி தாள்கள்பணிந்தான்.

சீதைக்கு வந்தனம் கூறிவிட்டு அனுமான் செல்லுதல்

பார்த்தனள் சானகி பாரா, வேர்த்தெரி மேனி குளிர்ந்தாள்
வார்த்தைஎன் வந்தனை என்னுப், போர்த்தொழில் மாருதி போனுன்.

தெள்ளிய மாருதி சென்ருன், கள்ள அரக்கர்கள் கண்டால்
எள்ளுவர் பற்றுவர் என்னு, ஒள்எரி யோனும் ஒளித்தான். 1250

1240: ஏல் கொடு-எதிர்த்து; அனுமானைப் பிடித்து வருவதாக இராவணனிடம் ஏற்றுக்கொண்டு என்றும் பொருள் கூறுவர்.

1245: தோய்ச்சனன்-தோய்த்தனன்.

15. திருவடி தொழுத படலம்

[இலங்கையிலிருந்து திரும்பிவந்த அனுமான், இராமனுடைய பாதங்களைத் தொழுது, சீதையைத் தான் பார்த்த செய்தியை உரைத்தது பற்றிக் கூறும் பகுதி]

நீங்குவென் விரைவின் என்னும் நினைவினன் மருங்கு நின்றது
ஆங்கொரு குடுமிக் குன்றை அருக்கனின் அணைந்த ஐயன்
வீங்கினன் உலகை எல்லாம் விழுங்கினன் என்ன வீரன்
பூங்கழல் தொழுது வாழ்த்தி விசும்பிடைக் கடிது போனான். 1251

மைந்நாகம் என்ன நின்ற குன்றையும் மரபின் எய்திக்
கைந்நாகம் அனையோன் உற்றது உணர்த்தினன் கணத்தின் காலைப்
பைந்நாகம் நிகர்க்கும் வீரர் தன்நெடு வரவு பார்க்கும்
கொய்ந்நாக நறுந்தேன் சிந்தும் குன்றிடைக் குதியும் கொண்டான்.

மகேந்திர மலையில் இருந்த வானர வீரர்கள் அனுமானைக் கண்டு மகிழ்தல்

போய்வரும் கருமம் முற்றிற்று என்பதோர் பொம்மல் பொங்க
வாய்வெரீஇ நின்ற வென்றி வானர வீரர் மன்னோ
பாய்வரு நீளத்து ஆங்கண் இருந்தன பறவைப் பார்ப்புத்
தாய்வரக் கண்ட தன்ன உவகையில் தளிர்த்தார் அம்மா. 1253

அழுதனர் சிலவர் முன்நின்று ஆர்த்தனர் சிலவர் அண்மித்
தொழுதனர் சிலவர் ஆடித் துள்ளினர் சிலவர் அள்ளி
முழுதுற விழுங்கு வார்போல் மொய்த்தனர் சிலவர் முற்றும்
தழுவினர் சிலவர் கொண்டு சுமந்தனர் சிலவர் தாங்கி. 1254

தேனொடு கிழங்கும் காயும் நறியன அரிதில் தேடி
மேல்முறை வைத்தேம் அண்ணல் நுகர்ந்தனை மெலிவு தீர்தி
மானவாள் முகமே எங்கட்கு உரைத்தது மாற்றம் என்று
தான்நுகர் சாகம் எல்லாம் முறைமுறை சிலவர் தந்தார். 1255

தாள்களில் மார்பில் தோளில் தலையினில் தடக்கை தம்மில்
வாள்களின் வேலின் வாளி மழையினின் வகிர்ந்த புண்கள்
நாள்கள்மேல் உலகில் சென்ற எண்ணென நம்பி கண்ண
ஊழ்கொள நோக்கி நோக்கி உயிர்உக உளைந்து உயிர்த்தார். 1256

1252: பைந்நாகம்–பச்சை நிற மலை. குன்றிடை-மகேந்திரமலையில்.

வாலிகா தலனை முந்தை வணங்கினன் எண்கின் வேந்தைக்
கால்உறப் பணிந்து பின்னைக் கடன்முறை கடவோர்க் கெல்லாம்
ஏலுற இயற்றி ஆங்கண் இருந்துஇவண் இருந்தோர்க் கெல்லாம்
ஞாலநா யகன்தன் தேவி சொல்லினள் நன்மை என்றான். 1257

என்றலும் கரங்கள் கூப்பி எழுந்தனர் இறைஞ்சித் தாழா
நின்றனர் உவகை பொங்க விம்மலால் நிமிர்ந்த நெஞ்சர்
சென்றது முதலா வந்தது இறுதியாச் செப்பற் பாலை
வன்திறல் உரவோய் என்னச் சொல்லினன் மருத்தின் மைந்தன்.

ஆண்தகை தேவி உள்ளத்து அருந்தவம் அமையச் சொல்லிப்
பூண்டபேர் அடையா ளம்கைக் கொண்டதும் புகன்று போரில்
நீண்டவாள் அரக்க ரோடு நிகழ்ந்ததும் நெருப்புச் சிந்தி
மீண்டதும் விளம்பான் தான்தன் வென்றியை உரைப்ப வெள்கி.

பொருதமை புண்ணே சொல்ல வென்றமை போந்த தன்மை
உரைசெய ஊர்தீ இட்டது ஓங்குஇரும் புகையே ஓதக்
கருதலர் பெருமை தேவி மீண்டிலாச் செயலே காட்டத்
தெரிதர உணர்ந்தேம் பின்னர் என்இனித் தேர்வது என்றார். 1260

யாவதும் இனிவேறு எண்ணல் வேண்டுவது இறையும் இல்லை
சேவகன் தேவி தன்னைக் கண்டமை விரைவில் செப்பி
ஆவதுஅவ் அண்ணல் உள்ளத்து அருந்துயர் அகற்ற லேயாம்
போவது புலமை என்னப் பொருக்கென எழுந்து போனார். 1261

ஏதநாள் இறந்த சால என்பதோர் வருத்தம் நெஞ்சத்து
ஆதலால் விரைவில் செல்லல் ஆவதன்று அளியம் எம்மைச்
சாதல்தீர்த்து அளித்த வீர தலைமகன் மெலிவு தீரப்
போதுநீ முன்னர் என்றார் நன்றென அனுமன் போனான். 1262

முத்தலை எஃகி னாற்கும் முடிப்பரும் கருமம் முற்றி
வித்தகத் தூதன் மீண்டது இறுதியாய் விளைந்த தன்மை
அத்தலை அறிந்த எல்லாம் அறைந்தனம் ஆழி யான்மாட்டு
இத்தலை நிகழ்ந்த எல்லாம் இயம்புவான் எடுத்துக்கொண்டாம். 1263

வேறு

இராமனை சுக்கிரீவன் தேற்றுதல்

கார்வரை இருந்தனன் கதிரின் காதலன்
சீரிய சொற்களால் தெருட்டச் செங்கணான்
ஆருயிர் ஆயிரம் உடைய னாம்எனச்
சோர்தோறும் சோர்தோறும் உயிர்த்துத் தோன்றினான். 1264

தண்டல்இல் நெடுந்திசை மூன்றும் தாயினர்
கண்டிலர் மடந்தையை என்னும் கட்டுரை
உண்டுஉயிர் அகத்தென ஒறுக்க வும்உளன்
திண்திறல் அனுமனை நினையும் சிந்தையான். 1265

ஆரியன் அருந்துயர்க் கடலுள் ஆழ்பவன்
சீரிய தன்றுநம் செய்கை தீர்வரும்
மூரிவெம் பழியொடு முடிந்த தாம்எனச்
சூரியன் புதல்வனை நோக்கிச் சொல்லுவான். 1266

குறித்தநாள் இகந்தன குன்றத் தென்திசை
வெறிக்கருங் குழலியை நாடல் மேயினர்
மறித்திவண் வந்திலர் மாண்டு ளார்கொலோ
பிறித்துஅவர்க்கு உற்றுளது என்னை பெற்றியோ. 1267

மாண்டனள் அவள்இவண் மாண்ட வார்த்தையை
மீண்டுஅவர்க்கு உரைத்தலின் விளிதல் நன்றெனப்
பூண்டதோர் துயர்கொடு பொன்றி னர்கொலோ
தேண்டினர் இன்னமும் திரிகின் றார்கொலோ. 1268

கண்டனர் அரக்கரைக் கறுவு கைம்மிக
மண்டமர் தொடங்கினர் வஞ்சர் மாயையால்
விண்தலம் அதனின்மே யினர்கொல் வேறிலாத்
தண்டல்இல் நெடுஞ்சிறைத் தளைப்பட் டார்கொலோ. 1269

கூறின நாள்அவர் இருக்கை கூடலம்
ஏறல்அஞ் சுதும்என இன்ப துன்பங்கள்
ஆறினர் அருந்தவம் அயர்கின் றார்கொலோ
வேறுஅவர்க்கு உற்றதென் விளம்பு வாய்என்றான். 1270

அனுமான் வருதல்

என்புழி அனுமனும் இரவி என்பவன்
தென்புறத்து உளன்எனத் தெரிவ தாயினன்
பொன்பொழி தடக்கைஅப் பொருவில் வீரனும்
அன்புறு சிந்தையன் அமைய நோக்கினன். 1271

எய்தினன் அனுமனும் எய்தி ஏந்தல்தன்
மொய்கழல் தொழுகிலன் முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன் கையினன்
வையகம் தழீஇநெடிது இறைஞ்சி வாழ்த்தினன். 1272

திண்திறல் அவன்செயல் தெரிய நோக்கினன்
வண்டுறை ஓதியும் வலியள் மற்றிவன்
கண்டதும் உண்டுஅவள் கற்பும் நன்றெனக்
கொண்டனன் குறிப்பினால் உணரும் கொள்கையான். 1273

1265: திசை மூன்றும்-வடக்கு, கிழக்கு, மேற்கு ஆகிய மூன்று திசைகளிலும்.
1267: பிறித்து-பிறிது.

ஆங்கவன் செய்கையே அளவை யாம்எனு
ஓங்கிய உணர்வினுல் விளைந்தது உன்னிஞன்
வீங்கினன் தோள்புனல் கண்கள் விம்மினன்
நீங்கியது அருந்துயர் காதல் நீண்டதே. 1274

கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்
தெண்திரை அலைகடல் இலங்கைத் தென்நகர்
அண்டர்நா யகஇனித் துறத்தி ஐயமும்
பண்டுள துயரும்என்று அனுமன் பன்னுவான். 1275

வேறு

உன்பெருந் தேவி என்னும் உரிமைக்கும் உன்னைப் பெற்ற
மன்பெரு மருகி என்னும் வாய்மைக்கும் மிதிலை மன்னன்
தன்பெருந் தனயை என்னும் தகைமைக்கும் தலைமை சான்ருள்
என்பெருந் தெய்வம் ஐயா இன்னமும் கேட்டி என்பான். 1276

பொன்அலது இல்லைப் பொன்னை ஒப்பெனப் பொறையில் நின்ருள்
தன்அலது இல்லைத் தன்னை ஒப்பெனத் தனக்கு வந்த
நின்அலது இல்லை நின்னை ஒப்பென நினக்கு நேர்ந்தாள்
என்அலது இல்லை என்னை ஒப்பென எனக்கும் ஈந்தாள். 1277

உன்குலம் உன்ன தாக்கி உயர்புகழ்க்கு ஒருத்தி யாய
தன்குலம் தன்ன தாக்கித் தன்னைஇத் தனிமை செய்தான்
வன்குலம் கூற்றுக்கு ஈந்து வானவர் குலத்தை வாழ்வித்து
என்குலம் எனக்குத் தந்தாள் என்இனிச் செய்வது எம்மோய். 1278

விற்பெருந் தடந்தோள் வீர வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்தள் ஆய நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப் பென்ப தொன்றும் இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன். 1279

கண்ணினும் உளைநீ தையல் கருத்தினும் உளைநீ வாயின்
எண்ணினும் உளைநீ கொங்கை இணைக்குவை தன்னில் ஓவாது
அண்ணல்வெங் காமன் எய்த அலர்அம்பு தொளைத்த ஆருப்
புண்ணினும் உளைநீ நின்னைப் பிரிந்தமை பொருந்திற் ருமோ. 1280

வேலையுள் இலங்கை என்னும் விரிநகர் ஒருசார் விண்தோய்
காலையும் மாலை தானும் இல்லதோர் கனகக் கற்பச்
சோலைஅங்கு அதனின் உம்பி புல்லினுல் தொடுத்த தூய
சாலையில் இருந்தாள் ஐய தவம்செய்த தவமாம் தையல். 1281

மண்ணெடும் கொண்டு போனுன் வானுயர் கற்பி ஞள்தன்
புண்ணிய மேனி தீண்ட அஞ்சுவான் உலகம் பூத்த
கண்ணகல் கமலத் தண்ணல் கருத்திலாள் தொடுதல் கண்ணின்
எண்ணரும் கூருய் மாய்தி என்றதோர் மொழியை எண்ணி. 1282

தீண்டிலன் என்னும் வாய்மை திசைமுகன் செய்த முட்டை
கீண்டிலது அனந்தன் உச்சி கிழிந்திலது எழுந்து வேலை
மீண்டில சுடர்கள் யாவும் விழுந்தில வேதம் செய்கை
மாண்டில தென்னும் தன்மை வாய்மையால் உணர்தி மன்னே. 1283

சோகத்தாள் ஆய நங்கை கற்பினல் தொழுதற் கொத்த
மாகத்தார் தேவி மாரும் வான்சிறப் புற்ருர் மற்றைப்
பாகத்தாள் இப்போது ஈசன் மகுடத்தாள் பதுமத் தாளும்
ஆகத்தாள் அல்லள் மாயன் ஆயிரம் மௌலி மேலாள். 1284

இலங்கையை முழுதும் நாடி இராவணன் இருக்கை எய்திப்
பொலங்குழை யவரை எல்லாம் பொதுவுற நோக்கிப் போந்தேன்
அலங்குதண் சோலை புக்கேன் அவ்வழி அணங்குஅ ஞளைக்
கலங்குதெண் திரையிற் ருய கண்ணின்நீர்க் கடலில் கண்டேன். 1285

அரக்கியர் அளவற் ருர்கள் அலகையின் குழுவும் அஞ்ச
நெருக்கினர் காப்ப நின்பால் நேயமே அச்சம் நீக்க
இரக்கம்என்று ஒன்று தான்ஓர் ஏந்திழை வடிவம் எய்தித்
தருக்குயர் சிறையுற் றன்ன தகையள்அத் தமியள் அம்மா. 1286

தையலை வணங்கற்கு ஒத்த இடம்பெறும் தன்மை நோக்கி
ஐயயான் இருந்த காலை அலங்கல்வேல் இலங்கை வேந்தன்
எய்தினன் இரந்து கூறி இறைஞ்சினன் இருந்து நங்கை
வெய்துரை சொல்லச் சீறிக் கோறல்மேற் கொண்டுவிட்டான். 1287

ஆயிடை அணங்கின் கற்பும் ஐயநின் அருளும் செய்ய
தூயநல் அறனும் என்றிங்கு இனையன தொடர்ந்து காட்டப்
போயினன் அரக்கி மாரைச் சொல்லுமின் போமின் என்றுஆங்கு
ஏயினன் அவர்எ லாம்என் மந்திரத்து உறங்கி இற்ருர். 1288

அன்னதோர் பொழுதில் நங்கை ஆருயிர் துறப்ப தாக
உன்னினள் கொடிஒன்று ஏந்திக் கொம்பொடும் உறைப்பச் சுற்றித்
தன்மணிக் கழுத்தில் சார்த்தும் அளவையில் தடுத்து நாயேன்
பொன்னடி வணங்கி நின்று நின்பெயர் புகன்ற போழ்தில். 1289

வஞ்சனை அரக்கர் செய்கை இதுஎன மனக்கொண் டேயும்
அஞ்சன வண்ணத் தான்தன் பெயர்உரைத்து அளியை என்பால்
துஞ்சுறு பொழுதில் தந்தாய் துறக்கம்என்று உவந்து சொன்னுள்
மஞ்சென வனமென் கொங்கை வழிகின்ற மழைக்க ணீராள். 1290

1283: முட்டை–அண்டகோளம்.

1284: பாகத்தாள்...மகுடத்தாள்-சிவனின் உடம்பில் ஒருபாகமாக இருந்த உமா தேவி இப்போது அவன் தலையில் இருக்கும் பாக்கியம் பெற்றிருக்கிருள். பதுமத்தாளும்... மேலாள்—தாமரை மலரில் வாழும் இலக்குமியும் (சீதையும்) இனி திருமாலின் மார்பில் இருத்தல்கூடாது; அவனுடைய (இராமனுடைய) ஆயிரம் கிரீடங்களின் மேலும் இருக்கத் தக்கவள்.

அறிவுறத் தெரியச் சொன்ன பேர்அடை யாளம் யாவும்
செறிவுற நோக்கி நாயேன் சிந்தையில் திருக்கம் இன்மை
முறிவற எண்ணி வண்ண மோதிரம் காட்டக் கொண்டாள்
இறுதியின் உயிர்தந் தீயும் மருந்தொத்த தனைய தெந்தாய். 1291

ஒருகணத் திரண்டு கண்டேன் ஒளிமணி ஆழி ஆன்ற
திருமுலைத் தடத்து வைத்தாள் வைத்தலும் செல்வ நின்பால்
விரகம்என் பதனின் வந்த வெங்கொழுந் தீயி னுல்வெந்து
உருகியது உடனே ஆறி வலித்தது குளிர்ப்புள் ஊற. 1292

வாங்கிய ஆழி தன்னை வஞ்சர்ஊர் வந்த தாம்என்று
ஆங்குயர் மழைக்க ணீரால் ஆயிரம் கலசம் ஆட்டி
ஏங்கினள் இருந்த தல்லால் இயம்பலள் எய்த்த மேனி
வீங்கினள் வியந்த தல்லால் இமைத்திலள் உயிர்ப்பு விட்டாள். 1293

அன்னவற்கு அடிய னேன்நிற் பிரிந்தபின் அடுத்த எல்லாம்
சொல்முறை அறியச் சொல்லித் தோகைநீ இருந்த சூழல்
இன்னதென்று அறிகி லாமே இத்தனை தாழ்த்த தென்றே
மன்னநின் வருத்தப் பாடும் உணர்த்தினேன் உயிர்ப்புவந்தாள். 1294

இங்குள தன்மை எல்லாம் இயைபுழி இயம்பக் கேட்டாள்
அங்குள தன்மை எல்லாம் அடியனேற்கு அறியச் சொன்னுள்
திங்கள்ஒன் றிருப்பென் இன்னே திருவுளம் தீர்ந்த பின்னை
மங்குவன் உயிரொ டென்றுன் மலரடி சென்னி வைத்தாள். 1295

வைத்தபின் துகிலின் வைத்த மாமணிக்கு அரசை வாங்கிக்
கைத்தலத்து இனிதின் ஈந்தாள் தாமரைக் கண்கள் ஆர
வித்தக காண்டி என்று கொடுத்தனன் வேத நன்னூல்
உய்த்துள காலம் எல்லாம் புகழொடும் ஓங்கி ஒற்பான். 1296

சூடாமணியைக் கண்டு இராமன் மகிழ்தல்

பையஉள் பயந்த காமம் பரிணமித்து உயர்ந்து பொங்கி
மெய்யுற வெதும்பி உள்ளம் மெலிவுறும் நிலையை விட்டான்
ஐயனுக்கு அங்கி முன்னர் அங்கையால் பற்றும் நங்கை
கைஎனல் ஆயிற் றன்றே கைபுக்க மணியின் காட்சி. 1297

பொடித்தன உரோமம் மேன்மேல் பொழிந்தன கண்ணீர் பொங்கித்
துடித்தன மார்பும் தோளும் தோன்றின வியர்வின் துள்ளி
மடித்தது மணிவாய் ஆவி வருவது போவ தாகித்
தடித்தது மேனி என்னே யாருளர் தன்மை தேர்வார். 1298

ஆண்டையின் அருக்கன் மைந்தன் ஐயகேள் அரிவை நம்பால்
காண்டலுக்கு எளியள் ஆனாள் என்றலும் காலம் தாழ
ஈண்டினும் இருத்தி போலாம் என்றனன் என்ற லோடும்
தூண்திரண் டனைய தோளான் பொருக்கென எழுந்து சொன்னான்.

எழுகவெம் படைகள் என்றான் ஏஎனும் அளவில் எங்கும்
முழுமுரசு எற்றிக் கொற்ற வள்ளுவர் முடுக்க முந்திப்
பொழிதிரை அன்ன வேலை புடைபரந் தென்னப் பொங்கி
வழுவல்இல் வெள்ளத் தானை தென்திசை வளர்ந்த தன்றே. 1300

வீரரும் விரைவில் போனார் விலங்கல்மேல் இலங்கை வெய்யோன்
பேர்விலாக் காவற் பாடும் பெருமையும் அரணும் கொற்றக்
கார்நிறத்து அரக்கர் என்போர் முதலிய கணிப்பி லாத
வார்கழல் அனுமன் சொல்ல வழிநெடிது எளிதில் போனார். 1301

இராமன், சுக்கிரீவன் முதலியோர் தென்கடலை அடைதல்

அந்நெறி நெடிது செல்ல அரிக்குலத்து அரச னோடு
நன்னெறிக் குமரர் போக நயந்துடன் புணர்ந்த சேனை
இன்நெடும் பழுவக் குன்றில் பகலெல்லாம் இறுத்த பின்னர்
பன்னிரு பகலில் சென்று தென்திசைப் பரவை கண்டார். 1302

கம்ப ராமாயணம் : சுந்தர காண்டம் முற்றிற்று

கம்ப ராமாயணம்

சுந்தர காண்டம்

பாட்டு முதற் குறிப்பு அகராதி

(எண்: பக்கத்தின் எண்)

அ

கம்ப ராமாயணம்

சுந்தர காண்டம்

அரும்பத உரை அகராதி

அ

அஃகா-குறையாத
அகரு தூபம்-அகில் புகை
அகர்-அகில் மரம்
அங்குரம்-முளை
அசனி-வச்சிராயுதம், இடி
அசும்பு-ஊற்று, ஊனீர்
அசைத்தல்-கட்டுதல்
அடகு-கீரை
அடங்கலும்-அனைத்தும்
அடர்தல்-தாக்குதல், அழித்தல்
அடர்த்திட-வருத்த
அடல்-வலிமை
அடைகல்-இரும்புப் பட்டடை: இதன்மேல் ஓர் உலோகத்தை வைத்துச் சம்மட்டியால் அடிப்பார்கள்
அடைய-முழுவதும்
அணங்குதல்-வருத்துதல்
அணவ-அளாவ, நெருங்க
அணை-கரை
அண்டப் பொகுட்டின் - அண்ட கோளத்தின்
அண்டம்-மேல் உலகம்
அண்மி-நெருங்கி, சேர்ந்து
அதள்-தோல்
அதுக்கும்-அமுக்கும், அடிக்கும்
அத்தன்-அப்பன், கடவுள்
அத்திரம்-அம்பு, மலை
அந்தகன்-எமன்
அந்தணர்-முனிவர்
அந்தரம்-தீமை, விபரீதம்
அந்தாரம்-(அம்தாரம்) அழகிய தாரம் என்ற இசை
அந்தில்-அப்போது, அவ்விடம்
அப்பு-நீர்
அமையம்-சமயம்
அம்-நீர், அழகிய
அம்பலம்-பொது இடம்
அயினி-சோறு
அயின்றார்-தின்றார்
அரக்கும்-தேய்க்கும், அழிக்கும்
அரங்குதல்-அழிதல்
அரணம்-கோட்டை., பாதுகாப்பான இடம்
அரமடந்தை - தேவலோகத்துப் பெண்
அரமியம்-நிலா முற்றம்
அரி-அரிசி, குரங்கு, சிங்கம், திருமால்
அலக்கண்-துன்பம்
அலங்கல்-பூமாலை, அசைதல், ஒளி செய்தல்
அலங்கும்-விளங்கும்
அலத்தகம்-செம்பஞ்சுக் குழம்பு
அலந்தலை-குழப்பம்
அலந்திலர்-துன்பம் உற்றாரல்லர்
அலம்புதல்-ஒலித்தல், கழுவுதல், அலைவீசுதல்
அலரியோன்-சூரியன்
அலர்-பழிச்சொல், மலர்
அவிர்-பிரகாசமான
அவிஞ்சை-அவித்தை, மூடத்தனம், அஞ்ஞானம், ஆணவம்
அழல்-கோபிக்கும், தீ
அழன்றான்-கொதித்தான்
அழிந்து நிற்றல்-வருந்தி நிற்றல்
அழுங்குதல்-சலித்தல்
அழுவம்-கடல், பரப்பு, ஆழம்
அளகை-குபேரன் வாழும் அளகாபுரி
அளி-ஆசை, அன்பு, கருணை
அளிந்த-கலந்த

அளியத்தாய்-எளியவனே
அளியம்-எளியேம்
அளியை-கருணையுடைய நீ
அளை-பொந்து, (பாம்புப்) புற்று
அறை-ஒலிக்கும்
அற்பு-அன்பு
அற்றம்-சமயம், இல்லாத சமயம்
அனகன்-குற்றமற்றவன்
அனுக்கும்-வருத்தும்
அனுங்கி-வருந்தி
அனுசன்-தம்பி
அன்றுதல்-பகைத்தல்,கோபித்தல்
அன்றே - ஓர் அசை: இதற்குப் பொருள் கிடையாது. ''அன்றைய தினமே'' என்று மற்ற இடங்களில் இதற்குப் பொருள்
அன்னே-ஐயோ: ஓர் இரக்கக் குறிப்பு

ஆ

ஆகம்-உடல், மார்பு, மனம்
ஆகுலம்-துக்கம்
ஆசு-வேகம், பற்றுக்கோடு
ஆட்செய்தல்-அடிமைத் தொழில் செய்தல்
ஆதி-ஆவாய், முதல்
ஆமிடம்-மாமிசம்
ஆயத்தார்-சித்தமாக இருப்பவர்கள்
ஆயம்-தோழிகள் கூட்டம்
ஆயானை-ஆகிய அவனை
ஆயே-ஆகியே
ஆரணம்-வேதம்
ஆரம்-சந்தனம்
ஆரா நின்றுள்-ஆரவாரம் செய்பவள்
ஆரை-கோட்டை மதில்
ஆர்-நிறையும், பொருந்தும்
ஆலாலம்-ஆலகாலம் என்றவிஷம்
ஆவம்-அம்பறாத் தூணி
ஆவியந்துகில்- புகை போன்ற மெல்லிய அழகிய ஆடை
ஆழி-கணையாழி, மோதிரம்; குதிரையின் வாய் நுரை
ஆழிப்புள்-சக்கரவாகப் பறவை
ஆளி-சிங்கம்
ஆள்வினை-அடிமை செய்யும் தொழில்
ஆற்றுதல்-பொறுத்தல்
ஆனனம்-முகம்
ஆன்-பசு
ஆன்று-அகன்று, பொருந்தி

இ

இகல்-வலிமை, போர்
இஞ்சி-மதில்
இடங்கர்-முதலை
இடை-இடம்
இதம்-நன்மை, விருப்பம்
இந்திர நீலம்-சிறந்ததொரு நீல ரத்தினம்
இமம்-பனி
இமைத்தல்-கண் இமைத்தல், ஒளிவிடுதல், சுருங்குதல்
இம்பர்-பூலோகம்
இயக்கியர்-யட்ச சாதிப் பெண்கள்; தேவசாதிகளில் ஒன்றைச் சேர்ந்தவர்கள்.
இயைவதின்மை-பயன் இன்மை
இரங்குதல்-வருந்துதல்
இரட்டல்-அடித்தல்
இரிதல்-ஓடுதல், அழிதல், நிலை கெடுதல்
இரியல்-நிலை கெடுதல்
இரு-பெரிய
இருடி-ரிஷி
இருந்தை-கரி
இருமடி-இரண்டு மடங்கு
இரும்-பெரிய, அதிக
இலக்கண மரபு-இலட்சணமுறை
இலக்கம்-இலக்கு, குறி வைக்கப் படும் இடம், இலட்சியம், இலட்சம்
இலங்கிழாய்-பிரகாசிக்கும் ஆபரணங்கள் அணிந்தவளே
இலஞ்சி-மகிழ மரம், அதன் பூ

இல்உறை தெய்வம்-குலதெய்வம்
இல்லவர்-இல்லாதவர்
இவர்தல்-உயர்தல், செல்லுதல், உலாவுதல், பாய்தல்
இடிக்குநர்-கண்டிப்பவர்
இழவு-நஷ்டம்
இழுகி-தேய்த்து, உராய்ந்து
இழுது-கொழுப்பு, நெய்
இழை-நூல் இழை, ஆபரணம்
இளக்கம்-சோர்வு, பலஹீனம்
இளக்கர்-இளகுதலை உடையது
இளிவரல்-எளிய தன்மை
இறந்துளார்-அனைத்தையும் கடந்து நிற்கும் பெருமை உடையோர்
இறவினின்-மரணத்தின்
இறுல்-தேன்கூடு
இறுக்கும்-சேரும், ஒடிக்கும்
இறுக்குறும்-முறித்துவிடும்
இன்னே-இனி
இன்னோரன்ன-இப்படிப்பட்ட

ஈ

ஈடு-வலிமை
ஈட்டினர்-வலிமை உடையவர்
ஈண்டரும்-கிடைத்தற்கு அரிய
ஈண்டு-இங்கு, இப்போது
ஈண்டுதல்-சேர்ந்திருத்தல், பொருந்தியிருத்தல்
ஈமம்-பிணம் சுட அடுக்கப்படும் விறகு
ஈர்த்தல்-கட்டுதல், இழுத்தல்

உ, ஊ

உகிர்-நகம்
உக்க-சிதறின, அழிந்த
உக்கம்-ஆலவட்டம்
உடற்றுதல்-தீவிரமாக நடத்துதல்
உடன்றனன்-கோபித்தான்
உட்கும்-கூசும்
உணங்கல்-குறைதல்
உண்கண்-மைதீட்டிய கண்
உண்ட-உள்ள, உண்மையான
உதித்து-பருத்து
உத்திசை-அப்பால் உள்ள திசை
உபவனம்-பூஞ்சோலை
உம்பி-உன் தம்பி
உயிர்-மூச்சு
உயிர்ப் பொறை-உயிரைத் தாங்கும் உடம்பு
உயிர்த்த-ஈன்ற, மூச்சுவிட்ட
உய்த்த-நீங்கிய, அனுப்பிய
உய்யானம்-உத்தியானம்: பூஞ்சோலை
உரகர்-நாகர், பாதாள லோகத்தினர்
உரப்புதல்-ஆரவாரம் செய்தல்
உரவு-வலிமை
உரன்-மார்பு
உராய்-விரைவாக
உரிவை-தோல்
உருத்தல்-கோபித்தல், முதிர்தல்
உருந்து-உருத்து என்பதன் மெலித்தல் விகாரம்: கோபித்து
உருமை-சுக்கிரீவனின் மனைவி
உலங்கு-கொசு
உலப்பிலர்-முடிவற்றவர்
உலவை-மரக்கிளை
உவணத்தரசேயும்-கருடனையும்
உழக்கும்-கலக்கும், வருத்தும்
உழுந்து-உளுந்து
உழுவை-புலி
உழை-உள் இடம், பக்கம்
உழையர்-பக்கத்தில் இருந்து குற்றேவல் செய்வோர்
உளில்-உள்ளான் என்ற நீர்வாழ் பறவை
உளைத்தல்-ஊளையிடுதல்
உற-மிகுதியாக, நெருங்க, அடைய
உறழ்தல்-ஒத்தல்
உறுகண்-துன்பம், வருத்தம்
உறுக்குறு சொல்-கடுஞ்சொல்
உறை-உறைந்த கட்டி

உறையிடுதல்-உறை போடுதல்: பொருள்களை எண்ணியோ அளந்தோ கணக்கிடும்போது, பெரியதொரு தொகைக்கு அடையாளமாக ஒன்றை வைத்தல். உதாரணமாக ஆயிரம் தேங்காய்களுக்கு ஒரு ஒரு தேங்காய் வீதம் எடுத்து வைத்துக் கணக்கிடலாம். அப்படி எடுத்து வைக்கப்பட்ட தேங்காய்கள் பத்து இருந்தால், குவியலில் பதினாயிரம் தேங்காய்கள் இருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.
உன்னம்-நீரில் வாழும் பறவைகளின் பொதுப் பெயர்
ஊக்கிய-செலுத்திய
ஊழி-ஆயுள், நெடுங்காலம், பிரளயத்தால் உலகம் முடியும் காலம், விதி
ஊழி நாயகன்-விதிக்கு விதியாக இருக்கும் திருமால், காலத்தின் நாயகன், அழிவற்ற நாயகன்
ஊழியான்-சிவன், அழியாதவன்
ஊழ்-முறை, பழவினை
ஊற்றம்-பலம்
ஊனம்-குறை, பாவம்

எ

எகினம்-கவரிமான்
எஞ்சுதல்-மிஞ்சுதல், குறைதல். கெடுதல், ஒழிதல், அழிதல்
எண்கு-கரடி
எத்திய:-ஏத்திய என்பதன் விகாரம்: புகழ்பெற்ற, எற்றிய, தாக்கிய
எம்மனோர்-எம் போன்றவர்
எம்மோய்-எம் தாய்
எயிறு-பல், தந்தம்
எருவை-கழுகு
எல்-இரவு, பகல், சூரியன்
எல்லி-இருள்
எவ்வர்-எவர்
எவ்வுதல்-ஏவுதல்
எழிலி-மேகம்
எழு - தண்டாயுதம், வளைதடி, ஒருவகை ஆயுதம், இரும்புத் தூண்
எறித்த-வீசிய
எறுழ்-பலம்
எற்பு-என்பு: எலும்பு

ஏ

ஏங்கும்-அஞ்சும், மனம் வாடும், சோரும்
ஏண்-வலிமை
ஏதில்-பகைமை
ஏது-காரணம்
ஏமுற-மகிழ, கலங்க
ஏம்பல்-சலிப்பு
ஏயான்-ஏகியவன், பொருந்தியவன்
ஏலாவோ-இயலாவோ
ஏல்-எதிர்த்தல்
ஏவது-யாவது
ஏவம்-குற்றம், இப்படித்தான்
ஏனம்-பன்றி, வராகமூர்த்தி
ஏனை நாடியர் - பிறநாட்டுப் பெண்கள்

ஒ, ஓ

ஒருபது-ஒரு பத்து
ஒருப்பட்டான்-சம்மதித்தான்
ஒருவர்தரம்-ஒருவரிடம்
ஒல்-''ஒல்'' என்னும் ஒலி
ஒல்கி-சோர்ந்து
ஒல்லை-விரைவு
ஒருத்தல்-அழித்தல், தண்டித்தல்
ஓகை-உவகை, ஆனந்தம்
ஓச்சி-செலுத்தி
ஓடலை-ஓடவில்லையா?
ஓதி-ஓந்தி: ஓணான், கூந்தல்
ஓதிமம்-அன்னப்பறவை
ஓம்புதல்-பாதுகாத்தல்
ஓர் திறத்தன்று-ஒரு தன்மையாகச் சொல்ல முடிவதன்று
ஓர் படி-ஒரு தன்மையில்

க

கங்குல்-இரவு
கச்சம்-ஆமை, திருமாலின் கூர் மாவதாரம்
கஞ்சம்-தாமரை
கடாவுதல்-வினவுதல், ஆராய்தல்
கடி-நறுமணம், காவல்
கடு-நஞ்சு
கடுக்கும்-கடுமையாகும், ஒத்திருக்கும்
கடை-கடைசி, நுனி, வாசல்
கட்செவி-பாம்பு
கட்டளை-முறை
கணி-சிருஷ்டி
கணிச்சி-மழு, சூலாயுதம்
கணை-வளைதடி, அம்பு
கண்டகன்-கொடியோன்
கண்டம் உற்று-துண்டுபட்டு
கண்ணடி-கண்ணாடி
கண்ணின்-நினைத்தால், செய்தால்
கண்நுதல்-நெற்றிக் கண்ணை உடைய சிவன்
கதலி – பறக்கவிடும் காற்றாடி
கதழ்-கொடுமை
கதிர்-சூரியன், கிரணம்
கதும் என-விரைவாக
கதுவுதல்-பற்றுதல்
கதை-தண்டாயுதம்
கந்தர்ப்ப நகரம்-கந்தர்வர்களின் பட்டணம். அது வானத்தில் தோன்றி மறைவது. அரசனுக்கும் நாட்டுக்கும் அந்தத்தோற்றம் அச்சத்தை விளைவிக்கக் கூடியது. மேலும் மன்மதனின் படை வீடான சோலை என்றும் பெண் குறி என்றும் பொருள் கூறுவார்கள்.
கந்தாரம்-காந்தாரம் என்ற பண்
கப்பணம்-ஒருவகை இரும்பாயுதம்
கமை-பொறுமை

கம்-வானம், நீர்
கம்மியர்-கம்மாளர்
கயக்கம்-கலக்கம்
கரணம்-இந்திரியம், உள்ளறிவு, உள்ளம்
கரம்–பிரகாசம், சூரியனின் கிரணம், கை
கரி-சாட்சி, யானை
கரிய நாழிகை-இரவு
கரு-ஒளி, அஸ்திவாரம்
கருவி-ஆயுதம், கவசம்
கலாபம்-மயில் தோகை, இருபத்தைந்து கோவையுள்ள ஒரு வகை மேகலை: பெண்கள்இடுப்பில் அணிவது.
கலிகெழு விசும்பு-ஒலியைத்தனக்குக் குணமாகக் கொண்ட ஆகாயம்: இவ்வாறு கூறுவது நூல் கொள்கை
கலித்தல்-ஒலித்தல்
கலினம்-கடிவாளம்
கலுழன்-கருடன்
கலுழ்தல்-அழுதல்
கலை-ஆண்மான், அரைப்பட்டிகை
கல்-ஓர் ஒலிக்குறிப்பு, மலை
கல்லுதல்-தோண்டுதல், அழித்தல்
கவி-குரங்கு
கவிர்-முள் முருங்கை
கவுள்-கன்னம்
கவ்வை-ஒலி, ஆரவாரம்
கழங்கு-கழற்காய்
கழுக்கடை-கழுவாயுதம், சிறிய ஈட்டி, சூலம்
கழுநீர்-செங்கழுநீர்ப் பூ
களப்பட-யுத்த களத்தில் செத்து விழ
கறங்கு-சுழலும், காற்றாடி
கறுத்தல்-கோபித்தல்
கற்பணம்-ஒருவகை ஈட்டி, கப்பணம் என்ற இரும்பாயுதம்
கற்பு-எண்ணம், நினைப்பு, பெண்களின் நல்லொழுக்கம்

கற்போயை-கற்புடைய உன்னை
கற்ற-பயின்ற, பழகிய
கனகமால் வரை-பொன்மயமான மேருமலை
கனகம்-பொன்
கனகன்-இரணியன்
கன்னல்-கரும்பு, நாழிகை

கா

கா-காப்பாற்று, சோலை
காசு-குற்றம், மாசு, ரத்தினம், பொன்
காண்மை-தாட்சணியம்
காது-கொலை, கொல்கின்ற
காந்தம்-சந்திரகாந்தக் கல். சந்திரனைக் கண்டதும் இந்தக் கல்லில் நீர் கசியும்.
காந்தல்-பிரகாசித்தல்
காமரம்-இசை, ஒரு பண்
காமிக்கும்-பரிகசிக்கும்
காமியாதே-விரும்பாமல்
காயம்-ஆகாயம், உடம்பு
காரம்-வீடு
காரிகை-அழகிய பெண்
கால்-தூண், வில்லின் கழுந்து
கான்-காடு, வாசனை, மலர்
கான்முளை-மகன்

கி, கீ

கிச்சு-தீ (கன்னடச் சொல்)
கிடுகு-எதிரியின் ஆயுதம் தன் மீது தாக்காமல் காக்கும் ஒரு வகைக் கருவி
கிடைத்தல்-தோன்றுதல், சமீபித்தல்
கிம்புரி-தோள் அணி, மகரவாய் என்ற ஆபரணம், யானைத் தந்தத்தில் கட்டும் பூண்
கிலுக்கம்-ஒரு வகைப் பறவை
கிழவன்-உரியவன்
கிழி-துணி
கிள-சொல்வாயாக
கிளர-விளங்க, எழ, பொங்க
கிளை-ஓர் இசை, பஞ்சம சுரம், ஓர் இசைக் கருவி, மூங்கில், சுற்றம்
கின்னர மிதுனம்-ஆணும் பெண்ணுமாய்ச் சேர்ந்திருக்கும் கின்னர சாதியார்; அவ்வாறு சேர்ந்திருக்கும் ஒரு பறவை இனம்
கின்னரர்-கின்னரம் என்ற வாத்தியத்தை வாசிக்கும் தேவசாதியார்; இவர்கள் குதிரை முகம் உடையவர்கள்
கீண்டான்-கிழித்தான்

கு

குசை - கடிவாளம், தருப்பைப் புல்; இது கையை அறுத்துவிடுவதும் உண்டு
குச்சரி-ஒரு பண்
குஞ்சி-ஆண்களின் தலைமயிர்
குடர்-குடல்
குட்டிமம்-கல் பாவின தரை
குணதிசை-கிழக்கு திசை
குணலம்-ஒருவகைப் பறவை
குணிக்கும் - கணிக்கும், கணக்கிடும், ஆராயும்
குணில்-குறுந்தடி
குதறுதல்-குலைதல், கலங்குதல்
குந்தம்-ஈட்டி
குமை-குவியல்
குயிற்றிய-பதித்த
குரங்கா-வளையாத, தாழாத
குரண்டம்-ஒருவகைக் கொக்கு
குரம்பு-எல்லை
குரவை-பெண்கள் ஆடும் ஒரு வகைக் கூத்து
குரா-மருதோன்றி
குரு-ஒளி, தோன்று, பருத்த
குவை-குவியல், முகடு, உச்சி
குழன்று-திரண்டு
குழை-சேறு, குண்டலம்
குலைந்தன - அறுபட்டன, செத்தன
குளகு-பிராணிகளின் இலை உணவு

குளப்பு-குதிரையின் கால் குளம்பு
குறடு-ஒரு தோல் வாத்தியம்
குறள்-குள்ள வடிவம்
குறை-துண்டு, வெட்டு
குறை நேர-குறை தீர்க்கச் சம்மதித்து
குனிக்க-குதிக்க, கூத்தாட, வளைக்க

கூ

கூம்பு-பாய் மரம்
கூம்புதல்-குவிதல்
கூர-மிகுதியாக
கூர்ங்கள்-காட்டமான கள்
கூலம்-வால், கரை
கூழை-படையின் பின்னணி, கடைசி வரிசை
கூனை-பெரும்பானை, மிடா

கே

கேட்டி-கேட்பாயாக
கேதம்-துக்கம், களைப்பு
கேழ்-ஒளி, நிறம், ஒப்பு
கேளான்-பகைவன்

கை

கை-பக்கம்
கைம்மா-யானை
கைம்மிக-மிகுதியாக
கைதவம்-கபடம், துன்பம்
கைத்தோடும்-வெறுத்து ஓடும்
கைந்நாகம்-யானை

கொ

கொங்கு-வாசனை
கொட்பு-சுழற்சி, சுற்றிவருதல், கருத்து
கொட்டில்-தொழு
கொண்மு-மேகம், வானம்
கொம்மை-திரட்சி, இளமை, முலை
கொய்ந்நாகம்-பூக்கொய்யும் புன்னை மரம்
கொல்லலிர்-கொல்லாதவர்களாக

கோ

கோசிகம்-பட்டு
கோடரம்-குரங்கு
கோடு-தந்தம்
கோட்டகம்-கரை, பள்ளம், ஆழமான நீர்நிலை
கோபம்-இந்திரகோபம் என்ற பூச்சி: தம்பலப்பூச்சி
கோமளம்-மென்மை, இளமை, அழகு
கோலி-கட்டி, வளைத்து
கோல்-செங்கோல்
கோழ்-வழுவழுப்பான, கொழுப்பான
கோளரவு-ராகு கேது எனப்படும் பாம்புகள்
கோளரி-சிங்கம்
கோள்-கிரகம், அழிவு, கொள்ளு
கோறல்-கொல்லல்

ச

சச்சரி-ஒரு வாத்தியம்
சதுக்கம்-நாற்சந்தி கூடும் இடம்
சத்தி-சக்தி
சமீரணன்-வாயு
சமைத்தி-அழிப்பாயாக
சமைய-பொருந்த
சரணம்-பாதம்
சரித்தல்-பலத்தை அழித்தல், சஞ்சரித்தல்
சலம்-கொடுமை
சலாகை-கம்பி
சலித்து-கோபித்து
சல்லி-சிறு துண்டு
சவி-ஒளி
சன்ன வீரம்-வெற்றி மாலை

சா

சாகம்-தேக்க மரம், இலை
சாகா மூலம்-இலையும் வேரும்
சாது-நல்லது
சாம்புதல்-வாடுதல், உணர்வு கெடுதல்

சாயாவரம்-அழியாத வரம், சாயையைப் பிடித்து இழுக்கக் கூடிய வரம்
சாரிகை-வட்டமாய் ஓடுதல், மேல்நோக்கிச் செல்லும் கதி
சாரியை-குதிரை சுற்றி வருதல்
சார்-பக்கம்
சாலை-பர்ணசாலை
சாவம்-சாபம்

சி

சிகாமணி-கூந்தலில் அணியும் ரத்தினம்
சிகை-நுனி, தீக்கொழுந்து
சிக்கற-தவறில்லாமல்
சிதவு–சிதைவு
சித்தியர்-தேவ சாதியாருள் ஒரு பிரிவினராகிய சித்தர்களின் பெண்கள்
சித்திரம்-அதிசயம்
சிந்தமரம்-புளியமரம்
சிந்தாகுலம்-மனக்கிலேசம்
சிந்தாரம்-சிந்து ஆரம்: சிந்துகின்ற சந்தனம்
சிந்து-கடல்
சிந்துவாரம்-நொச்சி மரம்
சிரத்தை-நம்பிக்கை
சிரல்-மீன்கொத்திப் பறவை
சிலதி-குற்றேவல் செய்யும் வேலைக்காரி
சிலை-முழக்கம், முழங்கு, கல், வில்
சில்லரிப்பாண்டில்-சில் அரிப் பாண்டில்: வட்டமான தட்டையான கஞ்சதாளம்: ஜால்ரா
சில்லி-தேர்ச் சக்கரம்
சிவண-பொருந்த, ஒத்திருக்க
சிறுவிது-சிறியது, அற்பமானது
சிறை-பக்கம்

சீ

சீத்தல்-துடைத்தல், போக்குதல்
சீர்த்தது-பலப்பட்டது
சீர்த்தி-கீர்த்தி

சு

சு-நன்மை, மங்கலம்
சும்மை-ஓசை, தொகுதி
சுரம்-காடு
சுரி-வாள்
சுருதி-வேதம்
சுலாய-சூழ்ந்த
சுவணம்-பொன்
சுவல்-பிடரி
சுழலும்-சுற்றிலும்
சுழிக்கும்-சுழலும்
சுளிகிலை-கோபிக்காதே
சுறுக்கொண்டு-சுறுசுறு என்று எரிந்து அல்லது தீய்ந்து

சூ

சூடிகை-நெற்றிச் சுட்டி
சூடையின் மணி-சூடாமணி; தலையில் அணியும் ரத்தினம், ஒருவகைத் தெய்வமணி
சூதர்-தேர்ப்பாகர்
சூது-உபாயம், தந்திரம்
சூர்-சூரபன்மன்
சூழல்-சூழ்ச்சி, சுற்றிடம்
சூழி-முகபடாம்

செ

செகுத்தல்-ஒழித்தல்
செச்சை-பூச்சு, பூசப்படும் பொருள்
செயிரா-கோபித்து, பகைத்து
செயிரியர்-பாடகர்
செய்குன்றம்-குன்றுபோல் செய்யப்பட்டது
செல்-இடி
செல்வரும்-செல்லும்
செறிந்து-அடர்ந்து
செறுத்தல்-கோபித்தல்
செற்றி-செதுக்கி
சென்றீ-போய் வருக
சென்னம்-நீர்ப்பறவை வகை

சே

சேகு-உறுதி, குற்றம்

சேக்கை-படுக்கை, தங்கும்இடம், இடம்
சேது-அணை
சேடி-தோழி, இளம்பெண், வித்தியாதரர்கள் வாழும் உலகம்
சேட்டகல்-அழகிய அகன்ற
சேந்தது-சிவந்தது
சேமம்-பாதுகாவல்
சேறி-செல்வாயாக
சேறும்-செல்வோம்

சொ

சொத்து-பொருள், வஸ்து

சோ

சோபனம்-மங்களமான அடையாளம், மங்கல வாழ்த்து
சோனகர்-கிரேக்கர், அராபியர், பர்மியர்
சோனை-மழை, மேகம்

ஞா

ஞாலம்-உலகம்
ஞான்றும்-பொழுதும், சமயத்தும்

த

தகைப்பு-தடை
தசும்பு-கலசம், குடம்
தடித்து-மின்னல், இடி
தட்டுமுட்டாடுதல்-தட்டி முட்டுதல்
தண்டம்-தண்டனை
தண்டல்-நீங்குதல், அழிதல், போக்குதல், தடை
தண்மை-குளிர்ச்சி, கருணை
தந்திரி-ஒருவகை யாழ்
தமர்-தம் சுற்றத்தார்
தலைமயங்குதல்-கூடுதல்
தவா-மாறுபடாத
தவுதல்-அழிதல், குறைதல்
தழை-கொய்சகம்
தழைந்தன-மிகுந்தன
தளம்-உப்பரிகை
தள்இல்-தவறுத
தனியாள்-ஒப்பற்றவள்

தா

தாமணி-கயிறு
தாம்பு-கயிறு
தார்-மாலை, நீண்ட
தாரு-மரம்
தாவரும்-கெடுதலற்ற
தாவில்-அழிவில்லாத
தாழ்-தழைத்த
தாழ்த்தனம்-காலதாமதம் செய்துவிட்டோம்
தாள்-தாழ்ப்பாள்
தானம்-இடம், யானையின் மதம்

தி

திகிரி-சக்கரம்
திந்நாக மா-திக்கு நாக மா: திசையானை என்ற மிருகம்
திமிங்கில கிலம்-திமிங்கலத்தைச் சாப்பிடும் ஒருவகை ராட்சச மீன்
திமில்-ஒருவகை மீன்
திரங்குதல்-சுருளுதல்
திருகினன்-கடுமையானுன்
திருக்கம்-வஞ்சகம்
திருத்தல்-மேன்மைப் படுத்தல், சொல்லுதல், சீர்ப்படுத்தல்
திவளுதல்-விளங்குதல்
திறம்பு காலம்-அழியும் காலம்
திறன்-திறமை, தன்மை
தின்னிய-தின்பதற்கு

தீ

தீர-நின்றுவிட
தீர்த்தன்-புனிதன்

து

துகில்-ஆடை
துகைத்து-மிதித்து
துடி-உடுக்கை
துடிக்கண்-துடி என்ற பறையின் அடிக்கும் இடம்
துணை-ஒப்பு
துதைந்த-நெருங்கிய

துப்பு-பெருமை, வலிமை, பவளம்
துரத்தல்-எறிதல்
துரந்த-வெளிப்படுத்திய, தொடர்ந்து வேகமாகச் சென்ற
துரிசு-குற்றம்
துருதம்-துரிதமான தாளம்
துயக்கு-சோர்வு, மயக்கம், சந்தேகம், துக்கம்
துயல்வு-அசைவு
துயிற்சி-துயிலுதல், உறக்கம்
துவக்கு-தோல்
துவசர்-கள் விற்போர்
துவர்த்த-சிவந்த
துவனி-தொனி
துவன்றிய-நெருங்கிய, கூடிய
துவாரம்-வாசல்
துழனி-ஓசை
துளை-குகை
துள்ளி-துளி
துற-தூர்த்துவிட
துறக்க நாடு-சுவர்க்கம்
துறை-வழி
துற்ற-நெருங்க
துனை-வேகமாகச் செல்லும்
துன்-துன்னும்: நெருங்கும்
துன்னரும்-நெருங்க முடியாத

தூ

தூக்கின்-ஆலோசித்தால்
தூங்கிசை - ஒலிக்கும் இசை, விளம்பித காலத்தில் பாடும் இசை
தூங்குதல்-அசைதல்
தூசு-துணி, ஆடை
தூதுளங்கனி-சிவப்பாக இருக்கும் ஒருவகைக் கனி
தூய்-தூவி
தூரியம்-முரசு
தூர்-வேர்

தெ

தெட்ப்பு-தெளிவு, உயர்வு
தெம்மடங்கிய-பகை ஒழிந்த
தெழித்தல்-ஒலித்தல், அதட்டுதல்
தெறல்-அழித்தல், வருத்தல்
தெறுகுநர்-பகைவர்
தெற்றி-தெருத் திண்ணை
தென்ன-இராகம் பாடும்போது 'தரனை' என்பது போன்ற இசைக் குறிப்பு

தே

தேக்கிடுதல்-தெவிட்டுதல், ஏப்பமிடுதல்
தேசு-ஒளி
தேண்டி-தேடி
தேயம்-தேசம்
தேய்வை-சந்தனம் முதலிய வாசனை மரங்களின் தேய்வை
தேர்வான்-தேடுவதற்கு
தேவு-தெய்வத் தன்மை உடைய
தேறல்-கள்

தொ

தொகாத-சேராத, சேராதவை
தொக்கார்-தொகுத்தார், ஒருங்கே சேர்த்தார்
தொடை-அம்பு, நாண், அம்பு எய்தல், கயிறு
தொட்ட-தோண்டிய, ஆழமான
தொண்டை-கோவை
தொத்து-கொத்து, திரள்
தொய்யல்-நைதல், சோர்தல், சேறு
தொலைவு-அழிவு
தொல்லர்-பழமையானவர்

தோ

தோடு-பூவிதழ்
தோயம்-நீர்
தோரணம்-அலங்கார வளைவுள்ள வாசல், வெளிவாசல், தோரணம் கட்டும் தூண் அல்லது வாசல்
தோலர்-தோலால் செய்யப்பட்ட கேடயத்தை உடையவர்கள்
தோல்-யானை

ந

நச்சு-ஆசை
நட்டனர்-நட்புக் கொண்டனர்
நண்ணலார்-பகைவர்
நத்து-சங்கு
நந்திய-விளங்கிய
நம்பன்-சிறந்தவன், கடவுள், சிவன்
நயக்கும்-விரும்பும்
நயத்தி-விரும்பு, கொடு, அருள் செய்
நரந்தம்-நாரத்தை
நரலை-கடல்
நவை-குற்றம்
நள்-நடு
நறவு-கள், தேன்
நறை-வாசனை
நற்றாய்-பெற்ற தாய்
நன்றி-நன்மை

நா

நாகர்-தேவர், நாக சாதியார்
நாகக் கள்-பாம்பின் விஷம் போன்ற கள், புன்னை மரத்தில் இறக்கப்பட்ட கள்
நாகாலயம்-தேவர்களின் மாளிகை
நாகி-நாக கன்னி
நாஞ்சில்-மதிலின் ஓர் உறுப்பு
நாப்பண்-நடுவே
நாரம்-நீர், நீர்வாழ் பறவை, பாசி
நால-தொங்க
நாவி-கஸ்தூரி
நாள்-ஆயுள், நட்சத்திரம்
நாள் நாளும்-தினந்தினமும்
நாறுதல்-தோன்றுதல், மணத்தல்
நாற்றிய-தொங்கவிட்ட
நானம்-கஸ்தூரி, வாசனைப் பொருள்

நி, நீ

நிசிசரர்-இரவில் சஞ்சரிப்போர்: அரக்கர்கள்
நிமிர்ச்சி-உயர்ச்சி
நிவந்த-பரப்பிய, உயர்ந்த
நிழல்-ஒளி
நிறை-பெண்ணின் குணங்களில் ஒன்று, அடக்கம், உள்ளத்தைக் கற்புவழியில் நிறுத்தும் குணம்
நீத்து-வெள்ளம்
நீப்புண்ட-நீங்கிய
நீரார்-தன்மை உடையார்
நீவி-பூசி, ஆடையின் முடிச்சு
நீளம்-கூண்டு

நு, நூ

நுங்குதல்-விழுங்குதல்
நுணங்கி-துவண்டு
நுனித்த-கூர்ந்து நோக்கிய
நூக்குறுத்து - தள்ளப்பட்டு, அசைக்கப்பட்டு
நூறி-பொடியாக்கி

நெ

நெகுதல்-கரைதல், உருகுதல்
நெக்க-பிளந்தன
நெய்த்து-வழுவழுப்புக் கொண்டு
நெறிந்து-ஒழுங்காகி

நொ, நோ

நொவ்விடை-நொந்து வருந்தும் இடை
நொறில்-விரைவு
நோற்றல்-தவம் செய்தல்
நோனா-பொறுக்காத

ப

பஃறலை-பல்தலை: பல தலைகள்
பஃறிரை-பல் திரை: பல அலைகள்
பகல்-சூரியன்
பகுவாய்-திறந்த வாய்
பங்கி - தலைமயிர்

பசப்பு-பசுமை
படர்-பாடுகிற, செல்
படலம்-தொகுதி
படி-பூமி, தன்மை, உவமானம்
படித்தனன்-சொன்னான்
படிவம்-வடிவம், பொம்மை
படுத்தல்-கொல்லுதல், அழித்தல், செய்தல்
பட்டி மண்டபம்-ஆராய்ச்சி மண்டபம், கலைகளைக் கற்பிக்கும் மண்டபம்
பணம்-பாம்பின் படம்
பணி-வேலை, கட்டளை, பாம்பு
பணை-கிளை, பருமை, மத்தளம்
பண் - இராகம், அலங்கரிக்கப் பட்ட
பண்டாரம்-பொக்கிஷம்
பண்ணை-பெண்கள் கூட்டம்
பதம்-இடம், சோறு, பக்குவம், பருவம்
பதாதி-காலாட்படை
பத்தி-வரிசை
பத்திரம்-இலை, பூவின் இதழ், அம்பு
பந்தனை செய்தல்-கட்டுதல்
பம்ப-ஒலிக்க
பயிர்-ஒலி, வாத்தியம்
பராவரும்- பரவி வரும்
பரிகம்-இரும்புத்தடி
பரிசு-தன்மை, உவமை, விதம்
பரிதல்-வருந்தல்
பரித்த-தாங்கிய
பரிபவம்-அவமானம்
பரியும்-அன்பு கொள்ளும்
பருமித்த-அலங்கரித்த
பலாசம்-செம்முருக்கமரம்
பலாண்டு-பல ஆண்டுக்காலம் வாழவேண்டுமென்று பாடும் வாழ்த்துப்பாடல்
பலி-பூசை
பல்லணம்-சேணை
பல்லியம்-பல் இயம்; பலவகை வாத்தியங்கள்
பவனன்-காற்று
பழி-குற்றம்
பள்ளம்-ஆழம்
பள்ளி-படுக்கை
பறிந்தன - நிலை பெயர்ந்தன, ஓடின, வெளிப்பட்டன, அறுந்தன
பறைதல்-சொல்லுதல்
பற்றலர்-பகைவர்
பற்றார்-பகைவர்
பனிக்க-குளிர, நடுங்க
பனைமீன்-ஒருவகைப் பெரியமீன், யானைமீன்
பன் - பன்னும்: (சிறப்பித்துச்) சொல்லும்
பன்னக மகளிர்-நாக கன்னிகள்
பன்னகம்-பாம்பு

பா

பாடல் வேதிகை-சங்கீத மேடை
பாடு-இடம், பக்கம், வருத்தம்
பாணி-கைத்தாளம், பாட்டு
பாண்டில்-கஞ்ச தாளம்: ஜால்ரா
பாரி-இராக் காவலாளிகளின் பாட்டு, கொட்டு முழக்குடன் செய்யும் இராக் காவல்
பார்ப்பு-குஞ்சு
பாலம்-கபாலம்: மண்டை ஓடு, ஓர் ஆயுதம்
பாவகம்-சிந்தனை
பாவகாரி-பாவம் புரிவோன்
பாழிய-பெரிய
பாற்றோ-பாலதோ

பி, பீ

பிசைதல்-தேய்த்தல்
பிச்சர்-பைத்தியக்காரர்
பிணா-பெண்
பிணிவீட்டு-கட்டுக்களை அவிழ்த்த
பிணை-பெண்மான்
பிதிர்-விடுகதை
பித்தி-சுவர்
பிரசம்-தேன்
பிழை-குறை, தவறு

பிழைத்தல்-பிழை செய்தல்
பிளிறுதல்-யானை வீரிடுதல்
பிள்ள-பிளக்க, விரிய, பிய்க்க
பிறக்கம்-உருவம், குவியல்
பிறங்கல்-மலை
பின்னுதல்-மாறுபடுதல்
பீறின-பிளவுபட்டன

பு

புகர்-குற்றம், ஒருவகை ஆயுதம், புள்ளி
புங்கவன்-சிறந்தவன், காளை போன்றவன்
புடை-புடைத்தல், தாக்குதல், பக்கம்
புட்பக விமானம்-இது ஆகாயத்தில் பறந்துசெல்வது; பிரமனால் குபேரனுக்குக் கொடுக்கப்பட்டது; எத்தனை பேர் ஏறினாலும் இடம் கொடுக்கக் கூடியது
புணரி-கடல், பத்துலட்சங்கோடி
புண்டரிகம்-தாமரை
புண்டரிகை-தாமரையில் வீற்றிருக்கும் திருமகள்
புண்நீர்-ரத்தம்
புதவு-கதவு
புதா-பெருநாரை
புரசை-யானையின் கழுத்தில்இடும் கயிறு
புரிந்து-முறுக்கேறி, கூர்ந்து
புரை-உயர்ந்த, போன்ற
புலர்ந்த-வருந்தின, காய்ந்த
புல்லல்-தழுவல், சேர்தல்
புல்லிது-அறிவீனம், அற்பத்தனம்
புல்லிய-அற்பமான
புழை-வாசல், துவாரம்
புளகு-புளகம்
புளிக்கும்-வெறுக்கும்
புள்ளி-பெருமை
புன்பழி-அற்பமான பழி

பூ

பூட்கை-(துளையுடைய கை; துதிக்கை உடைய) யானை
பூணிப்பு-பூண்ட விரதம்
பூரிய-இழிவுடைய
பூவிலோன்-பிரமன்
பூவை-மைனா
பூழி-புழுதி
பூளை-மிக மென்மையான ஒரு வகைமலர்; அந்த மலர் பூக்கும் செடி: கண்ணிப் பூளை

பெ—பை

பெட்பு-ஆசை
பெருநாள்-அதிக காலம்
பேயம்-மது
பேர்வு-பெயர்தல், மாறுபாடுதல்
பேனம்-நுரை
பைதல்-சிறு பையல்

பொ

பொகுட்டு-மலை, கொட்டை
பொசிவு-நெகிழ்வு
பொதி-மூட்டை
பொதிர்எறிந்திட-பயந்து நடுங்க
பொதுத்தல்-துளைத்தல்
பொதும்பர்-மரக்கூட்டம்
பொம்மல்-பொலிவான
பொய்தல்-பிடுங்கப் படுதல், துளைக்கப்படுதல், வீழ்த்துதல்
பொய்யாள் – பொய்க்காதவள், தவறாதவள்
பொருக்க-விரைவுக் குறிப்பு
பொருதுவார்-இணைவார், போரிடுவார்
பொருமா-பொருமி, துக்கப் பட்டு
பொலம்-அழகு
பொறி-புள்ளி, வண்டு
பொறை-பொறுமை
பொற்பு-அழகு
பொற்றலம்-பொன்னுலகமாகிய மேல் உலகம்
பொற்றை-மலை
பொன்னகர்-தேவலோகம்

போ, பௌ

போத-வர
போதகம்-யானை
போதம்-அறிவு, ஞானம், பிரக்ஞை
போந்தது-வந்தது
பௌவம்-கடல்

ம

மகரிகை-சுறுமீன்
மகன்றில்-ஆணும் பெண்ணும் பரஸ்பரம் ஒன்றை ஒன்று பிரியாமல் நீரில் வாழும் பறவை வகை
மங்கல கலசம் - மங்களகரமான பூரண கும்பம்
மங்குதல்-இறத்தல், இழத்தல்
மங்குல்-மேகம்
மஞ்சனம்-குளிப்பு
மஞ்சன்-மைந்தன்
மஞ்சுளம்-தாமரை
மட்டித்தல்-அழித்தல், ஒடித்தல்
மண்ட உதரத்தவள்-சுருங்கி அடங்கிய வயிற்றை உடையவள்: மண்டோதரி
மண்டு-நெருங்கு
மதப்பாடு-மதம் பொழிதல்
மதுகை-வலிமை
மத்தை-ஊமத்தை
மந்தாரம்-ஐந்து தெய்வ மரங்களில் ஒன்று
மந்திரம்-மாளிகை, யோசனை
மயக்கு-ஒளி மழுங்குதல்
மயங்க-ஒன்று கலக்க, கலங்க
மருத்து-வாயு
மருந்து-அமிழ்தம்
மலங்க-வருந்த
மலர்ப்பலி-மலர்களைக் கொண்டு செய்யும் பூசை
மலைந்தன-மோதின
மறம்-கொடுமை
மறலி-எமன்
மறிந்தன-கீழே விழுந்தன, கீழ்மேலாயின, சாய்ந்தன, மடங்கின, கிளர்ந்தன, முறுக்குண்டன
மறு-குற்றம்
மறுகி-கலங்கி, மாறுகக் கருதி, மாறி, புரண்டு, பின்வாங்கி
மறுக்குறும்-கலங்கும்
மற்கடம்-குரங்கு
மன்-மன்னன், நிலைபெற்ற
மன்ற-நிச்சயமாக

மா

மா-அழகு, தங்கத்தின் மாற்று
மாகத்தார்-வானுலகில் வசிப்போர்
மாடு-பக்கம்
மாட்டாதார்-பகைவர்
மாட்டின-அழித்தன
மாணி-பிரம்மச்சாரி
மாண்டு-சிறந்து, மிகுந்து, இறந்து
மாதவி-குருக்கத்தி மரம்
மாதிரம்-திசை
மாதுமை-பெண் தன்மை, பேதைமை, அழகு
மால்-மதம், மயக்கம், பெரிய, திருமால்
மாழ்குதல்-மயங்குதல், கெடுதல், கலத்தல்
மாறிலா-ஒப்பில்லாத
மாற்றம்-வார்த்தை, மாறு, உவமை
மான-பொருந்த, போன்றுஇருக்க
மானம்-செருக்கு, பெருமை
மானும்-ஒக்கும்
மானுயர்-மனிதர்
மான்-குதிரை
மான்மதம்-கஸ்தூரி

மி

மிசை-மேல்
மிடறு-தொண்டை

வரி-பாட்டு, அழகு, வடிவம் தொய்யில், தேமல்
வலங்கொடு-வலம் சுற்றி வந்து
வலயம்-தோள் வளை
வலன்-வல்லவன், பலசாலி
வல்லி-கயிறு
வல்லியம்-புலி
வல் விரைந்து-மிகவும் விரைவாக
வவ்வல்-அபகரித்தல்
வழாமல்-தவறாமல்
வழி-வம்சம்
வழுக்குதல்-மழுங்குதல்
வழுவுறு-நழுவும்
வளாகம்-உலகம், சூழப்பட்ட இடம்
வளை-சங்கு
வள்-பெரிய, கூரிய, வெண்மையான
வள்ளம்-தோணி
வனம்-காடு, கூட்டம், தொகுதி, அழகு
வன்னி-தீ

வா

வாங்கு-எடு, வளைவான
வாசவன்-இந்திரன்
வாசி-குதிரை
வாசிப்பாடு-இயல்பான பெருமை
வாதம்-காற்று
வாரி-நீர்ப்பெருக்கு, கடல்
வாலதி-வால்
வாழியர்-வாழ்வதாக
வாழ்வு-வாழும் இடம்
வானயாறு-ஆகாய கங்கை

வி

விசயம்-வெற்றி
விசி-கயிறு, கட்டு
விசித்தல்-கட்டுதல்
விசைத்தல்-வேகமாகச் செல்லுதல்
விஞ்சையர்-வித்தியாதரர்: தேவ சாதிகளில் ஒன்றைச் சேர்ந்தோர்
விஞ்சைவினை-மாய வித்தை, மந்திரவேலை
விட்டேறு-எறிகின்ற கோல்
விண்டவர்-பகைவர்
விண்டு-விஷ்ணு
விதிர்த்தல்-நடுங்குதல், அசைத்தல்
வித்தகன்-பண்டிதன், தூதன்
வியல்-அகன்ற, ஆகாயம்
விரசுதல்-பொருந்தல்
விருக்கம்-விருட்சம்: மரம்
விலங்குதல்-விலக்குதல், தடுத்தல், குறுக்கிடுதல், மாறுபடுதல், ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணங்கி மோதுதல்
விலாழி-குதிரையின் வாய் நுரை
வில்-ஒளி
விழுப்பது-கீழே விடுவது
விளக்கம்-ஒளி, விளக்கு
விளரி-ஒரு பண், தைவத சுரம்
விளாகம்-சூழ்ந்த இடம்
விளித்தல்-ஆரவாரம் செய்தல், அழைத்தல், வருத்தல், கொல்லுதல்
விள்ளா-நீங்காத
வினையம்-வஞ்சனை

வீ

வீக்குதல்-அடக்குதல், கட்டுதல்
வீசினேன்-தள்ளினேன்
வீடு-விடுதலை
வீட்டும்-கொல்லும், விடுவிக்கும்
வீதி-அகலம்
வீப்பான்-கொல்வதற்காக, ஒழிப்பதற்காக, ஒழிப்பவன்
வீரை-கடல்
வீவினை-அழிவை, கேட்டினை
வீறு-சிறப்பு, வேறு, பிளப்பு
வீற்றுப்பட-வேறுவேறு ஆகும்படி

வெ

வெஃகுதல்-விரும்புதல்
வெங்கோல்-கொடிய அம்பு
வெந்நிட-முதுகிட

வே

வை

ச ம ய ம்

சாமி. சிதம்பரனூர்

★

	ரூ. பை
ஆழ்வார்கள் அருள்மொழி	2—50
தேவாரத் திருமொழிகள்	2—50
சங்கப் புலவர் சன்மார்க்கம்	2—50
மணிவாசகர்—மூலர் மணிமொழிகள்	2—50
அருணகிரியார்—குருபரர் அறிவுரைகள்	2—25
கந்த சஷ்டிச் சொற்பொழிவுகள் —பாலூர் கண்ணப்ப முதலியார்	1—75

★

தமிழ்ப் புத்தகாலயம்
576, பைகிராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி :: சென்னை-5

தமிழ்ப்
புத்தகாலயம்

Jacket Printed at
Commercial Printing & Publishing House, Madras-1.